லக்ஷ்மி



# அவளுக்கென்று ஒரு இடம்

பூங்கொடி பதிப்பகம்

## பூங்கொடி வெளியீடுகளில் சில. . .


| | |
|---|---|
| • அழகின் ஆராதனை | 80.00 |
| • அவள் தாயாகிறாள் | 35.00 |
| • அசோகமரம் பூக்கவில்லை | 55.00 |
| • அடுத்த வீடு | 175.00 |
| • அரக்கு மாளிகை | 180.00 |
| • அதிசய ராகம் | 90.00 |
| • அவளுக்கென்று ஒரு இடம் | 85.00 |
| • அவள் ஒரு தென்றல் | 75.00 |
| • இவளா என் மகள் | 65.00 |
| • இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 105.00 |
| • இருளில் தொலைந்த உண்மை | 85.00 |
| • இன்றும் நாளையும் | 90.00 |
| • உறவுகள் பிரிவதில்லை | 40.00 |
| • உயர்வு | 80.00 |
| • உறவின் குரல் | 65.00 |




# 1

விடிந்ததுமே அனலாக வீசத் தொடங்கிய கோடை வெய்யில் ரத்னாவின் உடலை எரித்தது.

'வாணியின் இடத்தில் வேறு ஒருத்தி' அந்த நினைவு நெஞ்சில் நெருப்பைக் கொட்டிக் கொண்டிருந்தது.

மகளைப் பெற்றவள் அவள் - பலவும் எண்ணிப் புழுங்கிக் கொண்டிருந்தாள். பொறாமையில் பொங்கித் தவித்துக் கொண்டிருந்தாள். அவர்களது அடையார் பங்களா மூன்று சாலைகள் சந்திக்கும் முகப்பிலே அமைந்து விட்டிருந்தது. பரவலாகக் கிடந்த பத்து கிரவுண்ட் பூமியின் நடுவே வீட்டைக் கட்டி விட்டிருந்தான் அந்த வெள்ளைக்காரன். அதை வாங்கிய சிவபாதம் சில சீர்திருத்தங்களைச் செய்து விரிவாக்கி விட்டிருந்தார். நுங்கம்பாக்கத்து சிறிய பங்களாவிலிருந்து குடும்பத்தைக் கிளப்பி, அங்கே கொண்டு வந்திருந்தார். அவர் பேச்சுக்கு எதிர்பேச்சு ஏது? அவர்தான் வீட்டின் சர்வாதிகாரி ஆச்சே!

பளிச்சென்று வீசிய வெய்யில், காம்பௌண்ட் சுவற்றில் வாயிலை ஒட்டி சாலையைப் பார்த்துக் கொண்டிருந்த கணேசர் சிலை மீது விழுந்தது. பிள்ளையார், ரத்னாவின் ஏற்பாடு. தெருக்குத்து வீடாச்சே! இன்னும் என்னென்ன இடர்கள் வருமோ? என்ற கவலை. மேற்பார்வையிட வந்த சிவபாதம் முதலில் அதைப் பார்த்து விட்டுக் குதித்தார். பின்னர் ஏனோ அடங்கிப் போனார்.

அன்று அவர்கள் வீட்டில் கல்யாணம், காலை முகூர்த்தம். கோடம்பாக்கத்து வீரப்பன் தெருவிலிருந்த எழிலரசி மண்டபத்தில்தான் கல்யாணம். காலையிலேயே எல்லோரும் சீக்கிரம் கிளம்ப வேண்டுமென்று கிழவரின் உத்தரவு. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மட்டுமேதான் வாசல் பிள்ளையாருக்கு அபிஷேகம். மற்ற நாட்களில் ஈரத்துணியால் சிலையைத் துடைத்து விட்டு சந்தனம், குங்குமம் வைத்துக் கும்பிட்டு விட்டுத்தான் அவள் வீட்டு

வேலைகளைக் கவனிப்பது வழக்கம்.

அவசரமாகச் சிலையைத் துடைத்து-பொட்டு வைத்துக்கொண்டு வந்த பூக்களைப் பாதங்களில் போட்டு - சூடம் காட்டி நிமிர்வதற்குள் அவள் இடுப்பு கத்தரித்தது. சுரீர் எனத் தாக்கிய வெய்யிலில் முகத்தில் பூத்த வியர்வைத் துளிகள் மார்பை நனைத்தது. கல்யாணத்திற்கு கட்டிக் கொண்டிருந்த காஞ்சிபுரப் பட்டுச் சேலை உடலில் கனத்து தொலைத்தது. அதன் சரிகைக் கரை கழுத்தை உறுத்தியது. இடையிலிருந்த கைக்குட்டையை உருவி முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள். அப்பொழுது சாவிக் கொத்தின் மீது லேசாக கைபட்டது. உடனடியாக ஒரு ஏக்க உணர்வு. அதிகாரம் கை மாறிப் போகிறது என்றதொரு பயம்; அதனால் ஏற்பட்ட பொறாமை நெஞ்சைக் குலுக்க அவள் பெருமூச்சுடன் வீட்டை உற்றுப் பார்க்கிறாள்.

''கல்யாண வீடா இது?...''

அவளது சிந்தனையின் எதிரொலி போல் குரல் கொடுத்தான் சசிதரன்.

''ஆண்ட்டி! வாசல்லே வாழை மரத்தைக் கட்டியவைக்காட்டி இந்த வீட்டிலே கல்யாணம் நடக்கிறதுன்னு யாருமே சொல்லமாட்டாங்க. அத்தனை ஒரு அமைதி.'' வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டு அங்கே வந்து நின்றான்.

கல்யாண மாப்பிள்ளையின் தம்பி அவன். ஆனால் மாப்பிள்ளையைத் தோற்கடித்த அலங்காரம், அவன் தயாராகி விட்டிருந்தான்.

''கன்னா பின்னான்னு பேசாதே. அவர் காதில் பட்டால்...'' ரத்னா எச்சரித்தாள்.

'' சக்கர நாற்காலியை அவர் உருட்டிக் கொண்டு வராத தொலை தூரத்திலே இருக்கிறோம். கவலையை விடுங்கோ... வீட்டுக்கு வச்சிருக்கிற பேரைப் பாரு! அன்னம்! ஏன் கோழின்னு வைக்கக்கூடாது? பெரிய செண்ட்டிமெண்ட்...'' கேட்டின் ஓரத்தில் சுவற்றில் பளிச்சிட்ட பித்தளைத் தகட்டைப் பார்த்தான் வெறுப்புடன்.

''அன்னம் உன் கொள்ளுப் பாட்டியின் பெயர். உங்க தாத்தாவுக்கு அம்மாதான் தெய்வம்... தெரியாதா?''



''அந்தத் தெய்வம் இப்போது கண்ணை மூடப் போகிறதே.''

''டேய், இரைஞ்சு ஏண்டா கத்றே'' ரத்னா அதட்டிக் கொண்டே மறுபடியும் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். சற்றுத் தொலைவில் புடவை சரசரக்கும் சப்தம். திரும்பிப் பார்த்தனர். சோபனா வந்து கொண்டிருந்தாள்.

''நீ வருகிறேன்னு தெரிகிறது. இண்டிமேட் மூக்கைத் தாக்குகிறது... முழுப்பாட்டிலும் காலியோ'' சசி பரிகசித்தான்.

''நீ வாங்கிக் கொடுக்கலை, என் இஷ்டம். நான் எவ்வளவு வேண்டுமானாலும் போட்டுக்குவேன்'' சோபனா சிணுங்கிக்கொண்டு அருகில் வந்து நின்றாள்.

''அண்ணனுக்கும் தங்கைக்கும் சதா தர்க்கந்தான். அது இன்னிக்கும் தேவையா?'' ரத்னா கடிந்து கொண்டாள்.

''பாத்தீங்களா ஆண்ட்டி, இவளுக்கு மட்டும் விலையுயர்ந்த புடவை வாங்கியிருக்கிறாங்க...''

''இந்த வீட்டிலே முதல் முதல்ல கல்யாணம் நடக்கிறது. உனக்கேன் குறை, மனசுக்குப் பிடிச்சதை வாங்கிக்கோன்னு தாத்தா சிரிச்சுக்கொண்டே சொன்னார். நான் ஜமாய்ச்சுட்டேன். ஒண்ணு கவனிச்சீங்களா ஆண்ட்டி. தாத்தா சிரிச்சால் நமக்கு அவர் மேலே இருக்கிற பயங்கூட சட்டுனு மறந்து போகிறது...''

''முதல் முதல்லே கல்யாணம்னா சொன்னார்?'' முகம் இறுகிப் போனாள் ரத்னா.

''ஆண்ட்டி, நீங்கள் வருத்தப்படக் கூடாது. நாங்க ரெண்டு பேரும் உங்க பக்கந்தான். எங்களுக்கு இந்த கல்யாணம் கொஞ்சமும் பிடிக்கவேயில்லை... நுங்கம்பாக்கத்து வீட்டிலே நாம்ப இருக்கும்போது அண்ணனுக்கு நடந்த அந்தக் கல்யாணத்தை நினைச்சுப் பார்க்கிறேன். ஆபட்ஸ்பரியில் கல்யாணம். அப்போ என் பள்ளிக்கூடத்து சிநேகிதிகள் ஒரு பட்டாளமே வந்து வீட்டை ரெண்டு பண்ணிவிட்டாங்க. இப்போ எங்க காலேஜ் ஃபிரெண்ட்ஸ்களுக்கெல்லாம் அழைப்பு கிடையாதுன்னு தாத்தா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அவங்களை கூப்பிட்டா எனக்குத்தான் அவமானம். கோடம்பாக்கத்திலே ஒரு சந்திலே

இருக்கிற அந்த மண்டபத்தைப் பார்த்துட்டு, 'உன் தாத்தா பெரிய கருமி'ன்னு என்னைக் கேலி செய்வாங்க.

''கல்யாணம் முடிஞ்சதும் நான் காலேஜிற்குப் போனா என் சிநேகிதர்கள் என் தலையை உருட்டுவாங்க.''

''இது உன் கல்யாணமா, உன்னை அவர்கள் விரட்டறத்துக்கு?'' ரத்னா எரிச்சலோடு கேட்டாள்.

சசி பேச்சை மாற்றினான்... ''தி டையிங் ஸ்வானைப் பத்தி டாக்டர் என்ன சொன்னார்?''

''சசி!'' கிறீச்சிட்டாள் சோபனா. ''பாட்டியின் உடல் நிலைமை மோசமாக இருக்கு. அதைப்பத்தி வேடிக்கையாகப் பேச உனக்கு வெட்கமில்லை. தாத்தா காதில் பட்டால் சுட்டுப் பொசுக்கி விடுவார்.

''அன்னம்மா பாட்டி அவருக்குத் தாயார். நமக்குக் கொள்ளுப் பாட்டி. வயது தொண்ணூறு. மூணு வருஷமா படுக்கையிலிருக்காங்க. இப்போ உடம்புக்கு அதிகமாகி விட்டது. இன்னிக்கோ நாளைக்கோன்னு இழுத்துக்கிட்டிருக்காங்க - டாக்டர் கூட கைவிரிச்சுட்டார். அதை நான் இங்கிலீஷில் சுருக்கமாகச் சொன்னேன். தப்பென்ன...?''

''போதும், வாயை மூடு!'' ரத்னா அதட்டினாள்.

''தாத்தாவுக்குத் தன் தாய் மேலே ரொம்ப பற்றுதல். அப்படியிருந்தும் இந்தக் கல்யாணத்தை அவங்களுக்கு உடம்பு அதிகமாயிருக்கிற சமயத்திலே வச்சுக்காட்டி என்ன? இந்த அண்ணா கூட இதுக்கு ஒத்துக்கொண்டது எனக்கு ரொம்ப ஆச்சர்யமா இருக்கு. இதுவரை அண்ணாவுக்கு எத்தனை இடத்தில் பெண் பார்த்தாங்க! வாணி அண்ணிக்குப் பிறகு கல்யாணமே வேண்டாம்னு இருந்தவர் திடீர்னு மனசு மாறியது அதிசயத்திலும் அதிசயம்...''

''தாத்தா பணப்பையின் சுருக்கை இழுத்துப் பிடிக்க ஆரம்பிச்சுட்டார் இல்லையா... நமக்குக்கூட பாக்கெட் மணியை எப்படி குறைச்சுட்டார்! அண்ணனுக்கும் இதே கதி. அதுக்கு பயந்து கொண்டு அண்ணா ஒப்புக் கொண்டு விட்டார். எல்லாம் பணம் படுத்தும் பாடு'' உரத்த குரலில் சிரித்தான்.

''இல்லை ஆண்ட்டி அண்ணா சொல்றது தவறு. நீங்க இந்த



வெள்ளிக்கிழமை வீட்டில் இல்லை. அப்போ அந்தப் பெண்ணும் அவள் அண்ணனும் இங்கே வந்தாங்க. தாத்தாதான் நம்ப வீட்டு பென்ஸை அனுப்பி அவங்க தங்கி இருக்கிற இடத்திலிருந்து அழைத்து வரச் செய்தார். என்ன நடக்கிறதுன்னு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். நம்ப ஆபீஸ் மானேஜர் வெங்கடேசன் மனைவி ரேவதிதான் ஆரத்தி சுத்தி உள்ளே வரவேற்றாங்க...'' ரத்னாவின் தாடை தசைகள் அசைந்தன. கோபத்தில் பற்களைக் கடிப்பது புலப்பட்டது. கோபத்தைத் தூண்டிவிடுவது சோபனாவுக்குப் பிடித்த காரியம்.

''கல்யாணத்துக்கு முந்தியே வலதுகாலை எடுத்து வச்சு உள்ளே வந்துட்டாளா ராணி?'' சீறினாள் ரத்னா. ''நான் கோவிலுக்குப் போய் தொலைஞ்சிருந்தேன். அந்தக் கண்றாவியை யார் பார்த்தா? நீ கூட உடனே என்கிட்ட சொல்லலை... மற்றதிற்கெல்லாம் ஓடிவருவே, இது மறந்து போச்சா...''

''கோவிச்சுக்காதீங்க ஆண்ட்டி. அன்னிக்கு ராத்திரி நானும் சசியும் அந்த ஹாரர் பிச்சர் பார்க்கப் போயிருந்தோம். அதைப் பார்த்திட்டு வந்த பிறகு பயத்திலே எனக்குத் தூக்கமே இல்லை. வேறு நினைப்பே இல்லை...''

''அன்னமாப் பாட்டிக்கு உடம்பு முடியாம இருக்கிறதல்லவா... அவங்ககிட்ட நேரே வந்து ஆசி வாங்கிக் கொள்ளத்தான் தாத்தா இப்படி ஒரு ஏற்பாடு செய்திருப்பார். அவர் செய்கிற காரியங்கள் ஒவ்வொண்ணுக்கும் ஒரு காரணம் இருக்கும்'' சசி சமாதானம் சொன்னான்.

''அண்ணா இந்தக் கல்யாணத்திற்கு ஏன் ஒத்துக்கொண்டார்னு எனக்குப் புரிஞ்சுவிட்டது. புதிதாக வரப் போகிற அண்ணி அனுராதா பார்க்க ரொம்ப அழகாக இருக்காங்க.''

''வாணி போலவா?'' அடக்கமுடியாத ஆத்திரத்துடன் கேட்டாள் ரத்னா.

''தலைமுடி அத்தனை நீளமிருக்காது. ஆனாலும் நெளிந்து சுருண்ட அடர்த்தியான முடி. வாணி அண்ணி போல மூக்கு அத்தனை கூர் இல்லை. ஆனாலும் களையான முகம். நல்ல நிறம். தாத்தா என்னமோ சொன்னார். அவங்க சிரிச்சாங்க. டூத் பேஸ்ட்

விளம்பரத்துப் பெண் போல வரிசையான பற்கள்... மயக்கும் சிரிப்பு எனக்கே அவங்களைப் பார்த்து என்னமோ மாதிரி ஆயுடுத்து. அண்ணா சொக்கிப் போய் விட்டார். அதுதான் உண்மை'' சோபனா விவரித்தாள்.

''ஆண்ட்டி! நீங்களே இன்னும் கொஞ்ச நேரத்தில் கல்யாண மண்டபத்தில் பார்க்கப் போறீங்க. இவ சொல்றதை நம்பாதீங்க. இவ சிநேகிதிகள் எல்லோரையும் ஜீனத் அமன் - ஹேமமாலின்னு புகழ்ந்து விடுவா. கிட்டப் பார்த்தா நம்ப வீடு கூட்டும் குப்பம்மாவே அவங்களை விட ரொம்ப அழகுன்னு சொல்வேன்'' உரத்துச் சிரித்தான். ரத்னா புன்முறுவலிக்க முயன்றாள். சோபனா சிணுங்கினாள்.

அதுசமயம் டிரைவர் பொன்னயா - கேட்டைத் தாண்டி எட்டிப் பார்த்தான்.

''அம்பாசிடரில் உங்களையெல்லாம் கல்யாண மண்டபத்திற்கு அழைச்சிட்டுப் போகும்படி ஐயா உத்திரவு'' அழுத்தலாகச் சொன்னான்.

சிவபாதம் சக்கர வண்டியைத் தள்ளிக்கொண்டு முன்னறைக்கு வந்திருந்தார். குற்ற உணர்வுடன் மூவரும் அவரைக் கண்டு தயங்கினர்.

''காலை எட்டு மணிக்கே நீங்கள் எல்லாம் மண்டபத்திலே இருக்க வேண்டாமா? இது நம்ப எடுத்து நடத்தும் கல்யாணம். ஏனோ தானோன்னு இருக்க முடியாது. சீக்கிரம் கிளம்புங்கோ. இப்போ மணி ஏழரை ஆகப் போகிறது'' தமது கைக்கடியாரத்தைப் பார்த்துவிட்டு சீறினார் அவர் கோபத்துடன்.

''நாங்க ரெடி தாத்தா'' கேவல் குரலில் அண்ணனும் தங்கையும் பதில் கொடுத்தனர்.

''வீட்டிலே அம்மாவைப் பார்த்துக்க யாராச்சும்...'' ரத்னா வார்த்தைகளை விழுங்கினாள்.

சிவபாதம் அவளுக்கு தூரத்து உறவு - பெரியப்பா என்று வாய் நிறையக் கூப்பிடுவது வழக்கம். பயத்திலே பெரியப்பா தொண்டைக்குள்ளேயே நின்றுவிட்டார்.

முக்காலும் நரைத்துவிட்ட தமது மீசையை இடது கரத்தால்



மெல்லத் தடவிக் கொண்டார் அவர்.

''அம்மாவைக் கவனிக்கக்க முழு நேரத்துக்கு நர்ஸ் அமர்த்தியிருக்கோம். அதனாலே நீங்க எல்லோரும் மண்டபத்துக்குக் கிளம்பலாம். அரை மணியிலே நான் ஜெயகுமாரோட அங்கே வந்து சேர்ந்திடுவேன். முகூர்த்தம் ஒன்பது பத்தரைக்கு -ஞாபகமிருக்கவில்லையா?'' அதட்டலாகக் கேட்டுவிட்டு வண்டியைத் தாமே திருப்பிக்கொண்டு வேகமாகக் கைகளால் தள்ளியபடி அங்கிருந்து மறைந்தார்.

உறைந்து போயிருந்த சசிக்கு அப்பொழுதுதான் மூச்சு வந்தது. தோள்களை அசட்டையாகக் குலுக்கினான். தங்கையைப் பார்த்து புன்முறுவலித்தான். ''ஃசீஃப் உத்தரவிட்டாச்சு. இனிமேலும் தாமதிக்க முடியுமா?... ஏளனமாகச் சொன்னான்.

''இந்தப் பேச்செல்லாம் தாத்தாவுக்குப் பின்னால்தான். அவர் முன்னால் நீ ஒரு ஆட்டுக்குட்டி, ஷட்அப்'' எரிச்சலோடு பதிலளித்துவிட்டு தன் கைப்பையை எடுத்து வர சோபனா விரைந்தாள்.

எழிலரசி மிகவும் சிறிய மண்டபம். பொறுக்கி எடுத்து அனுப்பிய அழைப்பிதழ்கட்கு இணங்கி வந்திருந்தவர்கள் இருநூறு பேருக்கு மேலிருக்காது. அதில் பலர் சிவபாதத்தின் தொழிற்சாலையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள். பெண்கள் பகுதியில் இரண்டாவது வரிசையில் கழுத்து வலிக்க எட்டிப் பார்த்தபடி ரத்னா உட்கார்ந்திருந்தாள். தகரக் கூரையைப் பொத்துக் கொண்டு வெய்யில் நெருப்பை இறைத்துக் கொண்டு இருந்தது. தலைக்கு மேல் ஆடிய மின்விசிறிகள் அதன் அனல் காற்றைச் சுற்றின. வியர்த்து ஆடை தொப்பலாகி, நாற்காலி இடுக்கில் சிக்கிக் கொண்ட புடவைத் தலைப்பை இழுத்துச் சரிப்படுத்திக் கொண்டு தவித்தபடி இருந்தாள்.

மணமகன் மேடையில் வந்து அமர்ந்து கொண்டான். மாலையும் கழுத்துமாக அவனைப் பார்த்த போது பாறாங்கல்லாக வேதனை அவள் நெஞ்சை அடைத்தது.

நாதஸ்வரம் காதைக் கிழித்தது. சந்தனம், மல்லிகை கலந்த கதம்ப மணம் என்னென்னவோ துன்ப நினைவுகளைக் கிளறிவிட - கண்கள்

பனிக்க - கீழுதட்டைக் கடித்துக் கொண்டு பேசப் பிடிக்காது உட்கார்ந்திருந்தாள்.

மணமேடையருகே சக்கர வண்டியில் கம்பீரமாக அமர்ந்திருந்தார் சிவபாதம்.

சசி அங்கிருந்த வாலிபர் சிலருக்கிடையே மறைந்து கொண்டிருந்தான். நாற்காலியிலிருந்தபடியே லைட் ஹவுஸாகச் சுழன்ற தாத்தாவின் பார்வை அவன் வாயை அடைத்து விட்டிருந்தது.

கல்யாண வீட்டிற்கு உரித்தான கலாட்டா - சிரிப்பு - கும்மாளம் - ஒன்றுமேயில்லை.

சோபனா அருகில் நின்ற ஒரு இளம் பெண்ணுடன் அடிக்குரலில் கிசுகிசுத்துக் கொண்டிருந்தாள்.

''மணப்பெண்ணை வரச் சொல்லுங்கோ...'' புரோகிதரின் குரல் நாதஸ்வரத்தின் நடுவே... ஓங்கி ஒலித்தது. எல்லோர் கவனமும் அந்தப் பக்கம் திரும்பியது.

ரத்னாவின் நெஞ்சில் ஒரு படபடப்பு - மூச்சு முட்டி விட்டது போன்றதொரு பரபரப்பு. திரும்பிப் பார்த்தாள். இரண்டு தோழிப் பெண்களின் இடையே கழுத்தை மாலைகள் நிறைக்க - இடுப்பில் ரோஜா வண்ண தகடிச் சேலை மின்ன... மணப் பெண் கோலத்திலே அவள் வந்து கொண்டிருந்தாள்.

பெண்கள் பகுதியில் லேசான சலசலப்பு. கசமுசவென்ற பேச்சு. ''பெண் ரொம்ப அழகாக இருக்கிறாளே....''

'சாதாரண இடம்தானா? ஆனாலும் பெண் லட்சணமாக இருக்கிறாள்' சசிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ஷொய்யென்று சீட்டியடிக்க வேண்டுமென்று ஆவேசம். மீசையைத் தடவியபடி அவன் பக்கம் தன் கண்களை உருட்டிய சிவபாதத்தைப் பார்த்துவிட்டான். சப்தநாடியும் ஒடுங்கி மௌனமாகிவிட்டான் அவன்.

அதற்குப் பின்னர் ரத்னாவால், சடங்குகளைக் கவனிக்கவே முடியவில்லை. அடிக்கடி அந்தப் பழைய நினைவு பெரும் சுமையாக நெஞ்சை இறுக்கியது. மணையிலிருந்த அனுராதாவைப் பார்க்க அவளுக்குப் பிடிக்கவேயில்லை.



ஜெட் வேகத்திலே மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்த புரோகிதர் மங்கல நாண் கொண்ட தட்டுடன் எழுந்திருந்தார். சிவபாதத்தின் முகத்திலே பெரிய சிரிப்பு - கட்டுக் கொள்ளாத கத்தை மீசைகள் இரு புறமும் லேசாகப் புரண்டு ஆடின. கைகளை நீட்டி மங்கல நாணைத் தொட்டு ஆசிர்வதித்தார்.

''கெட்டி மேளம்...'' புரோகிதரின் உரத்த குரல் ரத்னாவைத் திடுக்கிடச் செய்தது. விழித்துக் கொண்டாள்.

தகரக் கொட்டகை அதிர மேளம் கொட்ட - நாதஸ்வரம் ஒலிக்க... வந்தவர்கள் மலர் தூவி வாழ்த்த - சோபனா பின்னாலிருந்து உதவ -ஜெய்குமார் அனுராதாவின் கழுத்திலே தாலிக் கயிற்றைக் கட்டி முடிச்சிட்டுக் கொண்டிருந்தான்...

வாழ்த்திய கையோடு வந்தவர்கள் சாப்பிடப் பறந்து விட்டனர். இரண்டாவது, மூன்றாவதாக வேலைக்காரர்களும் மற்றவர்களும் உண்டு முடித்துவிட்டனர். மணப்பெண் கனமான கூரைச்சேலையைக் களைந்து வேறு உடுத்திக்கொண்டு தங்கல் அறைக்குள் சென்றாள்.

பொன்னையா வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்தான். குனிந்து கிழவர் காதுகளில் ஏதோ சொன்னான். ஒரு கணம் அந்தப் பிரகாசமான முகத்தில் கவலை நிழலாடியது போன்ற தோற்றம். தூரத்திலிருந்து ரத்னா பார்த்து விட்டாள்.

பொன்னையா ஏன் பதறுகிறான்? என்ன நடந்துவிட்டது? கிழவர் என்னவோ சொன்னார். பெண்ணின் சகோதரன் ஓடி வந்தான்... ''மாலை வரவேற்பு இருக்காது. அதனால் பலகாரம் தயாரிக்கத் தேவையில்லை'' - சமையற்கட்டை மேற்பார்வையிட்ட சங்கரனின் குரல் பளிச்சென்று கேட்டது. அவள் அங்கிருந்து திரும்பி வருவதற்குள் சக்கர வண்டியைக் காணவில்லை - சிவபாதம் மண்டபத்தை விட்டுப் புறப்பட்டு விட்டிருந்தார்.

பொன்னையா அருகில் வந்தான்.

''நீங்களும் குழந்தைகளும் வர்றீங்களா? அம்பாசிடர் ரெடி.''

ரத்னா கேட்க வந்ததை விழுங்கிக் கொண்டு தவிப்புடன் அவனைப் பார்த்தாள். சசியும், சோபனாவும் ஓடி வந்தனர். அவர்கள் முகத்தில் கேள்விக்குறிகள்.

ரத்னா ஏறுவதற்கு காரின் பின் கதவைத் திறந்து விட்டு பெர்ன்னையா மெல்லச் சொன்னான்.

"அன்னம்மா பாட்டி இறந்துட்டாங்க..." சுருக்கமாகச் சொல்லிவிட்டு டிரைவர் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

"பேஷ்! கழுத்திலே தாலி ஏறி பத்து நிமிஷமாகலை. பாட்டியை உருட்டி விட்டாள். அடுத்தபடி யாரை உருட்டப் போகிறாளோ மகராசி" ரத்னா ஆத்திரத்துடன் சொன்னாள்.

"ஒரு மணம், ஒரு பிணம். எப்படி?..." முணுமுணுத்த சசியை சோபனா வெடுக்கென்று கிள்ளினாள்.

"வாயை மூடு. எதை எப்போ பேசறதுன்னு தராதரமே இடையாதா உனக்கு?" வெட்டியது அவள் பார்வை.

## 2

அன்று மாணிக்கம் தன் மளிகைக் கடையைத் திறக்கவேயில்லை. தங்கையைப் புக்ககத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய முக்கிய வேலை இருந்தது. அவனுக்கு ஒரே தவிப்பு. இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் சிவபாதத்திடமிருந்து கடிதம் வந்தது.

மானேஜர் வெங்கடேசனும் அவர் மனைவி ரேவதியும் பெண்ணை அழைத்துப்போக நேரேயே சென்னையிலிருந்து வந்திருந்தனர். சிவபாதம் தனது பென்ஸை அனுப்பிப் பேரன் மனைவியைச் சிறப்பாகக் காரிலேயே அங்கிருந்து அழைத்து வர ஏற்பாடு செய்திருந்தார்.

காவேரிக் கூரையை ஒட்டிய சிறிய கிராமம் வரதபுரம். மாணிக்கத்திற்கு கடைத் தெருவில் ஒரு சிறிய கடை. பல சரக்கு வியாபாரம். கிழக்குத் தெருவில் குடியிருப்பு. அந்தக் காலத்தில் அவன் தந்தை கொஞ்சம் வசதியாக இருந்த போது கட்டிய மாடி வீடு. சுண்ணாம்பு பொரிந்து, கூரை உதிர்ந்து சுவற்றில் செங்கல்



அங்குமிங்கும் பல்லை இளித்தது.

அவனால் வீட்டைச் செப்பனிட்டுக் கொள்ள முடியாத நிலை. நாலு பிள்ளைகள். மூத்தவன் பக்கத்திலிருந்த ஹைஸ்கூலில் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். கடைசிப் பையனுக்கு நாலு வயசு. அத்துடன் குடும்பப் பெருக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டிருந்தான். எனினும் பற்றாக்குறையில் சமாளிக்க முடியாது தடுமாறிக் கொண்டிருந்தான். போதாததிற்கு வருஷ ஆரம்பத்தில் தெருவில் வேறிரண்டு புதிய கடைகள் போட்டிக்கு வந்துவிடவே அவன் வியாபாரம் படுத்துவிட்டிருந்தது.

மாடியறையில் தன் சாமான்களை எடுத்துப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தாள் அனுராதா. அழைத்துப் போக வந்த வெங்கடேசன் தம்பதிகளுக்கு அன்று அவர்கள் வீட்டில் விருந்து. மாணிக்கம், மனைவி பின் தொடர மாடிக்கு வந்தான்.

"இந்தாம்மா இந்தப் புடவை ஜாக்கெட் ரெண்டையும் பெட்டியில் பத்திரமா வச்சுக்கோ. இந்தப் பார்சலில் மாப்பிள்ளைக்கு பட்டு வேட்டி அங்கவஸ்திரம் வச்சிருக்கேன். கிழவர் என்னைக் கூட வரக்கூடாதுன்னு கண்டிப்பா எழுதி விட்டிருக்கிறார். நீங்க பட்டணம் போய்ச்சேர ராத்திரி ஆயிடும். வெங்கடேசன் வீட்டிலேதான் இன்னிக்கு நீ தங்கியிருக்க ஏற்பாடு. காலையிலே முறைப்படி அவங்க வீட்டிலிருந்து உன்னை வந்து அழைக்க வருவாங்களாம். அப்போ நீயும் மாப்பிள்ளையும் உடுத்திக் கொண்டு போக பிறந்த வீட்டுப் பரிசும்மா இதெல்லாம்..."

அவனால் அதற்குமேல் பேசவே முடியவில்லை. இரண்டு வயசுக் குழந்தையாக அனுராதா இருக்கும் போது செத்துவிட்டாள் அவள் விதவைத் தாயார். தங்கையை தன் மகளாக வளர்த்துவிட்டிருந்தான். அந்தப் பாசம், பிரிவை எண்ணி அவன் உணர்வுகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. மேலும் கீழும் அமைதியின்றி நடந்தான்.

"எண்ணத்துக்கண்ணா இந்தச் செலவெல்லாம். சீர்வரிசை எதுவுமே வேண்டாம்னு தாத்தா எழுதியிருந்தாரே..." திகைப்புடன் கேட்டாள்.

"அவங்க சொல்லிட்டா நான் உன்ன கட்டின புடவையோட

அனுப்பிட முடியுமா? நமக்கும் ஒரு மரியாதை இருக்கு இல்லையா?"

புடவைப் பார்சலைப் பிரித்துக் கையில் எடுத்தாள். நெஞ்சு துணுக்குற்றது. அவளுக்குப் பிடித்த பச்சை வண்ணக் காஞ்சிபுரம் பட்டுச் சேலை. கரையும் தலைப்பும் கண்களைப் பறித்தன.

'மாப்பிள்ளையின் பட்டுவேட்டி, அங்கவஸ்திரம்... எல்லாமே ஆயிரத்துக்குமேல் கணக்கு ஓடியிருக்குமே! சில மாதங்களுக்கு முன்னர்தான் கடைக்குச் சரக்கு வாங்க பணம் இல்லாது மிகவும் தவித்த அண்ணன் இப்படிச் செலவழிக்க பணத்திற்கு என்ன செய்தார்?' அவைகளைப் பெட்டிக்குள் பத்திரமாக வைத்து மூடினாள்.

இந்த இரண்டு டப்பாக்களை மட்டும் டிக்கியில் வைக்கச் சொல். ஒண்ணிலே நெய்யில் சுட்ட அதிரசம். இன்னொண்ணிலே கொஞ்சம் முறுக்கு வச்சிருக்கேன்... உன் கணவருக்கு முறுக்குன்னா ரொம்ப ஆசையாம்..." கண்களை சிமிட்டியபடி மரகதம் அவளை அன்புடன் பார்த்தாள்.

அனுவின் மூக்கும் கண்களும் சிவந்து போயின. சிணுங்கிக் கொண்டு அண்ணியைப் பார்க்கத் திரும்பிய போது கவனித்துவிட்டாள். மரகதத்தின் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியைக் காணவில்லை. அவளை வாழ வைக்க அது விலை போய் விட்டிருந்தது.

தொண்டையை அடைத்த துன்ப உணர்வை விழுங்கிக் கொண்டாள்.

பக்கத்து வீட்டு மருந்துக் கடை ராமசாமியின் மகள் பங்கஜம் அவளைப் பார்க்க மாடிக்கு வந்து விட்டாள். ஆருயிர் சிநேகிதி அவள். திருச்சியில் ஒன்றாக பி.ஏ. படிக்க இருவரும் ஹாஸ்டலில் ஒரு ஊர்க்காரர்கள் என்ற சலுகையில் ஒரே அறையில் தங்கியிருந்தவர்கள். இளமையின் எண்ணற்ற எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டு மகிழ்ந்தவர்கள். பி.ஏ. முடித்த கையோடு அவளுக்குக் கல்யாணம் நடந்தேறிவிட்டது. காதல் கல்யாணம். அதிகம் படித்திராத அத்தை மகனை, வீட்டில் பலத்த எதிர்ப்புக்கிடையே திருமணம் செய்து கொண்டு விட்டவள். இப்போது பிள்ளைப் பேற்றுக்கு தாய் வீட்டிற்கு வந்திருந்தாள்.



"உன் கல்யாணத்துக்கு வரமுடியலை. போட்டோக்களையாவது பார்க்கலாமா?" கேட்டுக் கொண்டே அவள் அருகில் வந்து நின்றாள்.

கல்யாணத்தின் போது போட்டோக்கள் எடுக்கப்பட்டன. சிலவற்றை சிவபாதம் அவள் அண்ணனுக்கு அனுப்பியிருந்தார். தாத்தாவிடம் ஆசி பெற அருகில் வந்து நின்றபோது எடுத்துவிட்டிருந்த போட்டோவில் மணமக்கள் இருவருமே நன்றாகக் காணப்பட்டனர். அதை வாங்கி அவள் தன் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தாள்.

திருமணம் நடந்து - அன்னம்மா பாட்டி இறந்து - மூன்று மாதங்களாகி விட்டிருந்தன. தாத்தா சிவபாதம் தவறாமல் மாதமிருமுறையேனும் அண்ணனுக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார். அவன்? அவள் கணவன்? அவளுக்கு ஒரு கடிதங்கூட இதுவரை எழுதவேயில்லை. ஏன்? உள்ளூர மனம் புழுங்கிக் கொண்டிருந்தாள் அவள். மாணிக்கம் அதைப்பற்றி அவளிடம் விசாரித்தான், மழுப்பிவிட்டாள்.

முன் பின் தெரியாதவன் - ஆனாலும் தாலியைக் கழுத்தில் கட்டிவிட்டவன். அவன் பக்கம் பரிந்து பேச வேண்டுமென்றதொரு பாசம். பழமையில் ஊறிப்போன இந்த உணர்வை என்னவென்று சொல்வது? பலவீனம் என்பதா? பரிவு என்பதா?... கண்டதும் ஏற்படுகின்ற காதலுக்கும்... கல்யாணமென்ற பந்தத்திலே உருவாகிற இந்த உறவுக்கும் உள்ள வித்தியாசம்?... பற்பல எண்ணி அவள் குழம்பிக் கொண்டிருந்தாள்.

"உன் கணவர் ரொம்ப ஜோராக இருக்கிறாரே!"

படத்தைப் பார்த்து வியந்த பங்கஜம் அவள் தோள்களைக் குலுக்கினாள். கேட்க அவளுக்குப் பெருமையாகத் தானிருந்தது. மகிழ்ச்சியில் உள்ளம் பூரித்தது.

முதல் முதலில் பெண் பார்க்க அவர்கள் வந்த போது...

அதிக தூரம் காரில் பயணம் செய்ய சிவபாதம் விரும்பவில்லை. பெண்ணை அழைத்துக் கொண்டு மாணிக்கம் சென்னைக்கு வரவேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார் கிழவர். மாணிக்கம் தயங்கினான். வழக்கமில்லாத வழக்கம்... ஆனாலும் பெரிய இடத்து

சம்பந்தத்தைவிட மனமில்லை. சென்னையில் மானே வெங்கடேசன் வீட்டில்தான் அவர்கள் தங்க ஏற்பா செய்யப்பட்டிருந்தது. பெண்ணைப் பார்க்க கிழவரும், ஜெ குமாரும் வந்திருந்தனர்.

கைகுவித்து வணங்கிவிட்டு அவர் காட்டிய ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான். வெகு நேரம் அவனைப் பார்க்க முடியாத ஒரு அச்சம் நெஞ்சை படபடக்கச் செய்து கொண்டிருந்தது. எல்லோரும் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அது சமயம் மெல்லத் திரும்பி அவனைப் பார்த்தாள். இதயத்தின் துடிப்பு ஒன்று தவறிவிட்டது போன்ற ஒரு பிரமிப்பு... செவேலென்று நிறம். கழுத்திலே படிந்த சுருண்ட முடி, அரும்பு மீசை - கன்னங்களில் பரவிய கிருதாக்கள்... கனவு மிதந்த கண்கள்... மாப்பிள்ளையை அவளுக்கு மிகவும் பிடித்து விட்டது.

வீட்டிற்கு வந்துகூட மாணிக்கம் அவளிடம் ஏதும் பேசவில்லை. அண்ணி மரகதம்தான் கேட்டாள்.

''மாப்பிள்ளையை பிடிச்சிருக்கான்னு அண்ணா கேட்கச் சொன்னார்.''

அனுவின் கன்னங்கள் சிவந்து காதுகளில் ரத்தம் பாய்ந்து சூடாகின... நெஞ்சிலே ஒரு சிலிர்ப்பு. ''உங்களுக்குப் பிடிச்சால் சரி'' சாமர்த்தியமாகப் பதிலளித்தாள்.

''இதிலே ஒரு சின்ன குறை இருக்கு தெரியுமில்லியா?''

அவளுக்குத் தெரிந்த சங்கதிதான். ஜெய்குமார் மனைவியை இழந்தவன். இது அவனுடைய இரண்டாவது கல்யாணம். திருமணமாகிய மறு வருஷமே மனைவி கார் விபத்திலே இறந்து போய் விட்டாள். மனமொடிந்து போய் சில வருஷங்களாகத் திருமணம் வேண்டாம் என்று இருந்தவன் இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறான்.

'அழகானவன், படிச்சவன் - மிகவும் வசதியானவன் - இப்படி ஒரு குறை இருக்க வேண்டுமா?' அனுவின் மனத்திலே ஒரு சிறு நெருடல்தான்.

'யோசிக்கிறியா அனு?'' மரகதத்தின் குரல் திடுக்கிடச் செய்தது.



''இல்லை அண்ணி... எனக்குச் சம்மதம்னு அண்ணனிடம் சொல்லிடுங்கோ.''

''பணம், பதவிக்கு ஆசைப்பட்டு இரண்டாம் தாரமாகக் கொடுத்துவிட்டதாகப் பின்னால்...'' மரகதம் முடிக்கு முன் அனுராதா அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''பூரண சம்மதம் அண்ணி,'' உணர்ச்சிவசத்தில் அவள் குரல் கம்மி நடுங்கியது. தொடர்ந்து அண்ணனுக்கு ஒரு பாரமாக இருக்க அவள் விரும்பாததும் ஒரு காரணம் ஆகும்.

கிராமத்தில் அவளை ஒத்த பெண்கள் எல்லாருக்கும் திருமணமாகி விட்டிருந்தது. ''பி.ஏ. படிச்சு ரெண்டு வருசமாகிறதே தங்கச்சியை வேலைக்கு அனுப்ப உத்தேசமா?'' எதிர் வீட்டுக்காரர் குத்திக் கேட்ட பொழுது மாணிக்கத்திற்கு அவமானம் தாங்க முடியவில்லை.

அவன் முயற்சிக்காமல் இல்லை. பல இடங்களிலிருந்து வந்து பெண் கேட்டனர். தங்கைக்கு சீர் எடுத்து அவர்கள் கேட்டபடி சிறப்பாகக் கட்டிக்கொடுக்க முடியாத தரித்திரம் அவனுக்கு. கடைசியாக வந்து போனவன் - பாங்கியில் கணக்கன் வேலை பார்த்துக் கொண்டு இருந்தான். துணிவுடன் கேட்டுவிட்டான். 'ஸ்கூட்டர் வாங்கிக் கொடுப்பீங்களா?' மாணிக்கத்திற்கு அழமாட்டாக் குறை. அத்தனை பணத்திற்கு அவன் எங்கே போவான்? அந்த வரனும் கை நழுவியது. அவன் மனம் கலங்கிக் கொண்டிருந்த சமயந்தான் சிவபாதத்தின் சார்பாக வெங்கடேசன் வந்தார். பேச்சு வார்த்தைகள் துரிதமாக நடந்தன. கைகாசு செலவின்றி கல்யாணமும் நடந்தேறிவிட்டது.

''ரொம்ப நகைகள் போட்டாங்களா?' பங்கஜம் தோண்டித் துருவிக் கேட்டாள்.

அந்த வெள்ளிக்கிழமை. கல்யாணத்திற்கு முன்னர் வெங்கடேசன் வீட்டில் வந்து தங்கியிருந்த பெண்ணை அழைத்து வரும்படி காரைக் கொடுத்தனுப்பினார் சிவபாதம்... அண்ணனுடன் அவள் புறப்பட்டுச் சென்றாள்... கிழவர் முன்னறையிலேயே நாற்காலியில் அவர்களுக்காகக் காத்திருந்தார். அன்னம்மா பாட்டி படுத்திருந்த அறைக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஒழிந்த நாராகக் கிடந்தபோதிலும் பாட்டிக்குப் பேச சக்தியிருந்தது.

''கல்யாணப் பெண் வந்திருக்கிறாள். ஆசீர்வதியுங்கோ அம்மா...'' சிவபாதம் உரத்த குரலில் சொன்னார்.

கட்டிலினருகே தரையில் விழுந்து கும்பிட்டாள் அனுராதா. தலைமாட்டில் தயாராக வைத்துக் கொண்டிருந்த ஒரு சிறு தந்தப் பெட்டியை இழுத்து பாட்டி அவள் முன் நீட்டினாள். அவள் கரம் நடுங்கியது.

''வாங்கிக்கோ அம்மா, பாட்டி உனக்குப் பரிசு கொடுக்கிறாங்க...'' உத்தரவிட்டார் சிவபாதம். பவ்யமாக அதைப் பெற்றுக் கொண்டாள் அனுராதா.

''மகராசியா இரு.'' கிழவி ஆசீர்வதித்துவிட்டு, கண்களை பரக்க விழித்து எதிரே நின்ற பெண்ணைப் பார்த்துப் புன்முறுவலித்தாள். பெட்டிக்குள் ஒரு ஜோடி வைரக் கம்மல், ஒரு வைர நெக்லஸ், நாலு ஜோடி தங்க வளையல்கள், ஒரு தங்கச் சரடு - இவ்வளவும் இருந்ததைக் கண்டு பிரமித்துப் போய் நின்றாள் அனுராதா.

''பாட்டியுடைய மீதி நகைகள் பாங்கியில் இருக்கு. எல்லாம் உனக்குச் சேர வேண்டியதுன்னு எழுதி வச்சிருக்காங்க'' பரிவோடு பார்த்தார் சிவபாதம்.

அனுவுக்குக் கட்டுக்கொள்ளாத மகிழ்ச்சி - திகைப்பு? இதெல்லாம் கனவா, நினைவா? - ஒரு சந்தேகமும் இடையே.

''பந்தலுக்கு வரும்போது அந்தக் கவரிங் நகைகளைக் கழற்றிவிட்டு இவைகளைப் போட்டுக் கொண்டு வரணும்.'' அடுத்தபடியாக வந்த அவர் உத்தரவு அவளைத் திடுக்கிடச் செய்தது.

கல்யாணத்திற்கு சில நாட்கள் முன்னர்தான் அண்ணி வாங்கிக் கொடுத்தவை அவை. கழுத்தும் கையும் நிறைய ஏதாவது நகை வேண்டுமே என்று வாங்கியவை. அவை கவரிங் நகைகள் என்று கிழவர் கண்டு பிடித்துவிட்டாரே!

''உன்னோடு கொஞ்சம் தனியா பேசணும் இப்படி வாரியா,'' முகம் சிவந்து போய் நின்ற அவளைப் பார்த்து முறுவலித்தார் சிவபாதம். அவர் தமது நாற்காலியைத் தள்ளிக் கொண்டு முன்னேறுகிறார். அவள் பின் தொடர்ந்தாள். இருவரும் அவருடைய



அறைக்குள் வந்தனர். நாற்காலியிலிருந்தபடியே அவர் கையை நீட்டிக் கதவைச் சாத்தினார். குளுகுளுவென்ற ஏ.சி. அறை.

''அந்த விபத்துக்குப் பிறகு இப்படி ஒரு நிலை. நாற்காலியிலேயே கட்டுண்டுகிடக்கிறேன்...'' அவள் முகத்தை உற்றுப் பார்த்தார்.

''வெரி ஸாரி - '' அனு இரக்கத்துடன் முணுமுணுத்தாள். அதற்குமேல் என்ன பேசுவது என்று விளங்காத குழப்பம் அவளுக்கு.

தாத்தா நாற்காலியைத் தள்ளிக்கொண்டு அறைக்குள் வட்டமாக ஒரு முறை சுற்றி வந்தார். பேச்சை துவங்க அவர் செய்த பூர்வ பீடிகை. அவளுக்குச் சட்டென்று அவள் தோழி சரோ சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

''வாணி இறந்து போய் கல்யாணமே வேண்டாம்னு இருந்து விட்டான். எத்தனையோ இடத்தில் பெண் பார்த்தோம். உன்னைத்தான் எனக்கு மிகவும் பிடித்தது. ஏன் தெரியுமா?''

ஏ.சி. அறையிலும் நெற்றியில் வியர்வை சொட்ட நெஞ்சு பதற அவள் மௌனமாக நின்றாள்.

''ஒரு வருஷத்துக்கு முன் ஒரு கல்யாண வீட்டிலே உன்னைப் பார்த்தேன். உனக்கு ஞாபகமிருக்குமோ என்னவோ?''

அவளுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. அவள் கல்லூரித் தோழிக்குக் கல்யாணம். அண்ணன் பெரிய மனசு பண்ணி இவளுடன் திருச்சிக்கு கல்யாணத்திற்கு வந்திருந்தார். பந்தலில் ஒரே கூட்டம். அப்போதுதான் அவள் சிநேகிதி குரும்புக்காரி சரோ - சொன்னாள். சக்கர நாற்காலியில் இருக்கிற அந்த ஆசாமியைப் பார். அந்த கத்தை மீசை - பட்டையாக ஒரு பக்கம் வெளுத்து விட்டிருக்கும் கிராப்பு -சில்க் ஜிப்பா, இதெல்லாம் பார்த்தா யாரட்டமா இருக்கு?'' கிசுகிசுத்தாள். அனுராதா மெல்ல சக்கர நாற்காலி இருந்த பக்கம் திரும்பினாள். பதைபதைத்துப் போய் விருட்டென்று மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டாள்.

அந்த ஆசாமியும் அதே சமயம் அவளை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார்.

''படத்தில் வந்த அந்த அப்பா நடிகராட்டமா இல்லை?'' சரோ

தொடர்ந்து அடிக்குரலில் கேட்டாள். உண்மைதான். அவர் அப்படித்தான் - அந்த நடிகரைப் போல் இருந்தார். அதே மிடுக்கான பார்வை - முகவாயில் கையைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்த தோரணை எல்லாம்... அச்சு போல் அப்படியே இருந்தது.

''இந்தப் பெண்தான் நம்ப வீட்டுக்கு ஏத்த மருமகள்னு அப்பவே தீர்மானிச்சுட்டேன், ஏன்னு கேட்காதே. அதுதான் ஒரு இன்டியூஷன். ஆறாவது அறிவு. உள்மனத்தின் உத்தரவு. உடனடியாக உன் குடும்பத்தைப் பற்றி, உன்னைப் பற்றி ஆராய ஏற்பாடு பண்ணினேன். நான் ஒரு வியாபாரி. தீர்மானிச்சபின்தான் காரியத்தில் இறங்குவேன். எங்களுக்குப் பிடித்து விட்டது. கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டேன். என் தாயாருக்கு உடம்புக்கு அதிகமாகிவிட்டிருக்கிறது. திருமணத்தின் போது ஏதாவது நேர்ந்து விடலாம். அவங்க உயிருடன் இருக்கும்போதே உனக்கு அவங்களது ஆசிகளை வழங்கணும்னு என் ஆசை. அதையும் நிறைவேத்திட்டேன்.

''இந்த வீட்டுக்கு மருமகளாக வரப்போகிற உன்னிடம் நான் ரொம்ப எதிர்பார்க்கிறேன்...''

அவளுக்கு இப்பொழுதுதான் கொஞ்சம் துணிவு ஏற்பட்டது. மெல்ல தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்தாள் - ''ஒரு சமயம் உங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டு விட்டால்...?''

''நீ அந்தப் பொறுப்புகளையெல்லாம் தாங்கிக் கொள்ளக் கூடிய திறமை உடையவள். உன்னிடம் அந்த மாபெரும் சக்தி மறைந்து கிடக்கிறதுன்னு எனக்குள்ளே ஒரு பெரும் நம்பிக்கை. அதனால் ஏமாற மாட்டேன்.''

''நன்றி ஐயா!''

''உன் வருங்காலக் கணவனின் பாட்டன் நான். என்னை தாத்தான்னு கூப்பிடணும் தெரியுமா.

அவள் சரியென்று தலையை அசைத்தாள்.

''நாற்காலியோடு நோயாளியாகக் கிடக்கிற என்னை கவனிக்க வேண்டிய பெரிய பொறுப்பு இனி உன்னுடைய தாகிவிடும். இந்த வீட்டில் விவரம் தெரியாத இரண்டு டீன் ஏஜ் பசங்கள் இருக்கிறாங்க. அவங்களைக் கட்டி மேய்க்க வேண்டிய வேலையும் உன்னைச்



சேர்ந்தது. பெண்ணை கொடுத்துவிட்டு இங்கேயே தங்கிவிட்டிருக்கும் ரத்னா அம்மாள் மிகவும் சிரமமான பேர்வழி. அவங்களைச் சமாளிக்க வேணும்... பிறகு உன் கணவன் குமார்... அவனை விரைவில் நீ புரிஞ்சு கொண்டு இந்த குடும்பத்தை நிர்வகித்து - முன்னுக்குக் கொண்டு வரணும். அதான் என் வேண்டுகோள் செய்வியா?

''முயற்சிக்கிறேன் தாத்தா.''

நாற்காலியைத் தள்ளிக்கொண்டே சென்ற சிவபாதம் கையை நீட்டிக் கதவைத் திறந்தார். ''தலையிலே இப்பவே பெரிய கல்லை நான் - தூக்கி வச்சுட்டாப் போல பயந்துண்டு சொல்றியே...'' அவர் வாய்விட்டுச் சிரித்தார். அவளும் பக்கென்று சிரித்துவிட்டாள். அப்படியே திரும்பியபோது, சோபனா மாடிப்படியருகே -அறையைப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கவனித்தாள். உடனடியாக வேகமாக அந்தப் பெண் ஏன் அப்பால் போனாள்?

'மேலே போட்டுக் கொண்டிருக்கும் நகைகள்தானே அவங்க வீட்டிலே போட்டது?'

பங்கஜத்தின் கேள்வி அவள் சிந்தனையை கலைத்தது... ''அழகான நெக்லஸ்'' பங்கஜத்தின் ஏக்கப் பெருமூச்சு முகத்தைச் சுட்டது. அதற்குள் மரகதம் அழைக்கும் குரல் கேட்கவே இருவரும் கீழே இறங்கி வந்தனர். அந்தச் சிறிய வீட்டிற்குள் தெருவே கூடிவிட்டிருந்தது. பெண்ணை புக்ககத்திற்கு அனுப்பி வைக்க வந்திருந்த அத்தனை பேருக்கும் அன்று அங்கேயே சாப்பாடு. 'அண்ணனுக்கு எத்தனை செலவு?' கவலைப்பட்டாள் அவள். அண்ணன், அண்ணி, குழந்தைகள், பழகிய ஊர், பார்த்து பழக்கப்பட்ட மனிதர்கள், எல்லோரையும் பிரிய வேண்டுமே என்ற நினைவு. நெஞ்சு வேதனை செய்ய நீர் ததும்பிய கண்களுடன் புறப்பட்டாள்.

''மகராசியா இரு!'' மார்போடு அணைத்துக் கொண்ட அண்ணி 'ஓ' வென்று அழுதுவிட்டாள். அவளாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

''ம்! என்ன இது?'' அண்ணன் முறைத்தார். கண்களைத் துடைத்துக் கொண்டு எல்லோரையும் வணங்கி விட்டு

புன்னகைத்தபடி அவள் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். டிரைவர் வேடிக்கையாக வெகுநேரம் ஹாரனை அமுக்கினான். இரைச்சலிட்டுக் கொண்டு புதுப் பெண்ணைச் சுமந்த கார் புழுதியை எழுப்பியபடி வேகமாக ஊரை விட்டுக் கிளம்பியது.

வெங்கடேசன் வீட்டிலும் விருந்து. பெண்ணை அழைக்க தாத்தாவும், சோபனாவும், ஜெய்குமாருடன் வந்திருந்தனர். இன்பம், துன்பம், பிரமிப்பு என்ற கலவை உணர்விலே கலங்கிவிட்டிருந்த அவளுக்கு ஒரே குழப்பம். விவரிக்க இயலாத ஒரு அச்சம். ஆரத்தி சுற்றிக் கொட்டினாள் ரேவதி. ''வலது காலை எடுத்து வச்சு வாம்மா'' வராந்தாவில் நாற்காலியிலிருந்த தாத்தா உத்தரவிட்டார்.

நல்ல நாள் - நல்ல வேளை என்று அவர்கள் பார்த்துக் குறித்துவிட்டிருந்த நேரத்திற்கு மருமகளாக அவள் வந்துவிட்டாள். பின்னால் நாற்காலியை உருட்டிக் கொண்டு வந்தார் சிவபாதம். ''பூஜையறையில் விளக்கேற்றிவிட்டு மாடியில் உனக்காகத் தயாரித்திருக்கும் அந்தப் பெரிய அறையில் போய் ஓய்வு எடுத்துக்கொள்.''

மாடியிலிருந்த அவர்களது அறைக்குள் நுழைந்ததுமே பிரமித்துப் போய் நின்றுவிட்டாள். அந்த அலங்காரம், அந்த வசதி. அவள் சினிமாவில்தான் பார்த்திருக்கிறாள். அவளுக்கு இத்தனை பெரிய பாக்கியமா?... பின்னால் காலடி சப்தம் கேட்டது. என்னவெல்லாமோ இன்பமான கனவுகள். அவர் வருகிறார் போலிருக்கு! அந்த நினைப்பே கன்னங்களைச் சிவக்கச் செய்தது. நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது.

''அண்ணி'' அதிகாரமான அந்தப் பெண்ணின் குரல் திடுக்கிடச் செய்தது. திரும்பிப் பார்த்தாள்.

சோபனா சற்றுத்தொலைவில் வேண்டா வெறுப்பாக நின்று கொண்டிருந்தாள்.

''உங்களிடம் என்னவோ பேசணுமாம். அண்ணன் அந்தக் கோடி அறையில் இருக்கிறார். வரச்சொன்னார்'' விஷமமானதொரு புன்னகை அவள் முகத்தில் பரவி நின்றது.

நெஞ்சு வெடித்துவிடும் போன்றதொரு திகில் அவளுக்கு கால்கள் தள்ளாடின. அதிகாரத் தோரணையான இந்த அழைப்பு



எதற்காக இருக்கும்? அச்சத்துடன் அவள் சென்றாள்.

# 3

மூன்று மாதங்களாக மரகதம் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தவை எல்லாம் குபீரென்று நினைவில் வந்து நின்றன.

''எந்தச் சந்தர்ப்பத்திலும் உணர்ச்சி வசப்பட்டு அறிவை இழந்து தவறாகப் பேசி விடாதே, பெண்களுக்கு நிதானம் தேவை.

''புதிய இடம், புதிய மனிதர்களுடன் ஆரம்பிக்கும் வாழ்க்கை விட்டுப் பிடிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''எந்தச் சந்தர்ப்பத்திலும் துணிவை மட்டும் கைவிடக் கூடாது. சோதனைகள் ஏற்படும்போது எங்களை நினைத்துக் கொள்... அவ்வளவுதான்.''

அன்றாடம் ஆயிரம் உபதேசங்கள், பண்ணிப் பண்ணிச் சொல்லியிருந்ததில் சில ஆழமாக அவள் உள்ளத்திலே பதிந்து விட்டிருந்தன. கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்... பிற்பகல் நான்கு மணியாகிக் கொண்டிருந்தது.

'ஒரு சமயம் தாகத்திற்குச் சாப்பிட காப்பி - டீ ஏதாவது அவருக்குத் தேவையோ? அவருக்கு என்ன பிடிக்கும்? யாரும் அவளிடம் வந்து எதுவும் இதுவரை பேசவில்லையே?'

'கிராமத்தில் அவர்களது எதிர் வீட்டு மருமகள் புதிய மணப்பெண்ணாக வீட்டிற்கு வந்தபோது அவளது நாத்தி சரோஜா அவளைச் சுற்றிக்கொண்டு எப்படிக் குழைந்து பேசி வளைய வந்தாள்? ஏன், ஊரில் உள்ள பெண்கள் எல்லாம் புது மருமகளை எப்படி மொய்த்துக் கொண்டனர். இங்கே? இப்படி ஏன் இவர்கள் ஒதுங்கி நிற்கிறார்கள்?'

மாடியிலிருந்த எல்லா அறைகளுக்கும் பொதுவாக இருந்த பெரிய ஹால் போன்ற பகுதிக்குள் அவள் வந்தாள். திடுக்கிட்டு

நெஞ்சம் துணுக்குற்று சற்று நின்று விட்டாள். ஆளுக்கு ஒரு மூலையில் அந்த மூவரும் அவளை வேடிக்கையாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர்.

சுவரின் ஓரமாக விரல்களின் பூச்சுக்களைச் சோதிப்பவள் போல் குனிந்த தலையுடன், ஆனால் கடைக் கண்ணால் ஏளனமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் சோபனா.

கல்யாண அமர்க்களத்தில் அவளை நன்றாகப் பார்க்கவோ பேசவோ அனுவிற்கு நேரம் இருக்கவில்லை. நெஞ்சிலே நிறைந்து நின்ற இன்பச் சுமையைத் தாள முடியாது மணையிலிருந்தபடி அடிக்கொரு தடவை கள்ளத்தனமாகத் தன் கணவனை கண்டு மகிழவே அவளுக்குப் பொழுது இருக்கவில்லை.

புதிய அண்ணி வந்திருக்கிறாள் என்பதைப் பற்றிய ஆவலோ பரபரப்போ சோபனாவிடம் காணப்படவில்லை. அண்ணனைப் போல தங்கை நல்ல நிறம். கொடிபோன்ற தோற்றம். முதுகின்கீழ் தொங்கிய முடியின் நுனியைச் சீராக வெட்டிக் கொண்டிருந்தாள். வாரி முடிக்காது அது அப்படியே பரவலாக முதுகின் பின்னால் தொங்கிக் கொண்டிருந்தது.

இடையிலே அவள் உடுத்தியிருந்த வங்காளத்து கைத்தறிச் சேலையின் தலைப்பு தரையைப் பெருக்கிக் கொண்டிருந்தது. வயிற்றின் கீழே சொருகப்பட்ட கொசுவம் கீழே விழுந்துவிடும் போன்ற நிலை. வயது பதினெட்டிருக்கலாம். அந்தக் கூர் மூக்கின் மீதும் மெல்லிய உதடுகள் மேலும் அகங்காரத்தின் முத்திரை.

பிடிவாதக்காரி போலிருக்கிறது... வினாடியில் உள்ளத்திலே அவளை எடை போட்டுக் கொண்டு இடது பக்கமாகத் திரும்பினாள்... கைகளை மடக்கிக் கொண்டு, முகவாயை நிமிர்த்தி அழுத்தலாகப் பார்த்தபடி சுவரில் சாய்ந்து கொண்டு நின்று கொண்டிருந்தான் சசிதரன்.

அண்ணனைப் போன்று இல்லாத படிந்த முடி கழுத்துவரை தொங்கியது. முகத்தை அலங்கரித்த தொங்கு மீசை, காது கிருதாக்களுடன் கலந்து மறைந்து கொண்டிருந்தது. இடையிலே அவன் அணிந்திருந்த ராங்கிளர் ஜீன்ஸைக் கண்டு ஒரு தலைமுறை ஆகிவிட்டது போன்று அழுக்கு! மேலே போட்டுக் கொண்டிருந்த சட்டைக்கும் அதே கதி.



சிகரெட்டை சங்கிலித் தொடராகப் புகைப்பவன் என்பதை அறிவுறுத்திய கறைபட்ட அழுக்குப் பிடித்த விரல்கள்... 'தாத்தா சொன்னது முற்றிலும் உண்மை' இவன் ஒரு இரண்டுங்கெட்டான்... சந்தேகமேயில்லை என எண்ணியபடி எதிரே ஜன்னல் அருகே வெறித்துக் கொண்டு நின்ற ரத்னாவை நிமிர்ந்து பார்த்தாள்.

உடலைப் பொசுக்கி விடுவது போன்ற அந்தக் கடும் பார்வை அவளை ஒருகணம் திகைக்கச் செய்தது. தன்னைச் சமாளித்துக் கொண்டாள். 'வாணியின் தாய் அவள் - தன் மகள் வாழ வேண்டிய இடத்தில் இவள் யார் என்ற ஆத்திரம் இருக்கலாம். ஓரளவுக்கு அவளது உணர்வுகள் இயற்கையானவைகள்தான், நியாயமானவையுங் கூட - என்ற எண்ணம் எழவே, தலையைக் குனிந்து கொண்டு வேகமாக அவர்களைத் தாண்டி மாடிப் படிகளில் இறங்கினாள்.

அன்னம்மாள் பாட்டியைச் சந்திக்க வந்தபோது இருந்த குழப்பமான மனநிலையில் அவள் அந்த வீட்டையும் சுற்றுப் புறத்தையும் மனதிற்குள் நன்கு பதித்துக் கொள்ளவில்லை. கீழே இறங்கி வந்து நின்றவள், திகைப்புடன் சுற்றிலும் பார்த்தாள். முந்திரிப் பருப்பு நெய்யில் வறுபடும் வாசனை லேசாக ஒரு புறமிருந்து வருவதை உணர்ந்து, நீண்டதாகத் தெரிந்த தாழ்வாரத்திற்குள்ளே வேகமாகச் சென்றாள். முடிவில் விஸ்தாரமான அந்தச் சமையலறைக்குள் வந்து நின்றாள்.

தங்கவேலுவுக்கு அவளைக் கண்டு மிகவும் ஆச்சர்யம். பல ஆண்டுகளாக அவன் அந்த வீட்டிலே சமையல் வேலை செய்கிறான்... வீட்டுப் பெண்கள் யாரும் தப்பித் தவறிக்கூட அந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பதேயில்லை. உக்கிராண அறையிலிருந்து கேட்ட சாமான்களை அவ்வப்போது எடுத்து அவனுக்குக் கொடுத்துவிட்டு மீதிப் பொழுதை பின்கட்டு ஹாலில் தொங்கிய ஊஞ்சலில் உட்கார்ந்து கழித்தாள் ரத்னா... சோபனாவைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. அவளுக்குச் சாப்பிடத்தான் தெரியும். அது பக்குவமாகும் இடத்தைப் பற்றி அக்கறையில்லை.

புது மருமகளைக் கண்டதும் பரபரப்படைந்து போனான் தங்கவேலு... மேல் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு ''என்ன

வேணும் அம்மா...'' ஓடிவந்தான்.

''சின்ன ஐயாவுக்கு காப்பி - சாப்பிட ஏதாச்சும் பலகாரம் எடுத்துப் போகவந்தேன், ரெடியாக வச்சிருக்கிறீங்களா?''

தலையைச் சொரிந்தான் தங்கவேலு. ''அவர் இந்த வெய்ய வேளையில் ஃப்ரூட்ஜூஸ்தான் சாப்பிடுவது வழக்கம். சாத்துக்குடியைப் புழிஞ்சு தயாராக ப்ரிஜ்ஜில் வச்சிருக்கிறேன்'' எடுத்துவர அவன் விரைந்தான்.

சுற்றிலும் கண்களை ஓட்டினாள் அவள். பிறந்த வீட்டிலிருந்து அவள் கொண்டுவந்த டப்பாக்கள் அலமாரியின் தட்டுகள் ஒன்றில் காணப்பட்டன. வேகமாகச் சென்று அவைகளை எடுத்துத் திறந்து இரண்டு அதிரசம் இரண்டு முறுக்குகளை ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கொண்டாள். தங்கவேலு கொண்டு வந்த பழரச டம்ளரையும் எடுத்து எல்லாவற்றையும் ஒரு பெரிய மரத்தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு மாடிக்கு விரைந்தாள்.

மறுபடியும் அவள் அந்த ஹாலைக் கடக்க வேண்டியிருந்தது. மூலைக்கொருவராக நின்ற அந்த மூவரும் இப்போது ஒன்றாகக் கூடி ஏதோ கசமுசவென்று பேசிக் கொண்டிருந்தனர். அவளைக் கண்டதும் டக்கென்று பேச்சு நின்றது. திகைப்புடன் அவளைப் பார்த்தனர். அவள் எதையும் கவனிக்காதவள் போல் மெல்ல நடந்து கோடியறைக்குச் சென்றாள். வாயிலைச் சமீபித்ததும் இதயமே தன் வாயிற்குள் விழுந்துவிட்டது போன்றதொரு கலவரம் அவளுக்கு முத்துக்களாக நெற்றியில் வியர்வை கொட்டியது. நெஞ்சு படபடக்க கால்கள் தள்ளாட மெல்ல உள்ளே சென்று அருகிலிருந்த மேஜை மேல் தட்டை வைத்தாள். புடவைத் தலைப்பால் மெல்ல நெற்றிமீது ஒற்றிக் கொண்டாள்.

பத்திரிகை ஒன்றைப் பிரித்து முகத்தை அதற்குள் மூடிக் கொண்டு கால்களை மட்டும் நீட்டியபடி சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த ஜெய்குமார் - சரக்கென்று பத்திரிகையை மடித்து கீழே போட்டான் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

முதன் முதலாகத் தனிமையில் கணவனைச் சந்திக்க நேர்ந்த இன்பத்தைத் தாளாது அவள் கன்னங்களும் முகமும் சிவக்க - நெஞ்சு பதற - நிலை கொள்ளாது தரையைப் பார்த்தபடி நின்றாள்



''பழரசமும் உங்களுக்குப் பிடித்த முறுக்கும் சாப்பிடக் கொண்டு வந்திருக்கிறேன்'' அவளாகவே முதலில் பேசினாள்.

''தாங்க்யூ! எனக்கு என்ன பிடிக்கும் என்று புரிந்து கொள்ள ரொம்ப முயற்சித்திருக்கிறாப்பல இருக்கே - இதற்கு ஒரு தங்கப்பதக்கந்தான் தர வேண்டும்'' ஏளனமாக சிரித்துக் கொண்டே அவன் எழுந்து சென்று கதவைத் தாளிட்டான்.

''இதெல்லாம் தாத்தாவின் யோசனையா - '' கோபத்துடன் கேட்டுக் கொண்டு அருகில் வந்தான்.

திடுக்கிட்டுப் போனாள் அனுராதா. மெல்ல தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

அவருக்கு ஏன் அவள் மீது இத்தனை கோபம்? பார்வையில் ஏனிந்த கடுமை? அவள் செய்த குற்றம்? புது மனைவியிடம் கணவன் முதல் சந்திப்பின்போது பேசும் பேச்சா இது? உள்ளமும் உடலும் நடுங்க அவள் நின்று கொண்டிருந்தாள்.

''தாத்தா சொல்லிக் கொடுத்தாரா... பேசமாட்டேன்கிறியே...'' சீற்றத்துடன் அவன் மறுபடியும் கேட்டான்.

நெஞ்சை அடைத்த துக்கத்தை விழுங்கிக் கொண்டாள். 'உங்கள் பழக்க வழக்கங்களைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டியது என் கடமை. அதனால்...'' முடிக்காது நிறுத்தினாள்.

''என் வரைக்கும் அந்தக் கடமைக்கு உரியவள் ஒரே ஒருத்திதான். அவள் போய்விட்டாள். அவளிருந்த இடத்தில் வேறு யாருக்கும் இடமில்லை. அதை உன்னிடம் சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டனுப்பினேன்'' அசட்டையாகத் தோள்களைக் குலுக்கிக் கொண்டு கைகளை நீட்டி அவன் காட்டிய திசையைத் திகைப்புடன் அவள் பார்த்தாள்.

வாயிற்படிக்கு மேலே இருந்த சுவரில் உள்நோக்கிய படி பெரிய அளவில் ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. சட்டத்தை சுற்றி ஒரு மல்லிகை மலர்மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. படத்தில் தெரிந்த இளம்பெண் அவனது முதல் மனைவி வாணி என்பதை அவள் சட்டென்று புரிந்து கொண்டு விட்டாள்.

அவளுக்கு இருபது வயதிருக்கும். கூரான மூக்கு, உள்ளடங்கிய

கன்னங்கள் - நீண்ட கண்கள் - புன்னகை தவழ்ந்த மெல்லிய உதடுகள் - பார்க்க படத்திலே அவள் அழகாகவே இருந்தாள். ஒரு சமயம் நேரில் இன்னமும் அழகாக இருந்திருக்கலாம்.

''வாணி என் மனைவி... ஒரு வழியில் எனக்குத் தூரத்து உறவுப்பெண். சிறுவயதிலேயே ஒருவரை ஒருவர் மிகவும் நேசித்தோம். அவளுக்கு என்மேல் உயிர். எனக்கு அவள்தான் எல்லாம். எங்களது இன்ப வாழ்க்கையில் ஒரு பேரிடி விழுந்தது. அதைப்பற்றியெல்லாம் தாத்தா உனக்கு விவரமாகச் சொல்லியிருப்பாரே...''

ஆமாம் என்ற அடையாளமாக அனு மெல்ல தலையை அசைத்தாள்.

''அவளை மனைவின்னு ஏற்றுக்கொண்ட மனதால் இன்னொருத்தியை என்னால் நினைக்கக்கூடப் பார்க்க முடியாது. ஒளிவு மறைவு இல்லாம சொல்லிவிடுகிறேன். கணவன் என்று என்னிடம் நீ எந்தவிதமான உரிமையையும் - அன்பையும் எதிர்பார்த்தால் ஏமாந்துதான் போவாய். அதனாலே இப்பவே உன் மனசைத் திடப்படுத்திக்கோ. இந்தக் கல்யாணம் நம் வரைக்கும் ஒரு கண் துடைப்பு விவகாரம். இதுதான் என்னுடைய அறை... இதிலேதான் நான் தொடர்ந்து இருக்கப் போவதாக உத்தேசம். இந்த அலமாரியில் அவள் உபயோகித்த - ஆசையுடன் படித்த புத்தகங்களை வைத்திருக்கிறேன். இந்த பீரோவில் அவளுடைய துணிகளும் நகைகளும் இருக்கின்றன. இந்த நாற்காலி அவளுடையது - இந்த படுக்கையில்தான் அவள் உறங்குவது வழக்கம் - இப்படி எங்கே திரும்பினாலும் என் வாணியின் நினைவில் நான் வாழ்கிறேன். தாத்தா நமக்காகத் தயாரித்து வைத்திருக்கும் அந்தப் பெரிய அறையில் நீ பேஷாகத் தங்கிக் கொண்டு சுகபோகங்களைத் தாராளமாக அனுபவிக்கலாம் - எனக்கு ஆட்சேபணை இல்லை...''

முத்துக்களாகக் கன்னங்களில் உருண்ட கண்ணீரை அவள் துடைத்துக் கொண்டாள். அடிவயிற்றின்று பொங்கிப் புறப்பட்ட அழுகையையும், ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டாள். துணிவையெல்லாம் திரட்டிக் கொண்டு மெல்லக் கேட்டாள்.

''இரண்டாவது கல்யாணத்திற்கு நீங்கள் ஒப்புக் கொண்டது



பெருந்தவறு இல்லையா?...'' அவனை நேருக்கு நேர் பார்த்தாள். நெஞ்சு மட்டும் பயத்திலே படபடவென்று துடித்துக் கொண்டுதானிருந்தது.

''பேஷ்! சரியான கேள்வி. ஒரு சுயநலம் காரணமாகத்தான் நான் ஒப்புக் கொண்டேன். அன்னம்மா பாட்டி தனது சொத்து முழுவதையும் எனக்கு எழுதி வச்சிருந்தாங்க. அதில் ஒரு நிபந்தனை, நான் அவங்க உயிரோடு இருக்கும்போதே மறுமணம் செய்து கொண்டால்தான் அந்தச் சொத்து என்னைச் சேரும். இல்லாவிட்டால் என் தம்பி தங்கை இருவருக்கும் கொஞ்சம் கொடுத்தது போக மீதமெல்லாம் தான தருமங்களுக்குச் சேர வேண்டும் என்று எழுதி விட்டிருந்தாங்க. எல்லாம் தாத்தாவின் வேலை - எனக்கு பாட்டியின் சொத்து அவசியம் தேவை. குறித்த காலத்தில் கையில் கிடைச்சதும் குடும்பத்திலிருந்து பிரிஞ்சு - தனியாக வியாபாரம் செய்வதாகத் திட்டம். அதுக்காகத்தான் ஒப்புக்கொண்டேன்!''

''வாணி அக்கா மீது மறக்க முடியாத அன்பு வச்சிருக்கிற உங்களால் கேவலம் இந்தச் சொத்தைத் தியாகம் செய்ய முடியாது போனது ஆச்சரியமாக இருக்குது...''

சாட்டையினால் அடிபட்ட வேதனையுடன் கோபமாக அவளை ஜெய்குமார் உறுத்துப் பார்த்தான்.

''பணம் எனக்குத் தேவை. அதனால் தாத்தாவின் வற்புறுத்தலுக்கு வளைந்து கொடுத்தேன். என் யோசனையைக் கேட்டால் உனக்கும் நிம்மதி ஏற்படும். உன் வருங்காலத்துக்கு வேண்டிய அளவுக்கு வசதிகள் செய்து கொடுத்துவிடுகிறேன். நீ திரும்ப உன் அண்ணன் வீட்டிலேயே போய் சுகமாக இருக்கலாம்...''

தொண்டையை அடைத்த துயரத்தைச் சமாளித்துக் கொண்டாள் அனுராதா. அவனை நிமிர்ந்து மிகவும் துணிவுடன் உற்றுப் பார்த்தாள்.

''என்னைப் பொறுத்தவரை எந்தவிதமான சூழ்ச்சியையோ திட்டத்தையோ மனதில் கொண்டு நான், இந்த திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளவில்லை. வீட்டில் பெரியவரான என் அண்ணன் உங்கள் தாத்தாவுடன் பார்த்துப் பேசி கலந்து முடிவு செய்த திருமணம். நமது சமூகத்திலே நடக்கும் ஆயிரக்கணக்கான திருமணங்களில் இதுவும் ஒன்று. பெரியவங்க நமக்கு நல்லதைத்தான் எண்ணி செய்கிறாங்க

என்ற நம்பிக்கையில்தான் நான் ஒத்துக் கொண்டேன்.''

''அதனாலே இப்ப என்ன செய்கிறதா நினைப்பு?''

''வலுவில் வருகிற சொத்தை உங்களால் தியாகம் செய்ய முடியலை. விதி எனக்கு வகுத்திருக்கிற வாழ்க்கையை நான் ஏன் தியாகம் செய்ய வேண்டும்? நான் ஏன் என் அண்ணன் வீட்டிற்குப்போக வேண்டும்? மாட்டேன், இந்த வீட்டை விட்டுப் போகமாட்டேன். உங்கள் மனைவி என்கிற நிலையை விட்டு இம்மிகூட நகரப் போவதில்லை...'' உணர்ச்சியில் குமுறிய அவளுக்கு வார்த்தைகள் தடுமாறின, உடல் நடுங்கியது. கண்களில் நீர் பொங்கியது.

''இது என்ன சாலஞ்சா?''

அவனது ஏளன மொழிகளைக் காதில் அவள் வாங்கிக் கொள்ளவில்லை.

''நீங்கதான் என்னைப் பயமுறுத்துறீங்க. யோசிச்சுப் பாருங்க...'' கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

ஆவலுடன் அங்கே காத்து நின்ற அந்த மூவரையும் பாராததுபோல் வேகமாக ஹாலைக் கடந்து தனக்களிக்கப்பட்ட அறைக்குள் வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள். உடல் கிடுகிடுவென்று நடுங்கியது. உள்ளம் வெடித்து விடும்போல் துன்பத்தில் துடித்தது. அதற்கு மேல் அவளால் கட்டுப்படுத்த இயலவில்லை.

''சோதனை வரும்போது எங்களை நினைச்சுக் கொள் என்று சொன்னீங்களே... நிறைய நினைக்கிறேன் அண்ணி! எனக்கு ஏன் இப்படி ஒரு வாழ்க்கை அண்ணி!... சொல்லுங்கோ! அண்ணி - !'' தாங்க முடியாது விம்மி விம்மி அனு அழுதாள்.

# 4

கிர்...கிர்... என்ற சத்தம். திகைப்புடன் தலையை நிமிர்த்திப் பார்த்தாள் அனுராதா. படுக்கை தலைமாட்டிலிருந்த சிவப்பு வண்ண டெலிபோன்தான் அப்படி அலறியது. எழுந்திருந்து ரிஸீவரை



கையில் எடுத்துக் காதருகில் கொண்டு போனாள்.

''மணி ஆறரையாகப் போகிறதே! என்னை மறந்துட்டியா? கொஞ்சம் கீழே வர்ரியாம்மா. ஏழு மணிக்கு நான் சாப்பிட்டு எட்டு மணிக்கெல்லாம் தூங்க ஆரம்பிக்கணும்னு டாக்டர் உத்திரவாச்சே...'' மெல்லச் சிரித்தார் மறுபக்கத்தில் தாத்தா சிவபாதம்.

''இதோ வரேன் தாத்தா...'' குமுறினாள் அவள்.

''என்னம்மா குரல் ஒரு மாதிரியா இருக்கு. சீக்கிரம் வர்ரியா?'' கிளிக்கென்ற ஓசையுடன் பேச்சுத் தடைபட்டது. மீண்டும் பொங்கிக் கொண்டு வந்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு அவள் எழுந்து படுக்கையறையை ஒட்டியிருந்த குளியலறைக்குள் புகுந்தாள். வீட்டிற்கு வந்தவுடன் - மாடியிலிருந்த தங்களது அறையைப் பூராவும் சுற்றிப் பார்வையிட அவளுக்கு அவகாசமில்லாது கணவனது அவசர அழைப்பு குறுக்கிட்டு விட்டிருந்தது. அலங்காரமான அந்தக் குளியலறையைப் பார்த்த அவள் அத்தனைத் துயரத்தின் நடுவேயும் ஒருகணம் அசந்து போய் நின்று விட்டாள்.

பின்னர் வாஷ்பேஸினில் முகத்தைக் கழுவிக்கொண்டு -கம்பியில் தொங்கிய துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். எதிர்புறத்திலே வசதியாகச் சுவரோடு பதிக்கப்பட்டிருந்த பெரிய கண்ணாடி முன்னால் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அவள் வரவை உத்தேசித்து ஒப்பனைப் பொருள்கள் அனைத்தும் வரிசையாகக் கண்ணாடியை ஒட்டிய சிறு மேசை மீது வைக்கப்பட்டிருந்தன.

அலங்கிவிட்டிருந்த கூந்தலை அவிழ்த்து வாரி உயரத்தூக்கி அழகாகக் கொண்டை போட்டுக் கொண்டாள். பவுடர்காம்பாக்டைத் திறந்து பஞ்சினால் புவுடரை ஒத்தி மெல்ல முகத்திலே பூசிக்கொண்டு தன் உருவத்தை கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். அவளுக்கு மறுபடியும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

வரதபுரத்திலே டெண்ட் சினிமா கொட்டகையில் அண்ணியுடன் எப்பொழுதோ ஒருமுறை பார்த்த ஒரு பழைய படம் சட்டென்று அவள் நினைவுக்கு வந்தது. படம் பலமுறை அறுந்து போனது -கொட்டகையில் பலத்த விசிலடிப்பு - ஆனாலும் கதை ஓட்டத்திலே - விறுவிறுப்பில் குறைவிருக்கவில்லை. அதிலே வந்த கதாநாயகன்

- அரசிளங்குமாரன். தன்னை அசட்டை செய்த கிராமப் பெண்ணைப் பலவந்தமாக மணந்து கொண்டு விடுகிறான். முதல் சந்திப்பிலேயே அவன் சொல்கிறான்: ''உன்னை உணவு, வாழ வசதியான அரண்மனை உனக்கு உண்டு; ஆடைகள் உண்டு; ஆபரணங்கள் உண்டு. ஆனால் கணவன் என்பவன் மட்டும் கிடையாது. புரிகிறதா?'' ஏளனமாகச் சொல்லிவிட்டுச் சிரித்தான் அவன். சற்றுமுன் தன் கணவனது முகத்திலே பரவி நின்ற, அந்த வஞ்சகப் புன்னகையை எண்ணிப் பார்த்தபோது அவளுக்கு அந்தக் கதாநாயகன் நினைவுதான் வந்தது. மறுபடியும் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து கண்களை நனைத்தது.

கிர் கிர்... மீண்டும் அந்தச் சப்தம். ஓடிச்சென்று டெலிபோனை எடுத்தாள்.

''என்னம்மா இன்னமும் உன்னைக்காணலை.'' கண்டிப்பு கலந்த கிழவரின் குரல் மறுபக்கத்திலே மீண்டும் கேட்டது.

''ஒரு நொடியில் வந்து விட்டேன் தாத்தா...'' பதறினாள் அவள்.

''தொண்டை கட்டிக் கொண்டிருக்கா? இடமாற்றம் அதனாலே இருக்கலாம்... சரி சீக்கிரம் வா...'' போனை வைத்து விட்டார்.

இனி யோசிக்கவும் அழவும் அவளுக்கு நேரம் இருக்கவில்லை. பரபரப்புடன் பெட்டியைத் திறந்து ஒரு நூல் சேலையை எடுத்து அவசரமாக மாற்றிக் கொண்டாள். பொட்டிட்டு முகத்தை சீர்படுத்திக்கொண்டு வேகமாகப் படிகளைக் கடந்து கீழே ஓடி வந்தாள்.

மாடிப்படியருகில் தங்கவேலு அவளுக்காகக் காத்து இருந்தான்.

''வழக்கம்போல நான் சாப்பாடு கொண்டு வரவான்னு பெரிய ஐயாவைப் போய்க் கேட்டேன். நீங்க எடுத்து வருவீங்கன்னு அவர் சொல்லிவிட்டார். அதனாலே'' என்று முடிக்காது அவன் தன் கையில் பிடித்திருந்த உணவுப் பாத்திரங்கள் கொண்ட தட்டை அவளிடம் கொடுத்தான்.

''நீங்கதான் எனக்கு இந்த வீட்டில் உள்ளவர்களுடைய சாப்பாட்டுப் பழக்கவழக்கங்கள், செய்முறை இதெல்லாம் இனிச் சொல்லிக் கொடுக்கணும். எனக்கு ஒரே குழப்பமா இருக்கு...''



புன்னகைத்தபடி அவள் தட்டை வாங்கிக் கொண்டாள்.

தங்கவேலுவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. வயசில் பெரியவனாக இருந்த போதிலும் சசியும், சோபனாவும், அவனைப் பெயர் சொல்லியே அழைத்தனர். 'நீ-வா-போ' என்று மரியாதையின்றி அழைத்தனர். ஆனால் புதிதாக வந்திருக்கும் மருமகள் -வீட்டின் எஜமானி - எத்தனை பணிவாக மரியாதையாகப் பேசுகிறாள்; என்ன அடக்கம்?... அவன் அயர்ந்து போய் விட்டான்.

''ஆகட்டும்மா, சொல்லிக் கொடுப்பது என் கடமையாச்சே,'' பற்களைக் காட்டிக்கொண்டு வேகமாக முன்னால் ஓடிப் பெரியவர் அறையின் கனமான கதவைத் திறந்து அவளுக்கு உள்ளே செல்ல வழிவிட்டு மூடினான். தட்டை மூடியிருந்த கொசுவலைத் துணியை விலக்கி நாற்காலியருகே கிடந்த மேஜைமீது வைத்தாள்.

''நல்ல பசி. வீட்டுக்கு வந்த பேரன் மனைவி கையாலே சாப்பிட வேணும்னு துடிப்பு. உன்னை ரொம்பத் தொந்திரவு பண்ணிட்டேன் இல்லையா!...''வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டே கிண்ணத்திலிருந்த சூப்பைக் கரண்டியால் எடுத்து மெல்லச்சாப்பிடத் துவங்கினார் தாத்தா. மௌனமாக அவள் தண்ணீர் கூஜாவிலிருந்த நீரை டம்ளரில் வார்த்து அருகில் கொண்டு வந்து வைத்தாள்.

''தங்கவேலு நல்ல சமையல் ஆள்தான். ஆனாலும் டாக்டர் எனக்குக் கொடுக்கிற டயட்டிலே அவனுக்கு நம்பிக்கை கிடையாது. ஐயாவுக்கு வஞ்சனை பண்ணக் கூடாதுன்னு சூப்பிலே தாராளமாக நெய்விட்டு தாளிக்கடறான். காப்பியிலே ஏகப்பட்ட பால் - சர்க்கரை, அதனாலே இனிமேல் நீதான் என் சாப்பாட்டைப் பொறுப்பாகப் பார்த்துத் தயாரிக்கணும். இதோ பார் - இந்த சூப்பிலே எப்படி நெய் மிதக்கிறது? இதைச் சாப்பிட்டால் என் கொலஸ்ட்டிரால் கதி என்னாவது...'' சிரித்தார் அவர்.

''இனிமேலே இதெல்லாம் நான் பத்திரமா பாத்துக்குவேன் தாத்தா...'' தலையை நிமிராமல் பதிலளித்தாள்.

''இந்த விபத்துக்கு முன்னாடி இந்த வீட்டிலே எல்லாம் ஒழுங்கா நடந்து கொண்டிருந்தது. இரவு எட்டு மணிக்கு எல்லோரும் சாப்பிட உட்கார்ந்துவிடுவோம். ஒன்பது மணிக்கு படுக்கை - விடியற்காலை ஆறு மணிக்கு எழுந்து குளித்துத் தயாராகி விடணும்னு கண்டிப்பாக

இருந்தேன். இப்போ அவங்க அவங்க இஷ்டப்படி நடக்கிறாங்க. எழுந்து நடக்க முடியாம நோயாளியா உட்கார்ந்துட்டதாலே தாத்தா கிடக்கிறார்னு அசட்டை, இதையெல்லாம் நீதான் ஒழுங்கு பண்ணனும். அதோ அந்த அலமாரியிலே என் மருந்துகள் இருக்கு எடுத்து வா'' உத்தரவிட்டார் கிழவர்.

அவர் குறிப்பிட்ட அந்த பிளாஸ்டிக் டப்பாவை அவள் எடுத்து வந்து அருகில் வைத்தாள்.

''இதோ பார் அம்மா! இந்தக் குழல் மாத்திரை என் முதுகுக் காயத்தைக் குணப்படுத்த - இந்த மாத்திரை ரத்த அழுத்தத்தைச் சீராக்க - இந்த மருந்து என் கால் குடைச்சலுக்கு... இது வந்து'' என்று சொல்லிக்கொண்டு போனவர் திகைப்புடன் அவளையே உற்றுப் பார்த்தார்.

''ஏம்மா! கண்ணும் மூக்கும் சிவந்து கிடக்கே. அழுதியா. பிறந்த வீட்டைப் பத்தின நினைப்பா... இல்லாட்டா...?'' அனுதாபத்துடன் விசாரித்தார்.

சட்டென்று அனுவால் பதில் பேச முடியவில்லை. தொண்டையைத் துக்கம் இறுக்கியது. கண்களில் நீர் ததும்ப அவள் தலையை அசைத்தாள்.

''அப்படின்னா, குமார் உங்கிட்ட ஏடாகூடமா ஏதாவது பேசினானா? ரத்னா ஏதாச்சும் சொன்னாளா? அந்தப் பொடிப்பசங்கள் தாறுமாறாக நடந்து கொண்டாங்களா? ஒளிக்காமச் சொல்லம்மா'' கிழவர் கோபத்துடன் மீசையைத் தடவிக் கொண்டார்.

கண்ணீரைச் சமாளித்தாள் அவள். ''அவங்கள்ளாம் ஒன்னும் சொல்லலை. அவர்தான் தாத்தா ரொம்பக் கடுமையாகப் பேசிவிட்டார்...'' தினறினாள்.

''அப்படியா?...'' கோபத்துடன் கிழவர் நாற்காலியை உருட்டிக் கொண்டு அறை முழுவதும் ஒரு முறை வளைய வந்தார்.

அவரது கண்கள் சிவந்து மீசைகளின் நுனி துடிப்பதைக் கண்ட அனுவுக்கு மேலே பேச அச்சமாகத்தானிருந்தது.

''என்னம்மா சொன்னான் அவன்?'' உறுமினார்.

துணிவையெல்லாம் திரட்டிக்கொண்டாள். மெல்லத் தலையை



நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்! ''தாத்தா! சின்ன வயசிலேயே நான் பெத்தவங்களை இழந்து விட்டவ. அண்ணியும் அண்ணனுந்தான் எனக்கு எல்லாம். இந்த வீட்டிலே உங்க ஒருத்தரைத்தான் நான் அவங்களுக்குச் சமமா நினைக்கிறேன். என் மனசை உறுத்துகிற சங்கதிகளை உங்க ஒத்தர்கிட்டத்தான் நான் மறைக்காமச் சொல்லிக்க முடியும்... அதனாலே!...'' பேச முடியாது தினறினாள்.

''சொல்லும்மா சொல்லு...'' கிழவர் அன்புடன் அதட்டினார்.

''உங்களோட ஒப்பிட்டா நாங்க பரம ஏழைகள் தாத்தா! ஆனால் மானம், மரியாதை, கண்யம் இவைகளில் நாங்கள் ஏழைகள் இல்லை. உங்க பேரன் என்னை ஒரு தூசிக்குச் சமமாக மனம் நோகப் பேசிவிட்டார். பாட்டியின் சொத்துக்களை உத்தேசித்துத்தான் என்னைக் கல்யாணம் செய்து கொண்டாராம். அவரது முதல் மனைவியின் நினைவை அவரால் மறக்க முடியாதாம். அதனால் நான் அவரிடம் எந்த உரிமையையும் எதிர் பார்க்க முடியாதாம்...'' மேலே சொல்ல முடியாது நிறுத்தினாள். முத்துக்களாக கண்ணீர் கன்னங்களில் உருண்டு நனைத்தது. கோபத்துடன் வேகமாக நாற்காலியை உருட்டிய சிவபாதம் திடீரென்று உரத்த குரலில் சிரித்தார். திடுக்கிட்டுப் போனாள் அனு.

''ஏமாந்துட்டான் அம்மா, குமார் நல்லா ஏமாந்துட்டான். இப்படி அவன் ஒரு சமயம் இடக்குப் பண்ணுவான்னு தெரிஞ்சு அந்த பழைய உயிலை மாற்றி - நீ வந்துபோன வெள்ளிக்கிழமை பாட்டி நல்ல நினைவோட இருக்கையிலே சொத்து பூராவையும் அவங்களுக்குப் பின் உனக்கும் - உனக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும்னு எழுதி வச்சுட ஏற்பாடு பண்ணிட்டேன்!

''இதோ பார் அம்மா! நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். உங்கிட்ட நான் ரொம்ப எதிர்பார்க்கிறேன்னேன். இப்போ முக்கியமா உன்கிட்ட துணிவைத்தான் எதிர்பார்க்கிறேன். கண்களைத் துடைச்சுக்கிட்டு, இந்த மருந்தையெல்லாம் எடுத்து எனக்குக் கொடுத்துட்டு - பிறகு அலமாரியில் கொண்டு வச்சுட்டு இப்படி வா...''

சொன்னபடி முடித்துவிட்டு அருகில் வந்து நின்றாள் அனுராதா.

தமது ஜிப்பாவின் பைக்குள் கையைவிட்டு கனமானதொரு

சாவிக்கொத்தை அவர் வெளியிலே எடுத்தார்.

''சாமான் அறையிலிருந்து பீரோவரை எல்லா சாவிகளும் இதில் இருக்கு. இனி இந்த வீடு - அதன் பொறுப்பு எல்லாம் உன்னுடையது. அதனாலே இதை எடுத்துக்கோ'' சாவிக்கொத்தை அவளிடம் நீட்டினார்.

இரு கரங்களையும் நீட்டி அதைப் பெற்றுக்கொண்டாள் அனு. உணர்ச்சி வசத்தில் அவளுக்கு ஒன்றுமே சொல்ல முடியவில்லை. ''தாத்தா...'' என்று குழறினாள்.

''இந்த வீட்டுக்கு மருமகளாக நீ வந்த முதல்நாள் இது. நீ இப்படி கண்ணீர் வடிக்கக்கூடாது. சிரிச்சுக் கொண்டு தைர்யமா தலை நிமிர்ந்து இந்த வீட்டிலே ராணி போல வளைய வரணும். வயசிலே நீ எத்தனையோ சின்னவள். உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். இன்னும் சில மாதங்களில் எனக்கு ஒரு பெரிய ஆபரேஷன் நடக்க இருக்கு. அதிலே ஒரு சமயம் எனக்கு மரணம் ஏற்படலாம். ஃபிஃப்டி ஃபிஃப்டி சான்ஸ்ன்னு டாக்டர் கைவிரிச்சுட்டார். அதனாலே அம்மா, இந்த இக்கட்டான சமயத்திலே என்னை நீ கவனிச்சுப்பேன்னு உன்னை நான் ரொம்ப நம்பிகிட்டு...'' அவர் குரல் தடைபட்டது. உணர்ச்சிவசத்தில் மீசை நுனிகள் ஆடின. மனம் நெகிழ்ந்து போனாள் அனு. சட்டென்று அருகில் நெருங்கி நாற்காலியின் கைச்சட்டங்களைப் பிடித்துக் கொண்டு நின்றாள். ''தாத்தா! என்னை நம்புங்கள். உங்களை இந்த நிலையில் விட்டு ஒரு நாளும் போக மாட்டேன். நான் என்னவெல்லாம் செய்யணும்னு உத்தரவு போடுங்கோ, உடனடியா செய்து முடிக்கிறேன்.''

''இப்ப அனு நீ எல்லோரையும் கூப்பிட்டு சாப்பிட வைக்கவேண்டியது. பின்னர் உன் அறையில்போய் ஓய்வு எடுத்துக்க வேண்டியது. நாளைக் காலை ஆறு மணிக்கு ஒரு கப் காப்பியுடன் வந்து என் மருந்துகளை எடுத்துக் கொடுத்தால் போதும்... நேரமாச்சு... குட் நைட்...'' தாத்தா போக விடை கொடுத்தார்.

தங்கவேலு உணவு பரிமாற அவர்கள் அனைவரும் மௌனமாய் சாப்பிட்டனர். சமையலறை வேலைகளைச் சிறிது மேற்பார்வையிட்டு விட்டு பால் டம்ளரை எடுத்துக் கொண்டு அவள் மாடிக்கு விரைந்தாள். அந்தப் பெரிய ஹாலில் சசியும், சோபனாவும், அத்தை ரத்னாவுடன் காரம் விளையாடிக் கொண்டிருந்தனர்.



''சசி!'' என்ற உரத்த குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது. ''உன் அண்ணன் கோடி அறையிலிருக்கிறார். நான் வரச் சொன்னதாகக் கொஞ்சம் கூப்பிடு... ராத்திரி ஒன்பது மணிக்கெல்லாம் தூங்கப் போகணும்னு தாத்தா உத்திரவு. இப்படிச் சத்தம் போட்டு விளையாடிக்கிட்டிருந்தா மத்தவங்களுக்குக் கஷ்டமாக இருக்காதா?...'' அனு கேட்டுக் கொண்டே அருகில் வந்தாள்.

சசி முகம் சிறுத்துப் போனான். பளிச்சென்று பதில் சொல்ல ஆத்திரத்தில் துடித்தான். 'தாத்தாவின் உத்தரவு உண்மையாக இருந்தால்' என்ற இலி அவன் வாயை அடைத்து விட்டது. காரம் காய்களை கோபத்துடன் விசிறி எறிந்து விட்டு எழுந்த சோபனா, ஏதோ சொல்ல வாயைத் திறந்தவள், அண்ணன் அறையினின்று வெளிப்படுவதைக் கண்டதும் மௌனமானாள். மருமகனைக் கண்ட ரத்னாவின் உள்ளத்திலே உணர்வுகளின் மோதல். 'புது மனைவியின் குரலைக் கேட்டதுமே ஓடிவந்து விட்டானே? வாணி மேலே உயிர் அப்படின்னதெல்லாம் வேஷம்' ஆத்திரத்துடன் புடவைத்தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு அப்பால் திரும்பிக் கொண்டாள்.

மனைவியும் கணவனும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய அறைக்குள் நுழைவதை மிகவும் வியப்புடன் பார்த்துக் கொண்டு அந்த மூவரும் நின்றனர்.

பால் டம்ளரை மேஜைமீது வைத்துவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு அதன்மேல் சாய்ந்தபடி நின்றாள் அனு. இன்பமும் துன்பமும் கலந்த கலவை உணர்விலே அவள் நெஞ்சு வேகமாகத் துடித்துக் கொண்டது. கோபமே உருவாக நின்ற கணவனது முகத்தைத் துணிவுடன் பார்த்தாள். ''பால் ஆறி விடும். சாப்பிட்டுவிட்டுப் பிறகு பேசலாம்...'' என்றாள் மெல்லிய குரலில்.

''பேச்சு இனி என்ன இருக்கு? சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லி முடிச்சுட்டாயே...'' சீறினான் அவன்.

''நான் சொல்ல வேண்டியதை முடிக்கலை. உங்களுக்கு வேண்டாத மனைவிங்கிற ரகசியத்தை மத்தவங்க தெரிஞ்சுக்கிறதை நான் விரும்பலை. உங்க சூழ்ச்சிக்குப் பலியாகி ஏமாற்றப்பட்டவளா பிறர் முன்னாலே தலை குனிஞ்சு நிக்க எனக்கு மனசில்லை.

அதனாலே நீங்க இந்த அறையிலே என்னோடயே இருக்கப் போறீங்க..."

"பட்டிக்காட்டிலிருந்து வந்தவ இல்லையா? வெட்கமில்லாத துணிச்சல்..." பற்களைக் கடித்தான் ஜெய்குமார் தாங்க முடியாத சீற்றத்துடன்.

"தாலி கட்டின கணவனிடம் வெட்கம் ஏன்? தவறு செய்து விட்டேனா தலை குனிய... பயப்பட?"

"இப்படி வீம்புபிடித்து வற்புறுத்துவதிலே நீதான் அவமானப்படுவே. என் மனம் இதுக்கெல்லாம் மசிஞ்சு விடாது, தெரிஞ்சுக்கோ," கோபமாகக் கூறிய அவன் அறைக்குள் முன்னும் பின்னும் வேகமாக நடந்தான், பின்னர் ஏதோ நினைப்புடன் பாலை எடுத்து ஒரே மூச்சில் குடித்துவிட்டு அருகில் கிடந்த சோபாவில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டான்.

"உண்ண உணவு - உடுக்க ஆடை - அணிய ஆபரணங்கள் எல்லாம் உண்டு. ஆனால் கணவன் என்பவன் உனக்குக் கிடையாது" என்று சீறிய அந்த அரசிளங்குமாரனின் குரல் எங்கேயோ கேட்பதைப் போன்றதொரு பிரமிப்பு ஏற்பட்டது அனுவுக்கு.

# 5

'உன் புருஷன் படத்தில் ரொம்ப ஜோரா இருக்கிறாரே' தோழி பங்கஜத்தின் குரல் நினைவை நெருடியது. கால் மேல் கால் போட்டுக்கொண்டு கன்னத்தைக் கையால் தாங்கியபடி தலையைச் சாய்த்துக் கொண்டு அமுத்தலாக உட்கார்ந்திருந்த அவனை ஓரக்கண்ணால் அவள் பார்த்தாள்.

ஜோராகத்தான் - அழகாகத்தான் அவன் இருந்தான். ஆனால் அந்த அழகனின் மனதில் அவள் மேல் கடுகளவு அனுதாபமோ அன்போ இல்லையே. என்ன ஆச்சர்யம். துக்கத்திலே அவள் நெஞ்சு வெடித்து விடும்போல் விம்மியது.



'டங் டங்' என்று ஹால் கடிகாரம் பத்துமுறை அடித்து ஓய்ந்தது. சிந்தனையினின்றும் விழிப்படைந்த அனு மெல்லக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற அந்த மூவரும் உறங்கச் சென்று விட்டனர். ஹாலில் விடிவிளக்கு மட்டுமே மெல்லியதாக எரிந்து கொண்டிருந்தது.

"இப்போ நீங்க உங்க அறைக்குத் தாராளமாகப் போகலாம்."

கதவைத் திறந்து அவனுக்கு வழி விட்டாள்.

விர்ரென எழுந்து அவன் வேகமாக அவளைத் தாண்டிக் கொண்டு வெளியே சென்றான். கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு அதன் மீது சாய்ந்தபடி நின்ற அவளால் இனியும் துணிவுடன் இருக்க இயலவில்லை. நெஞ்சு இரண்டாக வெடித்துவிடும் போன்ற வேதனையோடு துவண்டு சரிந்து தரையில் உட்கார்ந்து விட்டாள். ஏமாற்றத்தின் சுமையைத் தாளமுடியாது கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு குமுறிக் குமுறி அழுதாள்.

விடியற்காலை ஐந்து மணிக்கே அலாரம் அவளை எழுப்பிவிட்டது. அழுதழுது வெகுநேரம் உறங்காது புரண்டதின் பயன் இமைகள் வீங்கிக் கண்களில் ஒரே எரிச்சல். மனத்தை அழுத்திய துன்பத்தின் சுமையினால் உடலும் பலவீனமடைந்துவிட்டது போன்ற பிரமை. மெல்ல எழுந்து படுக்கையடியிலிருந்த தனது பெட்டியை இழுத்துத் திறந்தாள். கஞ்சி போட்டு இஸ்திரி செய்து கருத்துடன் அடுக்கிக்கொண்டு வந்திருந்த நூல் சேலைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டாள். ஏற்ற ரவிக்கையையும் துண்டையும் எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தாள்.

அந்தப் பெரிய அறையில் தங்கி அதன் சுகபோகங்களை அவள் தாராளமாக அனுபவிக்கலாமென்று அவள் கணவன் உத்திரவு கொடுத்து விட்டிருந்தானே. அவள் ஏன் தயங்க வேண்டும்? குளித்துவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டு கண்ணாடி முன் நின்றவளுக்கு இப்பொழுது சிரிப்புதான் வந்தது. இனி அவள் அழுவதாக உத்தேசம் இல்லை.

கூந்தலை இழைய வாரிவிட்டுக் கொண்டு நின்றவளுக்கு

திடீரென்று தோழி பங்கஜத்தின் நினைப்பு. ஊருக்குப் புறப்படுமுன் அந்த அமளியில் அவள் தோழி ஓடிவந்து அவளை இறுகக் கட்டிக்கொண்டு அவள் காதிலே ரகசியமாக மூச்சுவிடாது படபடவென்று சொன்னவை நெஞ்சத்தில் எழவே அவள் தன்க்குள்ளே புன்னகைத்துக் கொண்டாள். சுபாவத்திலேயே பங்கஜம் பெரிய வாயாடி. அதுவும் மனத்திற்குப் பிடித்தவனை மணந்து கொண்டுவிட்ட கர்வத்திலே அவள் வாய் மிகவும் பெருகிவிட்டிருந்தது.

''மணவாழ்க்கையில் எனக்குக் குறுகிய கால அனுபவந்தான். ஆனாலும் உதவும் கேட்டுக்கோ. காதலிச்சுக் கல்யாணம் செய்து கொண்டாலும் சரி, பெரியவங்க பார்த்துச் செய்து வச்ச கல்யாணமானாலும் சரி, நம் வரைக்கும் கல்யாணம் என்பது ஒரு கோதா. அதில் இறங்கினபின் சமாளிக்க நமக்குத் துணிவு வேண்டும். ஒரு பெண் தன் புருஷனை முற்றிலும் புரிஞ்சு கொண்டு விட்டாள்னு சொல்லிவிட முடியாது... அது அவ்வளவு சுலபமல்ல. ஏன் தெரியுமா? இரண்டு பக்கங்கள் கொண்ட ஒரு நாணயத்தை போன்றவன்தான் கணவன்.

அன்பும் ஆதரவும், கொஞ்சலும் குழைவும் நிறைந்த காதலன் ஒரு பக்கத்தில் - எரிச்சலும் பிடிவாதமும், கொடுமையும் நிறைந்த காதகன் ஒரு பக்கத்தில் - இதில் எந்தப் பக்கத்தைப் பிடிக்கிறோம் என்பது நம் திறமையைப் பொறுத்தது. மனசில் வச்சுக்கோ. உனக்குக் காதலன் வேணுமா? காதகன் வேணுமான்னு உன் நிலையை நீயேதான் தீர்மானிச்சிக்கணும்.''

கூந்தலை வாரி முடித்துக் கொண்டாள். விரைவாக மற்ற அலங்காரத்தையும் முடித்துக் கொண்டு கீழே வந்தாள். வேலைக்காரி மரகதம் பூக்கூடையுடன் தோட்டத்தினின்று உள்ளே வந்தாள். வீட்டிற்கு வந்திருக்கும் புதிய மருமகள் விடியற்காலையிலேயே குளித்து முடித்து உடுத்திக் கொண்டு பளிச்சென்று வந்து நிற்பதைக் காண அவளுக்கு மகிழ்ச்சி.

'மருமகள்னா இப்படின்னா இருக்கணும். தங்கவேலு அய்யா சொன்னது பொய் இல்லை'... தனக்குள் வியந்த வண்ணம் அவள் அருகில் ஓடி வந்தாள்.



''வாசல் பிள்ளையாருக்கு முதலில் பூசை முடிச்சுட்டு அப்புறந்தான் வீட்டு விளக்கை ஏத்துகிறது வழக்கம்.'' அந்த வீட்டின் பழக்க வழக்கங்களை அவளுக்கு அறிமுகம் செய்து வைக்க ஆசையுடன் முன் வந்தாள். ஒரு செம்பு தண்ணீரும், துடைக்க துண்டும் எடுத்துக் கொண்டு அவள் எஜமானியம்மாள் பின்னால் ஓடினாள்.

புது இருள் பிரிந்து கொண்டு வெளிச்சம் மெல்லியதாக பரவிக் கொண்டிருந்தது. புது மருமகள் வாசல் பிள்ளையாருக்கு நீராட்டித் துடைத்து பொட்டு வைத்து மலர் தூவி வணங்கி விட்டு உள்ளே வந்தாள். பூஜையறை சலவைக்கல் மேடைமீதிருந்த முருகன் படத்திற்குப் பூக்கூடையிலிருந்த மல்லிகை மாலையை எடுத்துப் போட்டாள். கையோடு தன் வீட்டிலிருந்து கொண்டு வந்த காமாக்ஷி அம்மன் விளக்கை ஏற்றினாள். அருகே தரையிலிருந்து மேடை உயரத்திற்கு எழுந்து நின்ற வீட்டின் பெரிய குத்து விளக்கையும் பொருத்தினாள். ஒரு கத்தை ஊதுவத்தியை புகையவிட்டு வணங்கினாள். குடலை அடியிலே கிடந்த ஒரு ரோஜா மலரை எடுத்துக் கொண்டை மீது சொருகிக் கொண்டு வேகமாக வெளியே வந்தாள். சாப்பாட்டறைக் கடிகாரத்தில் ஆறடிக்கப் பத்து நிமிஷங்கள் இருந்தன.

தங்கவேலு கிழவருக்குக் காப்பியும், பிஸ்கட்டும் தயாராக எடுத்து மரத்தட்டில் வைத்திருந்தான். அதை எடுத்துக் கொண்டு அவள் விரைந்தாள். அறையின் கனமான கதவைத் தன் காலால் தள்ளிக் கொண்டு உள்ளே விரைந்தாள்.

விடியு முன்பே தாத்தா பல் துலக்கி, உடை மாற்றிக் கொண்டு தயாராக அமர்ந்திருந்தார். அவரது மடி மீது காலைப் பத்திரிகை பிரித்த நிலையில் கிடந்தது. குறித்த நேரத்தில் அவள் ஆஜராகி விட்டது பற்றி அவருக்குப் பெருமை. பரவலானதொரு சிரிப்பில் மீசை மெல்ல ஆடியது. தட்டிலிருந்த கோப்பையில் காப்பியை வார்த்து அவரிடம் கொடுத்துவிட்டு மறுபக்கத்திலிருந்த பீரோவை ஓடிச்சென்று திறந்தாள். மருந்து டப்பாவை எடுத்து வந்தாள். அதற்குள்ளிருந்த டாக்டரின் மருந்துச் சீட்டை எடுத்துப் படித்தாள். காலையில் முதலாவதாக அவர் எடுத்துக் கொள்ள வேண்டிய இரண்டுவித மாத்திரைப் புட்டிகளை எடுத்து - மாத்திரைகளை பிஸ்கட் அருகே தட்டில் வைத்தாள்.

''பரவாயில்லை! நீயே புரிஞ்சு கொண்டு விட்டியே... கெட்டிக்காரி.'' சிவபாதம் உரக்கச் சிரித்தபடி மாத்திரைகளை விழுங்கிக் கொண்டே காப்பியைப் பருகினார். ஓரக் கண்ணால் அவளை காலோடு தலை வரை பார்த்தார். திடீரென்று அவர் நினைப்பிலே வாணி எழுந்து நின்றாள். வேதனை நிறைந்ததொரு பெருமூச்சுடன் கோப்பையைத் தட்டின் மீது வைத்துவிட்டு துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டார்.

'வாணி மிகவும் அழகிதான். ஆனால்...' தம்மையும் மீறி எழுந்த சினத்தை அடக்கிக் கொள்ளப் பற்களைக் கடித்துக் கொண்டார்... உள்ளத்திலே பொங்கிப் புரண்ட ஒரு பயங்கர உணர்விலே அவரது உடல் ஒரு கணம் நடுங்கியது. சமாளித்துக் கொண்டார். நாற்காலியைக் கைகளால் தள்ளிக்கொண்டு ஜன்னல் அருகே சென்று வெளியே தோட்டத்தைப் பார்த்தார்... ''அந்த ஆரஞ்சு போகன்வில்லா என்ன அழகா இருக்கு பாத்தியா?'' உரத்துச் சொல்லிக் கொண்டே திரும்பினார். மெல்லியதாக அறைக்குள் பரவிய சூரிய ஒளியிலே அவளை மீண்டும் ஒரு முறை பார்த்தார்... என்ன முயற்சித்தும் மீண்டும் ஏதோ வாணியைப் பற்றிய நினைப்பு.

இந்தப் பெண் அனு அழகில் அவளுக்கு எந்த விதத்திலும் மட்டமானவள் இல்லை. படிப்பில் மட்டுமென்ன? எத்தனை அடக்கம் - என்ன பணிவு - இந்தப் பயல் குமாருக்கு எது பித்தளை எது பொன் என்று பேதம் தெரியலையே... மடையன்...' அவர் சிந்தனை ஓடியது. தன்னையே அவர் கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்த அனுவின் காதுகளும் கன்னமும் எரிந்தன.

''பகல் சாப்பாட்டுக்கு என்ன சமைக்கணும்... சொன்னால்...'' கேட்டாள் மெல்லிய குரலில்.

''நெய், பால், சர்க்கரை, தேங்காய் இதெல்லாம் அதிகம் சேர்க்கக் கூடாதுன்னு டாக்டர் உத்திரவு - மற்றபடி எது வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆமாம். உனக்குக் காரக்குழம்பு வைக்கத் தெரியுமோ - சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு...'' வண்டியை ஜன்னலினின்று படுக்கைப் பக்கம் தள்ளிக்கொண்டு வந்தார்.

''சுமாராகத் தெரியும்.''



''உன் புருஷனுக்குக்கூட அது பிடிக்கும். அது ஒண்ணுதான் எனக்கு வேண்டும். மற்றபடி நீ உனக்குப் பிடிச்சதைச் சமைச்சுப் போடு. சாப்பிடக் காத்திருக்கிறோம். காலையிலே எட்டு மணிக்குக் காப்பி பலகாரம் - பன்னிரண்டு மணிக்கு சாப்பாடு - மூணு மணிக்கு வெறும் டீ - இரவு மறுபடி ஏழு மணிக்கு உணவு - இதுதான் என் ரொட்டீன், அவ்வளவுதான் அம்மா...''

''சரி தாத்தா...'' அவள் தட்டை எடுத்துக்கொண்டு விரைந்தாள். வீட்டில் அவளுக்காக வேலைகள் காத்துக் கிடந்தன. வேகமாக மாடிப்படிகளைக் கடந்து கோடியறைக்கு வந்தாள். மெல்லக் கதவைத் தட்டினாள்.

ஜெய்குமார் அலுப்புடன் எழுந்து வந்து திறந்தான். 'அத்தையும் சோபனாவும் ஆளுக்கு ஒரு குளியலறையைப் பிடிச்சுக் கொண்டு விட்டாங்க - நீங்க நம் அறையில்தான் குளிக்கணும். எட்டு மணிக்கு எல்லோரும் காப்பி பலகாரம் சாப்பிட வரணும்னு தாத்தா உத்திரவு...'' என்றாள்.

வெட்டி விடுகிறவன் போல் அவன் அவளை முறைத்தான். பிறகு ''உன் உத்திரவு?'' ஆத்திரமாகக் கேட்டுக் கொண்டு அவள் பின்னால் வந்தான்.

மாற்றுத் துணிகளை பீரோவிலிருந்து எடுத்துப் படுக்கை மீது வைத்தாள். ''உங்களை உத்தரவிட நான் யார்?''... மெல்லச் சிரித்தபடி கதவைச் சாத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

உடுத்திக் கொண்டு தயாராகிவிட்ட சோபனா ஒரு கதைப் புத்தகத்துடன் ஹாலில் சோபாமீது சாய்ந்து கொண்டிருந்தாள். அண்ணியை கவனிக்காதவள் போன்ற அசட்டை. கீழே குளியலறையில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு இடையில் துண்டுடன், ஒரு கையால் தலையைத் துவாலையால் துவட்டிக்கொண்டு படிகளில் வேகமாக இறங்கி வந்தான் சசி. அவளைக் கண்டதும் ஒரு கணம் தயங்கி நின்று விட்டான். ''சசி! அத்தை, சோபனா, அண்ணா எல்லோரையும் கூட்டிக்கிட்டு சீக்கிரம் கீழே வா. எட்டு மணிக்கு காப்பி பலகாரத்தை முடிச்சிடணும். அப்புறம் எனக்குச் சமையல் வேலையிருக்கு...'' அவள் மடமடவென்று படிகளில் இறங்கிக் கீழே மறைந்து விட்டாள்.

சிறிது நேரம் அவன் வாயடைத்துப் போய் நின்று விட்டான். அடக்கமாட்டாத கோபத்துடன் சோபனா கையிலிருந்த புத்தகத்தை தொப்பென்று கீழே போட்டதுந்தான் அவனுக்கு உணர்வுகள் திரும்பின. ''இதெல்லாம் என்ன? இருபத்திநாலு மணி நேரமாகலை வந்து - அதிகாரம் தூள் பறக்குதே'' ஆச்சர்யத்துடன் வினவினான்.

''ஆமாம் என்கிட்ட கேள், அவங்க முன்னாடி வாயை மூடிக்கொண்டு...சே! நீ ஒரு ஆண்பிள்ளை...'' உரத்த குரலில் கத்திய சோபனா மறுபடியும் சோபாவில் சாய்ந்து கொண்டாள்.

வெள்ளைப் புடவையும் விபூதி நெற்றியுமாக அறைக்குள்ளிருந்து வெளிப்பட்ட ரத்னாவைக் கண்டதும் சோபனாவின் மூளை விருவிருத்தது. ''அத்தை! அந்த ராணி உங்களை உடனே கீழே வரச்சொல்லி உத்தரவு போட்டுட்டு போயிருக்காங்க...'' முடுக்கிவிட்டாள். கோபத்திலே கொதித்துப் போனாள் ரத்னா. என்னென்னவோ வார்த்தைகளை வாரிக் கொட்ட வாய் துடித்தது. அதற்குள் மருமகன் அங்கு வருவதைக் கண்டதும்... மௌனமாக புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு கீழே இறங்கிப் போய் விட்டாள்.

உக்கிரான அறையிலிருந்து சாமான்களை எடுத்துத் தங்கவேலுவிடம் கொடுத்துவிட்டு அறையைப் பூட்டிச் சாவிக்கொத்தை இடுப்பில் சொருகிக் கொண்டாள் அனு. ரத்னாவிற்கு வயிறு பற்றி எரிந்தது. பேரன் மனைவி வீட்டிற்கு வரப்போகும் முதல் நாள் கிழவர் அவளைக் கூப்பிட்டு அனுப்பினார். ''தொடர்ந்து நீ இங்கிருப்பது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அந்தப் பெண்ணும் மறுப்பு ஒண்ணும் சொல்ல மாட்டா. இனிமேலே இந்த வயதில் உனக்கு அதிக பொறுப்புகள் எதுக்கு? கோயில், குளம், ஊர்வழி எங்கே வேண்டுமானாலும் தாராளமாகப் போய் வரலாம். அந்தக் கொத்துச் சாவியை இப்படி வச்சுட்டுப் போம்மா... பாவம் இன்னும் நீ ஏன் அதை சுமக்கணும்?'' நெஞ்சை நெருப்பாகச் சுட்டன அந்த வார்த்தைகள். இத்தனை ஆண்டுகளாக அவள் வசமிருந்த அதிகாரச்சின்னம் அனுவின் இடுப்பில் குலுங்குவதைக் காண அவளால் தாங்கவே முடியவில்லை.

பூஜையறையில் விளக்கு எரிவதைக் கண்டாள். வாசலுக்கு



ஓடிச்சென்று பார்த்துவிட்டு வந்தாள். முன்னறையில் எதிர்ப்பட்ட அனுராதாவுடன் அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை.

''வாசல் கணேசருக்கு நிதக்கும் நான்தான் பூசை செய்வது வழக்கம்...'' உறுத்து விழித்தாள் ரத்னா.

''அதனால் என்ன, யார் செய்தாலும் ஏற்றுக் கொள்வார். பூஜையிலிருந்து வீட்டு விவகாரங்கள் எல்லாத்தையும் என்னைப் பார்த்துக்கும்படி தாத்தா உத்தரவிட்டிருக்கிறார். அதனால் இனி நான் கவனிக்க வேண்டியிருக்கு. அது கிடக்கட்டும். நீங்க எல்லாரையும் கூட்டிக்கிட்டு பலகாரம் எடுத்துக்க வாங்க...'' மெல்லிய குரலில் ஆனால் அழுத்தமாகச் சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டாள் அனு. கல்லாகத் திகைத்துப் போய் நின்ற ரத்னாவுக்கு மூச்சு வர வெகு நேரமாகியது.

'உண்மையில் எல்லாம் அந்தக் கிழவனது வேலையா? அல்லது இவளாகக் கட்டும் கதைகளா?' அவளுக்குக் குழப்பம்... தாங்கொணா சினம்.

பகல் உணவுக்கு எல்லோரும் மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்தனர். சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு மேற்பார்வையிட வந்துவிட்ட சிவபாதம் சாப்பாட்டறையின் ஒரு பக்கத்திலே அமர்ந்திருந்தார். தங்கவேலுவிடம் பாத்திரங்களை வாங்கி அனு தன் கையாலேயே எல்லோருக்கும் பரிமாறினாள்.

''சசி! உனக்குக் காரக் குழம்பு பிடிக்குமில்லையா? - இன்னும் கொஞ்சம் போடறேன்.''

''அத்தை! உங்களுக்குக் கொஞ்சம் பொரியல் வைக்கட்டுமா! சோபனா, இலையைப் பார்த்து நல்லா சாப்பிடம்மா... உங்களுக்கு இன்னும் கொஞ்சம் காய் வைக்கட்டுமா?''... கணவனிடம் கேட்டபடி எல்லோரையும் மிகவும் உபசரித்து பரிமாறிக் கொண்டிருந்தாள். சாப்பிடுகிறவர்கள் யாரும் வாயைத் திறக்கவில்லை.

தாழ்வாரத்தின் கோடியிலிருந்த வாஷ்பேசனில் கையைக் கழுவ எழுந்து சென்றான் ஜெய்குமார். அனு துவாலையுடன் வேகமாகப் பின்னால் ஓடி வந்தாள்.

''பெரிய நாடகம் போடுகிறாயே. நீ பலே ஆள்தான்'' எரிச்சலை அடக்கமாட்டாது அவளை வெறித்து விட்டு உறுமினான் அவன்.

''தாத்தா முன்னால் ஒரு பேச்சு - பின்னால் ஒரு பேச்சு... உங்கள் எல்லோரையும் விடவா நான் நடிக்கிறேன்'' ஏளனமாகக் கேட்ட அவள் நிமிர்ந்து பார்த்துத் துணிவுடன் புன்னகைத்தாள்.

ஓங்கிஓர் அறை கன்னத்தில் வைக்கவேண்டும் போன்றதொரு சினம். கட்டுப்படுத்திக் கொண்டு கைகளைத் துடைத்துக் கொண்டு மாடியறைக்கு விரைந்து விட்டான்.

ஒரு வார காலம் ஓடிச் சென்றது. அன்று மாலை தேநீர் கெட்டிலுடன் கிழவரின் அறைக்குள் சென்றாள் அனு. தேநீரைக் கோப்பையில் வார்த்து அவர் முன்னால் வைத்தாள். கையில் எடுத்து ஒரு மடக்கு பருகிய அவர் திடீரென்று வாய்விட்டுச் சிரித்துவிட்டார். புரை ஏறிக் கொண்டு விட்டது. இருமிக்கொண்டே பலமாகத் தமது தலையைத் தட்டிக் கொண்டார்.

''அவங்க அத்தனை பேரும் இப்போ என்னைப் பத்திதான் பேசிக்கிட்டிருக்காங்க. அதனால்தான் புரை ஏறிக் கொண்டு விட்டது.'' மீண்டும் சிரித்தார் அவர்.

மௌனமாக முறுவலித்தபடி அவள் இன்னும் கொஞ்சம் தேநீரைக் கெட்டிலிலிருந்து கோப்பையில் வார்த்து அவருக்குக் கொடுத்தாள்.

''இந்த ஒரு வார காலத்திலே எத்தனை ஆச்சர்யமான மாறுதல் இந்த வீட்டிலே பார்த்தியா. மாடிக்கும் கீழுக்கும் அலைஞ்சு தங்க வேலு காலு ஒடிஞ்சு போயிடும். இப்போ எல்லாம் கடிகாரம் சுழல்கிறதைப் போல ஒழுங்கா நடக்கிறது. ஆமாம், நீ என்ன மந்திரம் போட்டே - இப்படி எல்லோரையும் பெட்டிப் பாம்பா அடக்கி வச்சிருக்கியே...'' கண்களைச் சிமிட்டினார் தாத்தா.

''உங்கள் பெயருக்குத்தான் அந்த மந்திரசக்தி. தாத்தா சொன்னார் தாத்தா உத்திரவு. அப்படின்னு சொன்னா அவங்க யாரும் பதில் பேசறதே கிடையாது'' அவளும் கூடச் சிரித்தாள்.

கதவைச் சாத்திவிட்டு மெல்ல வெளியே வந்தபோது தங்கவேலு



அவளுக்காகக் காத்திருந்தான்.

''சாயங்காலம் தபாலில் மூணு கடுதாசி உங்களுக்கு வந்திருக்கு... சாப்பாட்டறை மேஜைமேலே வெற்றிலைத் தட்டில் வச்சிருக்கிறேன்'' மகிழ்ச்சியுடன் இளித்தான். அவள் எதிர்பார்த்தபடி ஒரு கடிதம் அண்ணனிடமிருந்து வந்திருந்தது. பிரித்து ஆவலுடன் படித்தாள். அவளது நலனை விசாரித்தும், மாப்பிள்ளைக்கு ஆசிகள் தெரிவித்தும் அண்ணன் சுருக்கமாக எழுதியிருந்தார். அடுத்த கடிதம் தோழி பங்கஜத்திடமிருந்து வந்திருந்தது. வேடிக்கைக்காரி அவள் :இரண்டே வரியில் கடிதத்தை முடித்துக் கொண்டிருந்தாள்.

'கடைசியாக நான் சொன்னது சரிதானே? உன் கணவன் காதலனா? காதகனா... விரைவில் பதில் - பங்கஜம்...' தனக்குள் சிரித்துக் கொண்டு மூன்றாவது கடிதத்தைக் கையில் எடுத்தாள். டைப் அடித்த முகவரி. எழுதியவர் விலாசம் காணப்படவில்லை. தபால் தலை மீதிருந்த முத்திரை அமுங்கியிருந்தது. எங்கிருந்து வந்ததென்றும் புலப்படவில்லை. ஏதோ பிரிக்கும்முன் ஒரு பதற்றம். உள்ளே கையால் எழுதிய கடிதம் - முத்துக்கள் போன்ற எழுத்து -முன்பின் பழக்கமில்லாத கையெழுத்து.

''நீ குமாரின் இரண்டாவது மனைவியாக வந்து வீட்டிற்குள் அமர்ந்துவிட்ட செய்தியைச் சமீபத்தில்தான் கேள்விப்பட்டேன். தாத்தா இந்தத் திருமணத்தை அதிக விளம்பரப்படுத்தாமல் எளிய முறையில் செய்துவிட்டதினால்தான் எனக்குச் செய்தி எட்ட இத்தனை நாட்கள் பிடித்தன. திருமணப் பத்திரிகையைப் பார்த்த பின்தான் நான் நம்பினேன். உனக்கு என் பாராட்டுதல்கள். அதே சமயம் ஆழ்ந்த அனுதாபம். பெண்ணிருக்க பெண் எடுக்கும் காலம் மலை ஏறிவிட்டது. இப்போது சட்டம் பெண்களுக்கு சாதகமாக உள்ளது என்பதை உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. நான் உயிருடன் இருக்கும் போது நீ எப்படி என் கணவனுக்கு மனைவியாக முடியும்? உன் நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பார். எல்லோரும் இறந்ததாகக் கருதும் நான் இன்னமும் உயிருடன் இருக்கிறேன் என்பதைக் கேட்டால் நீ வியப்படைவாய்; வேதனைப்படுவாய். என் உரிமையைக் கோரி நான் வந்தால்?...''

இப்படிக்கு,

ஜெய்குமாரின் மனைவி வாணி.

காலடியிலிருந்து பூமி நகர்ந்து எங்கேயோ விழுந்து கொண்டிருப்பதைப் போன்ற திகைப்பு - நெஞ்சே வெடித்துவிடும் போன்ற திகில் - வேதனை - துக்கம் - உடலும் உள்ளமும் பதற - வாய் உலர்ந்து பேச சக்தியற்று - சிலையாக வெகுநேரம் அவள் உட்கார்ந்து விட்டாள்.

# 6

மரகதம் அண்ணி அடிக்கடி சொல்லும் ஒரு பழமொழி ''பதறினால் சிதறிவிடும்.'' திடீரென்று அவளது நினைவில் அண்ணி அவள் அருகே வந்து நின்று கொண்டு காதுகளில் கிசுகிசுப்பது போன்றதொரு பிரமை. ''அவசரப்படாதே, ஆராய்ஞ்சு - நல்லா யோசித்து முடிவு எடு. தைர்யமா இரு'' அண்ணியின் குரல் அசரீரி போல் எங்கேயோ கேட்பது போன்றதொரு நினைப்பு நெஞ்சை அடைத்த அந்த பயங்கர உணர்வை விழுங்கிக் கொண்டாள். நெற்றி மீது அரும்பு கட்டிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். சுக்கல் தூளாகி விடும் போல் இதுவரை துடித்துக் கொண்டிருந்த இதயத்தின் படபடப்பும் சற்று அடங்கி அவள் நிதானமாக மூச்சு விட்டாள். காய்ந்து போன உதடுகளை நாவால் தடவி விட்டுக் கொண்டாள். மெல்ல அந்தக் கடிதத்தை மறுபடியும் ஊன்றிப் படித்தாள்.

சமையலறையின் கதவு திறந்திருந்தது. அடுப்பிலே காய்ந்து கொண்டிருந்த பாலின் மீது ஒரு கண்ணும் சாப்பாட்டறை மீது ஒரு கண்ணுமாக தங்கவேலு நின்று கொண்டிருந்தான். அவனுக்கு ஒரே திகைப்பு - புது மருமகளுக்கு உடம்புக்கு என்ன? முகம் வெளேரென்று என்னவோ மாதிரி இருக்கே! அவனால் மறுபடியும் திரும்பி அவளை நன்றாகப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ஒரு சமயம் அவங்க வீட்டிலிருந்து ஏதாவது கெட்ட செய்தி கடிதத்தில் வந்துவிட்டதா? அவனுக்குக் கவலையாக இருந்தது. தெரிந்து கொள்ள வேண்டுமென்ற துடிப்பு.



அனுராதா ஏழை வீட்டுப் பெண் என்பதைப் பராபரியாக அவனும் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் வீட்டிற்கு வந்த முதல் நாளே சமையலறைக்குள் புகுந்து அவனிடம் அவள் பணிவாகப் பேசிய முறை - சமையல் பக்குவ முறைகளைத் தெரிந்து கொள்ள அவள் காட்டிய கருத்து - பம்பரம் போல் சலிக்காது சுழன்று மாடிக்கும் கீழுக்கும் அலைந்து அவள் எல்லோருக்கும் செய்த பணி விடைகள் - இவைகளை எல்லாம் கவனித்து அவனுக்கு மெத்த வியப்பு.

''என்னதான் பணக்கார இடத்தில் புகுந்து விட்டாலும் ஒரு பெண் குடும்பத்துப் பொறுப்பை உணர்ந்து பணிவும் -பொறுமையுமாகப் பழகினால் தான் அந்தக் குடும்பத்துக்கு அவளால் பெருமை. இல்லாட்டா...'' சிந்தித்த அவன் மனதில் அடிக்கடி வாணியின் நினைவு எழுந்து கொண்டிருந்தது.

'மாடியிலிருந்தபடியே வாணி அவனை எத்தனை முறை அதிகாரமாக அழைப்பாள்?'

'சாப்பாடு அவள் எதிர்பார்த்தபடி அமைந்திருக்கா விட்டால் அவளுக்கு எத்தனை கோபம் வரும்?'

ஒரு சமயம் அவசரத்தில் காப்பியை நன்றாக ஆற்றாது விழுந்தடித்துக் கொண்டு ஓடி அவள் மேஜை மீது வைத்த போது டம்ளரை எடுத்து வாயில் வைத்தவள் கிரீச்சிட்டு அலறி அப்படியே தூக்கி அவன் மேல் வீசி எறிந்தாளே! நல்ல வேளை, அவனைத் தாண்டிக் கொண்டு டம்ளர் அப்பால் உருண்டு ஓடியது.

'ப்ளடி ஃபூல்... கொதிக்கக் கொண்டு வந்து கொலையா பண்றே? இந்த மாதிரி மடையன்களை வேலைக்கு வச்சிருக்கிற பிரகஸ்பதியின் மூளையை மியூசியத்தில்தான் வைக்கணும்...' கத்திவிட்டு உள்ளே சென்று கதவைப் படீர் என்று சாத்திக் கொண்டாள். அவமானத்தில் உடல் குன்றிப் போய் நின்றானே தங்கவேலு. அதை அவன் மறக்க முடியுமா?

புதிதாக வந்த மருமகளுக்குத்தான் எத்தனை வித்தியாசமான குணம்? ஒரே ஒரு தடவைதான் வீட்டில் உள்ளவர்களுக்கு என்னவிதமான சாப்பாடு பிடிக்கும் என்று சொன்னான் - சட்டென்று புரிந்து கொண்டு விட்டாங்களே! சோபனாவுக்கு பூரி, சூடாக, உப்பலாக, அப்பொழுதுதான் எண்ணையிலிருந்து பொரித்துக்

கொண்டு வந்து போடணும். கூட தேங்காய் சட்டினி இருக்கணும் என்றதை அவங்க மறக்கவேயில்லையே! தன் கையால் மாவைப் பிசைந்து உருட்டி சோபனா காலேஜிலிருந்து வந்ததும் குண்டு குண்டாகப் பூரிகளைப் பொரித்தெடுத்து அன்புடன் பரிமாறினாங்களே - அதுக்கு அந்த சோபனா என்ன சொன்னாள்? ஒரு துளி சட்டினி தவறி கைமேல் விழுந்து விட்டதற்குப் புலியாகச் சீறினாள்.

'இன்னொன்று போட்டுக்கோம்மா ஸ்லிம்மாக இருக்கணும்னு வயிற்றுக்கு வஞ்சனை பண்ணாதே'ன்னு சொன்னதும் எத்தனை கோபம் வந்துவிட்டது?

'இது என் வீட்டுச்சாப்பாடு. எப்போ, எவ்வளவு சாப்பிடணும்னு எனக்குத் தெரியும். உங்க உபசாரம் தேவையில்லை' பட்டுனு சொல்லிவிட்டாள்.

அந்தப் பயல் சசி! அவன்கூட தாத்தா இல்லாத சமயம் புது மருமகளை எப்படி முறைக்கிறான்? எரிஞ்சு விழுகிறான். குரலில் எத்தனை காரம்? ரத்னா அம்மாளைப் பத்திச் சொல்லத் தேவையில்லை. அவங்களுக்கு ஒரே வயிற்றெரிச்சல். அதனால் அடிக்கொருதடவை சமையலறைக்குள் வந்து எட்டிப் பார்த்துவிட்டு மனசில் தைக்கிறாப்பல ஏதாவது சொல்லிவிட்டுப் போகிறாங்க.

இந்த மூணுபேரும் ஏன் இப்படி நடந்துக்கிறாங்கன்னு புரியலை. ஏழை வீட்டுப் பெண் என்ற இளக்காரமா? சின்ன எஜமானர் போக்கு எப்படியோ? புருஷன் மனைவிக்குள் நடுவே புகுந்தா பார்க்க முடியும்? அவர் நல்லாதான் நடத்துகிறார் போலிருக்கு. இல்லாவிட்டா அந்தப் பெண் முகத்திலே அப்படி ஒரு சிரிப்பைப் பார்க்க முடியுமா? சிட்டாகப் பறந்து வேலை செய்ய ஒரு தெம்பு தான் இருக்குமா?' பலப் பல எண்ணியபடி பொங்கிய பாலை இறக்கி வைத்தான் தங்கவேலு.

இந்த சில நாட்களுக்குள்ளேயே அவனுக்கு அனுமீது தன் தங்கச்சியைப் போன்றதொரு பரிவு. கனமான குக்கரை அவள் அடுப்பிலிருந்து இறக்கி வைக்குமுன் ஓடி வந்து தானே தூக்கிக் கீழே வைப்பான். அந்தப் பிஞ்சு விரல்களால் அவள் அம்மிக் குழவியைப் பிடித்து அரைக்கத் தொடங்கினால் ஓடிப்போய் நிறுத்துவான். சும்மா



நீங்க மேற்பார்வையிட்டுக்கிட்டிருந்தா போதும் - அரைக்கப் புடிக்க நான் இருக்கிறேனே...'' பற்களைக் காட்டிக் குழைவான்.

சூடான பாலில் திக்கான டிகாக்ஷனை ஊற்றிச்சர்க்கரை போட்டு ஆற்றி வெள்ளி டம்ளரில் நிறைத்தான். தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டிருந்த வேட்டியைத் தழைய விட்டு டம்ளருடன் சாப்பாட்டறைக்கு வந்தான்.

''அம்மா!'' கனிவான அவன் குரல் அவளை விழிக்கச் செய்தது. ''நீங்க இன்னும் காப்பி - சாப்பிடலை - மறந்துட்டீங்களே.'' பணிவுடன் மேஜை மீது வைத்தான். ''கூட கொஞ்சம் உப்புமா எடுத்து வரவா?'' உபசாரமாகக் கேட்டான்.

''காப்பி மட்டும் போதும்'' புன்னகைத்தாள் அவள். களங்கமற்ற அந்த முகத்தைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. 'பெற்றவங்களைப் பிரிஞ்சு புக்ககத்தில் வந்திருக்கிற பெண்ணை அரவணைச்சுக் கொண்டு போகாம இப்படி எல்லோரும் ஏனோ தானோன்னு இருந்தால், உள்ளூர வெகுண்டான்.

''ஏம்மா நான் கேட்கிறேன்னு வித்யாசமா நினைச்சுக்காதீங்க. கடுதாசுலே வந்த சேதி நல்ல சேதிதானே''

ஒரு கணம் அவள் திகைத்துப் போனாள். வீட்டு வேலை ஆள் சரிக்கு சமமாக இப்படி ஒரு கேள்வி கேட்பதா என்று சிந்திக்க அவளுக்குத் தோன்றவில்லை. பரிவுடன் தன்னைப் பார்த்துக்கொண்டு நின்ற அவனது உள்ளத்தின் உண்மையான தவிப்பை - குடும்பத்து மீது அவனுக்குள்ள விஸ்வாசத்தை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. மனம் கரைந்து போனாள்.

''அண்ணன் எழுதியிருக்கார் - நல்ல சேதிதான்.''

தங்கவேலு தாராளமாக மூச்சு விட்டான் - ''உங்க முகத்தைப் பார்த்து ஒரு நிமிஷம் பயந்திட்டேன் - இப்போ புரியுது. வீட்டு நினைப்பு இருக்காதா? பெத்து வளர்த்தவங்களை பிரிஞ்சு வந்தா மனசுக்குக் கஷ்டமாத்தானிருக்கும். என் மக கூட முதல்ல ரொம்ப சங்கடப்பட்டது. இப்போ பிறந்த வீட்டு நினைப்பே அதுக்கு இல்லை... ஹி...ஹி'' உரத்த குரலில் சிரித்தான்.

''உங்களுக்கு ஒரு மகள் இருக்காளா?'' வியப்புடன் கேட்டாள்.

''ஒரே ஒரு பெண். கட்டிக் கொடுத்து விட்டேன். போன வருஷம் பேரன் பிறந்துட்டான். இப்போ நான் தாத்தா'' பெருமையுடன் சொன்னான்.

''அப்படியா? சந்தோஷம்'' கூறிவிட்டு கடிதங்களுடன் அவள் தன் அறைக்குள் போய் உட்கார்ந்து கொண்டாள். கதவைத் தாளிட்டுக்கொண்டு மறுபடியும் அந்தக் கடிதத்தைத் திறந்து வைத்துக்கொண்டு பலமுறை கவனமாக வாசித்தாள். ஆயிரமாயிரம் எண்ணங்கள் உள்ளத்தில் அலைமோதின.

கடிதம் உண்மையில் வாணி அக்காவால் எழுதப்பட்டதா? உயிருடன் இருப்பது உண்மையாக இருந்தால் ஏழு வருஷ காலம் அவங்க ஏன் மௌனமாக இருக்க வேண்டும்?

வாணி உயிருடன் இருப்பது தெரிந்தால் தாத்தா பேரனுக்கு மறுமணம் செய்ய துணிவாரா? படித்தவர், சட்ட நுணுக்கங்கள் எல்லாம் தெரிந்திருக்குமே? இல்லை, இல்லை யாரோ வீணே அவளைப் பயமுறுத்த விஷமமாகக் கடிதத்தை எழுதியிருக்க வேண்டும். உண்மையில் வாணி எழுதிய கடிதம் என்று அவள் எப்படி நம்புவது? அவளுடைய கையெழுத்தை அவள் பார்த்ததில்லையே? திடீரென்று ஒரு யோசனை பளிச்சிட்டது.

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். ஹாலில் யாரும் இருக்கவில்லை. தன் கொத்துச் சாவியை எடுத்துக் கோடியறையைத் திறந்தாள். அவள் உபயோகித்த புத்தகங்கள் என்று கணவன் அறிமுகம் செய்த அலமாரியருகே பரபரப்புடன் விரைந்தாள். அதிலிருந்த புத்தகங்களை வேகமாக எடுத்துப் பக்கங்களைப் புரட்டினாள். வாணி தன் பெயரை அவைகளில் எழுதி வைத்து இருக்கலாம் அல்லவா? ஏமாற்றமே அவளுக்கு. புத்தகங்களின் முதல் பக்கத்தில் வாணி ஜெய்குமார் என்று ரப்பர் ஸ்டாம்பின் முத்திரைதான் இருந்தது.

அரை மணிக்கு மேல் அறை முழுவதிலும் தேடி அலுத்துப் போய் வெளியே திரும்ப நினைத்தபோதுதான் அவள் கண்களில் பட்டது - அலமாரியின் அடியில் தூசி படிந்து இரண்டு புத்தகங்கள் கவனிக்கப்படாத நிலையில் கிடந்தன.

குனிந்து எடுத்து தூசியைத் தட்டி - ஒழுங்காகத் தட்டில் வைக்க நிமிர்ந்தாள். அவைகளில் ஒன்று கைதவறிக் கீழே விழுந்தது.



அதனின்று வெளியே பறந்து மூலையில் ஓடிச் சுருண்டு கொண்டது ஒரு சிறு காகிதத்துண்டு.

அதை எடுத்து அசட்டையாகப் பிரித்தாள். மீண்டும் உடல் முழுவதிலும் ஒரு பரபரப்பு - விவரிக்க இயலாத அச்சத்திலே நெஞ்சில் படபடப்பு...

கடிதத்தின் மேல் பகுதி கிழிந்துவிட்டிருந்தது - யாருக்கு எழுதிய கடிதம் என்று தெரியவில்லை. ' நீ கேட்ட ரூபயாத்தின் தமிழாக்கம் எந்தப் புத்தகக் கடையிலும் கிடைக்கவில்லை. எட்வர்ட் ஃபிட்ஸ் ஜிரால்ட்டின் ஆங்கில மொழி பெயர்ப்பை அனுப்பியிருக்கிறேன். சிந்தையைக் கொள்ளை கொள்ளும் ஓமர் கயாமின் கவிதைகளை எந்த மொழியில் படித்தால்தான் என்ன? மற்றவை பின்னர் - அன்புள்ள வாணி.''

அந்த அறையை விட்டு வேகமாக ஓடிவந்து தன் அறைக்குள்ளே அமர்ந்து கொண்டு இரண்டு கடிதங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். சந்தேகமேயில்லை. இரண்டும் 'ஒரே ஆசாமியின் கையெழுத்து. ஆனால் அது வாணியின் கையெழுத்து என்று எப்படிச் சொல்ல முடியும்? யாரிடம் காட்டி அவள் தெரிந்துகொள்ள இயலும்? தாத்தா ஒருவரிடம்தான் சந்தேகத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

இரவு உணவிற்குப் பிறகு - தூக்க மாத்திரையை விழுங்கிவிட்டு அதிலும் தூக்கம் வராது தவிக்கும் அவரிடம் அவசரப்பட்டு இப்போது கேட்பது முறையல்ல... காலை வரை பொறுமையாக இருக்க வேண்டும் - வேறு வழியில்லை... தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு அவள் சிந்தனைகளைச் சிதற விடாதிருக்க தன் அன்றாடப் பணிகளில் ஈடுபட்டாள்.

வழக்கம் போல் பால் டம்ளருடன் அவள் மாடிக்கு வந்தபொழுது அவள் அறையில் ஜெய்குமார் சோபாவில் சாய்ந்து கொண்டு அவள் வருகைக்காகக் காத்திருந்தான். திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

''இப்படிக் கொடு டம்ளரை - சாப்பிட்டதும் உன்னோடு பேச வேண்டியது ஒன்று இருக்கு'' கையை நீட்டினான் அவன். டம்ளரை வாங்கியபோது அசைப்பில் அவன் விரல்கள் அவளது கரத்தின் மீது பட்டபோது நெருப்பைத் தொட்டுவிட்ட உணர்வு அவளுக்கு.

முதல் நாள் அந்த அறைக்குள் அவன் வந்தபோது அவனது அருகாமையை எண்ணி தன்னையும் மீறிய ஒரு பரவசத்தில் துடிதுடித்த அந்த நெஞ்சில் இன்று ஒரு பயங்கரமான பதட்டம். 'வாணி அக்கா' உயிருடன் இருந்து தன் உரிமையைத் தேடிக்கொண்டு வந்து விட்டால் சட்டப்படி அவள் நிலை என்ன? அந்த வீட்டில் அதற்குப் பின்னர் குமாரின் மனைவி என்ற இடம் அவளுக்கு உண்டா?' பலப்பல எண்ணி திகிலே வடிவமாக, புரண்டு எழுந்த அழுகையை அடக்கிக் கொண்டு மௌனமாக நின்றாள். மேலும் கீழும் அவளை ஏற இறங்க அவன் பார்த்தபோது அவளுக்குத் திடீரென்று ஒரு அச்சம்.

நேற்று வரை அவனது அன்புக்கும் - அருகாமைக்கும் ஏங்கித் தவித்த அந்த மனதில் இப்போது ஒரு பயங்கர கிலி - அன்னியன் ஒருத்தனுடன் - தனியே ஒரு படுக்கை அறைக்குள் இருப்பதைப் போன்றதொரு அருவருப்பான உணர்வு. தவித்தாள் அவள். "நீ அழைக்கு முன்னே இன்னிக்கு நானே வந்துவிட்டேன். ஏன் தெரியுமா?'

நெஞ்சு படபடக்க மேனி நடுங்க கலவரத்துடன் மௌனமாகப் பார்த்தாள். அவனது பேச்சு விபரீதமாகத் தொனித்தது.

" பாட்டியின் சொத்து கைக்கு வரும்வரை நானும் இந்த நாடகத்தை அழகாக நடத்திக்கொண்டு போவதாக முடிவு. என் மாமியாருக்கு துளி சந்தேகம் ஏற்பட்டாலும் போதும் டமாரம் அடிச்சுடுவாங்க. தாத்தா காதுகளுக்கு எட்டிவிட்டால் ஆபத்து. அவரை இப்போ விரோதித்துக் கொள்ள எனக்கு ஆசையில்லை. அதனால்தான் நீ அழைக்கும் முன்னே என் மாமியார் கண்ணில் படும்படி நானே ஓடி வந்தேன்'' சிரித்தான் அவன்.

அனு தாராளமாக மூச்சுவிட்டாள். ஆனால் பேசவேயில்லை.

''நான் ஆபீஸிலிருந்து வந்ததும் தங்கவேலுதான் எனக்கு இன்னிக்குக் காப்பி கொண்டுவந்து கொடுத்தான். போலியான இந்த புருஷனுக்குப் பணிவிடை செய்து ஒரே வாரத்தில் நீ அலுத்துப் போயிட்டியா?'' தொடர்ந்து அனு மௌனமாகவே இருந்தாள். எதற்காக இவன் இப்படிச் சுற்றி வளைக்கிறான் - விளங்காமல் அவளுக்குக் குழப்பம்.



உன்னைப்பற்றி என் மாமியார் புகார் செய்திருக்காங்க. அவங்க நேரிடையாக என்னிடம் பேசவில்லை. சோபனாகிட்டச் சொல்லி உன்னைக் கண்டிக்கும் படி உத்தரவிட்டிருக்கிறாங்க. நீ நடந்துக்கிற முறை உனக்கு இந்த வீட்டிலிருக்கும் பதவிக்கு ஏத்ததாக இல்லையாம். சமையல் ஆள் தங்கவேலுவுடன் நீ சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டு நிக்கிறாயாம்'' காரமான குரலில் அதட்டினான்.

வெட்கத்தில் முகம் சிவந்து உடல் கூசி அயர்ந்து ஒரு கணம் ஊமையாக நின்றுவிட்டாள். பின்னர் துணிவைத் திரட்டிக்கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''எனக்கு இந்த வீட்டில் அப்படி நீங்க என்ன ஒரு இடம் கொடுத்திருக்கிறீங்க அதை நான் அவலப்படுத்திட்டேன்?''

''புது மருமகள் என்கிற ஸ்தானம். கொத்துச் சாவி இடுப்பில் குலுங்கக் குடும்பத்தலைவி என்ற பெரிய பதவி - போதாதா?''

''உங்கள் அத்தைக்கு என்னைப் பிடிக்காதிருப்பதில் ஆச்சர்யம் இல்லை. அவங்க என்மேல் வீண் பழியைச் சுமத்துவதைப் பற்றி அக்கறை இல்லை. தவறு செய்தால் தானே நான் கவலைப்படணும்?''

''வேலையாட்களோடு சரிசமமா பேசிக் கொண்டிருப்பது தவறு இல்லையா?''

''என்வரைக்கும் வேலையாட்கள் வீட்டின் அடிமைகள் அல்ல. ஆட்களை - மனிதர் என்று மதித்து அன்போடு ஆணையிட்டால் அவங்க நம்மை மதிப்பாங்க - மரியாதை கொடுப்பாங்க. ஒட ஒட விரட்டினால் வெறுப்பாங்க - இந்த உண்மையை உணர்ந்துதான் நல்ல வேலையாட்கள் எல்லோரிடமும் கொஞ்சம் கருணையா நடந்துக்கிறேன். இதை உங்க அத்தை தப்பா புரிஞ்சு கொண்டிருக்காங்க. சே! சே! நீங்கள் எல்லாம் பெரிய மனிதர்கள் ஆனால் மனசில் மட்டமான எண்ணங்கள். என்னைத் தப்பா புரிஞ்சு கொண்டு நீங்கள் தாறுமாறாக இப்படிக் கேள்வி கேக்கறதை நான் வெறுக்கிறேன்'' பொங்கிக் கொண்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு சூடாகப் பேசினாள்.

''கேட்டு உண்மையைத் தெரிஞ்சு கொள்கிறது என் கடமை இல்லையா?''

''கணவன் என்ற எந்தவித உரிமையையும் எதிர் பார்க்காதேன்னு ஆரம்பத்திலேயே சொன்ன பிறகு - நீங்கள் மட்டும் மனைவின்னு என் மேல் உரிமை பாராட்டி கேள்விகள் கேட்பது நியாயமா?''

''கிராமத்துப் பெண் இல்லையா - பதிலுக்குப் பதில் துணிச்சலாப் பேசறே! பேஷ்!'' ஏளனமாக நகைத்தான்.

கைகடிகாரத்தை உற்றுப் பார்த்துவிட்டு அவள் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

''நீங்க இப்போ உங்க அறைக்குப் போகலாம். இனிமேல் நாளையிலிருந்து சிரமப்பட்டுக் கொண்டு நீங்க இந்த அறைக்கு வரத் தேவையில்லை. உங்க மாமியார் என்னைப் பற்றிச் சொன்ன கதைகளைக் கேட்டு நீங்க சந்தேகப்பட்டுக் கொண்டு என்னை ஒதுக்கிவிட்டதாக அவங்க நல்லா சந்தோஷப்பட்டுக்கிடட்டும். எனக்குக் கவலையில்லை. என் கடமைகளை எவ்வளவு காலம் இங்கே செய்து கொண்டிருக்க முடியுமோ அதுவரை சமாளிக்கிறேன். நீங்க தயவுசெய்து கிளம்புங்க. எனக்கு இன்னிக்கு ரொம்ப களைப்பா இருக்கு'' கதவைத் திறந்து போக வழிவிட்டாள்.

அன்று இரவு அவள் தூங்கவேயில்லை. மறுநாளு காலை வழக்கம்போல ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வாயில் பிள்ளையாரையும் பூஜையறையையும் கவனித்து விட்டு வெளியே வந்தாள். முன்னறையிலிருந்த தொலை பேசி அலறியது. வேகமாகச் சென்று எடுத்தாள். மறு பக்கத்தில் ஒரு பெண்ணின் குரல் ''மிஸஸ் அனுராதா ஜெய்குமாருடன் பேச முடியமா?''

''அனுராதாதான் பேசுகிறேன். நீங்கள் யார்?''

''பம்பாயிலிருந்து பேசுகிறேன். என் கடிதம் கிடைத்ததா?'' ரிஸீவரைப் பிடித்திருந்த அனுவின் கை நடுங்கியது. நெஞ்சிலே மீண்டும் அந்த திகில்.

''நான்தான் வாணி ஜெய்குமார் பேசுகிறேன். உன்னைச் சந்திக்கவும் பேசவும் எனக்கு ரொம்ப ஆவலாக இருக்கு?''

''எனக்கு இல்லை'' டக்கென்று அனு போனை வைத்தாள். குளிர் காய்ச்சல் வந்துவிட்டதுபோல் அவள் உடல் கிடுகிடுவென்று நடுங்கியது - ஓவென்று அலறி அழவேண்டும் போன்றதொரு துக்கம் நெஞ்சை அடைத்தது. பேசியவள் உண்மையில் வாணியா? அல்லது?



# 7

தங்கவேலு அவள் வரவிற்காகத் தயாராக நின்று கொண்டிருந்தான். சாப்பாட்டறை மேஜைமீது வைக்கப் பட்டிருந்த தட்டை அவள் கையில் எடுத்துக் கொண்டாள்.

''இன்னும் ஏதாவது தேவைங்களா?...''

அவனது பணிவான பேச்சும்... கபடமில்லாத முகமும் அவள் மனதை என்னவோ செய்தன. 'ரத்னா அத்தைக்கு மகா மட்டமான எண்ணங்கள். சே! சே!...' தனக்குள் எண்ணி வெகுண்டாள்.

'இதற்கெல்லாம் அவள் பயந்து விடுவதா? இல்லை... இல்லை... எல்லாவற்றையும் தாத்தாவிடம் வெளிப்படையாகச் சொல்லி கலந்து ஆலோசிக்க வேண்டும்...'

''உங்களுக்குச் சாப்பிட இப்பக் கொஞ்சம் காப்பி தேவையில்லையா?'' தங்கவேலுவின் குரல் அவளது சிந்தனையை அறுத்தது. ''பிறகு வந்து சாப்பிடுகிறேன்'' புன்னகைத்தபடி அவள் தாத்தாவின் அறையை நோக்கிச் சென்றாள்.

தேவை! ஆமாம்; அவளுக்கு இப்போது அதிகப்பட்டதொரு பொறுமை தேவையாகத்தானிருந்தது.

பொறுமையாக இருக்க வேண்டும் - மரகதம் அண்ணி சுலபமாகச் சொல்லிவிட்டார்கள். அதைக் கையாளும் போதுதானே எத்தனை சிரமம் என்பது அவளுக்குப் புரிந்தது. என்னென்னவோ எதிர்பார்த்துக் கொண்டு கணவன் வீட்டிற்கு வந்த இளம் மனைவி அவள், ஒன்றன் பின் ஒன்றாக எத்தனை பேரிடிகள்?

முதலில் கணவனிடமிருந்து - பின்னர் வாணியிடமிருந்து அந்தக் கடிதம் - அதற்குப் பின்னர் ரத்னா அத்தை அவளது குணத்தின் மீது களங்கம் கற்பித்துக் கட்டியுள்ள கதை - இப்போது டெலிபோனில் வாணியின் பயமுறுத்தல்...

வந்த சில நாட்களுக்குள் ஒரு பெண் எத்தனை அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொள்வாள்? ஏற்று பொறுமையாக இருக்கவேண்டுமென்றாலும் அது சாதாரணப் பொறுமையாக இருக்க முடியாது. கழுதைகளிடம் காணப்படுமாமே ஒரு அலாதிக் குணம்... கழுதைப் பொறுமை; அவளுக்கு இப்போது அதுதான் அதிகமாகத் தேவைப்பட்டது. இல்லாவிடில் எரிமலையாக வெடித்து விடுவாள் போன்று உள்ளத்து உணர்வுகள் ஓகோவென்று குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

காப்பி நிறைந்த கோப்பையை அருகில் கொண்டு வந்து வைத்தபோது கவனித்தாள். கிழவரின் மடிமீது வழக்கம் போல் காலைப் பத்திரிகை பிரித்த நிலையில் கிடந்தது.

''தாங்க்யூ'' புன்முறுவலித்தபடி காப்பியை ஒரு மடக்கு விழுங்கிவிட்டு பிஸ்கட்டை மெல்லக் கடித்தார் சிவபாதம். கிழவருக்கு இன்னும் முன் பற்கள் உறுதியாகத்தானிருந்தன.

''கார்த்தாலே பேப்பரை நீ இன்னும் படிக்கலை இல்லையா...? நேத்து சாயங்காலம் பூனமல்லியைத் தாண்டி நெடுஞ்சாலையிலே ஒரு பெரிய மோட்டார் விபத்து - சென்னைக்கு உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்கு வந்து கொண்டிருந்த குடும்பம் காரில், லாரியுடன் ஹெட் ஆன் கொலிஷன்... ஸ்தலத்திலேயே மூணுபேர் அவுட். இரண்டு பேர் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் கிடக்கிறார்களாம். இப்போவெல்லாம் வரவர கண்மண் தெரியாம ஓட்டறாங்க. விபத்துக்களும் அதிகமாகிட்டுப் போகிறது... பேப்பரைப் பார்...'' அவளிடம் அந்தப் பக்கத்தைப் புரட்டி நீட்டினார்.

படத்துடன் விவரிக்கப்பட்டிருந்த விபத்துச் செய்தியை அவள் விரைவில் படித்தாள் - அவரிடமே பேப்பரைத் திருப்பிக் கொடுத்தாள்.

'கார் விபத்தில் கனகம்மாசத்திரத்திற்கருகில் இப்படித்தான் உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்குப் போய்க்கொண்டிருந்த வாணி -எதிரே வந்த லாரியுடன் கார் மோதி... இறந்து விட்டாள் என்று நீங்க எண்ணிக்கொண்டிருக்கிற வாணி அக்கா கல்லுக்குண்டாக உயிருடன் இருக்கிறாங்க...' படபடவென்று சொல்ல வேண்டுமென்ற ஆத்திரம். நெஞ்சை அடைத்த அந்த பயங்கர உணர்வை விழுங்கிக் கொண்டாள்.



அவர் உட்கொள்ள வேண்டிய மருந்துகளைத் தட்டில் வைத்து அவரிடம் கொடுத்தாள்.

''ஒரு அதிசயம் உனக்குத் தெரியுமா, அம்மா? நீ ராத்திரி சாப்பாட்டுக்கப்புறம் தினசரி கொடுக்கிற தூக்க மாத்திரைகளை நான் சாப்பிடறதில்லை. ஜன்னல் வழியே தூக்கி எறிஞ்சு விடுகிறேன்.'' அவர் வாய்விட்டு சிரித்தார். அவள் வியப்புடன் விழித்தாள்.

''இப்போதெல்லாம் எனக்கு இயற்கையாகவே தூக்கம் வரது. ஏன் தெரியுமா? வீட்டுக்கு வந்திருக்கிற மருமகள் கெட்டிக்காரி; எல்லாத்தையும் கவனிச்சுப்பாங்கிற மன நிம்மதி...'' மெல்ல சிரித்தார் அவர்.

'உங்களுக்கு மன நிம்மதி; எனக்கு?...' கேட்க வேண்டுமென்று எழுந்த வார்த்தைகள் தொண்டையிலேயே நின்றன. உணர்ச்சி வசத்தில் மூக்கும் உதடுகளும் துடிக்க அவள் மௌனமாகத் தட்டைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

'விடிந்ததும் விடியாததுமாக அவரது நிம்மதியைக் குலைக்க வேண்டாம். மாலைவரை அந்தக் கழுதைப் பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு இருப்போம்...' என்று எண்ணியபடி அவள் விரைவில் மற்றக் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினாள்.

காலை காபி பலகாரத்திற்குப் பின்னர் சோபனாவும் சசியும் கல்லூரிக்குப் புறப்பட்டுவிட்டனர். ரத்னா வீட்டிலிருக்கப் பிடிக்காது மாம்பலத்திலிருந்த உறவினரைக் காணவேண்டுமென்று சொல்லிவிட்டு சோபனாவைக் கொண்டுவிடப் புறப்பட்டுக் கொண்டிருந்த அம்பாசிடரில் தொத்திக் கொண்டாள். சசி தன் ஸ்கூட்டரிலேயே கிளம்பிப் போய்விட்டான். ஜெய்குமார் வாரத்திற்கு மூன்று தடவைகளாவது திருவள்ளூரிலிருந்த தங்கள் தொழிற்சாலைக்கு விஜயம் செய்வது வழக்கம் - எல்லோருக்கும் முன்னதாக அவன் தனது ஃபியட்டைத் தானே ஓட்டிக் கொண்டு போய்விட்டிருந்தான்.

எத்தனை முயற்சித்தும் அனுவின் மனதில் அமைதியே இல்லை. முன்னறையில் டெலிபோன் மணி அடித்தபோதெல்லாம் அவள் திடுக்கிட்டு நின்றுவிட்டாள். விரைவில் ஓடிச்சென்று தானே போனை எடுத்தாள். ஒவ்வொரு முறையும் வாணி மறுபடியும் பேச

முயற்சிக்கிறாளோ என்றதொரு கிலி. அவை அனைத்தும் அன்று தாத்தாவுக்கு வந்த டெலிபோன் அழைப்புக்கள்.

தன் கவலைகளை மறக்க அவள் மும்முரமாகச் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். சைக்கிள் மணி ஓசையைக் கேட்டு ஜன்னல் வழியே முன்பக்கத்துத் தோட்டத்தை எட்டிப் பார்த்தான் தங்கவேலு.

''தபால்காரன் வந்திருக்கிறான்.'' உற்சாகத்துடன் அவன் வெளியே ஓடினான். பயத்தில் அவள் மீண்டும் அயர்ந்து போய் நின்றாள். அன்றையத் தபாலில் மீண்டும் வாணி பயமுறுத்தி ஏதாவது எழுதியிருந்தால்? கை வேலையைப் போட்டுவிட்டு ஜன்னல் அருகே ஓடி அவளும் எட்டிப் பார்த்தாள். ஒரு கட்டுக் கடிதங்களைத் தபால்காரன் தங்கவேலுவிடம் கொடுத்துவிட்டு நகர்வதைக் கவனித்தாள். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

கிழவர் நோயாளியாக வீட்டிலேயே தங்க ஆரம்பித்ததிலிருந்து அவருக்குப் பலரிடமிருந்து அன்றாடம் நிறையக் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. தபால்காரன் ஒரு நாளைக்கு இருமுறைகள் அந்த வீட்டிற்கு வந்து போவது வழக்கமாகி விட்டிருந்தது. ஆனால் அவன் வரவு இப்போது அவளுக்கு விவரிக்க இயலாத பயங்கர உணர்வை உண்டாக்கியது.

''உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கு!...'' தங்கவேலு சொல்லிக் கொண்டே ஒரு கடித உறையைச் சாப்பாட்டு மேஜை மீது வைத்துவிட்டு மற்றவைகளை எடுத்துக் கொண்டு தாத்தாவின் அறைக்கு விரைந்தான். ரசத்திற்குப் பருப்பைக் கடைந்து கொண்டிருந்தவள் அப்படியே மத்தை போட்டுவிட்டு கையைக் கழுவிக் கொண்டு ஓடி வந்தாள். மேஜை மீது கிடந்த கடித உறையைக் கையில் எடுத்தபோது தான் அவளுக்கு உயிர் வந்தது. அவள் அண்ணன் மகன் ஷண்முகம் எழுதியிருந்தான். அவசரமாகப் பிரித்தாள்.

''அப்பாவுக்குத் தெரியாமல் இதை நான் எழுதுகிறேன். நீங்களும் இதைப் பற்றி அவரிடம் தெரிவிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். எஸ்.எஸ்.எல். சி. தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் தேறிவிட்ட நான் இப்போது திருச்சியில் மேற்கண்ட முகவரியில் உள்ள ஹாஸ்டலில் தங்கி மேற்படிப்பு படிக்கிறேன். ஹாஸ்டலுக்கு



மாதா மாதம் பணம் கட்டி என்னை மேலே படிக்க வைக்க அப்பா சிரமப்படுகிறார். படித்துப் பட்டம் பெற்று நல்ல ஒரு உத்தியோகம் தேடிக் கொள்ள வேண்டுமென்று எனக்குக் கொள்ளை ஆசை. கடை வியாபாரம் படுமோசமாகி விட்டது. அதனால் இனி தன்னால் பணம் அனுப்ப முடியாது; உடனே படிப்பை நிறுத்திக் கொண்டு ஊருக்கு வரவேண்டும். கடையில் கூட உதவ வேண்டும் என்று அப்பா உத்தரவு. உபகாரச் சம்பளங்கள் பலவற்றிற்கும் மனுக்கள் போட முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். கிடைக்கும் என்ற நம்பிக்கை -அதுவரையில் நீங்கள் எனக்குக் கடனாகக் கொஞ்சம் பணம் கொடுத்து என் கல்வியைத் தொடர உதவ முடியுமா என்று கேட்கத் தான் அவசரமாக எழுதினேன். பிழை என்றால் மன்னிக்கவும். கல்விமேல் எனக்குள்ள தவிர்க்க முடியாத ஆசையினால் உங்களிடமே துணிவுடன் கேட்டுவிட்டேன்... பதிலை எதிர்பார்க்கிறேன். ஷண்முகம்.''

கடிதத்தை மடித்து இடுப்பிலே சொருகிக் கொண்டு பெருமூச்சு விட்டாள்.

'அவள் அந்த வீட்டிற்கு வந்திருக்கும் புதிய மருமகள். அவள் நிலையே ஆட்டம் கண்டு கொண்டிருக்கையில் ஷண்முகத்திற்கு அவள் என்ன விதத்தில் உதவி செய்ய இயலும்? அண்ணா மானத்துக்கஞ்சியவர். கேள்விப்பட்டால் பையன் முதுகை உரித்து விடுவார். அவ்வளவு கோபம் வந்துவிடும், அவருக்கு...''

இருக்கும் கவலைகள் எல்லாம் போதாதுபோல் இப்படி ஒரு பிரச்சனையா? அழமாட்டாத குறை அவளுக்கு.

எப்படியோ அன்று பொழுது முழுவதையும் அவள் கழித்து விட்டாள். மாலை எல்லோரும் வீடு திரும்பி விட்டிருந்தனர். அதுவரை வெறிச்சென்றிருந்த வீட்டில் இப்போது கலகலப்பு. பலரின் பேச்சுக்குரல். சோபனாவின் சிரிப்பு, சசியின் அதட்டல், அத்தை ரத்னம்மாவின் பூமியதிரும் நடை எழுப்பிய ஓசை - மனத்தை இதுவரை அழுத்திக் கொண்டிருந்த பயங்கர உணர்வு வீட்டின் அமைதியில் இன்னும் பயங்கரமாகத்தான் பட்டது அவளுக்கு. இப்போது அவர்கள் நிறைந்த வீட்டில் கூச்சலும் கூச்சலும் ஒலித்த இடத்தில் அவளுக்கு அத்தனை பயங்கரமாக இருக்கவில்லை.

இவ்வளவிற்கும் அவளைச் சூழ்ந்து நின்ற அந்த மூவரும் அவளோடு ஒட்டி உறவாடுகிறவர்கள் அல்ல... என்றாலும் மனிதக் கூட்டத்தில் நடுவே - மனத்தை அமுக்கும் கவலைகள் தாமாகவே லேசாகி விட்டது போன்ற ஒரு மயக்கத்தை தருகிறதே? ஆச்சர்யம்...!

இரவு உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு போனபோது அவளால் அதற்கு மேலும் தொடர்ந்து வாளா இருக்க முடியவில்லை. ஒளிவு மறைவின்றி - வாணியின் கடிதத்தைத் தாத்தாவிடம் கொடுத்து அவரது ஆலோசனையைக் கேட்டு நடக்க வேண்டியது... இனியும் தாள முடியாது என்ற முடிவு. வாயைக் கழுவித் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார் சிவபாதம் - மெல்ல நாற்காலியை உருட்டிக் கொண்டே அருகே வந்தார்.

''என்னம்மா, ஏதாவது சொல்லணுமா? உன் முகத்தைப் பார்த்தா ஏதோ நிறைய சங்கதி வச்சிருக்காப்போலத் தோணுதே...'' புன்னகைத்தார். ஒரு கணம் திடுக்கிட்டுவிட்ட அனுவின் முகம் லேசாகச் சிவந்து விட்டது. ஆனாலும் தாத்தா ரொம்பக் கெட்டிக்காரர். மூஞ்சியைப் பார்த்தே விஷயத்தைக் கண்டு கொள்கிறாரே?'

இடுப்பிலிருந்த கடிதத்தை உருவி... ''தாத்தா, இந்தக் கடிதம் நேத்து வந்தது. நீங்க பார்த்து உங்க அபிப்ராயத்தைச் சொல்லணும்'' அவரிடம் கொடுத்தாள்.

கிழவர் பிரித்துப் படித்தார். பின்னர் தலையை நிமிர்த்திக் கொண்டு அவளை உற்றுப் பார்த்தபடி மெல்லச் சிரித்தார்.

''இதுக்காம்மா இப்படிக் கவலைப்படறே? இது ரொம்பச் சின்ன விஷயம். செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்னு எதுக்குச் சொல்லியிருக்காங்க. ஷண்முகம் படிக்கத்தானே உதவி கேட்கிறான். தாராளமாக கொடுக்கலாமே...'' அனுராதாவின் முகம் அவமானத்தினால் குங்குமமாகச் சிவந்து போயிற்று. நெஞ்சிலே படபடப்பு. ''தாத்தா, நான் கொடுக்க வந்தது இந்தக் கடிதம் இல்லே...'' மறுப்புக் கூறி முடிக்குமுன் அவர் கையமர்த்தினார்.

''இரும்மா என்னைப் பேசவிடு. உங்க அண்ணன் ரொம்ப மானி. கொண்டான் கொடுத்தான் வீட்டில் எதுவும் எதிர்பார்க்க மாட்டார், தெரியும். பையன் அவருக்கு தெரியாமல் எழுதியிருக்கிறான். அதில் தப்பு இல்லையம்மா. அன்னம்மா பாட்டிக்கு ஏகப்பட்ட சொத்து





அவங்க உயிரோடு இருந்த காலத்திலேயே ஒரு பகுதியைக் கல்விக்குன்னு ஒரு ட்ரஸ்ட்டாக அமைச்சு வச்சுட்டுப் போயிட்டாங்க. உபகார சம்பளம் கொடுத்து உதவ அதில் பல வாய்ப்புக்கள் இருக்கு. ஷண்முகத்தின் தேர்வு மதிப்பெண்களை எழுதச் சொல்லு. கமிட்டி முன்னால் அதை வச்சு நான் சிபாரிசு பண்ணி அவனுக்கு உதவி வாங்கித் தரேன். இந்த விஷயத்தை உன் அண்ணனுக்குப் பக்குவமா எப்படி எடுத்துச் சொல்கிறதுங்கிறதை எங்கிட்ட விட்டுடு...''

நன்றி உணர்வில் நெஞ்சம் நெகிழ்ந்துபோன அனுவுக்குச் சட்டென்று பேச முடியவில்லை.

''தாத்தா, உங்கிட்ட நான் காட்டக் கொண்டுவந்த கடிதம் உண்மையில் இது இல்லை. இரண்டையும் இடுப்பில் சொருகிட்டிருந்தேன். தவறிப்போய் இதை எடுத்து விட்டேன்.''

''பரவாயில்லை. விஷயம். எனக்குத் தெரிஞ்சது நல்லதுதானே...''

இடுப்பைத்தடவி அவள் மெல்ல வாணியின் கடிதத்தை எடுத்தாள்.

''இதைத்தான் காட்டக் கொண்டு வந்தேன். நேத்து தபாலில் இது வந்தது. இன்னிக்குக் காலையிலே இவங்க பம்பாயிலிருந்து எனக்கு போன் பண்ணினாங்க. ரொம்ப பயந்துட்டேன்.''

கடிதத்தைப் பார்த்தார் சிவபாதம். பற்களை அழுத்திக் கோபத்துடன் கடிக்கின்ற முகபாவத்துடன் வண்டியைத் தள்ளிக்கொண்டு அறைக்குள் வளைய வந்தார். படுக்கை அருகே சென்று தலையணை அடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்தார்.

''நான் நினைச்சேன் - அதுபடியே செய்திருக்கிறாள். வாணி பொறாமைக்காரி - பிறர் வாழச் சகிக்காதவள்.''

'அப்படின்னா தாத்தா?...' பதறினாள் அனுராதா. நெஞ்சு படபடப்பில் மூச்சே நின்றுவிடும் போன்றதொரு கலக்கம்.

''உனக்கு எழுதியிருக்கிறது போலவே - வாணி எனக்கும் ஒரு கடிதம் போட்டிருக்கிறாள். திமிர் பிடித்தவள்...''

''அப்படின்னா வாணியக்கா உயிரோடத்தான் இருக்கிறாங்களா? இது அவங்க எழுதின கடிதந்தானா?

பம்பாயிலிருந்து காலையிலே என்னைக் கூப்பிட்டது அவங்க தானா?'' திணறினாள் அனு மேலே பேச முடியாது.

''ஆமாம் அம்மா'' உசிரோடத்தான் இருக்கா.''

''அது உங்களுக்குத் தெரிஞ்சும் என் விஷயத்தில் நீங்க கூட வஞ்சனை பண்ணிட்டீங்களே! உங்களுக்கு நான் என்ன தீங்கு செஞ்சேன் தாத்தா?'' எத்தனைக் கட்டுப்படுத்தியும் தாளமுடியாது அவளது கண்களில் கண்ணீர் புரண்டது. தொண்டையைத் துக்கம் அடைத்துக் கொண்டது. அறையே சுற்றுவது போன்றதொரு திகைப்பு.

''வஞ்சனையாக உனக்குத் தீங்கு செய்யணும்னு உத்தேசமில்லையம்மா. எங்க வீட்டுக்கு ஒரு மகாலட்சுமி வரணும்னு ஆசையிலே ஒரு சுயநல எண்ணத்திலேதான் இந்தக் கல்யாணத்திற்கு நான் ஏற்பாடு பண்ணினேன். வாணியால் உனக்கு எந்தவிதமான தீங்கும் நேராது. நான் உத்திரவாதம். இனி உனக்குக் கடிதம் எழுதாமலிருக்கவும் - போன் பண்ணிப் பயமுறுத்தாமலிருக்கவும் அவளைத் தடுக்க என்னால் முடியும் - உடனடியாகச் செய்கிறேன். கவலைப்படாதே, பயப்படாதே''.

''மனசாட்சி ஒண்ணு இருக்கே அதுக்குப் பயப்படாம எப்படி தாத்தா இருக்க முடியும்? ஒரு பக்கம் என் கணவர் இந்தக் கல்யாணம் வெறும் கண் துடைப்புங்கிறார். அதை நிரூபிப்பது போல இப்போ வாணியக்கா உசிரோடு இருக்கிறது விளங்கி விட்டது. இந்த வீட்டில் எனக்கு இனி என்ன இடம் இருக்கு சொல்லுங்கோ.''

''உனக்கு ஒரு பெரிய இடம் இருக்கு. சட்ட நுணுக்கம் தெரிஞ்சுதான் பேசறேன். ஒரு நாள் உங்கிட்ட இந்த உண்மையை நானே கூப்பிட்டுச் சொல்ல நினைச்சேன். அதுக்குள்ள வாணி இப்படி ஒரு ரகளை பண்ணிவிட்டா. அவ உசிரோட இருக்கிறது பரம ரகசியம். எனக்கும் மானேஜர் வெங்கடேசனுக்கும், இப்போ உனக்கும் மட்டுந்தான் தெரியும். ஜெய்குமார் அவளை தெய்வம் போல நினைச்சின்டு இருக்கான். அவள் யார் என்கிறது எங்களுக்குத் தெரியும். கோபத்திலேயோ உணர்ச்சி வசப்பட்டோ இந்த உண்மையை நீ வெளியே சொல்லிடாதேம்மா. உன்னை ரொம்ப கேட்டுக்கிறேன்.'' தாத்தா ரொம்ப கோபத்துடன் பேசிவிட்டுக்



கனிவுடன் அவளைப் பார்த்தார்.

''வாணி அக்கா கைப்பட உங்க பேரனுக்குக் கடிதம் எழுத மாட்டாங்கன்னு என்ன நிச்சயம்? போனில் கூப்பிட்டுப் பேசினால்...''

''மாட்டாள். ஏழு வருஷமாகச் சும்மா இருந்தவள் இனியா செய்வாள். அவளுக்குச் சக்தியில்லை. அவளை ஆட்டி வைக்கும் சூத்திரம் எங்க கையிலே இருக்கு. பயப்படாதே. எனக்கு இன்னிக்கு ரொம்ப அசதியா இருக்கு. தூக்க மாத்திரை அவசியம் போலவும் தோணுது. அதை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போ. மற்ற விவரங்களை நாளைக்கு சொல்றேன்'' உத்தரவிட்டார் தாத்தா.

விடை பெற்றுக் கொண்டு திரும்பின அனுராதா கதவின் அருகே தயங்கிக் கொண்டு நின்றாள்.

''இன்னும் என்னவோ விஷயம் சொல்ல வச்சிருக்கே போல இருக்கு. அதையும் சொல்லிடு.''

''தங்கவேலுவிடமும் மற்ற வேலையாட்களிடமும் நான் சரிக்குச் சமமாகப் பேசிப் பழகி உங்கள் கௌரவத்தைக் குலைக்கிறேன்னு அத்தை புகார் செய்து - உங்கள் பேரன் என்னை மனம் நோகப் பேசிவிட்டார். அவமானத்திலே நான் குன்னிப் போயிட்டேன். நான் செய்கிற எல்லாக் காரியங்களையும் தப்புக் கண்ணோடு பார்க்கிறதாகத் தீர்மானிச்சுக்கிட்டிருக்கிறவங்க நடுவிலே நான் எத்தனைக் காலம் சமாளிக்க முடியும்?'' கலங்கிய கண்களுடன் அவள் பார்த்தாள்.

மீசையைத் தடவிக் கொண்டார் அவர். கோபத்திலே அவரது உடல் ஆடியது. ''அப்படியா? அவதூறு பேசுவதிலே ரத்னா ரொம்பக் கெட்டிக்காரி. இப்படிப் பட்டவங்க இன்னும் என்னதெல்லாம் சொல்வாங்கன்னு தெரியும். சித்த இரு... அந்தக் கதவை சடார்னு திற'' நாற்காலியைத் தள்ளிக் கதவருகே கொண்டு வந்து நிறுத்தினார். அனு விரைவாக அறையின் கதவுகளைத் திறந்து வைத்தாள். வெளியே கதவருகே ஒட்டுக் கேட்கும் பாவனையில் நெருக்கமாக நின்ற அந்த மூவருக்கும் மெத்த அதிர்ச்சி - சட்டென்று ஆளுக்கொரு மூலைக்கு நகர்ந்தனர்.

உள்ளே வந்த அனு உணவுத் தட்டைக் கையில் எடுத்துக்

கொண்டாள்.

''நாளைக்கு எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டப் போகிறேன். அதுவரை எனக்காக நீ மௌனமாக இருக்கணும். போய் சாப்பிட்டுட்டு கவலையெல்லாத்தையும் எங்கிட்ட விட்டுட்டு நல்லா தூங்கு. குட்நைட்'' விடை கொடுத்தார் சிவபாதம்.

கதவைச் சாத்திக்கொண்டு அனு போய் வெகுநேரம் சென்றும் அவர் மீசையைத் தடவியபடி யோசனையுடன் கதவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

# 8

தாத்தா சிவபாதம் சுலபமாகச் சொல்லி விட்டார். கவலையை என்னிடம் விட்டுட்டு தூங்கம்மா!

கவலைப்படாது அவள் இருக்கக்கூடிய லேசான விஷயங்களா அவை? இந்தச் சங்கடமான நிலைக்கு அவள் யாரை நொந்து கொள்வாள்? பெரிய இடம், சகோதரி சுகமாக இருப்பாள் என்று நம்பி - ஆராய்ந்து பார்க்காமல் அவசரமாக ஒப்புக்கொண்டு விட்ட அண்ணனையா?

உண்மையை ஒளித்து வைத்து சுயநலம் காரணமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்ட தாத்தா சிவபாதத்தையா?

அரும்பு மீசையும் சுருண்ட முடியுமாக ஆள் அழகனாக இருப்பதைக் கண்டு நொடியில் மயங்கிப்போய் - சம்மதம் என்று தலையை ஆட்டித் தானே பலிபீடத்தில் கழுத்தை வைத்துக்கொண்டு விட்ட அவளையேவா?

அவள் தலையெழுத்து என்று பெரியவர்கள் சொல்லி சட்டென்று எல்லா கவலைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறார்களே -அந்தத் தலை எழுத்தையா? மண்டையை வெடித்து விடும்போல் சிந்தித்தாள் - குழம்பினாள் - உறக்கமின்றிப் படுக்கையில் புரண்டாள்.



அவர்கள் வசித்த கிராமத்திலே பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் பளிச்சென்று ஞாபகத்துக்கு வந்தது. தபால்காரர் மகள் அமிர்தம் பார்க்க அழகாகத்தானிருந்தாள். அவளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க தகப்பனுக்கு வசதி இருக்கவில்லை. திடீரென்று அமிர்தத்துக்கு யோகம் அடித்துவிட்டதாகப் பேசிக் கொண்டார்கள். பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டாள். புருஷன் வீடு போனவள் மூன்றாவது மாதமே பெட்டியுடன் தனியே திரும்பிவிட்டாள். ஏற்கனவே அவள் புருஷனுக்கு முதல் மனைவி இருந்தாள். நோய்வாய்ப்பட்டுச் சாகக் கிடந்த அவள் பிழைத்து எழுந்து தன் உரிமையைக் கோரி புருஷன் வீட்டுக்கு வந்து விட்டாள்.

வீரனும் சூரனுமான நாலு அண்ணன்மார்களுடன் வந்தவளை எதிர்த்துப் போராட கணவனுக்குத் துணிச்சல் இல்லை. கோர்ட், வக்கீல் என்று பணத்தைக் கொட்டி விஷயத்தை அம்பலப்படுத்துவாளே என்று அவளை ஏற்றுக்கொண்டு விட்டான். வந்தவள் முதல் வேலையாக இளைய மனைவியை அப்புறப்படுத்தி விட்டாள். ஊரே இந்தச் செய்தியைக் கேட்டுத் திமிலோகப்பட்டது.

தபால்காரரும் விடவில்லை. பக்கத்து ஊர் வக்கீலிடம் பல தடவை ஆலோசனைக்குப் போய் வந்தார். கைகாசு தொலைந்ததுதான் மிச்சம். முதல் மனைவி உயிருடன் இருக்கையில் இரண்டாவதாகச் செய்த அந்தக் கல்யாணம் சட்டப்படி செல்லாது என்று வக்கீல் தெரிவித்துவிட்டார்.

அமிர்தத்தினால் அதிர்ச்சியைத் தாள முடியவில்லை. ஒரு நாள் இரவு யாருக்கும் தெரியாமல் அவள் காவேரியில் குதித்து விட்டாள். இரண்டு நாள் கழித்து அவள் பிணம் அகப்பட்டது. அமிர்தத்திற்காக அந்த ஊரே அழுதது.

இப்போது அனுவிற்காக? மேலே சிந்திக்க முடியவில்லை. கட்டுப்படுத்தியும் சூடான கண்ணீர் தலையணை மீது சிந்தியது.

இந்தச் சிக்கலிலிருந்து அவளைத் தன்னால் காப்பாற்ற முடியும் என்று தாத்தா சொன்னாரே! அவரை எவ்வளவு தூரம் நம்ப முடியும்? அண்ணன் காதில் பட்டால் அவமானம் தாங்கமுடியாது அனுவுக்கு முன் அவர் தான் ஆற்றில் குதித்து உயிரை விட்டுவிடுவார் பின்னால் அண்ணி, குழந்தைகள் கதி? - ஐயோ எந்தப் பக்கம் திரும்பினாலும்

பெரும் முட்டுக்கட்டையாகப் பயமுறுத்துகிறதே இந்த பிரச்சினை.

மறுநாள் காலை மரகதம் பூக்கூடையுடன் வந்த போது புது மருமகள் முகத்தில் வழக்கமான களை இருக்கவில்லை. ''அம்மாவிற்கு உடம்புக்கு என்ன?'' வேகமாகப் பூஜையை முடித்து விட்டு - தங்கவேலு தயாராக வைத்திருந்த தட்டைத் தூக்கினாள் அனு. காலை ஒரு எட்டு எடுத்து வைத்தாள். கீழே பூமி நழுவுகின்றது போன்ற திகைப்பு - வீடு முழுவதும் சுற்றத் தொடங்கியது. அடுத்த அடிவைக்குமுன் தட்டைப் போட்டுக் கொண்டு தடால் என்று மயங்கி கீழே விழுந்து விட்டாள். பீங்கான் கெட்டிலும் தட்டுக்களும் சுக்கல் நூளாக உடைந்து நாலாப்புறமும் சிதறின. சூடான காப்பி தரையில் ஓடியது - சாப்பாட்டறையின் ஒரு மூலையில் அனு சுருண்டு விழுந்து கிடந்தாள்.

பதைபதைத்துப் போன தங்கவேலுவும் மரகதமும் ஓடி வந்தனர். கீழே குனிந்து ''அம்மா - அம்மா'' என அன்புடன் அழைத்தாள் மரகதம். பதில் இல்லை. பயந்து போனாள். தோட்டக்காரன் மனைவியின் உதவியுடன் மரகதம் அனுவைத் தூக்கி விருந்தாளிகள் உபயோகத்திற்காக விட்டு வைத்திருந்த அறைக்குள் படுக்கை மீது கிடத்தினர்.

அவசரமாக வேறு ஒரு கெட்டிலில் காப்பியை ஊற்றி எடுத்துக் கொண்டு தங்கவேலு உள்ளே நுழைந்த போதே சிவபாதம் ஊகித்துக் கொண்டு விட்டார்.

'அனுவுக்கு என்ன நேர்ந்து விட்டது' அவருக்குக் கவலை.

''என்ன? இன்னிக்கு எல்லோரும் எழுந்திருக்க நேரமாயிடுச்சா?'' பொதுவாகக் கேட்டுவிட்டு பேப்பரை அப்பால் போட்டார். காப்பி கோப்பையை நீட்டிய தங்கவேலுவின் கரங்கள் நடுங்கின. அவனுக்கு அழமாட்டாத குறை.

''சின்ன அம்மா காப்பிக் கெட்டிலைப் போட்டுகிட்டு மயக்கமா விழுந்துட்டாங்க... நல்ல வேளை. கொதிக்கிற காப்பி கீழே ஊத்திப் போச்சு... இல்லாட்டா காயம் பட்டிருக்கும்...''

கோப்பையைத் தொடவில்லை சிவபாதம் ''முட்டாள் முதல்லே முக்கியமானதைச் சொல்லாமல்...'' உறுமியபடி



நாற்காலியைத் தள்ளிக் கொண்டு கதவின் பக்கம் வேகமாக நகர்ந்தார். ஓடிச்சென்று தங்கவேலு அந்தக் கனமான கதவுகளைத் திறந்து உதவினான்.

அதற்குள் வீடே இரண்டுபட்டு விட்டது. குடும்ப டாக்டர் வந்துவிட்டார். அனுவைக் கவனிக்கத் தனியாக ஒரு நர்ஸ் அமர்த்தப்பட்டு விட்டாள். விழுந்த அதிர்ச்சியில் இடுப்பிலிருந்து நழுவிக் கீழே கிடந்த சாவிக் கொத்தை தங்கவேலு குறிப்பாகத் தேடி எடுத்து பெரியவரிடம் கொண்டு வந்து ஒப்படைத்தான். சின்ன யஜமானியம்மாளிடமிருந்து மீண்டும் அது ரத்னா அம்மாளிடம் கைமாறிவிடப் போகிறதே என்ற அச்சம் அவனுக்கு.

உக்கிராண அறைச் சாவியைமட்டும் பிரித்துத் தனியே எடுத்து அவனிடம் கொடுத்தார் சிவபாதம். ''அனு அம்மா உடம்பு சரியாகும்வரை சாமான்கள் அறை சாவி உன்கிட்டே இருக்கட்டும்'' என்று சொல்லி விட்டு சாவிக்கொத்தை ஜிப்பா பையில் போட்டுக் கொண்டு விட்டார்.

இரண்டு வார காலம் அவள் படுக்கையில் இருந்தாள். ஒருநாள் மெல்ல எழுந்து குளியலறைப் பக்கம் போனவள் தடால் என்று மயங்கி மறுபடியும் தரையில் விழுந்து விட்டாள். மூன்றாவது முறையா நர்ஸ் கைதாங்கலா அவளை நடத்திக் கொண்டு போன போது மீண்டும் மயங்கி விழுந்து விட்டாள். சிவபாதத்திற்குத் தாங்கொணாத கவலை. ஜெய்குமார் நாளைக்கு இருமுறை கீழே வந்து தாத்தாவின் முகத்திற்காக ஒரு சில நிமிடங்கள் அறைக்குள் மௌனமாக நின்றுவிட்டு போய்க் கொண்டிருந்தான்.

மனைவியின் மீது பரிதாபமா? கோபமா? என இனம் புரியாத ஒரு விசித்திரமான உணர்வில் அவன் தவித்துக் கொண்டிருந்தான். ஆனால் ஒன்று உண்மை. இத்தனை ஆண்டு காலமாக அவனது காரியங்களில் யாரும் அவனுக்கு உதவி புரிந்ததில்லை. சில தினங்களாக அனுராதா செய்து வந்த பணிவிடைகள் மிகவும் பிடித்தமாகத்தானிருந்தது. சாவிகள் குலுங்க... மெல்ல புடவை சரசரக்க, மல்லிகை மணக்க... அவள் அறைக்குள்ளே வராதது இப்போது பெரும் குறையாகத் தோன்றியது.

தாத்தாமேல் தனக்கிருந்த கோபத்தினாலும் வாழ்க்கையில்

தனக்கேற்பட்ட ஏமாற்றத்தினாலும் ஏற்பட்டிருந்த மனக்கசப்பிற்கு அவள் ஒரு வடிகாலாக விளங்கினாள். அவளுடன் வாதம் பண்ணி வம்புக்கிழுத்து - வாய்ச்சண்டை போட்டதில் கூட ஒரு திருப்தி இருந்தது. அதற்கும் இப்போது ஒரு முற்றுப் புள்ளி. இனம் புரியாத ஒரு தவிப்பு உணர்வில் அவன் தடுமாறிக் கொண்டிருந்தான்.

சோபனா வழக்கம்போல் எதைப் பற்றியுமே கவலைப்படவில்லை. தாத்தா கிழம் முறைப்பாரே என்ற அச்சம். ஒப்புக்காகக் கல்லூரியிலிருந்து வந்ததும் அனுவை ஒரு முறை எட்டிப் பார்த்து விட்டு மாடிக்கு ஓடிக்கொண்டிருந்தாள். சசிக்கு இப்போது பூரண விடுதலை. இஷ்டப்பட்ட நேரம் வரை தூங்கினான். எழுந்து குளிக்க நேரமின்றி கல்லூரிக்கு ஓடினான். வெளியே கண்டதை வாங்கித் தின்று விட்டு வெகுநேரம் கழித்துக் கதவைத் தட்டித் தங்கவேலுவின் உயிரை வாங்கினான்.

ரத்னாவுக்கு நல்லதொரு வம்பு கிடைத்தது. சோபனாவும் சசியும் மாடி ஹாலில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவள் அங்கு வந்து அமர்ந்து கொண்டாள்.

''இந்தப் பொண்ணுக்குக் காக்காய் வலிப்பு. அதுதான் அப்படி அடிக்கடி மயக்கம் போடறாள். முன்னே பின்னே விசாரிக்காம ஒரு சீக்காளியைக் கொண்டு பாவம் குமார் தலையில் கட்டிவிட்டார் இந்தத் தாத்தா'' அலுத்துக் கொண்டாள்.

படித்துக் கொண்டிருந்த கதைப் புத்தகத்தைக் கீழே போட்டுவிட்டு சோம்பல் முறித்தாள் சோபனா.

''அத்தை! உங்களுக்கு வயசு ஆச்சே ஒழிய விவரம் ஒண்ணும் தெரியலை. காக்கா வலிப்பு இல்லே இது. வந்து...'' கண்களைச் சிமிட்டினாள். சோபாவின் மீது காலை நீட்டிக்கொண்டு கிடந்த சசி நிமிர்ந்து உட்கார்ந்தான். 'ஷொய்' என்று விசில் அடித்தான் - 'விஷயம் அதுவா? டாடி ஈஸ் கான் ஹண்டிங்...'' என்று கழுதைக் குரலில் பாடினான். குப்பென்று முகத்திலே பாய்ந்த ரத்தம் மூக்கையும் காதுகளையும் எரிக்க - நெஞ்சு படபடக்க வெட்கத்துடன் தலையைத் திருப்பிக்கொண்டாள் ரத்னா. 'ஆனாலும் இந்தக் காலத்துப் பசங்களுக்கு விவஸ்தை என்பதே இல்லையே. யார்கிட்ட என்ன பேசறதுன்னு கூடவா தெரியாது! மடச் சாம்பிராணிகள் - ''



வெகுண்டபடி அவள் எழுந்து போய்விட்டாள்.

மரகதம் உண்மையில் நம்பினாள். இது கட்டாயம் திருஷ்டிதான். அத்தையம்மாளின் கொடுங்கண் சுட்டு விட்டது... ஒரு பிடி உப்பும் மிளகாயும் - முச்சந்தி மண்ணையும் கொண்டு வந்து, நர்ஸ் டிபன் சாப்பிடப் போன சமயம் அனுவின் அறைக்குள் புகுந்து அவள் திருஷ்டி சுற்றினாள். அவைகளை எடுத்துக் கொண்டு வேகமாகத் தோட்டக்காரன் வீட்டிற்கு ஓடி, எரிகிற அடுப்பிலே போட்டாள். இருமிக் கொண்டும், தும்மிக் கொண்டும் அவள் திரும்பிய போதிலும் ஒரேயடியாகச் சாதித்தாள். 'மிளகாய் கொஞ்சமும் காரலை. உப்பு வெடிக்கலை. அம்மாவுக்கு அத்தனை திருஷ்டி... எவளுடைய பாவிக் கண்ணோ' கைகளை ஆத்திரத்துடன் சொடுக்கினாள்.

தங்கவேலுவுக்கு வேறு ஒரு கவலை. தெருக்குத்து வீடு -சாங்கியங்கள் செய்யாது வெள்ளைக்காரன் கட்டியதை பெரியவர் வாங்கிவிட்டார். அவருக்கு இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. வீட்டைச் சுற்றும் துர்தேவதைகளின் வேலையாக இருக்குமோ? அவனுக்கு மாதாமாதம் வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து விபூதி பிரசாதம் வந்து கொண்டிருந்தது ஞாபகம் வந்தது. எடுத்து வர உள்ளே ஓடினான்.

அனு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அருகே சாய்வு நாற்காலியில் நர்ஸ் கதைப் புத்தகத்தில் ஆழ்ந்து கிடந்தாள்.

''இதைக் கொஞ்சம் தொட்டு அவங்க நெத்தியிலே பூசுங்க...'' தங்கவேலு நர்ஸைக் கெஞ்சினான்.

சுவாரஸ்யமான பகுதியிலே கரடிவிட்ட அவன் மீது அவளுக்கு எரிச்சல்.

''இதென்ன அய்யா, ஆளுக்கு ஒரு டிரீட்மெண்ட் சித்த முன்னே வீடு கூட்ர அம்மா வந்து ஒரு கட்டு வேப்பிலையைத் தலையணை அடியிலே வச்சுட்டுப் போச்சு - நீ இப்போ விபூதியைக் கொண்டு வரே. டாக்டர் வர நேரம் கோபிச்சுப்பார்'' சள்ளென்று விழுந்தாள்.

''டாக்டருக்கெல்லாம் மேலான டாக்டர் வைத்தீஸ்வரன். அவர் அர்ச்சனை விபூதி. மறுப்புச் சொல்லாமப் பூசுங்க...'' பயமுறுத்தினான் தங்கவேலு. வேண்டா வெறுப்பாக அவள் விபூதியைத் தொட்டு அனுவின் நெற்றி மீது பூசிவிட்டு - அவனை உடனே போகும்படி

சைகை செய்தாள். தன் கடமையைச் செய்துவிட்ட திருப்தி தங்கவேலுவுக்கு.

அன்று மாலை அனு எழுந்திருந்து உட்கார்ந்தாள். முகத்தைக் கழுவிக் கொண்டு தலையை வாரி - வேறு புடவை அணிவித்து சீர்படுத்தினாள் நர்ஸ். பகல் வேளைக்கு அவள் நன்றாகவே சாப்பிட்டாள். உறங்கி விட்டிருந்தாள். முகம் தெம்பாகவே காணப்பட்டது.

காலையிலும் மாலையிலும் டாக்டர் வரும்போதெல்லாம் சிவபாதம் தமது நாற்காலியை உருட்டிக்கொண்டு அறையின் வாயிலில் வந்து காத்திருந்தார். பின்னர் மயக்கமாகக் கிடக்கும் அனுவை உற்றுப் பார்த்து பெருமூச்செறிந்தார். 'இந்தப் பெண்ணுக்கு என்ன வந்து விட்டது. ஆரோக்கியத்தின் வடிவமாக இருந்தாளே!'... அவருக்குப் புரியாத குழப்பம்.

அன்று இரவு சாப்பாட்டுத் தட்டைத் தூக்கிக் கொண்டு தங்கவேலு அறைக்குள் வந்தபோது அவனை வெறித்துப் பார்த்தா கிழவர். ''இதை எடுத்துட்டுப் போய் சின்ன அம்மா கையிலே கொடுத்து 'தாத்தா சாப்பாடு கொண்டு வரச் சொன்னார்'னு சொல் போ...'' எரிந்து விழுந்தார்.

தங்கவேலு விழித்தான் - தலையைச் சொறிந்து கொண்டு தயங்கி நின்றான். ''போய் உடனடியாக சின்ன அம்மாவை வரச்சொல். இதை எடுத்துட்டுப் போ...'' இரைந்து கோபத்துடன் கத்தினார். அவன் நடுங்கிப் போய்விட்டான்.

''இப்போ இந்தக் கிழவருக்கு என்ன வந்துவிட்டது?' தலைசுற்றியது அவனுக்கு. தட்டைத் தூக்கிக் கொண்டு அவன் திரும்பினான். அனு கட்டிலின்மீது உட்கார்ந்தாள். அவள் முகமும் பிரகாசமாகத்தானிருந்தது. ''தாத்தா சாப்பாட்டை எடுத்துட்டு உங்களை அறைக்கு வரச் சொன்னார்'' தொண்டையை அடைத்தது அவனுக்கு. மறுபடியும் மயக்கம் போட்டு விழுந்துவிடப் போகிறாளே என்ற அச்சம். ''கொஞ்சம் எக்ஸர்ஸைஸ் தேவைன்னு டாக்டர் சொன்னாரே... போய்ட்டு வா'' நர்ஸ் உத்திரவு கொடுத்தாள்.

கையும் காலும் பறப்பன போன்ற பலவீனம் அவளுக்கு



தட்டைத் தூக்கிக் கொண்டு கதவருகே வந்த போது ஒரு ஆச்சர்யம் காத்துக் கொண்டிருந்தது. அந்தக் கனமான கதவுகளுக்குப் பதில் இப்போது கண்ணாடிக் கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன. வெளியே இருந்தபடியே கவனித்தாள். அவள் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. பளிச்சென்று வீசிய விளக்கொளியில் தாத்தா கோபமே உருவாக அமர்ந்திருந்தார். கண்ணாடிக் கதவுகள் லேசாக இருந்தன. சுலபமாகத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்.

''சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன் தாத்தா'' - தட்டை மேஜை மீது வைத்தாள்.

''அந்த நாற்காலியை இப்படி இழுத்துப் போட்டுக் கொள். உன்னோட பேச வேண்டும்'' உத்தரவிட்டார்.

''கண்ணாடிக் கதவு எப்போ போட்டீங்க - எதுக்கு?'' வியப்புடன் வினவியபடி பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

''இனி இங்கே நடப்பதை அவர்கள் நன்றாகப் பார்க்கலாம். கதவருகில் வந்து நின்று தவிக்க வேண்டாம். ரத்னா பழிபாவத்துக்கு அஞ்சாதவள். ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு என்பதைப்போல் முடிவில் என் மேலேயே பழியைச் சுமத்த அஞ்ச மாட்டாள். உனக்கு - உலக அனுபவம் போதாது. யாரைப் பற்றி - என்னது சொல்வது, எப்போ சொல்வது என்ற விவஸ்தை, நரம்பில்லாத நாக்கிற்குக் கிடையாது. ஏற்கனவே மனம் நொந்து போயிருக்கிற உனக்கு என்னாலே வேற சங்கடம் என்னத்துக்குன்னுதான் கண்ணாடிக் கதவுகள் வைக்க ஏற்பாடு பண்ணினேன்.'' கோபத்துடன் மீசையைத் தடவிக் கொண்டார்.

அனு மௌனமாகத் தரையைப் பார்த்தாள். அவள் முகம் லேசாகச் சிவந்தது.

''இந்தப் பதினைஞ்சு நாளா வீடு வீடாக இல்லை. மறுபடியும் பழைய அலங்கோலத்துக்கு வந்துடுத்து. இதை இப்படியே விடக்கூடாதுன்னு என் தீர்மானம். அதனால்தான் உன்னை உடனே கூப்பிட்டனுப்பினேன். நாம் பேசறது கண்ணாடித் தடுப்புக்கப்பால் அவங்களுக்குக் கேட்காது. ஆனால் பார்க்க முடியும். எனக்கு உடை மாற்றம் செய்ய வருகிற ஆண் நர்ஸ் கதவுக்கருகே தொங்கும் திரையை

இழுத்துவிட்டால் அறையில் மறைப்பு ஏற்படும்... மற்ற சமயங்களில் ஸீ த்ரு... அதனால் இங்கே ஒளிவு மறைவு ஏதும் கிடையாது. புரிஞ்சுதா?''

அனு தொடர்ந்து மௌனமாக இருந்தாள். ''உன்னை நம் குடும்ப டாக்டர் சோதித்துப் பார்த்தார். ஸ்பெஷலிஸ்ட் வேறு வச்சுப் பார்த்தேன். எல்லோரும் ஏகமனதாகச் சொல்லிட்டாங்க. உனக்கு உடம்பிலே ஒரு நோயும் இல்லையாம். மனசிலேதான் கவலையாம் அதே ஒரு பலவீனமாகப் போய் மயக்கம் போட்டு விழுந்துட்டியாம்... இதை விரிவாகச் சொன்னால் ஹிஸ்டிரியா என்னும் ஒரு மனக்கோளாறுதானாம். வாழ்க்கையில் ஏற்படுகின்ற சில பிரச்சினைகளைச் சமாளிக்கப் பயந்து கொண்டு - அதனின்று ஒதுங்க மனதிலே ஏற்படுகிற ஒரு மருட்சி. முதலில் செயற்கையாக ஆரம்பிக்கும் மயக்கம், வலிப்பு போன்ற உபாதைகள் நாளடைவில் இயற்கையாக மாறி அதை அடக்கிக் கொள்ள முடியாது. உடலும் மனமும் அடிமையாகி விடுகின்றனவாம். டாக்டர் வெகு நேரம் என்னிடம் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். உனக்கு இப்போ தேவை - தேகாப்பியாசம் - நல்ல உணவு - மனத்தெளிவு புத்தி சொல்லி உன்னை இந்த மனக்குழப்பத்திலிருந்து மீட்கத்தான் வரச்சொன்னேன். இதோ பார் அனு! நீ படிச்சவள் - புத்திசாலி -ஆராய்ந்து பார்க்கும் அறிவு உடையவள். மனக் குழப்பத்திற்கு நீ அடிமையாகலாமா சொல்லு.''

அவள் மௌனமாகக் கண்கள் கலங்கியபடி தரையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''புத்திசாலியான நீ துணிவுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதை விட்டு... சே! சே! உன்னிடம் நான் இந்த மாதிரியான போக்கை எதிர்பார்க்கவேயில்லை...'' கடுமையாகப் பேசினார்.

''செத்துப்போக எனக்குத் துணிவில்லை தாத்தா? விம்மினாள் அனு.

''எதுக்குச் செத்து போகணும்? உனக்கு என்மேல் நம்பிக்கை இல்லையினு புரிகிறது, என் சுயநலத்திற்காக உன்னை இந்த இக்கட்டில் சிக்க வச்சுட்டேன். ஒப்புக் கொள்கிறேன். இதிலிருந்து உன்னை விடுவித்து உன் வாழ்க்கையை சீராக்கவும் என்னால் முடியும்



நம்பு... ஆபரேஷன் முடியட்டும் அம்மா. எனக்கு அதுவரை ஒரு சான்ஸ் கொடு... மௌனமாக இந்தக் கஷ்டத்தைப் பொறுத்துக்கோ... மனக் குழப்பத்துக்கு ஆளாகாதே... நீ இப்படி பலவீனமடைந்து ஹிஸ்டீரியாவில் படுத்துட்டா என் திட்டமெல்லாம் பாழாகிவிடும். மீண்டும் வீடு பழைய நிலைக்கு வந்துடும். ஏம்மா அனு, இந்தக் கிழவன் மேல் உனக்கு துளிக்கூடக் கருணை இல்லையா?''

நீர் நிறைந்த கண்களால் அவரை ஏறெடுத்துப் பார்த்தாள்.

''தாத்தா, எனக்கேற்பட்ட ஒரு பயங்கர உணர்வு என்னை அப்படி ஆட்டிப் படைச்சுடுத்து. இனி துணிவோடு இருக்க முயற்சிக்கிறேன். எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும்.''

''உனக்கு என்ன உதவி வேணும், சொல்லு. செய்யத் தயாராகக் காத்திட்டு இருக்கேன்.''

நீங்க சட்ட நுணுக்கம் எல்லாம் தெரிஞ்சவங்க. ஒப்புக் கொள்கிறேன். ஆனால் என் மனசுக்கு ஆறுதல் ஏற்பட இந்தச் சங்கதியைப்பற்றி ஒரு வக்கீல் கிட்ட ஆலோசனை கேட்க விரும்புகிறேன். நீங்கதான் இது சம்பந்தமா எனக்கு உதவணும்.'' பொல பொலவென்று அவள் கண்களிலிருந்து சிந்திய கண்ணீர் சிவபாதத்தின் உள்ளத்தைச் சுட்டது.

''இவ்வளவுதானே? நாளைக்கே ஏற்பாடு பண்றேன். நீ முன்போலத் துணிவாக இந்த வீட்டு எஜமானியாக வளைய வாம்மா. இதோ - இந்தா சாவி! மறுபடியும் இதைக் கீழே நழுவ விடாதே. இது உன் சொத்து...'' கிழவர் மெல்லச் சிரித்தார்.

அனு கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு புன்னகைத்தாள்.

## 9

வெங்கடேசன் தான் அம்பாசிடரை ஓட்டிக் கொண்டு வந்தார். ஒரு பக்கம் வண்டியை நிறுத்திவிட்டு அவளுடன் மெல்ல நடந்தார். லிங்கிச் செட்டித் தெருவிற்குள் சற்று தூரம் சென்றதும் அந்த

ஹைதர் காலத்து கட்டடத்தின் முன் வந்து நின்றார். கீழ்பகுதியில் ஒரு ரேடியோ ரிப்பேர் கடை. முதல் மாடியிலும் அடுத்ததிலும் பல ஆபீஸ்கள் - மூன்றாவது மாடியில் தான் ஆதிவராகன் பிரதர்ஸ் வக்கீலின் அலுவலகம் இருந்தது.

''லிஃப்ட் இருக்கும்மா, மூணாவது மாடியில் இடது பக்கம் திரும்பியவுடனேயே கண்ணாடிக் கதவில் பெயர் எழுதியிருக்கும். ஆதிவராகன் பிரதர்ஸ் பெயர் பெற்ற எங்க ஸிட்டி சிவில் கோர்ட்டில் நடக்கும் முக்கால்வாசி விவாகரத்து கேஸ்களை இவங்கதான் கையாள்றாங்க. விவாகரத்து பற்றிய சட்ட நுணுக்கங்களில் அண்ணன் தம்பி இருவரும் புலிகள். தாத்தா ஏற்கனவே சொல்லியபடி நீங்க யாருன்னு காமிச்சுக்காம விஷயங்களைக் கேட்டுக்கோங்க -உங்களுக்கு நாலு முப்பதுக்கு அப்பாயிண்ட்மென்ட். இப்போ மணி நாலுதான் ஆகிறது. அரைமணி நேரம் நிம்மதியா உட்கார்ந்து யோசித்து என்னெல்லாம் கேட்கணும்னு தோணுதோ... கேட்டுக்கோங்க... தாத்தா உங்களிடம் அவைகளைப் பற்றி ஏற்கனவே பேசியிருப்பதாகச் சொன்னார். நம் குடும்ப வக்கீலையோ அல்லது கம்பெனி வக்கீலையோ கலந்து ஆலோசிக்காம ஆதிவராகன்கிட்ட உங்களை அழைச்சிண்டு வந்ததற்குக் காரணம் தெரியுமில்லையா.''

அவள் மௌனமாகத் தலையை ஆட்டினாள்.

''தவிர்க்க முடியாத நிலைக்குவந்து கோர்ட்டு ஏற வேண்டிய சமயந்தான் விஷயத்தை வெளியே சொல்லலாம் - அதற்குமுன் நாம் எல்லோரும் இதை மூடி மறைக்க வேண்டியது கடமையாக இருக்கிறது. இதுவரை இந்தச் சங்கதி ஒரு பெரிய குடும்பத்தின் மானப்பிரச்சினையாக இருந்தது. இப்போது இரண்டு குடும்பங்களின் பிரச்சினையாகிவிட்டது. அதனால்தான் இந்த ஏற்பாடு. காரில் காத்திருக்கிறேன். வக்கீலிடம் பேசி முடிந்ததும் வெளி ஆபீசில் உள்ள கிளர்க்கிடம் ஃபீசைக் கட்டிவிட்டு மறுபடி லிஃப்ட்டில் வந்து -கொஞ்ச தூரம் தெருவில் நடந்தால் நம் அம்பாசிடரில் ஒரு பக்கத்தில் நான் காத்திருப்பேன்... டிரைவரைக் கூட அனுப்பாமல் உங்க தாத்தா என்னையே காரை ஓட்டிக் கொண்டு போகச் சொன்னதும் இதற்காகத்தான். விஷயம் நமக்குள்ளேயே ரகசியமாக இருக்க வேண்டும் என்பதற்குத்தான்...''



எல்லாவற்றிற்கும் தலையை ஆட்டிவிட்டு அவள் மௌனமாக கைப்பையுடன் அந்தக் கட்டிடத்தின் படிகள் மீது ஏறினாள். கீழ்ப்பகுதியிலேயே மாடிக்குப் போகும் படிகள் ஒரு புறத்தில் இருந்தன. அதன் அருகிலேயே லிஃப்ட்டின் அறை. அவளுக்கு லிஃப்ட் என்றாலே அச்சம். அதுவும் தோழி பங்கஜம் சொன்ன ஒரு பயங்கர அனுபவத்தைப் பற்றிக் கேட்ட பின்பு பம்பாயில் எட்டடுக்கு மாளிகையில் பங்கஜம் லிஃப்ட்டில் போய்க் கொண்டிருக்கையில், இடையே மின்விசைக் கோளாறினால் லிஃப்ட் நின்று... அந்தரத்தில் தொங்கியபோது - தன்னந்தனியே முன்பின் தெரியாத ஒரு மனிதனுடன் லிஃப்ட்டில் அரைமணிக்கு மேல் தங்க நேர்ந்த பயங்கரத்தை அவள் விவரித்ததைக் கேட்டு அவள் அரண்டுவிட்டிருந்தாள். ஏற்கனவே பல்வேறு உணர்வுகளின் மோதலில் குழம்பித்திக்குமுக்காடிக் கொண்டிருந்த அவளுக்கு லிஃப்ட்டில் தனியே ஏறிச்செல்லப் பிடிக்கவில்லை - மாடிப்படிகளில் மெல்ல ஏறினாள்.

இப்போது ஜெய்குமார் அருகில் இருந்தால்... என்றதொரு எண்ணம் உள்ளத்திலே இழையாக ஓடியது.

'படித்திருந்து என்ன பயன்? நீ சுத்த நாட்டுப்புறம். லிஃப்ட்டைக் கண்டு மிரள்கிறாயே' என்று கட்டாயம் ஏளனம் செய்வான். தொடர்ந்து லேசானதொரு சிரிப்பு உதடுகளில் தவழ அவன் மெல்ல ஏறிக் கொண்டிருந்தாள். ஏளனம் செய்யட்டும். பரிகசிக்கட்டும். மனத்தைச் சுடும்படி வார்த்தைகளைக் கொட்டட்டும். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் இவர் மனம் மாறத்தான் போகிறார் - நான் இவருடன் வாழத்தான் போகிறேன், என்று உள்ளூர எண்ணி -கோபத்திலே சிவந்து போகும் அவனது முகத்தையும் - அந்தக் கூரான மூக்கையும் - உதட்டின் மேல் அழகு செய்த மீசையையும் ஓரக் கண்ணால் பார்த்து உவகையில் பூரித்துப் போவாள். காரமாக அவன் பேச, பதிலுக்குத் துடுக்காக வாதாட, அதனால் அவன் முகம் முன்னைவிடச் சிவக்க - இவளை அவன் வெறிக்க... அடிக்கடி நிகழ்ந்த அந்தச் சம்பவங்களில் ஒரு தனிப்பட்ட இன்பமும் இருக்கத்தான் செய்தது. கொம்பினால் குத்திக் குதறிவிடுவது போல் சீறிக்கொண்டு வரும் காளை மாட்டின் முன் - துணிகரமாகப் புடவைத் தலைப்பை ஆட்டிக்கொண்டு நிற்கும் கிராமத்துப் பெண் போல் அவளுக்கு

இடையே ஒரு நினைப்பு வரும். தனக்குள்ளே சிரித்து கொள்வதுண்டு.

இப்போது அந்த சிறு இன்பத்திற்கும் வாணி என்ற உருவில் ஒரு இடி - வருங்காலம் - எதிர்பார்ப்புகள் எல்லாமே ஊசலாடி கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அவனைப்பற்றிய நினைவு என் தன்னையே கடிந்து கொண்டபடி மூச்சுத் திணற மூன்றாவது மாடிக்கு வந்து நின்றாள்.

வெளியே பார்த்த கட்டிடத்தின் தோற்றத்திலிருந்து அவள் ஆதிவராகனைப் பற்றி மிகவும் அசட்டையாகக் கணக்கிட்டு விட்டிருந்தாள். மேலே வந்த பின்னர் அவளுக்குத் தாங்கொணா வியப்பு! மூன்றாவது மாடி முழுவதையும் வியாபித்துக் கொண்டிருந் அந்த அலுவலகம் - மொஸாயிக் தரை - கண்ணாடிக் கதவுகள் -ரிஸப்ஷனிஸ்ட் - டெலிபோன் ஆபரேட்டர் - வரவேற்பறை -வசதியான ஆசனங்கள் என்று மிகவும் அமர்க்களமாக் காணப்பட்டது.

ஆதிவராகன் பிரதர்ஸ் - என்ற பெயர் பொறித்த கண்ணாடிக் கதவைத் தள்ளித்திறந்து கொண்டு உள்ளே வந்து ஆசனமொன்றில் அமர்ந்து கொண்டாள். அவளுக்கு முன்னதாக வந்துவிட்ட பலர் அங்கே காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கவனித்தாள். சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தின் டிக்டிக்கென்ற ஓசையைத் தவி அறைக்குள் நிசப்தம் நிலவி நின்றது. ஆளுக்கொரு பத்திரிக்கையில் அவரவர் பிரச்சினையை மறக்க மூழ்கிவிட்டிருந்தனர். அவளும் ஒரு பத்திரிக்கையை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

''மிஸஸ் காவேரி கந்தசாமி'' - ரிஸப்ஷனிஸ்ட் உரத்து அழைத்தபோது அனு திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''நீங்கள் தானே'' என்று ரிஸப்ஷனிஸ்ட் முடிக்குமுன் எழுந்து நின்றாள். ஏற்கனவே தயாரித்து ஒத்திகை செய்து வைத்திருந் பொய்களில் முதலாவது - பெயர் மாற்றம்.

''நீங்கள் உள்ளே போகலாம்'' ரிஸப்ஷனிஸ்ட் இடது சுட்டு விரலால் ஒரு பெரிய அறையைச் சுட்டிக் காட்டினாள். கண்ணாடி கதவைத் தள்ளிக் கொண்டு அனு உள்ளே சென்றாள். சில்லென்ற குளிர்ச்சியான ஏ.சி. அறை. புத்தக அலமாரிகள் சூழ நடுவே



மெத்தென்று விரித்துக் கிடந்த கம்பள விரிப்பின் மேல் மேஜைக்குப் பின்னால் சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த வக்கீல் ஆதிவராகனைக் கண்டதும் அவள் ஏனோ நடுங்கிப் போய்விட்டாள்.

பட்டை பட்டையாக நரைத்த கிராப்பு முடி. பிரஷ் போன்ற அடர்ந்த புருவங்கள் - உப்பிய கன்னங்கள் - சற்று முன் தூக்கிய பற்கள் - ஊடுருவிப் பார்த்த கண்கள். வெலவெலத்துப் போய் நின்றாள் அவள்.

''உட்காருங்க அம்மா... காவேரி கந்தசாமிதானே?'' கரகரவென்று அவர் குரல்.

வாய் உலர்ந்து போயிற்று அனுவுக்கு. இத்தனைப் பெரியவரிடம் பொய்ப் பெயர் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோமே என்ற வெட்கம் - ஒரு வகை அச்சமும்கூட.

''நான் வந்த விஷயம் - என் உறவுக்காரப் பெண்ணைப் பற்றியதாகும்! அவள் கிராமத்திலிருக்கிறாள்'' - உதட்டை நாவினால் தடவிக்கொண்டாள். இறந்துபோன அமிர்தம் அவளது கற்பனைக்கு இப்போது பெரிதும் உதவினாள்.

''நாங்கள் திருச்சியைச் சேர்ந்தவங்க. ஒரு கல்யாணத்திற்கு இங்கே சென்னைக்கு வந்தோம். இதே சமயம் எங்கள் உறவினர் மூலம் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டோம். உங்கள் ஆலோசனையைக் கேட்பதுதான் சரி என்று வந்திருக்கிறேன். விஷயம் என் அத்தை மகள் அமிர்தம் என்கிற பெண்ணைப் பற்றியது...'' உட்கார்ந்தாள். ப்ரஷ் புருவங்களை உயர்த்தினார் ஆதிவராகன். அவரது கூரிய கண்கள் அவளை ஊடுருவிக் கொண்டு இருந்தன.

''போன வருஷம் எங்கள் அமிர்தத்தை இரண்டாந்தாரமாக வசதியான இடத்தில் கட்டிக் கொடுத்தோம். முதல் மனைவி ஏழு வருஷங்களுக்கு முன்னர் வீட்டை விட்டுப் போனவள் திரும்பவேயில்லை. காவேரியில் மூழ்கி இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். கல்யாணம் ஆகி அமிர்தம் புருஷனுடன் வசிக்கச் சென்ற பின் திடீரென்று ஒரு புதுக் கதை. முதல் மனைவி உயிருடன் இருப்பதாகவும், வந்து உரிமை கோரப் போவதாகவும் அவளது சகோதரர்கள் கடிதம் எழுதிப் பயமுறுத்தியிருக்கிறார்கள். இந்த மாதிரியான கட்டத்தில் எங்கள் அமிர்தத்தின் கதி என்ன? அவளது

கல்யாணம் சட்டப்படி செல்லுமா?...'' வார்த்தைகளுக்குத் தடுமாறிவிட்டு அனு மௌனமானாள்.

தாடையை மெல்லத் தடவிக் கொண்டு அவளை உற்றுப் பார்த்தார் ஆதிவராகன். அந்தப் பெண்ணை அவர் இதற்குமுன் எங்கும் பார்த்ததாக நினைவில்லை. பெரியமனிதர் வீட்டுப் பெண் என்று சொல்வதற்கில்லை. மிகவும் எளிய தோற்றம். தோளுக்குப் பின் தொங்கிய நூல் சேலைத் தலைப்பால் அடக்கமாக வலது கை முடக்கத்தை மூடிக்கொண்டு அமர்ந்திருந்த அவளைக் கண்களால் எடை போட்டபடி எழுந்து தமது புத்தக அலமாரி அருகே சென்றார். அட்டையில் தங்க எழுத்துக்கள் மின்னிய தடிமனானதொரு புத்தகத்தை எடுத்து வந்து பிரித்து மேஜைமுன் வைத்தார். ஆசனத்தில் அமர்ந்து கொண்டு கண்ணாடியைப் போட்டுக் கொண்டார் பக்கங்களைப் புரட்டினார்.

''இன்றிலிருந்து முப்பது வருஷ *காலமாக ஒரு மனிதன் உயிருடன் இருக்கும்போது - அவன் இறந்து விட்டதாக மற்றொருவர் சொன்னால்... அவன் இறந்துதான் விட்டான் உயிருடன் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டியது மற்றொருவரின் பொறுப்பு.''

''இதேபோல் ஒரு மனிதன் ஏழு வருஷமாக இருக்கிறானா, செத்தானா என்று தெரியாது; அவன் செத்ததாகக் கருதப்பட்டால் -அவன் உயிருடன் இருக்கிறான் என்று வாதாடுகிறவர் அதை நிரூபிக்க வேண்டும். அது அவர் பொறுப்பு.

''ஏழு வருஷங்கள் கழித்து உயிருடன் வந்தால்கூட மனைவி என்கிற உரிமையை அந்தப் பெண் கோர முடியும். தலையில் அடிபட்டுக் காயமடைந்து ஞாபக சக்தியை இழந்து இதுவரை அவன் அலைந்து கொண்டிருந்ததாகவும் பின்னர் வைத்திய உதவியால் மெல்லத் தெளிவடைந்து தான் யார் என்பதைப் புரிந்து கொண்டு வந்ததாகவும் வைத்தியரின் சர்ட்டிபிகேட்டுகளுடன் வந்து வாதாட முடியும்.

''மனைவி உண்மையில் இறந்துவிட்டாளா என்று தீர விசாரிக்காமல் - அவள் உயிருடன் இருக்கும் போதே அவளுக்குத் தெரிவிக்காமல் கணவன் மறுவிவாகம் செய்து கொண்டது சட்ட விரோதமான காரியம் - இந்தியன் பீனல்கோட் நானூற்று



தொண்ணூற்று மூணு நாலு செக்ஷன் பிரகாரம் அவன் கடுமையான தண்டனைக்குட்படலாம் - சுமார் ஏழு வருட சிறைவாசம் கிட்டலாம்.''

அனுராதாவுக்குத் தலைசுற்றியது. இந்தியன் பீனல் கோர்ட் -அந்த சட்டம் - வளைந்த நீண்ட வார்த்தைகள் - புரியாத சொற்றொடர்கள் - வியர்த்து விறுவிறுத்துப் போனாள். நெஞ்சு வேகமாகத் துடித்துக் கொண்டது. தொண்டையும் நாவும் அச்சத்தில் உலர்ந்துபோக... ''விவாகரத்துக்கு வழி கிடையாதா?...'' மெல்ல கேட்டாள்.

''ஏழு வருஷம் காணாமல் போன மனைவியின் நடத்தை மீது கணவன் குற்றம் சாட்டி விவாகரத்துக் கோரமுடியும். ஆனால் விவாகரத்திற்கு முன்னர் இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டது தவறு. மனைவி காணாமற் போனபின் - இரண்டு நாட்கள் கழித்து கணவன் - அந்த விவாகரத்தினின்று தற்காலிகப் பிரிவிற்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்க வேண்டும். பின்னர் தொடர்ந்து விவாகரத்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எதிர்க்கட்சி துணிவுடன் போராடத் தொடங்கினால்... சட்டம் ஒரு கழுதை. இப்படியும் அப்படியும் இழுத்தடிக்கும். இடையில் இருவருக்கும் நிம்மதி இருக்காது. சம்பந்தப்பட்டவர்கள் பெரிய இடத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து விட்டாலோ கேட்க வேண்டாம். எங்களுக்குத் தாராளமான ஃபீஸ் - பேப்பர்களுக்குச் சூடான விவகாரம் - வீதியில் அலசப்பட்டுக் கொண்டு கிடக்கும்.''

திகிலும் துன்பமும் நெஞ்சையடைக்க - திரண்டு கொண்ட வந்த கண்ணீரைச் சமாளிக்கப் புன்னகைத்தாள் அனு.

''அமிர்தம் பாவம். அறியாப் பெண். பெரியவங்க செய்து வச்ச கல்யாணம் - அவள் கதி?...''

''சட்டத்தில் அறியாமை என்பதற்கே இடம் கிடையாது. கோர்ட் வரை வந்து ஊர் சிரிக்க - பத்திரிகை வீட்டுக் கதையை விலை கூற... விஷயம் மிகவும் அசிங்கமாகப் போவதைவிட சம்பந்தப்பட்ட இரு சாராரும் தமக்குள்ளேயே பேசி ஒரு முடிவுக்கு வந்துவிடுவது ரொம்ப நல்லது.'' புத்தகத்தை மூடிவிட்டு... கண்ணாடியைக் கழற்றி மேஜை வைத்துவிட்டுச் சுழல் நாற்காலியில் ஆடியபடி அவளை ஊன்றிப் பார்த்தார் ஆதிவராகவன்.

'வைத்தியரிடமும், வக்கீலிடமும் பொய் சொல்லக்கூடா -அண்ணன் மாணிக்கம் சொல்வது நினைவுக்கு வர, குற்ற உணர்வி அனு மேஜை மீதிருந்த தனது கரங்களையே பார்த்து கொண்டிருந்தாள். நெஞ்சுத் துடிப்பின் வேகம் இன்னமும் சற்று கூடுதலாகியது.

''முதல் மனைவி சண்டைக்காரியாக இருந்து... எந்த விதமா முடிவுக்கும் ஒப்புக் கொள்ளா விட்டால் இரண்டாவது மனைவியி கதி...''

உரத்துச் சிரித்தார் ஆதிவராகன். பதைபதைத்துப் போன அ நிமிர்ந்து பார்த்தாள்.

''முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாவதா கல்யாணம் சட்டப்படி செல்லாது. அப்படியிருக்கையில் அவளுக் மனைவி என்ற பதவி ஏது? ஹி...ஹி...ஹி...''

அனுவின் முகம் அவமானத்தினால் ரத்தமாகச் சிவந்து போயிற்று. நெஞ்சு இரண்டாகி விடும் போல் துயரத்தில் துடித்து பொங்கிக்கொண்டுவந்த துக்கத்தில் அழுது விடுவாள் போன்ற நிலை மிகவும் சிரமப்பட்டுச் சமாளித்தாள் - மெல்லப் புன்னகைத்தா புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துவிட்டுக் கொண்டாள்.

''பாவம் எங்கள் அமிர்தம். முடிவில் அவள் கதிதான் என்ன?''

''சட்டத்தின் கண்களில் அவள் அவனது வைப்பு. தான் செய் தவறுக்கு அந்த மனிதன் வசதியானவனாக இருந்தால் அவ வாழ்நாள் முழுவதும் சுகமாக வாழ தேவைப்பட்ட பணத் அவள்மீது ஒதுக்கி வைத்து உதவ முடியும்?''

''அதைத் தவிர வேறு வழியே இல்லையா?''

''சாமர்த்தியமிருந்தால் முதல் மனைவி மீது குற்றம் கற்பித் -வழக்காடி விவாகரத்து பெற்று - பின்னர் சட்டப்படி இரண்டாவ வந்தவளை மணந்து கொள்ள வேண்டும். வாயால் சொல்வது சுலப நடைமுறையில் ரப்பராக இழுத்துக்கொண்டு போகும் விஷய தினம் நான் எத்தனை கேஸ்கள் பார்க்கிறேன்!''

''அப்போ அமிர்தம்?...'' அவள் முடிக்காமல் போ எழுந்திருந்தாள் .''



''ஷீ ஈஸ் ஒன்லி ஹிஸ் மிஸ்ட்ரஸ்!''

''தாங்க் யூ ஸார்.'' வெளியே வந்த அனுவுக்குத் தலையைச் சுற்றியது. வைத்தியர்களுக்கும் வக்கீல்களுக்கும் இடையே ஒரு அபூர்வமான ஒற்றுமை. இருவரும் கேட்டவர்களின் மனத்தைக் குழப்பித் திகைக்க வைக்கும் புரியாத நீண்ட சுருண்ட சொற்றொடர்கள் புதிய டெக்னிக்கல் வார்த்தைகளை ஏராளமாக வைத்துக் கொண்டிருந்தனர்.

இவ்வளவு நேரம் அவள் கேட்டதில் புரிந்து கொண்டது என்ன?

அனுவின் கல்யாணம் சட்டப்படி செல்லாது. உண்மை வெளிவந்தால் ஜெய்குமார் குற்றவாளியாகிறான். அவனது வாழ்வில் அனுவின் இடம்?... மேற்கொண்டு சிந்திக்க அஞ்சி, கைப்பையைத் திறந்து கணக்கரிடம் ஃபீஸ் தொகையைக் கட்டிவிட்டு வெளியே வந்தாள்.

அந்தி சூரியன் அமுங்கி - வெப்பம் தணிந்து கடற்காற்று குளுமையாக வெளியே வீசிக் கொண்டிருந்தது. ஆனால் அனுவின் உள்ளத்தில்...? தாங்கொணா ஏமாற்றம் நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது. வழி நெடுகிலும் அவள் வெங்கடேசனிடம் எதுவும் பேசவில்லை.

இரவு - உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு அவள் வருகைக்காகக் கிழவர் சிவபாதம் ஆவலுடன் காத்திருந்தார். தட்டை மேஜை மீது வைத்துவிட்டுக் குனிந்த தலையுடன் நின்ற அவளை இரக்கமாகப் பார்த்தார்.

''வக்கீலிடம் நீயே நேரிடையாகத் தெரிந்து கொண்டு வந்து விட்டே. இப்போ உன் மனசில் ஒரு நிம்மதி ஏற்படும்னு நினைக்கிறேன்.''

நிம்மதியா... எனக்கா தாத்தா?'' கோபம் தொனிக்கு குரலில் பளிச்சென்று கேட்டாள்.

''விவாகரத்துக்கு வழிகள் இருக்கின்றன. கவலைப் பட வேண்டாம்னு வக்கீல் சொல்லியிருப்பாரே?''

''இரண்டாவதாகச் செய்த கல்யாணம் சட்டப்படி செல்லாது.

அந்தப் பெண்ணுக்கு மனைவி என்கிற இடம் கிடையாது என்றார்.

''ஆபரேஷனில் எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்ட சட்டத்தினால் குழப்பம் ஏற்பட்டு உன் வாழ்க்கை வீணாகி விட கூடாதென்றுதான் அம்மா அன்னம்மா பாட்டி சொத்து முழுவதை உனக்கும் உன் குழந்தைகளுக்கும் எழுதி வைக்க ஏற்பாடு செய்தேன்

கோபத்தில் முகம் சிவந்தது. உதடுகளும் மூக்கும் துடிக்க அவ தலை நிமிர்ந்து தாத்தாவை உறுத்துப் பார்த்தாள்.

''தாத்தா! நாங்கள் ஏழைகள். அந்தஸ்திலே உங்களைவிட மட்டமானவங்க. ஆனால் வாழ்க்கையில் சில உசந்த எண்ணங்களை கொள்கையாகக் கொண்டவங்க என்பதை நினைவுபடுத் விரும்பறேன்.''

''திருமணம் என்பதின் புனிதத்தன்மைக்கு மதிப்புக் கொடுக்கும் பண்பாட்டிலே வளர்க்கப்பட்டவள் நான். அதனாலே உங் பேரனுடைய வாழ்க்கையிலே மனைவிங்கிற இடந்தான் எனக் வேணும். அன்னம்மா பாட்டியின் சொத்தும் - உங்கள் சொத்தும் இன்னும் கோடி கோடி கொடுத்தாலும் உங்க பேரனுடைய மிஸ்ட்ரஸ் என்கிற பதவியில் இருக்க நான் ஒருக்காலும் ஒப்பமாட்டேன்...'' படபடவென்று பேசிவிட்டு... உடலை குலுக்கிய விம்மலைப் புடவைத் தலைப்பால் அடக்கிக்கொண்டு... விர் என்று கதவைத் திறந்து வெளியே போய்விட்டாள்.

# 10

மறுநாள் காலை, வீட்டு வேலையாள் கொண்டுவந்து அருகில் மேஜைமீது வைத்துவிட்டுப் போன பத்திரிக்கையை அவர் தொடவேயில்லை. ஜன்னல் அருகே நாற்காலியைத் தள்ளிக் கொண்டு வெளிப்புறத் தோட்டத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் சிவபாதம். இருள் பிரிந்து புது வெளிச்சம் பரவி நின்ற விடியற்காலை வேளை. ஜன்னலிலிருந்து பார்த்தால் தெரியும். தோட்டத்து ஒரு



மூலை - அவர் விருப்பப்படி தோட்டக்காரன் நட்டு வைத்திருந்த இக்ஸ்லோரா செடி ஓங்கி தழைத்து வளர்ந்து - செண்டு செண்டாகச் சிவப்பு மலர்க் கொத்துக்களுடன் காற்றில் மெல்ல ஆடிக் கொண்டிருந்தது. செடி நடுவதிலிருந்து - வீட்டுச் சுவரில் எங்கே படம் மாட்ட ஆணி அடிப்பது என்றவரை பார்த்து யோசித்து அவர் செய்த காரியங்கள் ஒன்றே ஒன்றைத் தவிர எதுவுமே இதுவரை தவறானதில்லை. இப்போது? இன்னொரு தவறு. அன்று இரவு அவர் உறங்கவேயில்லை. இந்தப் பிரச்சனைக்கு என்ன முடிவு? தமக்குள் ஆயிரம் முறை கேட்டபடி அறையின் உச்சியைப் பார்த்தவாறு படுத்துக்கிடந்தார். தலை பாரமாகக் கனத்தது. கண்களில் ஒரே எரிச்சல்.

பின்னால் மெல்லியதாகக் காலடியோசை கேட்டதும் அவர் ஜன்னலினின்று திரும்பினார். அனு காப்பிக் கெட்டிலுடன் வழக்கம் போல உள்ளே வந்து கொண்டிருந்தாள். வியப்புடன் அவளைப் பார்த்தார். விடியத் தொடங்கிவிட்ட போதிலும் அறையில் விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. வெகுநேரம் தூங்காது அழுதுவிட்டிருந்தாள் என்று, சிறிது உப்பிய முகமும் - வீங்கிய கண் இமைகளும் சொல்லின. அவர் மனம் வேதனையில் கசங்கியது.

தட்டை மேஜைமீது வைத்துவிட்டு, பிரிக்கப்படாது கிடந்த பத்திரிகையை அவள் எடுத்தாள்.

''தாத்தா! இன்னும் நீங்க காலைப் பேப்பரைப் படிக்கலையா!'' கேட்டபடி பத்திரிகையையும் கண்ணாடிக் கூண்டையும் அவர் மடிமீது கொண்டு வைத்தாள்.

''அனு! அந்த அலமாரியில் ஒரு வெள்ளி டம்ளர் இருக்கு. நான் உபயோகிப்பதில்லை. அதைக் கழுவி எடுத்துக்கொண்டு வா'' உத்தரவிட்டார்.

அருகில் வந்து நின்றவளை கிழவர் நிமிர்ந்து பார்த்தார், ''கொட்டிலில் நிறைய காப்பி இருக்கு. கோப்பையில் ஊற்றி எனக்குக் கொடுத்தது போக மீதியை டம்ளரில் ஊற்றிக் கொண்டு - அந்த பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அருகில் வந்து உட்கார் காப்பி சாப்பிட்டுக் கொண்டே இருவரும் பேசுவோம்... உங்கிட்ட பேச வேண்டியது நிறைய இருக்கு...''

''பரவாயில்லை தாத்தா. சொல்லுங்க கேக்கிறேன்.''

''இல்லையம்மா. உன்னைப் பட்டினியோடு உட்கார வைச்சுக் கொண்டு நான் சாப்பிட்டுக் கொண்டு பேசுவது நியாயமா? ராத்திரி கூட நீ சாப்பிடவில்லை இல்லையா? உட்கார் அம்மா...'' அன்புடன் உத்தரவிட்டார்.

''கூட இரண்டு பிஸ்கட்டும் எடுத்துச்சாப்பிடம்மா.'' உபசரித்தார் சிவபாதம்.

''நான் உன்னை இன்று காலையில் எதிர்பார்க்கவில்லை. தங்கவேலுதான் காப்பியுடன் வருவான்னு நினைச்சபோது நீ வந்தே... கொஞ்சம் திடுக்கிட்டு போயிட்டேன்.''

அனு கையில் பிடித்துக் கொண்டிருந்த டம்ளரையே குற்ற உணர்வுடன் பார்த்தபடி குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்தாள்.

''ஸாரி தாத்தா, உணர்ச்சிவசத்தில் நான் மரியாதையில்லாமல் வெடுக்கென்று கிளம்பிப் போய்விட்டேன். இரவு உங்களுக்குத் தரவேண்டிய மருந்துகளைப் பத்தின நினைப்பு வெகுநேரம் கழிச்சு வந்தது. திரும்பி கீழே வந்து உங்களைப் பார்க்கத் துணிவில்லை. வயசிலே நீங்க பெரியவர். குடும்பத்துத் தலைவர்... என்னை நீங்க மன்னிக்கணும் தாத்தா...'' அவள் குரல் கம்மியது.

நெஞ்சம் நெகிழ்ந்து போனார் சிவபாதம். ''மன்னிப்பு கேட்க வேண்டியவன் நான். அவசரப்பட்டு உன் வாழ்க்கையில் ஒரு பிரச்சனையை உண்டாக்கி விட்டேன் இல்லையா!''

நிமிர்ந்து அவரைப் பார்த்த அனு துயரத்துடன் லேசாகப் புன்முறுவலித்தாள். ''நாம் மூணு பேருமே தவறு செய்திருக்கோம். உங்களை மட்டும் குற்றம் சொன்னால் சரியாகுமா? உங்க வீடு விளங்கணும்னு ஆசைப்பட்டுக் கொண்டு நீங்க ஒரு தவறு செஞ்சீங்க. தங்கச்சி நல்லா வாழணும்னு ஆசைப்பட்ட எங்கண்ணன் நீர விசாரிக்காம பெரிய இடம்னு மயங்கி தவறு செய்து விட்டார். இடையே நான் மறுத்திருக்கலாம். நீங்கள் இருவரும் என்னை வற்புறுத்தியிருக்க முடியாதல்லவா?''

''அதானே? ஏன் ஒப்புக் கொண்டே?...'' கிழவர் மெல்லத் தமது மீசையைத் தடவிக் கொண்டு அவளை ஏறிட்டுப் பார்த்தார்.



''இத்தனை உலக அனுபவங் கொண்ட நீங்க இப்படி ஒரு கேள்வி கேட்கணுமா தாத்தா?'' பற்கள் மெல்லியதாகப் பளிச்சிட, கன்னங்குழிய, கண்கள் ஒளியிட, முகம் சிவக்க அனு கேட்டபடி மெல்லச் சிரித்தாள்.

''நான் ஒரு முட்டாள் கிழவன்... நோயாளியாக இருப்பதால் மண்டை மரத்துவிட்டிருக்கு...'' கூட அவரும் சிரித்தார் அப்பாடா என்றதொரு மனநிம்மதி இப்போது அவருக்கு அந்தச் சிரிப்பில்.

''மூடி மறைக்கலை நான் தாத்தா வெளிப்படையாகவே சொல்றேன். உங்க பேரனைப் பார்த்தேன். எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சது... உடனே ஒப்புதல் கொடுத்துவிட்டேன். அப்படியிருக்கும்போது உங்களையெல்லாம் நொந்து கொள்வதில் அர்த்தமில்லையே,'' காப்பியை வேகமாகப் பருகிவிட்டு டம்ளரை மேஜைமீது வைத்தாள்.

சிவபாதம் ஒரு கணம் மெய்சிலிர்த்துப் போனார். பச்சிளங் குழந்தை போல் கபடமேயில்லாது வெளிப்படையாகப் பேசும் அனுராதாவின் வாழ்க்கையைச் சீராக்க அவர் அந்தஸ்து - பணம் - பதவி - புகழ் எதையுமே இனி சிந்திக்கப் போவதில்லை. உலகத்தின் மறுகோடிவரை போக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டாலும் அக்கறை இல்லை. எத்தனை கோர்ட்டுகளில் ஏறி இறங்க நேரிட்டாலும் வெட்கப்படப் போவதில்லை. உடல்நிலை கொஞ்சம் தேறியதும் முதல் வேலை இந்தப் பிரச்சனையைத் தீர்த்துக் கட்டுவதுதான். அவர் உள்ளத்திலே உக்கிரமாக எழுந்தது ஒரு சபதம்.

''நடந்ததை விவரமாகச் சொல்கிறேன் - நாற்காலியை இன்னும் அருகில் போட்டுக்கோ...'' ஆரம்பித்தார் அவர்.

''உன் அண்ணன் கிட்டே இந்தக் குடும்பத்துச் சூழ்நிலையைப்பற்றி ஓரளவு சொல்லிருந்தேன். அவர் உனக்குச் சொன்னாரோ என்னவோ, ஜெய்குமார் - சோபனா - சசி மூன்று பேரும் சிறுவயதிலேயே பெற்றோர்களை இழந்தவங்க. டைஃபாய்டில் மகனும் மருமகளும் ஒரே வாரத்தில் போய் விட்டதும் என் மனைவி மீனா தான் பேரப் பிள்ளைகளை வளர்த்தாள். அவளும் சில வருஷங்களுக்குப் பின்னர் மாரடைப்பால் இறந்து விட்டாள்.

''என் தாயார் அன்னம்மாள் பொறுப்பில் கொஞ்ச காலம்

குழந்தைகள் வளர்ந்தார்கள். அவங்களுக்கு வயதின் தள்ளாமை -உடலில் பல நோய்கள் முடிவில் படுத்த படுக்கையாகி விட்டார்கள். வீட்டில் பொறுப்பான ஒருத்தரின் கவனிப்பு இல்லாமல் குழந்தைகள் தான் தோன்றிகளாக வளர்ந்து கொண்டு வந்தாங்க. இந்தக் கவலை என்னை அழித்துக் கொன்று கொண்டு இருந்தது.

''ஒரு சமயம் ஒரு கோடை விடுமுறையின்போது எங்கள் தூரத்து உறவுப் பெண்ணான ரத்னம் - இளவயதிலே விதவையாகி விட்டவள், தன் மகள் வாணியுடன் சென்னையைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தாள். ஏழை உறவினர்களை உதாசீனம் செய்கிற பழக்கம் எனக்குக் கிடையாது. இளவயதுப் பெண்ணான வாணியைப் பார்த்தவுடனேயே என் மனசில் ஒரு கலவரம். அது பொய்யாகவில்லை. வாணிக்கு அப்போது இருபதிற்குள்ளிருக்கும். படித்தவள். இனிமையாகப் பாடுவாள். பரதமும் ஆடத் தெரிந்தவள். பேச்சில் சாமர்த்தியக்காரி. இவை போதாதா? ஜெய்குமார் காதலில் தலைக்குப்புற விழுந்து விட்டான்.

''அவர்கள் நெல்லைவாசிகள். அடிக்கடி சென்னைப் பக்கம் வரத் தலைப்பட்டனர். ஜெய்குமாரும் அடிக்கடி அந்தப் பக்கம் போய்வரத் தொடங்கினான். எனக்கு அத்தனைப் பிடித்தம் இருக்கவில்லை. ஆனால் பேரன் மேல் கொள்ளை ஆசை. முடிவில் அவர்கள் திருமணத்திற்கு ஒத்துக்கொண்டேன். மிக சிறப்பான முறையில் அதுவும் நடந்தேறியது. வாணி மருமகளாக உள்ளே வந்தவள், கூடத் தன் தாயையும் கூட்டிக் கொண்டு வந்து விட்டாள். தாயில்லாத பெண் சோபனா. வளர்ந்து கொண்டு வருகிறாள். வீட்டில் வயதான -பொறுப்பான ஒரு பெண்ணின் கவனிப்பு அவளுக்குத் தேவை என்ற நான் வாளா இருந்து விட்டேன். அது எத்தனைப் பிசகு என்ற பின்னர்தான் புரிந்தது. ரத்னாவுக்கு வீட்டைப் பற்றிய கவலையிருக்கவில்லை. சாவிக்கொத்து தன் கைக்கு வந்ததும் எவ்வளவு தூரம் இங்கிருந்து சுரண்டலாம் என்பதுதான் அவள் திட்டம்.

''வாணியைப்பற்றி ஆரம்பத்திலேயே எனக்கு ஏற்பட்ட அந்தக் குறுகுறுப்பு பொய்க்கவில்லை என்பதை நான் என் கண்களாலேயே கண்டு திகைத்துப்போய் விட்டேன். ஜெய்குமாருக்கு மனைவி மேலிருந்த மோகத்திலே அவன் கண்களில் ஒன்றுமே படவில்லை.



ஆனால் இந்தத் தாத்தாவின் கண்களை அத்தனைச் சுலபமாக வாணி கட்ட முடியவில்லை.

''அவளுக்கு வெளியிலிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. அடிக்கடி ஒரு ஆண் போனில் அழைத்துப் பேசினான். உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கிய போது தான் திகைத்துப் போனேன். வாணிக்கு ஏற்கனவே ஒரு காதலன் ஒருத்தன் இருந்தான். அவனிடம் அவள் மணமான பின்னரும் தொடர்பு கொண்டிருந்தாள்...''

பேசி முடிப்பதற்குள் கிழவருக்கு உணர்ச்சி வசத்தில் மூச்சுத் திணறியது. முகத்திலே லேசாகப் பூத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு மீசை படபடக்க குமுறிக் கொண்டு புறப்பட்ட சினத்தை அடக்கும் நிமித்தம் தமது நாற்காலியைத் தள்ளிக் கொண்டு அறைக்குள்ளே ஒரு முறை வளைய வந்தார்.

வாணி அக்கா தன் கணவனுக்கு இழைத்துவிட்ட துரோகத்தைக் கேட்டதுமே ஏனோ அனுவின் நெஞ்சம் படபடத்தது. அவமான உணர்வில் குன்றிப்போய் ஆடாது அசையாது நாற்காலியில் உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

''திருமணமாகி அவர்கள் வாழ்ந்தது ஒரு வருஷந்தான். அதற்குள்ளேயே வந்தது அந்தப் பேரிடி...'' தொடர்ந்தார் சிவபாதம் கதையை.

''அந்த வருஷம் எங்களது உறவினர் வீட்டுக் கல்யாணம் திருத்தணியில் நடக்கவிருந்தது. எனக்கு அது சமயம் கல்கத்தாவிலே வியாபார சம்பந்தமாக முக்கியமானதொரு வேலை இருந்தது. திருவள்ளூரிலிருக்கும் தொழிற்சாலையின் மானேஜர் பதவிக்கு ஜெய்குமாரை உயர்த்திவிட்டிருந்தேன். வியாபார நுணுக்கங்களை அவனுக்குக் கற்றுத் தர வேண்டுமென்ற அவா எனக்கு. எனவே அவனும் கூட என்னுடன் கல்கத்தாவுக்குப் பிரயாணம் செய்ய வேண்டுமென்பது என் திட்டம்.

''கல்யாணத்திற்கு எங்களுக்குப் பதிலாகப் போய் மரியாதை செய்து வருவதாக வாணி ஒப்புக் கொண்டாள். அப்போது எனக்கு எந்தவிதமான சந்தேகமும் உள்ளத்திலே ஏற்படவேயில்லை. பாட்டியின் நகைகளை பாங்கிலிருந்து எடுத்து வரும்படிக் கேட்டுக் கொண்டாள். அப்போது கூட எனக்கு அந்த வேண்டுகோள் தவறாகத்

தோன்றவில்லை. நகைகளைக் கொண்டு வர ஏற்பாடு செய்தேன்.

''திங்கள் கிழமை காலை பத்து மணிக்கு முகூர்த்தம். அன்று இரவு விமானத்தில் நாங்கள் கல்கத்தா பயணம் செய்ய ஏற்பாடு. விடியற்காலையிலேயே வாணி - என்னுடைய ஜாகுவா காரில், டிரைவர் ரகுபதியுடன் புறப்பட்டு விட்டிருந்தாள். ரகுபதி இருபத்தைந்து வருஷங்களாக எங்கள் வீட்டில் விசுவாசமாக உழைத்துக் கொண்டிருப்பவன் - நாணயமானவன் ; நம்பிக்கைக்கு உகந்தவன் - குடி போன்ற பழக்கம் இல்லாதவன்.

''பகல் சாப்பாட்டிற்கு தொழிற்சாலையிலிருந்து நானும் பேரனும் திரும்பி வந்திருந்தபோது என்னை யாரோ போனில் அவசரமாக அழைத்தார். மறு பக்கத்தில் எனக்கு மிகவும் தெரிந்த இன்ஸ்பெக்டர் புகழேந்தி.

''உங்க கார் தானே வெள்ளை நிற ஜாகுவா - நம்பர்...'' என்று கேட்கும் பொழுதே என் அடிவயிற்றிலே சங்கடம் ஆரம்பித்து விட்டது.

''லாரி மிஸ்டர் சிவபாதம்... கனகம்மா சத்திரம் எதிர்ப்புறமாக வந்த லாரியுடன் ஹெட் ஆன் கொலிஷனில் கார் உருக்குலைந்து நாசமாகி விட்டது...'

''காரை விட்டுத்தள்ளுங்கள். அதிலிருந்த ஆட்கள்?... நடுங்கியது என் குரல்.

''ஸாரி ஸார்! இரண்டு பேரும் இறந்து விட்டாங்க. நீங்க வந்து பாடிகளை ஐடெண்டிஃப்பை பண்ண முடியுமான்னு கேட்கத்தான் கூப்பிட்டேன். மேலே விஷயங்களைக் கவனிக்கணும்... நீங்க உடனே வருவதாக இருந்தால் காத்திருக்கிறோம்... கல்கத்தா பயணத்தை ரத்து செய்தேன். கதறிப் புலம்பியழுத குடும்பத்தினரைச் சமாதானப்படுத்திவிட்டு நானும் குமாரும் கிளம்பினோம்.

''எல்லாம் என் ஊகம். லெஃப்ஹாண்ட் டிரைவ்கார். முன்னால் போய்க் கொண்டிருந்த லாரியை ஓவர்டேக் பண்ணியிருக்கிறான் டிரைவர் ரகுபதி. அவன் போறாத காலம், எதிரே வந்த லாரியுடன் கொலிஷன் அவன் குற்றுயிராகக் கிடந்தாலாவது சங்கதி தெரிந்திருக்கும். டெட் மான் டெல்ஸ் நோ டேல்ஸ்... இல்லையா? மரத்தடியில் ஒரு புறமாக மூடி வைத்திருந்த உடல்களை போலீஸார்



காட்டிய போது என் தலை சுற்றியது. முகம் ஏதாவது உருத்தெரிந்தால்தானே? காலையில் என்னிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்ட போது வாணி உடுத்தியிருந்த புடவையின் நிறம் ஞாபகத்திலிருந்தது. அதைக் கொண்டுதான், இறந்து கிடந்தவள் அவள் என்று என்னால் உறுதிப்படுத்த முடிந்தது. ரகுபதியும் கோரமாக நசுக்கப்பட்டு மாமிசப் பிண்டமாகக் கிடந்தான். குமார் அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு மயங்கி விழுந்து விட்டான். இறந்து போனவர்களில் ஆண் என் டிரைவர் ரகுபதி; பெண் என் பேரன் மனைவி வாணி என்பது ஊர்ஜிதம் ஆகியது. ஆவன செய்யும்படி கூறிவிட்டு நாங்கள் திரும்பி விட்டோம். பின்னர் நடக்க வேண்டியவை முறைப்படி நடந்தேறின.

''சில தினங்களுக்குப் பின்னர் போலீசாரிடமிருந்து வந்த நகைகளைச் சோதித்த போது எனக்கு ஒரு பயங்கர திகைப்பு - நெஞ்சிலே ஒரு நெருடல். அவசரமாக ஓடிச் சென்று வீட்டின் இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். அன்னம்மா பாட்டியின் நகைகளில் அந்த விலை உயர்ந்த நவரத்ன நகை செட்டைக் காணவில்லை. போலீஸார் என் வசம் கொடுத்த நகைகள் அனைத்தும் கவரிங் நகைகள். ''வாணி கல்யாணத்திற்கு இந்தப் போலி நகைகளையா போட்டுக் கொண்டு போனாள்? போயிருக்க மாட்டாள். பாங்கிலிருந்து அந்த நவரத்தின செட்டை முக்கியமாக எடுத்து வரச்சொன்னாளே? அது இப்போது எங்கே? அப்படியென்றால்...?

ஆயிரமாயிரம் சந்தேகங்கள் நெஞ்சுறுத்தல்கள். நகைகளை நான் மூன்று வருஷத்திற்கு இன்ஷூர் செய்திருந்தேன். காணாமற் போய்விட்டதாகக் கூறி... குழப்பங்களை உண்டாக்க எனக்கு அச்சமாக இருந்தது. நெஞ்சிலே சந்தேகம் புகைந்து கொண்டிருந்தபோது...

''இரண்டு வருஷங்களுக்குப் பின்னர்... டெல்லிக்கு வியாபார சம்பந்தப்பட்ட உலக மகாநாட்டுக் கூட்டமொன்றில் கலந்து கொள்ளப் போயிருந்தேன்...

''அந்தப் பெரிய ஹோட்டலின் ஐந்தாவது தளத்தில் லிஃப்ட் வந்து நின்றது. அதனின்று வெளிப்பட்டேன்.

''நான் தங்கியிருந்த அறைக்கு அப்பாலிருந்த ஒரு அறைக்குள் ஒரு பெரிய புள்ளியுடன் மேலே இடித்துக் கொண்டு சிரித்தபடி சென்ற பெண்ணைக் கண்டு என் நெஞ்சு வெடித்துவிடும்போல் அடித்துக் கொண்டது. நின்று நிதானித்துப் பார்த்தேன். சந்தேகமேயில்லை. அவள் எங்கள் வாணி!''

சிவபாதத்திற்கு மேலே பேச முடியாது மூச்சுத் திணறியது. காய்ந்து போன உதடுகளை நாவால் தடவிக் கொண்டு திகிலுடன் உட்கார்ந்திருந்த அனுவின் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. பிறகு?... என்று கேட்க அவள் வாயைத் திறந்தாள். அது சமயம் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் ஜெய்குமார். திடுக்கிட்டு நிமிர்ந்தார் சிவபாதம்.

''காலை ஏழு மணிக்கு ஆடிட்டர் சந்தானத்தை வரச் சொல்லியிருந்திங்களாமே. அவர் முன்னறையில் காத்திருக்கிறார்...'' கூறிவிட்டு மனைவியை ஏற இறங்கப் பார்த்தான்.

அனு சட்டென்று எழுந்து காப்பித்தட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டாள். பின் தொடர்ந்தபடி வெளிவந்த அவனுக்குப் பேசாமலிருக்க முடியவில்லை.

''எங்களுக்கு காபி பலகாரம் கொடுக்க அழைக்கக் கூடப் பொழுது இல்லாமல் தாத்தாவோட ரொம்ப நேரமா பேசிக்கொண்டு இருந்தியே சுவாரஸ்யமான கதையா...'' எரிச்சலும் ஏளனமுமாக வினவினான்.

''வேலையாட்களுடன் சமமாகப் பேசுவதுதான் தப்பு. இந்த வீட்டின் தலைவர் - உறவில் தாத்தா - நோயாளி - வயதில் பெரியவர் - அவரோடு கூடப் பேசுவது தப்பா? உங்களுக்கு ஏன்தான் இந்த மட்டமான எண்ணமோ!'' பளிச்சென்று கேட்டாள். ''சரி! இப்போ கூப்பிடறேன் - எல்லோரும் காப்பி பலகாரம் சாப்பிட வாங்கோ...'' பேசிக் கொண்டே அவள் மிடுக்காக சமையலறைப் பக்கம் விரைந்தாள்.



# 11

அன்று அந்திப்பொழுது. அவள் சாப்பாடு எடுத்துக் கொண்டு உள்ளே வந்த போது மிகவும் பரபரப்புடன் காணப்பட்டாள். ''அத்தையம்மா கோயிலுக்குப் போயிருக்கிறாங்க - அவர் கம்பெனி மீட்டிங்கிலிருந்து திரும்பி வர நேரமாகுமென்கிறார் - தாத்தா!...'' அவள் முடிக்காது அவர் முகத்தையே பார்த்தாள்.

சூடாக இருந்த சூப்பைக் கரண்டியால்' அள்ளிச் சுவைத்துக் கொண்டே அவர் பேசினார்.

''தொடர்கதை ஆசிரியர்கள் ஒரு திருப்பத்திலே எதிர் பார்ப்பில் விட்டுவிடுவது போல் நான் சொன்னதை நடுவில் நிறுத்திவிட்டேன். மேலே கேட்க உனக்கு ஆவலாக இருக்கிறதல்லவா?'' கேட்டு விட்டு மெல்ல சிரித்தும் விட்டார் சிவபாதம்.

''கடந்துபோன நிகழ்ச்சிகளை ஓரளவு கேட்ட பின்பு மீதம் விட்டுப் போனவைகளையும் கேட்கவேண்டுமென்றுதான் இருக்கிறது. இதை அனுதாபம் கலந்த ஆவல் என்றால் பொருந்தும், நோயாளியான உங்களுக்கு எத்தனை பெரிய மன அதிர்ச்சியை வாணி அக்கா கொடுத்து விட்டாங்க...'' அனு இரக்கமாக அவர் முகத்தைப் பார்த்தாள்.

''இல்லேம்மா, நீ நினைப்பது தவறு. அப்போது நான் நல்ல திடகாத்திரமானவனாக ஓடியாடிக் கொண்டிருந்தேன். முதலில் வாணி கொடுத்த அதிர்ச்சியில் உள்ளம் ஒடிந்து போனேன். உண்மைதான். பின்னர் இரண்டு வருஷங்களுக்குப் பிறகுதான் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் முதுகு ஒடிந்து உட்கார்ந்து விட்டேன். அவர்கள் எல்லோரும் வருவதற்குள் மீதிக் கதையை முடிக்க வேண்டும். சரி! அந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அருகிலேயே உட்கார். கதையை நான் முழுக்கச் சொல்லிவிடுகிறேன். பின்னர் உன் மனதில் தோன்றிய தீர்மானத்தை

நீ துணிவுடன் மேற்கொள்ளலாம்.''

''இன்னிக்கு முழுவதும் எனக்கு வேலையே ஓடலை. உங்க எல்லோரையும் நினைச்சு மிக மன வேதனைப் பட்டேன். எவ்வள பெரிய அதிர்ச்சியை விழுங்கிட்டு, நோயாளியாக நடக்க முடியா இந்த நிலையிலும் குடும்பத்து நலனை மறக்காத கவலைப்பட்டுக்கொண்டு ... தாத்தா... என் மதிப்பில் நீங்க ரொம்ப உசந்துட்டீங்க...'' உணர்ச்சி வசத்தில் இதயம் படபடக்கச் சொன்னாள் அனு. லேசாக சிவந்து போன அவள் முகத்தைக் காணாதவர்போல பார்த்த தாத்தாவுக்கு உள்ளூர அவளைப் பற்றி பெருமைதான். மெல்ல மீசையைத் தடவிக்கொண்டார். உணவைச் சடுதியில் முடித்துக் கொண்டு கையைக் கழுவித் துடைத்துக் கொண்டார் தொண்டையைக் கனைத்தார்.

''என்னுடன் எப்பொழுதும் பெரிய கூட்டங்களுக்கும் தொழில் மகாநாட்டிற்கும் வெளியூர்களுக்கும் எங்கள் மானேஜர் வெங்கடேசன் வருவது வழக்கம். அந்தச் சமயம் அவர் அந்த ஹோட்டலில் அடுத்த அறையில் தங்கியிருந்தார். மறுநாள் காலை பரபரப்புடன் ஓடி வந்து என் அறைக் கதவைத் தட்டினார்.

பேயைச் சந்தித்துவிட்டதொரு முகத் தோற்றத்துடன் உள்ளே வந்து மூச்சுத் தடுமாறிய வண்ணம் என் எதிரில் நின்றார். பேசவேணும் என்ற தவிப்பு - பேசினால் தவறாகிவிடுமோ என்ற பயம். அவர் பட்ட அவஸ்தையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது சொல்லப்போகும் விஷயம் என்ன என்று நானே ஊகித்துக் கொண்டு விட்டேன். நானும் அந்த இரவு முழுவதும் உறங்காது சித்திரவதைப் பட்டுக் கொண்டிருந்தேனே!

கையைப் பிசைந்து கொண்டு வார்த்தைகளை விழுங்கிக் கொண்டு மிகவும் கஷ்டத்துடன் வெங்கடேசன் சொன்னார்.

''ஸார்! நம்ம வாணி அம்மாளை உயிரோடு மறுபடியும் பார்த்தேன். இதே ஹோட்டலில் சித்தமுன் காப்பி ஹவுஸில் முதல் தளத்தில் என் கண்களாலேயே பார்த்தேன். நம்ப முடியலை. எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. பக்கத்து மேஜையிலிருந்து அவங்க எழுந்து வந்து என்னைப் பார்த்து 'ஹலோ மிஸ்டர் வெங்கடேசன்'' என்றாங்க. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பேச முடியாது ஸ்தம்பித்துப் போனேன்.



''தனியா காப்பி சாப்பிட வந்தேன். உங்களைப் பார்த்ததும் பேசணும்போல் இருந்தது. உங்க மேஜையிலே நானும் உட்கார்ந்து சாப்பிடுவதைப்பத்தி உங்களுக்கு மறுப்பு ஏதேனும் உண்டோ?'ன்னு கேட்டாங்க - இரண்டு வருஷங்களுக்கு முன்னால் செத்துப்போனவங்க இவங்க. உடலைக்கூட தகனம் செய்து கருமாதி எல்லாம் பண்ணி முடிச்சோம். திவசம் கூடக் கொடுத்து வருகிறோம். அப்படியிருக்கையிலே இவங்க...?' என் குழப்பத்தில் ஹோட்டலே சுற்றுவதுபோல எனக்கு ஒரு பிரமிப்பு... திகில்...

''பிசாசுன்னு பயப்படுகிறீங்களா?... வாணி சாகவில்லை'' என்று சிரித்தபடி அருகில் வந்து உட்கார்ந்தாங்க...

என் உடம்பு அச்சத்தினால் சில்லிட்டுப் போயிற்று. 'அப்படின்னா அம்மா... காரிலே செத்துபோனவங்க யார்னு சொல்ல முடியுமா?... துணிவுடன் நான் கேட்டு விட்டேன்.

''அதுக்குப் பதில் தெரியணும்னா பம்பாய்க்கு இந்த விலாசத்துக்கு வந்து கேளுங்க, சொல்றேன்...'' என்று கூறியபடி கைப்பையைத் திறந்து பேனாவை எடுத்து ஒரு துண்டுக் கடிதத்தில் ஏதோ கிறுக்கிக் கொடுத்தாங்க, பையன் கொண்டு வந்து வைத்த காப்பியைப் பருகிவிட்டு எழுந்திருந்தாங்க.

''இப்போ நான் ஒரு சில நாட்கள் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள தூத்துக்குடியிலிருந்து வந்திருக்கும் ஒரு பிரபல வியாபாரிக்குத் துணையாக இருக்கிற ஒப்பந்தத்திலே வந்திருக்கிறேன். அவர் விழிச்சுக் கொண்டால் என்னைக் காணவில்லையேனுதேடுவார் என்று கூறிவிட்டுப் போய்விட்டாங்க. நம்ப வீட்டு மருமகளுக்கு இப்படி ஒரு கதியா... இப்படியும் ஒரு பிழைப்பா? என்று நினைச்சு நான் கலங்கிப் போயிட்டேன். சொல்லப் பயந்து கொண்டுதான் ...'' உடல் கிடுகிடுவென நடுங்க வெங்கடேசன் மழையில் நனைந்த கோழிபோல் நின்றார்.

''அவமானமும் ஆத்திரமும் உடலை உலுக்க ஆவேசம் வந்தவன் போல் நான் எழுந்துவிட்டேன். உடனே ஓடிச்சென்று அவளை எட்டிப் பிடித்து இழுத்து வந்து ஒரே வெட்டாக வெட்டி கூறு போட்டுவிட வேண்டும் போன்றதொரு பயங்கர வெறியில் நான் ஆடிப்போனேன். பாவி! சண்டாளி புகுந்த வீட்டுப் பெயரையே அழிச்சிட்டியே!

உன்னை உயிரோட உலவவிடறது தப்புன்னு உரக்கக் கூ
வேண்டும்போல் ஒரு ஆத்திர உணர்வில் துடிதுடித்துப் போனே
நல்ல வேளை மானேஜர் வெங்கடேசன் கூட அருகிலேயே இருந்தா
ஆறுதல்கள் பல சொன்னார். யார் முகத்திலும் விழிக்க அன்
அதற்குப்பின் எங்களுக்குத் துணிவிருக்கவில்லை. மாநா
கூட்டத்திற்குப் போகாது தலைவலியென்று நான் என் அறையிலேயே
தங்கிவிட்டேன். மானேஜர், நாங்கள் அன்றே ஊர் திரும்ப ஏற்பா
செய்ய வெளியே சென்றிருந்தார்.

"பகல் உணவிற்குப் பின் உறங்கிவிட்டேன். யாரோ கதவை
தட்டிய சப்தம். விழித்துக் கொண்டு எழுந்து சென்று கதவை
திறந்தேன். மீண்டும் எனக்கு ஒரு பெரும் அதிர்ச்சி! நான் முதலி
சற்றுத் தொலைவில் பார்த்தது பொய் அல்ல - பிரமையும் அல்ல
வெங்கடேசன் சொன்னவை உண்மையே என்று நிரூபிப்பது போல்
வாணியே அறைக்குள் வந்து என்முன் நின்றாள். அந்தச் சமயம் என்
மனம் பட்ட பாட்டை விவரிக்கவே தேவையில்லை. நீயாக ஊகித்து
கொள்ள முடியும். 'தாத்தா, என்னை மன்னிச்சுடுங்கோ...ன்னு' என்
காலில் விழுந்து அவள் கும்பிட்டு எழுந்தாள்.

"இவள் ஏதோ நாடகம் ஆடுகிறாள். ஜாக்கிரதையாக இருக்க
வேண்டும்" என்று என் உள்ளுணர்வு எச்சரிக்கவே நானும்
விழிப்படைந்தேன்.

என்னென்லாமோ சொல்லிக் கத்திக் கூச்சலிட்டு அவளை விரட்ட
வேண்டுமென்கிற வேகத்தைக் கட்டுப் படுத்திக்கொண்டேன்.

"- எம்மா! உனக்கு எங்க வீட்டிலே என்ன குறை வச்சோம்
இப்படி ஒரு காரியம் நீ செஞ்சே!"

மெல்லிய குரலில் தணிவாக ஆத்திரத்தை அடக்கிக் கொண்
கேட்டேன்.

"எனக்கு வேண்டியதை உங்களால் கொடுக்க முடியாத ஒ
நிலை தாத்தா. விளங்கச் சொல்கிறேன். நான் போதை மருந்து ஊசி
போட்டுக் கொண்டு, அதற்கடிமையாகி விட்டிருந்தேன். இதை
கற்பித்துக் கொடுத்தவன் கல்லூரியில் என்னோடு படித்த தோழன்
-பின்னால் என் காதலனாகிவிட்டவன். அந்தப் பழக்கத்தை வி
முடியவில்லை."



" வெளிப்படையாக உண்மையை என்னிடம்
சொல்லியிருந்தால் மன்னிச்சு உனக்கு உதவி செய்திருப்பேனே. நல்ல
மருத்துவமனையில் உன்னை அனுமதித்து தக்க வைத்தியம் செய்து
அதன் பிடியிலிருந்து உன்னை விடுவிக்க எத்தனை பணமானாலும்
செலவழிச்சிருப்பேனே! அதை விட்டு பெரிய தவறு செஞ்சுட்டியே
அம்மா..."

" - உங்களிடம் பயம். மேலும் எனக்கு இந்தப் பழக்கத்தைச்
சட்டுன்னு விட மனமில்லை. மருந்து கொடுத்த போதையில் ஒரு
தனிப்பட்ட உற்சாகம் இருந்தது."

" - அப்படிப்பட்டவள் ஏன் எங்க குடும்பத்தை வந்து
சீழிக்கணும்? என் பேரனைக் காதலிப்பதாகப் பாவனை பண்ணி
அவனை மீளாத் துயரத்திலே அழுத்திட்டியே நியாயமா அம்மா?"

" - நியாயம் அநியாயமெல்லாம் பார்க்க எனக்குப் பொழுது
இருக்கவில்லை. எனக்குத் தேவைப்பட்டது போதை மருந்து; அது
வாங்க அதிகப்படியாகப் பணம். அது உங்க கிட்ட குவிஞ்சு கிடந்தது.
உங்க பேரன் என்னைக் கண்டு மயங்கிப் போனார். அதைப்
பயன்படுத்திக் கொண்டேன். அவரை நான் உண்மையில்
விரும்பினேன் என்று சொல்லவும் முடியாது. ஏற்கனவே எனக்கு ஒரு
காதலன் இருந்தார். இந்தப் பழக்கத்திலே என்னை ஈடுபடுத்தியவர்.
அவர்மேல்தான் எனக்கு ஒரு பெரும் பிடிப்பு இருந்தது..."

"-நாங்க ஏமாந்தவங்கன்னு எங்க குடும்பத்தை வந்து கெடுத்தே;
சரி போகட்டும்... இப்போ அவனோட வந்து இருக்கலாம்
அல்லவா?"

" - அங்கிருந்து நான் எடுத்து வந்த லட்சக்கணக்கான பணம்,
பொருள், நகை எல்லாம் போனதும் அவர் என்னை விட்டுப்
போய்விட்டார். அதனால் என்ன? எனக்கு இளமையும், அழகும்,
சாமர்த்தியமும் இருக்கு - வாழ வழி இருக்கிறது."

"எனக்கு அதைக் கேட்கப் பொறுக்கவேயில்லை. எங்கள்
தொழிற்சாலையில் கொதிக்கும் உலோகக் குழம்பிற்குள் யாரோ
என்னைப் பலவந்தமாகப் பிடித்துத் தள்ளிவிட்டது போன்றதொரு
பயங்கர உணர்வால் உடல் எல்லாம் ஆட உணர்வுகள் அலைமோத

பேச முடியாது அயர்ந்து போனேன்.

''பின்னர் எம்மா நான் ஏதாவது பண உதவி செஞ்சா இந்த கேவலமான வாழ்க்கையை உதறிவிட்டு - மருந்து ஊசி போடும் பழக்கத்திற்குத் தக்க வைத்தியம் செய்துகொண்டு எங்கேயாவது உன் படிப்புக்குத் தக்க நல்ல வேலை தேடிக்கொண்டு வாழ்வாயா?'' என்றேன்.

'' - ஏன்? மீண்டும் என்னை மருமகளாக ஏத்துக் கொண்டு மறுவாழ்வு அளிக்க உங்களுக்குப் பயமாக இருக்கா...''

அவள் திமிராகச் சிரித்தாள்.

'' - நீதான் செத்துட்டியே? செத்தவள் எப்படித் திரும்பி வர முடியும்? அப்படி ஒரு எண்ணம் வச்சுக்கொண்டு என்னைப் பயமுறுத்துவதாக உத்தேசித்தால் நான் எப்படிப்பட்டவன்னு உனக்குத் தெரியும். பிடிச்சு காட்டில் கொண்டு விட்டுவிட்டு மறு காரியம் பார்ப்பேன். அந்தக் கதை செல்லாது. வெங்கடேசன் உன்னைச் சந்தித்து மேற்கொண்டு பேசுவார். உன்னை அதிக நேரம் பார்த்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்க எனக்குப் பொறுமையில்லை. அதை நான் இழந்து தாறுமாறாக நடந்து கொள்ளும் முன்னாடி தயவு செய்து போய்விடு... ஒண்ணு மட்டும் ஞாபகத்தில் வச்சுக்கோ. நீ எங்கள் வரை எப்பவோ இறந்துவிட்டவள்...''

ஆத்திரத்துடன் நானும் சிரித்தேன்.

''அதற்குப் பின்னர் அன்று இரவே நாங்கள் ஊர் திரும்பிவிட்டோம். வெங்கடேசன் அடிநாளில் கணக்கராக எங்களிடம் வந்து அமர்ந்தவர் படிப்படியாக உழைப்பால் மானேஜர் பதவிக்கு உயர்ந்தவர். என்மீது அவருக்கு மிக்க அன்பு, நன்றி. இந்த விபரத்தை அவர் தமக்குள்ளேயே ரகசியமாக வைத்துக்கொண்டு விட்டார். நானும் வெளியே மூச்சு விடவில்லை. இந்த பயங்கர துன்பத்தை என்னோடு பகிர்ந்து கொண்டு இத்தனை காலமாக அவர்தான் இதில் எனக்கு உதவி செய்கிறார்.

''ஊர் வந்து சேர்ந்த சில நாட்களுக்குப் பின்னர் அவரை, அவள் கொடுத்த பம்பாய் விலாசத்திற்கு அனுப்பி வைத்தேன். 'உயர்மட்டத்திலிருந்தபடி அவள் தன் பெயரை மந்த்ரா என்று



மாற்றிக்கொண்டு இழிதொழில் செய்கிறாள். பல நண்பர், பலவிதமான வாழ்க்கை' என்று அவர் சில தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வந்தார். எங்களைப் பொறுத்தவரை அவள் இறந்துவிட்டாள் என்று உறுதி செய்துவிட்டபடியால் - காரில் இறந்து போனவள் யார் என்பதை விசாரித்து மனதைக் குழப்பிக் கொள்ள விரும்பவில்லை.

''சின்ன வயதிலேயே சூழ்ச்சிக்காரியாகிவிட்ட வாணி சுயநலம் காரணமாக எந்த விதமான திட்டத்திற்கும் அஞ்சியிருக்க மாட்டாள் என்று அதைப்பற்றிய விவரத்தை இன்று வரை நாங்கள் தெரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை.

''வெங்கடேசன் அவளிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்டு கைப்பட ஒரு கடிதமும் வாங்கிக் கொண்டு வந்து இருக்கிறார். அதனால் அவரிடம் அவளுக்குப் பயம்.

'மாதம் அவளுக்கு வேறு வகையில் யாரோ அனுப்புவதுபோல் கணிசமான ஒரு தொகை, அவள் ஒழுங்காக வாழ வேண்டி அனுப்பப்படும். அவள் தன் வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்ள முயலவேண்டும். எக்காரணம் கொண்டும் மீண்டும் இங்கே திரும்பிவந்து எங்கள் குடும்ப கௌரவத்தைச் சீர்குலைக்கக் கூடாது. முயற்சித்தால்... இறந்து போனவளைப் பற்றிய விவரங்களை போலீசார் கிண்டிக் கிளறி அவளுக்கு பல தொல்லைகள் கொடுக்கும்படி எங்களால் செய்யமுடியும்'' என்று பயமுறுத்திவிட்டும் வந்திருக்கிறார்.

''அவளுக்கிப்போது கொஞ்சம் அதிகப்படியாகப் பணம் தேவை போலும் - அதற்காகத்தான் துணிந்து உனக்கும் எனக்கும் கடிதம் எழுதி மிரட்டிப் பார்த்தாள். உடனடியாக வெங்கடேசன் சில தினங்களுக்கு முன் பம்பாய்க்கு போய் அவளைச் சந்தித்து... நன்றாகச் சாடிவிட்டு வந்திருக்கிறார். அவள் இப்போது பயந்து நடுங்கிக் கொண்டு கிடக்கிறாளாம்! அதனால் அவளைப் பற்றி இனி நீ கவலைப்படத் தேவையே இல்லை. இதுதான் எங்கள் குடும்பத்தின் மீது பெரிய துன்ப நிழலை வீசிக் கொண்டிருக்கும் அவமானகரமான கதை. உனக்குப் பூராவும் சொல்லிவிட்டேன். இப்போது இந்த ரகசியம் நம் மூவருக்கும் தெரிந்த கசப்பான உண்மை.'' கிழவர் வண்டியை

திருப்பிக்கொண்டு அறைக்குள்ளே ஒருமுறை வளைய வந்தார்.

"குமார், என் பேரன் மீது எனக்கு அதிகமானதொரு பாசம். அவனுக்கு இப்படி ஒரு பயங்கரமான மனைவியா? கபடமற்ற பிள்ளை அவன். கொஞ்சம் கோபக்காரனே தவிர மனதிலே கள்ளமேயில்லாதவன். என் பேரன் என்று புகழவில்லை. உண்மையிலேயே அவன் ஒரு நல்ல பிள்ளை. நல்ல கணவனாகவும் இருக்க அவனால் முடியும். அப்படிப்பட்ட அன்பான உள்ளம் அவனது வாழ்க்கை பாழாகி விடக்கூடாது. மலர்ச்சி மறைந்து போய் பித்தம் பிடித்தவன் போல் அவன் வீட்டில் வளைய வந்த ஒரு காட்சியைக் காணப் பொறுக்காதுதான் அம்மா இந்தக் காரியத்தையே நான் செய்தேன்! இளவயதிலே அவன் வாழ்வு வீணாகி விடக்கூடாது. வேறு ஒருத்தியை அவன் மணந்து கொண்டு மகிழ்ச்சியோடு மனநிறைவோடு வாழ வேண்டும்; இந்த வீடு விளங்க வேண்டும் என்றதொரு வீம்பு என் மனசிலே... அதனால்தான் அம்மா..."

"தாத்தா" திகைப்புடன் அருகில் வந்த அனுவின் குரல் இரக்கத்தில் கரைந்து "நீங்க கூட கண் கலங்கறீங்களே?" வியப்புடன் கேட்டாள்.

## 12

இரண்டு நாட்களாகக் காய்ச்சல் தொடர்ந்து ஏற்பட்ட உடல் பலவீனம். அந்த வாரம் முழுவதும் ஓய்வாக வீட்டிலிருக்கும்படி ஜெய்குமாருக்குக் குடும்ப வைத்தியர் உத்தரவிட்டிருந்தார். அனுவுக்கு இப்போது வேலை இரட்டிப்பாகிவிட்டிருந்தது. நோயாளித் தாத்தாவையும் வேலை தவறாது கவனித்துக் கொண்டு கணவனையும் கவனிக்கவேண்டிய நிர்பந்தம். ஆனால் அவள் சிறிதும் அயரவில்லை. ஒரு நாளைக்குப் பலமுறை மாடிக்கும் கீழ்ப் பகுதிக்கும் ஓடிக் கொண்டிருந்தாள்.

அன்று மாலை ஜெய்குமார் பகல் உணவிற்குப்பின் நன்றாகத் தூங்கிவிட்டான். கண் விழித்து எழுந்த பொழுது தங்கவேலு கூட



ஹார்லிக்ஸ் நிறைந்த டம்ளரை மெல்ல அருகிலிருந்த மேசைமீது வைப்பதைக் கண்ணுற்றான். திடீரென்று அவனது உள்ளத்திலே ஒரு கேள்வி. ஆமாம்; இந்த அனு எங்கே?

வேலையாட்களிடம் சகஜமாகப் பேசுவது அவனுக்குப் பிடிக்காத விஷயம். தங்கவேலுக்கோ சின்ன யஜமானைக் கண்டால் மிக்க பயம். ஜெய்குமார் வாயைத் திறக்குமுன் அவன் மெல்ல நழுவி விட்டான். வேண்டா வெறுப்பாக வேலையாள் கொண்டு வந்து வைத்த பானத்தைப் பருகி முடித்தான். அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து மெல்ல ஹாலுக்குள் வந்து அந்தப் பெரிய ஜன்னல் வழியே தோட்டத்தை எட்டிப் பார்த்தான். ஒருவார காலமாக அவன் உறங்கிய வேளைகளில் கூட அருகில் நாற்காலியொன்றில் அமர்ந்தபடி அவனைக் கவனித்துப் பரிவுடன் பணிவிடை செய்த அனு, அதே சமயம் அங்கில்லாதது பெரும் குறையாக அவன் நெஞ்சை உறுத்திக் கொண்டு இருந்தது. இடதுபுறத் தோட்டத்திலிருந்த பெரிய கராஜின் கதவு திறந்து கிடந்தது. பென்ஸ் காரைக் காணவில்லை.

பற்பல சிந்தனையுடன் ஹாலுக்குள் முன்னும் பின்னும் உலவிக் கொண்டிருந்தான். மாடிப்படிகளில் காலடி ஓசை கேட்டதும் அவனையும் மீறிய ஒரு மகிழ்ச்சியில் நெஞ்சு படபடத்தது. ஆவலுடன் திரும்பிப் பார்த்தான். பெருத்த ஏமாற்றம். கையில் அடுக்குப் புத்தகங்களுடன் மூச்சுத் திணற வேகமாகப் படிகளை - கடந்து வந்த சோபனா கோபத்துடன் ஹாலுக்குள் வந்தாள். கையிலிருந்த புத்தகச் சுமையை அசட்டையாக அருகிலிருந்த மேஜைமீது தொப்பென்று போட்டாள்.

"இந்தத் தங்கவேலு ஒரு முட்டாள். எத்தனை தடவை சொன்னாலும் அவனது மர மண்டையில் ஏறுவதே இல்லை. எனக்குக் காப்பி சுடச் சுட இருக்க வேணும்னு அவனுக்குத் தெரியும். பச்சைத் தண்ணி போல காப்பியைக் கொண்டு வந்து வச்சான். அவனே குடிக்கட்டும்னு விசிறியடிச்சுட்டு வந்துட்டேன்" கோபத்துடன் கூறிக் கொண்டு சோபாவிலே சாய்ந்து கொண்டாள். மௌனமாக உலவிக் கொண்டிருந்தான் ஜெய்குமார். நகப்பூச்சு அழிய மனமின்றி வீட்டு வேலைகள் எதையுமே கவனிக்காமல் சதா கதை புத்தகமும் கையுமாக இருந்த சோபனாவைத் திடீரென்று அவனது கண்கள் அருவருப்புடன் பார்த்தன. நாள் முழுவதும் சலிப்பே இன்றி ஓடியாடி வேலை செய்த

அனுவும் படித்தவள்தான். இருந்தும் என்ன அடக்கம்? என்ன பணிவு?... மனதிற்குள்ளே ஒப்பிட்டபடியே உலாவினான். ஏனோ அவனது சிந்தனை நடுவே வாணியும் திடீரென்று வந்து நின்றாள்.

முதல் நாள் காய்ச்சலும் தலைவலியுமாக படுக்கையிலே வந்து அவன் படுத்தபோது... முக்கலும் முனகலுமாக அவன் படுக்கையில் வெகுநேரம் புரண்டு கொண்டிருந்தபோது... அனு மருந்தை தன் கையாலே அவன் நெற்றியில் தடவித் தேய்த்து... 'தூங்குங்கோ இப்போ சரியாகப் போயிடும்' என்று பெற்ற தாய் போன்ற பரிவுடன் பேசி அவனை கவனித்துக் கொண்டாளே அது மாதிரி ஒரு டம்ளர் பச்சைத் தண்ணீரை எடுத்து வாணி அவனை உபசரித்திருக்கிறாளா?

ஊகும் அந்த ஒரு வருடத் திருமண வாழ்க்கையில் அவன்தான் ஓடி ஓடி அவளுக்குப் பணிவிடை செய்து - முகம்கோணாது - அவள் கோபித்துக் கொள்ளாதிருக்கப் படாத பாடுபட்டிருக்கிறான். வாணி - சோபனா - அனு இந்த மூவரிடையே குணங்களில் எத்தனை விதமான மாறுதல்கள்? அவனது உள்ளம் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தது. உடனடியாக அனுவைப் பார்க்கவேண்டும் போன்றதொரு தீவிரமான ஆவல் ஏனோ அது சமயம் அவனுக்கு ஏற்பட்டது.

''அனு அண்ணி மத்தியானம் வெளியிலே போனவங்க இன்னும் வரலையாம். அத்தை சொன்னாங்க. பெரிய ஷாப்பிங் போலிருக்கு தாத்தா பணத்தை வாரிக் கொடுத்திருப்பார். அம்மா புறப்பட்டுட்டாங்க...'' அவள் முடிப்பதற்குள் ஜெய்குமார் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

''வீட்டிலே பெரியவங்கனு அத்தையம்மா இருக்காங்களே அவங்க உன்னைக் கவனிச்சு காபி கொடுக்கலாமில்லையா? அனு அண்ணி ஒருத்திதான் இந்த வீட்டிலே எல்லோருக்கும் வேலைக்காரியா? அவள் எல்லோருக்கும் ஓடி ஓடிச் சலாம் போட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை'' அடக்கமாட்டாது ஒரு கோபத்துடன் அதட்டல் போட்டான்.

சோபனா இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவேயில்லை. சிவந்துபோன முகத்தைப் பார்த்து விட்டு அயர்ந்து போனாள். அவளுக்கு அண்ணனிடம் எப்பொழுதும் கொஞ்சம் அச்சம்.



''ஸாரி அண்ணா!'' துக்கம் நெஞ்சை அடைக்க அவள் தன் அறைக்குள் சென்று மறைந்து கொண்டாள்.

முகமும் உடலும் ஜெய்குமாருக்கு அனலாகப் பற்றி எரிந்தன. தங்கை தன் மனைவியை அசட்டையாகக் குறிப்பிட்டதைக் கேட்டு ஏன் அவனுக்கு அத்தனை ஆத்திரம். அவனுக்கே அவனது மனநிலை விசித்திரமாக இருந்தது. அறைக்குள் சென்று படுக்கை மீது சாய்ந்து கொண்டான். வெகு நேரம் அவனது சிந்தனைகள் அலைபாய்ந்தன. இருட்டி விட்டதைக் கூடக் கவனிக்கவில்லை. தன்னை மறந்து உட்கார்ந்திருந்தான். பட்டுப் புடவையின் சலசலப்பு -வளையல்களின் மெல்லிய ஓசையுடன் காற்றோடு மிதந்த மல்லிகை மலரின் மணம் - மெத்தென்று அருகில் ஒலித்த காலடிகள் -எல்லாமாகச் சேர்ந்து அவனை விழிப்புறச் செய்தன. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். பரபரப்புடன் விளக்கைப் போட்டாள் அனு. வியப்புடன் அவனைப் பார்த்தாள். ''இருட்டிலே என்ன யோசனை. நேரமாயிட்டது. உங்களுக்குப் பசிக்கும்னு தெரியும். வெளியே போக உடுத்திக் கொண்டதை மாத்திக்க கூட நேரமில்லாது ஓடி வந்தேன்...'' உணவுத் தட்டை மேஜை மீது வைத்தாள்.

அப்போதுதான் கவனித்தான். அந்தப் பச்சை வண்ணப் பட்டுச் சேலையும் - கழுத்தை அலங்கரித்த முத்துச் சரமும் அவளுக்கு எத்தனை பொருத்தமாக இருந்தன - சிரிப்பு நிழலாடிய அவளது கண்கள் மனதை என்னவோ செய்தன.

''பலத்த ஷாப்பிங்கோ?...'' அடக்கமாட்டாது கேட்டு விட்டுக் குளியலறைக்குள் புகுந்து முகத்தையும் கைகளையும் கழுவிக் கொண்டு வெளியே வந்தான்.

வாட்டிய ரொட்டி மீது பக்குவமாக வெண்ணையைக் கத்தியால் தடவிச் சீராகத் தட்டில் வைத்துக் கொண்டு இருந்தாள். கன்னங்குழிய பல் வரிசை விளக்கொளியில் மெல்லியதாக பளிச்சிட அவள் தனக்குள்ளே சிரித்துக் கொண்டிருந்ததை அவன் கவனித்தான். அறை முழுவதும் பரவிய மல்லிகையின் மணம் நெஞ்சை அடைத்தது. உணர்வுகளை மயக்கின. ''உட்காருங்க. உங்களுக்குப் பசி. அதுதான் இந்தக் கோபம். பச்சைப் பிள்ளைபோல பசி தாங்காதவர்!'' மேஜைமீது தட்டை வைத்துவிட்டு அருகே பால் டம்ளரையும் நகர்த்தி

வைத்தாள்.

''நான் உங்ககிட்ட சொல்லிக்கொண்டு போகத்தான் வந்தேன். நீங்க அயர்ந்து தூங்கிட்டிருந்தீங்க, எழுப்ப மனசில்லை. ஆனாலும் தொழிற்சாலையிலே பல இடங்களை சுற்றிப் பார்க்கும் போது என் நினைப்பு முழுவதும் வீட்டிலேதான் இருந்தது. தங்கவேலு ஹார்லிக்ஸிலே ரொம்ப சர்க்கரையைப் போட்டு விடுவானே, உங்களுக்குப் பிடிக்காதேன்னு கவலைதான் - இப்ப உங்க கோபம் எப்படி இருக்கு?'' மெல்லியதாக அவள் சிரித்தாள்.

''தொழிற்சாலையா?...'' திகைப்புடன் கேட்டான்.

''ஒரு சில நாட்களாக தாத்தாவுக்கு அப்படி ஒரு யோசனை. அவருக்கு அந்தப் பெரிய ஆபரேஷன் நடக்குமுன் நான் நமது தொழிற்சாலை - ஆபீஸ் இவைகளின் விவரங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிஞ்சுக்கணும்னு விரும்பினார். பெரியவர் பேச்சுக்கு மறுப்புச் சொல்ல முடியுமா? உங்ககிட்ட இதைபத்திக் கேட்கலாம்னு இருந்தேன். காய்ச்சலில் நீங்க அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இப்போது போய் வீணாக குழப்புவானேன்னு விட்டுட்டேன். திடீர்னு தாத்தா இன்னிக்குப் பகல் இரண்டு மணிக்கே கிளம்புன்னு உத்தரவு போட்டார். தாத்தாவின் நாற்காலியை வேனில் வச்சு எடுத்துட்டு வந்தாங்க. தோட்டக்காரன், தங்கவேலு எல்லோருமே தாத்தாவைத் தூக்கி பென்ஸில் உட்கார வைச்சாங்க. நான்தான் பக்கத்திலே கவனிச்சுட்டு இருந்தேன். மானேஜர் வெங்கடேசன் டிரைவர் பக்கத்தில் உட்கார்ந்தார். முதலில் நாங்க ஜெனரல் பாட்டர்ஸ் ரோடுல இருக்கும் உங்க மொத்த வியாபாரக் கடைக்குப் போனோம். எல்லோருக்கும் தாத்தா என்னை அறிமுகம் செய்து வைத்தார். பின்னால் அண்ணாசாலையிலிருக்கும் சில்லரை வியாபாரக் கடைக்குப் போனோம். அங்கேயும் தாத்தா எல்லோரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். கடைசியாக திருவள்ளூரில் உள்ள உங்கள் பெரிய தொழிற்சாலைக்குப் போனோம். நான் அதைச் சுத்திப் பார்த்து பிரமித்துப் போயிட்டேன். அதுதான் போலிருக்கு நீங்க திருவள்ளூருக்குப் போய்விட்டு வந்ததும் ரொம்ப களைப்பா இருப்பீங்க. ஒரு தடவை சுற்றுவதற்குள் கால் ஓய்ந்து போய்விடுகிறதே?'' அனுதாபத்துடன் அவனைப் பார்த்தாள்.

மௌனமாக ரொட்டித் துண்டு ஒன்றை' கடித்துத் தின்று



கொண்டிருந்தான் ஜெய்குமார்.

''தொழிற்சாலையிலே ஒரு சிறு சம்பவம். என் மனசை ரொம்ப தொட்டுடிச்சு. அங்குள்ள ஒரு தொழிலாளி தாத்தாவைக் கண்டதும் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு போயிட்டான். தன் வேலையை நிறுத்திவிட்டு... ஓடி வந்து தாத்தாவின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டான். என் பிசகுக்கு எனக்கு மன்னிப்பே கிடையாதுன்னு என் மனசை உறுத்திக்கிட்டேயிருக்கு... யஜமான் உங்களை இந்த நிலையில் பார்க்கும்போது...' என்று பேச முடியாது கண் கலங்கிப் போனான்.

''சரி சரி! அதெல்லாம் மறந்து போன விஷயம். நீ கல்யாணத்துக்குக்கூட வரவில்லையா. இவங்கதான் என் பேரன் ஜெய்குமாரின் மனைவி'' - என்று பெருமையுடன் என்னை அந்தத் தொழிலாளிக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

''நல்ல மகராசியா இருங்கம்மா'' - என்று வாழ்த்தி விட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டே வேலையைக் கவனிக்கச் சென்று விட்டான். எனக்கு ஆவலை அடக்க முடியலை. தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்து விட்டு தோட்டத்தின் மர நிழலில் போட்டிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டோம். அப்பொழுது கேட்டேன்.

''அந்த தொழிலாளியைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அவர் செய்த தப்பென்ன?''

தாத்தா நாற்காலியை உருட்டிக் கொண்டு அங்கு வளர்ந்திருந்த செடிகளைப் பார்வையிட அப்பால் சென்று விட்டார். மானேஜர் வெங்கடேசன்தான் பதில் சொன்னார்.

''மூன்று வருஷங்களுக்கு முன்னர் ஒரு நாள் தாத்தா தொழிற்சாலையைப் பார்வையிட வந்திருந்தாராம். கன்னியப்பன் கனமான கள்ளிப் பெட்டிகளை எடுத்து அடுக்கி வைக்க உதவும் கிரேனை ஆபரேட் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தானாம். சாதாரணமாக கிரேன் வேலை செய்யும் போது அந்தப் பகுதி வாசலில் 'டேன்ஜர் கிரேன் ஈஸ் ஆபரேடிங்' என்று சிவப்பு விளக்கு போட்டிருப்பாங்களாம். கன்னியப்பன் மறந்துவிட்டிருந்தானாம். தாத்தா யோசிக்காது அந்தப் பகுதிக்குள் நுழைந்து விட்டார். ஒரு

பெரிய கன்னிப் பெட்டியுடன் நகர்ந்த கிரேன் கீழே இறங்கியபோது வேகத்துடன் வந்து தாத்தாவின் முதுகில் மோதி... அவர் பலத்த அடியுடன் நினைவின்றி விழுந்து விட்டாராம். தொழிற்சாலையிலே அமர்க்களப்பட்டு போயிற்றாம். அதற்குப் பின்னர்தான் தாத்தாவுக்கு இந்த பயங்கர நிலை ஏற்பட்டதாம். பல ஸ்பெஷலிஸ்ட்கள் பார்த்தும் இரண்டு தடவை அறுவை சிகிச்சை செய்தும் பயன் இல்லையாம்.

வெங்கடேசன் விவரித்தபோது என் மனம் மிகவும் வேதனைப்பட்டது. அத்தனை பெரிய விபத்தை உண்டாக்கி விட்ட கன்னியப்பன் என்ற அந்தத் தொழிலாளி மீது தாத்தா எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். 'அவன் என்ன செய்வான் விபத்து நடந்தவிட்டது. கவனிக்காதது என் பிசகு' என்று ஒரே வார்த்தையில் எழ இருந்த பல சர்ச்சைகளையும் அடக்கி விட்டாராம்.

''தாத்தாவின் பரந்த உள்ளத்தை எண்ணி நான் பூரித்துப் போனேன். எத்தனை பேருக்கு இவ்வளவு பெரிய மனம் இருக்கும் சொல்லுங்கள். தாத்தா என் மதிப்பில் பன்மடங்கு உயர்ந்து போய் விட்டார்'' உணர்ச்சி வசத்தில் பேசிக் கொண்டு போனவள் திடீரென்று நிறுத்தினாள்.

''பால் ஆறிடும். அதை சாப்பிடுங்கள்''... டம்ளரை அவன் கையில் எடுத்துக் கொடுத்தாள்.

''வரும் வழியெல்லாம் தாத்தா சொல்லிக் கொண்டே வந்தார். அடி நாளில் அவர் மிகவும் அடிமட்ட நிலையில் இருந்தாராம். பழைய கார்களின் சாமான்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, சொந்த பட்டறையில் தம் கையாலே பழுதான பகுதிகளைக் காய்ச்சி சம்மட்டியால் அடித்து, ஒழுங்கு செய்து பழைய சாமான் விற்கும் ஒரு சிறு கடையை ஆரம்பித்திருந்தாராம். பாடர் தோட்டம் என்ற பகுதியில்தான் அவரது சிறிய கடை இருந்ததாம். நாள் முழுவதும் ஒரு கிளாஸ் டீத்தண்ணியைக் குடித்து விட்டு அயராமல் வேலை செய்வாராம். அப்படிப்பட்ட உழைப்பினால்தான் இந்தப் பெரிய தொழில் நிறுவனம் உருவாகியதாம். எனக்கு கேட்கப் பிரமிப்பாகவும் பெருமையாகவும் இருந்தது.''

பாலைப் பருகி முடித்துவிட்டு டம்ளரைக் கீழே வைத்தான் ஜெய்குமார். வாயைத் துடைத்துக் கொண்டான்.



''இதையெல்லாம் பற்றிப் பேசவும் - இன்னிக்குன்னு பார்த்து தொழிற்சாலைக்கு உன்னை அழைத்துக்கொண்டு போகவும் அவசரம் என்னவோ?'' - கொஞ்சம் காரமாகவே கேட்டான்.

''இன்னிக்கு நல்ல நாளாம். மானேஜர் அபிப்ராயப் பட்டாராம்.''

''எதுக்கு?''

''நம் மொத்த வியாபாரக்கடை, சில்லரை வியாபாரக் கடை இவைகளின் நிர்வாகத்தை மேற்பார்வையிட என்னை ஒரு உதவி மானேஜராக அமர்த்திப் பயிற்சி கொடுக்கத் தாத்தா விரும்பினார். அதற்குத் தனிப்பட எனக்கு ஒரு சம்பளமும்கூட உண்டாம்'' அவள் நிறுத்தினாள்.

''பேஷ், பரவாயில்லை. வீட்டுப் பொறுப்பு, குடும்பத்தின் தலைவி என்கிற பதவி. இதெல்லாம் போதாதுன்னு இப்போ ஆபீஸ் நிர்வாகத்திலும் ஒரு பதவியா?... ஆமாம் உனக்கு பதவிகளில் ரொம்ப மோகமோ?'' ஏளனமாகக் கேட்டான்.

''இல்லை உதவிமோகம்.' அடிமட்ட நிலையிலிருந்து தமது உழைப்பால் வளர்த்து விட்டிருக்கும் இந்தப் பெரிய நிறுவனத்தைச் சமாளிக்க முடியாது அவர் நாற்காலியில் கட்டுண்டு கிடக்கிறார். அவருக்கு இன்னும் சில மாதங்களில் பெரியதொரு அறுவை சிகிச்சை நடக்கவிருக்கிறது. சோபனாவும், சசியும் வயதில் சிறியவர்கள். திருவள்ளூர் தொழிற்சாலையைக் கவனிப்பது உங்கள் பொறுப்பாக இருக்கிறது. இந்த நிலையில்தான் இந்தக் கடைகளின் நிர்வாகத்தைக் கொஞ்சம் மேற்பார்வையிட்டு உதவ முடியுமான்னு கேட்டார் மாட்டேன்னு நான் எப்படி மறுக்க முடியும்?...''

''குமார்!'' திடீரென்று குழைவாக அழைத்தாள் அனு. முதல் முதலாக அவள் தன்னை அந்தப் பெயரில் அன்புடன் அழைப்பதைக் கேட்டு உடலும் உள்ளமும் சிலிர்த்து - திகைத்துப் போய்விட்டான் ஜெய்குமார்.

''ஏளனமாகவும், கோபமாகவும் பேசுவதை விட்டுவிட்டு இந்தக் குடும்பத்தையும் - தாத்தா வளர்த்து இருக்கும் தொழில் நிறுவனத்தையும் முன்னுக்குக் கொண்டுவர நாம் ரெண்டு பேரும் ஒத்துழைச்சா நல்லா இருக்குமில்லையா? தொழில் பற்றி எனக்கு ஒன்னுமே தெரியாது. நீங்கதான் எனக்குச் சொல்லிக் கொடுத்து

அந்தப் பதவிக்கு தகுதியா இருக்க உதவணும். செய்ய மாட்டீங்களா குமார்... என்ன யோசிக்கிறீங்க?'' மெல்லக் கேட்டுக் கொண்டு அருகில் வந்து நின்றாள்.

# 13

**உ**ள்ளத்திலே குபீரென்று பொங்கிப் புறப்பட்ட உணர்ச்சிகளின் அலைமோதலில் அவன் ஒரு கணம் திக்குமுக்காடி விட்டான். ''ஆபிஸில் பதவி ஏற்க மட்டும் நீ தகுதியுடையவள் இல்லை, என்னுடன் மனைவியாக வாழவும் நீ தகுதியுடையவள் என்பதை நான் ஒவ்வொரு நிமிஷமும் உணர்கிறேன்... அனு...'' என்ற உண்மையை சொல்லத் துடிக்கும் நெஞ்சுடன் அவளை ஆரத் தழுவிக் கொள்ள வேண்டுமென்ற பதைபதைப்பு...

''அனு - '' மெல்ல அழைத்தான்.

''என்ன வேணும்'' வெகு அருகில் அன்புடன் கேட்டபடி குனிந்தாள் அவள். மல்லிகை மலரின் மணம்... உணர்வுகளை மயக்கியது. உடலெல்லாம் நடுங்கியது. ஆனாலும் சமாளித்தான். தன் தோல்வியைச் சட்டென்று ஒப்புக் கொண்டுவிட மனம் இல்லை.

''இந்தப் போர்வையை இழுத்துப் போர்த்திட்டு விளக்கை அணைச்சிட்டுப் போ. வெளிச்சம் கண்களைக் கூசுகிறது; தூக்கம் தலையைச் சுற்றுகிறது'' என்றான்.

சில நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் மாலை, அவர்கள் மூவரும் ஹாலில் கூடியிருந்தனர். சோபனா அன்று கல்லூரிக்குப் போகாது வீட்டிலே தங்கிவிட்டிருந்தாள். சசி இரண்டு வகுப்புகளுக்கு மட்டம் போட்டு விட்டு வீட்டிற்கு முன்னதாகவே வந்து விட்டிருந்தான். வழக்கம்போல் கோயிலுக்குப் புறப்பட மனமின்றி ரத்னாவும் வீட்டிலேயே இருந்தாள். தங்கவேலுவை அழைக்காமலேயே அம்மூவரும் கீழே சென்று மாலை காப்பி டிபனை முடித்துக்



கொண்டு ஹாலுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டனர். மாலை இரண்டு மணிக்கு மேல் வெளியே சென்றிருந்த அனு வீடு திரும்ப நேரம் ஆகும் என்ற துணிவு அவர்களுக்கு.

மூவர் மனதிலும் ஒரே சிந்தனை... அதற்கு மேல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது ரத்னா ஆரம்பித்தாள். ''கல்யாணமாகி ஆறு மாதங்கள்தான் ஆகிறது. அதற்குள்ளே இவ அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறதே; இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ?''

''இந்த அண்ணா இப்படி மாறிடுவார்னு நான் கனவில் கூட நினைக்கவில்லை. ஒரே பிடிவாதமாக இருந்தவர்...''

சசி முடிப்பதற்குள் ரத்னா சூள் கொட்டினாள். ''புராண காலத்து விஸ்வாமித்திரனை விடவா ஜெய்குமார் பெரிய தவசி. அவரது வைராக்கியமே பொடிப் பொடியாகப் போயிட்டபோது இவன் எம்மாத்திரம்? இப்படி நடக்கும்னு எனக்கு முன்னமேயே தெரியும். ஆனால் இந்தக் கிழவர் இவ கைப்பொம்மையா ஆடறதைத்தான் பார்க்க என்னால் பொறுக்கலை.''

''அண்ணிக்கு இப்போ டபுள் பிரமோஷன். வீட்டிலே எஜமானி, ஆபிஸிலே உதவி மானேஜர், தாத்தா உத்திரவு போலிருக்கு. பரீட்சைக்கு படிக்கிறாப்பல நித்தம் ஒரு கட்டுப் ஃபைல்களோட மேஜையருகே ராத்திரி ஹாலில் வந்து உட்கார்ந்துடறாங்க. ஒரு மணிவரை பச்சைப் பிள்ளைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாப்பல அண்ணன் ஒவ்வொண்ணையும் பத்தி எடுத்துச் சொல்லிகிட்டு... இங்கிருந்து அசைகிறதில்லை...'' சசி படபடவென்று பேசினான்.

''நானும் இந்த வேடிக்கையைப் பார்த்துகிட்டுதான் வரேன். ஆபீஸ் விவகாரம் ஆம்பிள்ளைகளுக்கே புரியாத விஷயம். இவ மண்டையிலே சட்டுனு ஏறிடுமாக்கும்... உங்க தாத்தா இவள் ஒருத்தியைக் கொண்டு வந்து வீட்டில் வச்சு எத்தனையோ அற்புதங்கள் பண்ணப் பார்க்கிறார். தெரியுமா...'' கோபமாகச் சிரித்தாள் அத்தையம்மாள்.

''முந்தாநாள் டென்னிஸ் ராக்கெட்டை மறந்து போய் அப்பா அறையில் வச்சுட்டேன். போய் எடுத்து வரலாம்னு மெல்ல அறையைவிட்டு வந்தேன். அண்ணன் திரும்பிப் பார்த்து ஒரு முறை

முறைச்சாரே பார்க்கணும். அப்படியே நடுங்கிட்டு அறைக்குள்ளேபோய் உட்கார்ந்து விட்டேன்'' சசி முறையிட்டான்.

''தாத்தா அண்ணிக்கு என்ன பதவியை வேணுமானாலும் வாரி வழங்கட்டும். அக்கறையில்லை. நேத்திக்கு நம் எல்லோரையும் கூப்பிட்டு அவங்க முன்னாடி கடுமையாகப்பேசி அவமானப்படுத்தியிருக்க வேண்டாம். அதை நினைச்சு எனக்கு தலைவலியே வந்துவிட்டது. அதனால்தான் காலேஜிக்குக் கூட போகலை...'' என்று கூறிவிட்டு சோபனா எழுந்து சென்று ஜன்னல் வழியே தோட்டத்தை எட்டிப் பார்த்துவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அந்தச் சம்பவத்தை நினைத்ததுமே மூவரும் ஒரு கணம் மௌனமானார்கள்.

கல்லூரி முடிந்ததும் அன்று அபூர்வமாக சசியும் சோபனாவும் நேரே வீட்டிற்கு வந்து விட்டிருந்தனர். சிறிது பொழுதில் தாத்தாவிடமிருந்து அவர்கள் மூவருக்கும் அழைப்பு வந்தது. என்னவாக இருக்கும் என்று அவர்களுக்கு உள்ளூர கிலி. கீழே வந்ததும் கண்ணாடிக் கதவு வழியே அவர்கள் பார்த்துவிட்டனர். தாத்தா தமது சக்கர நாற்காலியில் அறையின் மத்தியில் அமர்ந்திருந்தார். அருகே ஒரு மேஜைக்குப் பின் நோட்டுப் புத்தகமொன்றில் அவர் சொல்வதை வேகமாக எழுதிக் கொண்டிருந்தாள் அனு. மேஜைமீது சில காகித உறைகள், பக்கத்தில் ஜெய்குமார் அவளது பாதுகாவலன் போல் உட்கார்ந்திருந்தான்.

முன்பெல்லாம் அந்தக் கனமான தேக்கு மரக் கதவு அறையை மறைத்துக் கொண்டிருந்த போது, அவர்களுக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. சோபனாவும் சசியும் தொடர்ந்து சிலநாட்கள் அந்த அறைப்பக்கமே எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள்.

''என்ன, உன்னைப் பார்த்து வருஷமாச்சே? அவ்வளவு மும்முரமா படிக்கிறியா?'' தாத்தா அதட்டிக் கேட்டால் - ''இல்லை தாத்தா, நாங்க தினம் இரண்டு தடவை வந்து பார்க்கிறோம். நாங்கள் வரும் போதெல்லாம் நீங்க தூங்கிட்டு இருக்கீங்க.'' கூசாமல் பொய்



சொல்லி விடுவாள் சோபனா.

இப்போது அந்தப் பொல்லாத கிழவர் கண்ணாடிக் கதவு வழியே சி.ஐ.டி. போல் வீட்டில் நடக்கும் சங்கதிகளைத் துப்பறிந்து கொண்டிருந்தார். சாப்பாட்டு அறைக்குப் போக வேண்டுமானால் அவரது அறையைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். வேறு வழியில்லாமல் - கல்லூரிக்குப் போகுமுன் ஒரு தடவையாவது கதவைத் திறந்து 'ஹலோ தாத்தா! எப்படியிருக்கீங்க...' என்று விசாரித்துத் தொலைக்க வேண்டிய கசப்பான கடமை.

மூவரும் உள்ளே அழைக்கப்பட்டனர். ரத்னா அம்மாளுக்கு மட்டும் உட்கார ஒரு நாற்காலி கிடைத்தது. மற்ற இருவரும் நின்று கொண்டிருந்தனர். தாத்தா எல்லோரையும் கடுமையாக வெறித்துப் பார்த்து விட்டுப் பொதுவாகப் பேசினார்.

''நேத்து என்னை வந்து பார்த்த ஸ்பெஷலிஸ்ட் என் ஆபரேஷனை இன்னும் சில மாசங்களுக்கு ஒத்திப் போட்டு விட்டார். இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதாகவும், அதை ஒழுங்காகக் கட்டுப்படுத்திய பின்னர்தான் மற்ற சிகிச்சைகள் என்றும் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். இனி நான் பூரண ஓய்வு எடுத்துக்கொண்டு உடம்பை கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் குடும்பப் பொறுப்பு - ஆபீஸ் பொறுப்பு இரண்டையும் அனுவிடம் ஒப்படைத்து விட்டேன்...'' தாத்தா மீசையைத் தடவிக் கொண்டு அனுவின் பக்கம் திரும்பினார்.

''ஆபரேஷன் முடிவதற்குள் ஒரு நல்ல இடமாகப் பார்த்து சோபனாவுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்து விடுவதும் நல்லதுன்னு தாத்தா முடிவெடுத்திருக்கிறார்'' அனு புன்னகைத்தாள்.

சோபனா ஒரு கணம் வெலவெலத்துப் போனாள். நெஞ்சு படபடக்க - உடல் முழுவதிலும் வியர்வை கொப்பளிக்க - மூச்சே நின்று விடும் போன்ற கிலியில் அவள் மலைத்து நின்று விட்டாள்.

''பி.ஏ.யை இன்னும் முடிக்கலை. அதுக்குள்ளே கல்யாணம்னா?''... மென்று விழுங்கினாள் அவள். ''படிப்பு ஒரு புறம் - கல்யாணம் ஒரு புறம் - அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? நீ உத்தியோகம் செய்யவா படிக்கிறே!'' அதட்டினான் குமார்.

சோபனாவுக்கு அழுகை தொண்டையை இறுக்கியது.

சமாளித்துக் கொண்டு மௌனமாக நின்றாள்.

''கல்யாணம், பிறகு ஆபரேஷன், இதுக்கெல்லாம் ரொம்ப செலவாகப் போகிறது. அதனால் இப்போதிருந்தே சிக்கனத்தை அனுசரிக்கணும்னு தாத்தாவின் யோசனை. உங்க எல்லோருடைய அலவன்சையும் குறைச்சுட்டார்.'' மறுபடியும் புன்னகைத்தபடி அவரவர்கள் பெயரிட்ட காகித உறைகளை ஒவ்வொருவரிடமும் கொடுத்தாள்.

மெல்ல உறையைப் பிரித்த சோபனாவுக்குத் திக்கென்று இருந்தது. அதற்குள் இருபத்தைந்து ரூபாய்கள் நோட்டுகளாக இருந்தன. அவர்கள் வீடு கூட்டும் வேலைக்காரி கூட மாதம் நூறு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தாள். அவமானத்தில் கொதித்துப் போய் பேசத் தோன்றாது விழித்துக் கொண்டு நின்றாள்.

சசி தன்னிடம் கொடுக்கப்பட்ட உறையைப் பிரித்து விட்டு முகம் சிவக்க பதட்டமாக ஏதோ பேச வாயைத் திறந்தான். எரித்து விடுகிறவர் போல் தாத்தா அவனை வெறித்தார்.

''நீ படிப்பிலே கவனம் செலுத்தணும். ஊரைச் சுத்திக் கொண்டு வாரத்துக்கு மூணு சினிமா பார்த்திட்டு அலையறது எனக்குப் பிடிக்கலை. அதனால் உன் அலவன்சை ரொம்பக் குறைக்கச் சொல்லிவிட்டேன்'' உறுமினார்.

''முப்பது ரூபாயை வச்சிக் கொண்டு...'' முணுமுணுத்தான் அவன்.

''உன் வயசிலே எனக்கு முப்பது பைசாகூட யாரும் கொடுத்ததில்லை. காலுக்குச் செருப்புக் கூட இல்லாமல் போட்டுக்க மறு சட்டையில்லாமல் நான் ஒரே வேளை சாப்பிட்டு விட்டு -உழைச்சவன். உனக்கு பணத்தின் அருமை தெரியலை. ஏன் தெரியுமா? அதை நீ சம்பாதிக்கலை. இதுவே உனக்கு ஜாஸ்தி...'' கோபமாக அதட்டி விட்டு தமது மீசையை லேசாக முறுக்கினார்.

'வசதியானவங்க வீட்டிலே வந்து பிறந்தது என் தப்பா?' தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். தாத்தாவின் முகத்தை நேரடியாகப் பார்க்கக்கூட அவனுக்குத் துணிவிருக்கவில்லை.

கைச் செலவிற்கு அளிக்கப்பட்ட தொகை மிகவும் குறைவாக இருந்ததைக் கண்டு ரத்னாவும் இடி விழுந்தவள் போலானாள்.



# 14

''தான தர்மத்திற்கு - கோவிலுக்கு - கல்விக்கு இவைகளுக்கு அன்னம்மா பாட்டி வைத்துப் போயிருக்கும் டிரஸ்ட் மூலமா பல வழிகளிலும் எல்லாம் செய்து கொண்டு வருகிறாங்க... அதனால் தனிப்பட்ட முறையில் நீங்க அபிஷேகம் - ஆராதனை என்று எந்தச் செலவுகளையும் மேற்கொள்ள வேண்டாம்னு தாத்தா சொல்கிறார். எங்கேயாவது வெளியூர் போக விருப்பமிருந்தால் சுற்றுப் பயணங்களுக்கு நாங்கள் ஏற்பாடு செய்து அனுப்புகிறோம். அந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம்.''

கொத்துச் சாவி இடையில் குலுங்க பணத்தைத் தண்ணீராகச் செலவிட்டுக் கொண்டு பல வருஷங்கள் அந்த வீட்டில் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டிருந்த ரத்னாவுக்கு அனுவின் வார்த்தைகள் சாட்டையடி போன்று சுரீர் என வேதனையூட்டின. அவமானத்தைத் தாள முடியாதவளாகத் தரையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

''வீட்டுப் பிரச்சனை எல்லாத்தையும் அனு கையில் ஒப்படைச்சுட்டிருக்கிறேன். இனி எது வேண்டுமானாலும் நீங்க எல்லோரும் அவகிட்டதான் கேட்கணும். அவள் முடிவு என் முடிவுக்குச் சமம்... புரிகிறதா'' அதட்டினார் சிவபாதம்.

செயலற்று உணர்வுகள் உறைந்து போய்விட்டிருந்த அந்த மூவராலும் பதிலே பேச இயலவில்லை. உடனடியாகக் கூடி தாத்தாவின் அக்கிரமச் செயலைப் பற்றி அலசவும் வாய்ப்பிருக்கவில்லை. அடுத்த நாள் மாலை அந்த அபூர்வ சந்தர்ப்பம் கிடைத்தது - அவர்கள் மனதைப் பாதித்தவைகளை ஆத்திரத்துடன் கொட்டி ஆறுதல் காண முயன்றார்கள்.

''நம்பகிட்ட கடுமையாக நடத்துக்கிற தாத்தா அண்ணிக்கு என்ன சம்பளம் கொடுக்கிறார் தெரியுமா? உதவி மானேஜர் பதவிக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம்! வாரத்துக்கு மூன்று தடவை ஆபீசைப் போய் எட்டிப்

பார்த்துவிட்டு வர இத்தனை பணத்தை வாரிக் கொடுக்கிறார் - மேலே வச்சிருந்த செக்கைப் பார்த்துத் தெரிஞ்சு கொண்டேன். வயிறு எரியுது'' என்றான் சசி.

''இத்தனை பணத்தை அவங்க என்ன செய்வாங்க...?'' சோபனா ஆச்சரியப்பட்டாள்.

''ஊறுகாய் போடுவாள். நீ ஒன்னு... அவ பிறந்த வீட்டு தரித்திரங்களுக்கு அனுப்புவா... கொஞ்சம் பாங்கியில் சேத்து வச்சுப்பா... அவளுக்கா தெரியாது. ஆசாமி கெட்டிக்காரியாச்சே...'' ஆத்திரப்பட்டாள் ரத்னா.

அது சமயம் தோட்டத்திற்குள் கார் வரும் சப்தம் கேட்கவே சசி ஓடிச் சென்று எட்டிப் பார்த்தான்.

''மகாராணி வராங்க. பராக்'' என்று எச்சரித்து விட்டு வந்து உட்கார்ந்து கொண்டான். சிறிது பொழுதில் மாடிப்படிகளில் ஒலித்த காலடி ஓசையைக் கேட்டதும் அவர்கள் மூவரும் கலவரத்துடன் பிரிந்து தங்கள் அறைகளுக்குள் சென்று மறைந்து கொண்டனர்.

அனுராதா அன்று மிகவும் களைத்துவிட்டிந்தாள். தன் அறைக்குள் நுழைந்ததும் கைப்பையை வைத்து விட்டு முகத்தைக் கழுவித்துடைத்துக் கொண்டு - பொட்டிட்டு கூந்தலை சீர்படுத்திக் கொள்ள கண்ணாடிக்கு முன் வந்து அமர்ந்தாள்.

கையில் காப்பி டம்ளருடன் மாடிக்கு விரைந்து வந்த தங்கவேலு அறையின் வாசலில் தயங்கியபடி நிற்பதைக் கண்டாள். எழுந்து வந்து டம்ளரை வாங்கிக் கொண்டே அவனைக் கவனித்தாள்.

அவன் கையில் இரு கடிதங்கள் இருந்தன.

''பகல் தபாலுக்கு வந்தது. எடுத்து வச்சிருந்தேன்.'' பணிவுடன் அவைகளைக் கொடுத்துவிட்டு அப்பால் நகர்ந்தான் அவன்.

முதல் கடிதம் அண்ணன் மாணிக்கம் எழுதியது. அவசரமாகப் பிரித்துப் படித்தாள். சுருக்கமான கடிதம்.

''தாத்தா எழுதியிருந்தார். உன்னைப் பற்றி அவர் புகழ்வதைப் படித்து நாங்கள் மிகவும் பூரித்துப் போனோம். பிறந்த வீட்டுக்குப் பெருமையும் - புகுந்த வீட்டுக்கு மதிப்பும் தேடித்தரும் வகையில் என் தங்கை வாழ்கிறாள் என்றால் எனக்குப் பெருமையாக இருக்காதா?



...கமாக உன் கணவனுடன் சிறப்புடன் வாழணும்னு நான் மனம் நிறைந்து வாழ்த்துகிறேன். ...சண்முகத்திற்கு உபகார சம்பளத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதாக தாத்தா எழுதியதைப் படித்ததும் ஒரு கணம் குழம்பிப் போனேன். இது உன் வேலையோ என்று வெட்கமாகக்கூட இருந்தது. பின்னால் தாத்தா விவரமாக எழுதியிருந்ததைப் படித்து இது அவராக மேற்கொண்ட முயற்சின்னு புரிந்து மனம் அமைதியடைந்தேன். இந்த உதவிக்கு மிக்க நன்றி. ஒரு பயணம் நீயும் உன் கணவரும் இந்த பக்கம் வரக்கூடாதா? எங்களுக்கு உன்னைப் பார்க்க வேணுமென்று ஆசையாக இருக்கு - ஆசிகள் மாணிக்கம்.''

காப்பியைப் பருகிவிட்டு சாவதானமாக அடுத்த கடிதத்தைக் கையில் எடுத்தவள் திடுக்கிட்டுப் போனாள். அவசரமாகக் கதவைச் சாத்திவிட்டு நடுங்கிய கரங்களுடன் கடிதத்தைப் பிரித்தாள். வாணி மீண்டும் ஒரு கடிதம் எழுதியிந்தாள் அவளுக்கு.

''டெலிபோனில் பேச மறுத்துவிட்டால் தொடர்ந்து உன்னிடம் நான் தொடர்பு கொள்ள முடியாதென்று நினைப்பு! உன்னைக்காண நேரிலேயே நான் விரைவில் வரலாம் என்ற தீர்மானம். குரலைக் கேட்டதும் போனை டக்கென்று கீழே வைத்து விட்டாய். நேரில் என்னைக் கண்டதும் உன் பிறந்த வீட்டுக்கு ஓடி விடுவாயோ?''

— வாணி

கடிதத்தை மடித்துத் தலையணையடியில் வைத்து விட்டு பதைபதைத்தபடி அவள் வெகு நேரம் உட்கார்ந்து விட்டாள். உடனே இதைப்பற்றி தாத்தாவிடம் அவள் பேச விரும்பவில்லை. அன்று இரவு அவள் வழக்கமாகப் பார்வையிடும் ஃபைல்களைக் கட்டித் தூர வைத்து விட்டு விரைவில் படுத்து விட்டாள். ஆனால் உறக்கம் வந்தால்தானே?

வெங்கடேசன் நேரில் பம்பாய்க்குச் சென்று வாணியின் மிரட்டலுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார் என்று தாத்தா உறுதி கொடுத்தாரே? ஏன் மறுபடியும் வாணியிடமிருந்து கடிதம்? வேதனையுடன் படுக்கையில் புரண்டாள்.

மறுநாள் காலை திருவள்ளூர் தொழிற்சாலைக்குப் போக வேண்டிய நாள். விரைவாக வீட்டுக்காரியங்களை முடித்துக் கொண்டு

- தாத்தாவிடம் விடை பெற்றுக் கொண்டு மாடியறைக்குள் வந்தா கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்படு மு தலையணையடியிலிருந்த அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தா அப்போதுதான் கடிதம் எழுதப்பட்ட தேதியை அவள் கவனித்தா முதல் கடிதம் எழுதிய மறுநாள் வாணி, அந்த இரண்டாவது கடிதத்ை எழுதியிருக்கிறாள். தபால் முத்திரை மீது தேய்ந்து விட்டிருந் தேதியும் அதைத்தான் குறிப்பிட்டது. கடிதம் ஏதோ காரணமா எங்கெல்லாமோ சுற்றி விட்டு பல மாதங்களுக்குப் பின்னர் வந் அவளை இப்போது பயமுறுத்தி விட்டிருந்தது.

உண்மையை உணர்ந்ததும் மனத்திலிருந்து பெரும் சுமை இறங் உணர்வுகள் லேசாகிவிட்ட நிம்மதி. எரிச்சலுடன் அந்தக் கடிதத்ை அவசரமாகக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டா வாயிற்படியருகே வந்து நின்ற ஜெய்குமாரின் முகத்திலே ஒரு கண சந்தேகத்தின் சாயை.

''கடிதம் யாரிடமிருந்து வந்தது? அத்தனைக் கோபத்துடன் கிழிக்கிறாயே?'' வியப்புடன் கேட்டான்.

நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டாள் அனு ''என் சிநேகிதி எழுதியிருந்தாள். அவள் ஒரு குறும்புக்காரி. அளவுக் மீறிய முறையில் பரிகசித்து எழுதியிருந்தாள். பிடிக்கவில்லை'' பொய்யுடன் புன்னகைக்க முயன்றாள்.

''திருவள்ளுருக்கு தம் பென்ஸ்காரில் உன்னை நாமே அழைத்துச் சென்று வர வேண்டுமென்று தாத்தாவின் உத்தரவு - புறப்பட்டால் நான் தயார்...'' கார்ச் சாவியை சுழற்றிக் கொண் லேசாகச் சிரித்தான் அவன். தாமதிக்காது அவள் உடனே கிளம் விட்டாள்.

முதல் முதலாக அவனுடன் தனியே காரில் நகரத்தை விட்டு சற்றுத் தொலைவாகச் செல்வது இதுதான் அவளுக்கு முதல் அனுபவம். காலைச் சூரியனின் கதகதப்பு - சில்லென்று முகத்தில் வீசிய காற்றின் குளுமை - சாலையின் இரு பக்கத்திலும் காணப்பட் வயல்களின் பசுமை - எல்லாமே அவளுக்குப் புதுமையாகவும் இனிமையாகவும் இருந்தன.

பாதி வழியில் காரை ஒரு மரத்தடியில் நிறுத்தி விட்டு அவன்



இறங்கினான். அனுவும் இறங்கினாள். டிக்கியைத் திறந்து, தங்கவேலு ஃபிளாஸ்க்கில் ஊற்றி வைத்திருந்த பழச்சாற்றை டம்ளரில் ஊற்றிக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான். இன்னொரு டம்ளரில் ஊற்றி எடுத்துக் கொண்டு அருகில் வந்து நின்றான்.

என்னென்னவோ பேசவேண்டுமென்றுதான் இந்தப் பிடிகையெல்லாம். ஆனால் எங்கே ஆரம்பிப்பது என்ற குழப்பம் அவனுக்கு. மௌனமாக பழ ரசத்தைக் குடித்து முடித்தான். சாப்பிட்டு விட்டு டம்ளரை டிக்கிக்குள் கொண்டு வைத்த அனுவையே கண் கொட்டாது சிறிது நேரம் திகைப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான். தன்கையில் பிடித்திருந்த டம்ளரையும் டிக்கிக்குள் வைத்து மூடிவிட்டு அருகே வந்தான்.

''அனு! உன்னிடம் கொஞ்சம் பேச வேணும். அதனால்தான் காரை நிறுத்தினேன். உன் சிநேகிதி அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தாள் என்று சொல்லட்டுமா? கல்யாணமாகி ஆறு மாதங்களுக்கு மேலாகிறதே, அண்ணா மாணிக்கம் மாமாவாகப் போகும் மகிழ்ச்சிகரமான செய்தி ஏதேனும் உண்டான்னு தானே கேட்டிருக்கா...'' மெல்லிய குரலில் கிசுகிசுத்தான். அவனது மூச்சுக் காற்று சுட்டது. குப்பென்று முகம் சிவந்து போனாள் அனு. கலவரத்துடன் மெல்ல நகர்ந்து கொண்டாள். அவளது உள்ளமும் உடலும் உணர்ச்சி வசத்தில் நடுங்கின.

''நான்கூட உங்களிடம் ஒரு முக்கிய சங்கதி சொல்ல விரும்புகிறேன். அன்னம்மா பாட்டி சொத்து முழுவதையும் என் பெயருக்கு எழுதி வச்சிருக்காங்க. உயிலைப் பத்தின விவரம் உங்களுக்குக் கட்டாயம் தெரிஞ்சிருக்கும். அதனால் என் மேல்...'' அவள் முடிக்குமுன்... அவன் வேகமாக அவள் அருகே நெருங்கி அவள் கரத்தை ஆசையுடன் இறுகப் பற்றிக் கொண்டான்.

''அந்த சொத்துக்களைப் பற்றிய கவலை - என் கடந்து போன வாழ்க்கையின் நினைவுகள் எல்லாவற்றையுமே நான் மறந்து விட்டேன் அனு! சொன்னால் நீ நம்புவாயோ என்னவோ. எனக்கு இனி வேண்டியதெல்லாம் நீ ஒருத்திதான். இது உண்மை. இதை நான் உணரத் தொடங்கிக் கொஞ்ச காலமாகிவிட்டது. ஒப்புக் கொள்ளத் துணிவின்றித் தவித்துக் கொண்டிருந்தேன். முதல் சந்திப்பில் மனம்

நோக உன்னைப் பேசிவிட்டேன். மன்னிப்புக் கேட்க... வெட்கமாக இருக்கு! அனு எல்லாற்றையும் மறந்து மன்னித்துவி... இந்தப் போலி வாழ்க்கையை உதறிவிட்டு நீயும் நானும் உலகி... உள்ள அன்புத் தம்பதிகள் போல இனியாவது இணைந்து வாழ... முயற்சிப்போம்... என்ன?''

திடீரென்று அனு கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விம்... விம்மி அழத் தொடங்கினாள். ஜெய்குமார் பதறிப் போய் விட்டான்.

''மன்னிச்சுக்கோ அனு - தவறாக ஏதாவது சொல்லிட்டேனா...'' தவித்தான்.

அவள் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இனி சட்டம் அல்லவா சொல்ல வேண்டும்? இதை அவனிடம் அவள் எப்படி விவரிப்பாள்?

''சோபனாவின் கல்யாணம், தாத்தாவின் ஆபரேஷ... இவைகளுக்குப் பின்னர்தான் என்னைப் பற்றி நினைப்பது என்று எனக்குள்ளேயே ஒரு சவால் - அதனால்...''

''அதுவரை காத்திருக்க எனக்கும் பொறுமை உண்டுன்னு நிரூபிக்கட்டுமா?'' கேட்டுக்கொண்டே - தன் கைக்குட்டையால் அவளது கன்னங்களில் ஓடிய கண்ணீரைத் துடைத்தான். கார்... கதவைத் திறந்து அவளை ஆசனத்தில் அமரச் செய்து உபசரித்தான். பின்னர் அவன் மௌனமாகவே வண்டியை ஓட்டிச் சென்றான்.

# 15

அந்த மூவரும் இப்போது அவளுக்கு பரம எதிரிகளா... விட்டிருந்தனர். கைச்செலவிற்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த பணம் குறைக்கப்பட்டதின் காரணம் அவள்தான். தாத்தாவிற்கு அப்படிச் சொல்லிக் கொடுத்து சதிசெய்து விட்டிருக்கிறாள் என்று அனுவின் மீது அவர்களுக்கு ஆத்திரம். ரத்னா அத்தை தனக்கேற்பட்ட ஏமாற்றத்தை வேறு வகையில் தீர்த்துக் கொண்டாள். சோபனா, ... இருவரையும் அனுவிற்கு எதிராக ஏவி விட்டு வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்.



''நேற்று வந்தவள்! வீட்டுக் குழந்தைகளான உங்களை இப்படி ஆட்டிப் படைக்கிறாள். நீங்களும் சும்மா இருக்கிங்க. அவள் சொன்னபடி ஆடும் கைப் பொம்மையில்லேன்னு நிரூபிச்சுக் காட்டுங்கோ. அப்பத்தான் அவள் வழிக்கு வருவாள்'' - தூபம் போட்டாள் - அவர்களைத் தூண்டிவிட்டாள்.

ஜெய்குமார், வாணியின் நினைவிலேயே வாழ்கிறான் என்று உள்ளூரப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த அவளுக்கு அந்த இரண்டாவது திருமணம் பெருத்த ஏமாற்றம். தொடர்ந்து அவனிடம் சமீபத்தில் காணப்பட்ட மன மாறுதல்களைக் கண்டு மன அதிர்ச்சியடைந்து போய்விட்டிருந்தாள். பல வழிகளில் அவளின் முயற்சிகளுக்கு ஒருபெரும் முட்டுக்கட்டையாக இருந்த அனுவைத் தோற்கடிக்க வேண்டுமென்று அவள் மனதிற்குள்ளே ஒரு திட்டம்.

ஆபீஸிற்கும் வீட்டிற்கும் ஓடிக் கொண்டிருந்த அனு விரைவில் ஒரு உண்மையை உணரத் தொடங்கினாள். மீண்டும் வீட்டின் நிர்வாகம் கலகலக்கத் தொடங்கி விட்டிருந்தது! சோபனா கல்லூரியிலிருந்து நேரே வீட்டிற்கு வராது தாமதம் செய்யத் தொடங்கினாள். சில தினங்கள் அவளை அழைத்துவரச் சென்ற காரை வீட்டிற்கு அனுப்பி விட்டு ஆட்டோவிலும், டாக்சியிலும் நேரம் கழித்து வந்து இறங்கினாள்.

சசி தினமும் இரவு பத்து மணிக்கு மேல் வருவதை மீண்டும் வழக்கமாக்கிக் கொண்டு விட்டான்.

ரத்னா அத்தையும் அந்திப் பொழுதில் வீட்டிலேயே இருப்பதில்லை. கோயில் - கச்சேரிகள் - நாடகங்கள் என்று நாளைக்கு ஒரு காரணம் காட்டி வெளியே சென்று கொண்டிருந்தாள்.

அனுவுக்குக் கவலை ஏற்பட்டு விட்டது. ஆபீஸைக் கவனிக்கும் உற்சாகத்தில் வீட்டைக் கோட்டை விட்டால்...? தாத்தாவிடம் இவைகளைப் பற்றிப் பேச முடியவில்லை. ஒன்றையும் என் காதுகளில் போடாதே. எல்லாவற்றையும் நீயே சமாளி என்ற பூரண அதிகாரத்தைக் கொடுத்து விட்டு அவர் ஓய்வை நாடி விட்டிருந்தார். கணவனிடம் தன் கவலைகளை வெளிப்படையாகச் சொல்லி உதவி கேட்கவும் அச்சமாக இருந்தது. இப்பொழுதுதான்

ஆச்சர்யகரமானதொரு மாறுதல் அவனிடம் ஏற்படத் தொடங்கியிருந்தது. ஏராளமாக வெட்டிப் பேசுவதை நிறுத்திக் கொண்டு அன்போடும், கனிவோடும் நடக்கத் தொடங்கியிருந்தான்.

இந்தக் கட்டத்தில் - அவனது சகோதரன் மீதும் - தங்கை மீதும் உள்ள குறைகளைப் பற்றிப் பேசினால் ஒரு சமயம் அவன் மனம் முறிந்து போனால்... மீண்டும் அனு அவனது வெறுப்பிற்குப் பாத்திரமாகிவிடக் கூடுமே. என்னென்னவோ எதிர்பார்ப்புகளை நோக்கி ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அவள் தன் வருங்காலத்தின் வளமையைத் தானே அழித்துக் கொள்வதா? ... ஊகும் ...

தானே இந்தப் பிரச்சனையைக் கையாள்வது என்று முடிவில் அவள் தீர்மானித்தாள்.

அன்று அவள் ஆபீசிலிருந்து விரைவில் திரும்பி விட்டிருந்தாள். ரத்னா அத்தை உடுத்திக் கொண்டு வெளியே புறப்பட ஆயுத்தமாவதைக் கவனித்தாள்.

''அத்தை, கோவிலுக்கு இத்தனை சீக்கிரம் கிளம்பணுமா?''

ரத்னாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

''கோவில்களுக்குத் தாராளமாகப் போகலாம்னு தாத்தா எதிரில் வாய் இனிக்கச் சொல்லிவிட்டு இப்போ அதுக்குக்கூடத் தடை உத்தரவா? சின்ன வயசிலே நான் வாழ்க்கையை இழந்தவ; போதாததுக்கு ஒரு பெண்ணை வாரிக் கொடுத்து விட்டு நிக்கிறேன். என் மனசுக்கு நிம்மதியை இப்படி வெளியிலே போய் கோயில் குளத்திலே தேடிக்கிறேன். அது கூட தப்புன்னாக்க...'' சொல்லி முடிக்காது நீர் நிறைந்த கண்களுடன் அவளை வெறித்துப் பார்த்தாள்.

அனுவின் நெஞ்சம் துணுக்குற்றது. அத்தையின் விவகாரத்தில் தலையிடுதல் தவறு என்று தன்னையே கடிந்து கொண்டாள். ''இல்லீங்க அத்தை. இந்த சோபனாவும் சசியும் ரொம்ப நேரம் கழிஞ்சு வீட்டுக்கு வராங்க. வீட்டில் பெரியவங்கன்னு நீங்க ஒருத்தர் இருக்கிறீங்க - அவங்களைக் கொஞ்சம் கண்டிச்சால் நல்லதாக இருக்குமேன்னுதான் நினைச்சேன்.''



ரத்னா இகழ்ச்சியுடன் சிரித்தாள். ''எனக்கு இந்த வீட்டில் என்ன அதிகாரம் இருக்கு? ஏழை உறவுக்காரி நான். நீங்க போடற சாதத்தைத் தின்னுட்டு அடங்கிக் கிடக்கிறேன். அவங்க ரெண்டு பேரும் இந்த வீட்டுக் குழந்தைகள். நான் ஏதாவது பேச முடியுமோ? குருடனைப் பார்த்து ராஜ முழி முழிக்கச் சொல்றியே நீ...'' கேட்டுக் கொண்டே அவள் வெளியே போகத் திரும்பினாள்.

''டிரைவர் வெளியே போயிருக்கிறார். வந்ததும்...'' அனு முடிப்பதற்குள் ரத்னா ஆத்திரத்துடன் வெடித்தாள்.

''நீ பெரிய மனசு பண்ணி செலவுக்குக் கொடுக்கிற இருபத்தைஞ்சு ரூபாய் கையிலிருக்கு. பல்லவன் போக்குவரத்து சாலையிலே இருக்கு. எனக்கு இன்னும் காலிலே வலு இருக்கு. உடம்பிலே உசிரு இருக்கு. வண்டியும் வாகனமும் எனக்கு எதுக்கம்மா?'' ஏளனமாகக் கேட்டபடி அவள் வெளியே விரைந்தாள்.

முகத்தில் அடித்தது போன்ற வார்த்தைகளின் வேதனையை அனு விழுங்கிக் கொண்டாள். அத்தை ரத்னம்மாளுக்கு முரட்டு சுபாவம். கொஞ்சம் விட்டுப்பிடிக்க வேண்டும்' என்று எண்ணியபடி உள்ளே தன் காரியங்களை கவனிக்கச் சென்றாள்.

ஜெய்குமார் திருவள்ளூர் தொழிற்சாலைக்குப் போயிருந்தான். வரநேரமாகும் என்பதை அவள் அறிவாள். இருட்டி வெகுநேரமாகியும் சோபனாவைக் காணவில்லை. கவலையுடன் உள்ளுக்கும் வாயிலுக்கும் அனு நடந்து கொண்டிருந்தாள். முடிவில் எட்டு மணி அளவில் சோபனா ஒரு டாக்சியில் வந்து இறங்கினாள்.

யாரிடமும் பேசாது நேரே மாடிக்கு விரைந்தாள். அனு விடாது அவளைப் பின்தொடர்ந்தாள். ஹாலின் விளக்கைப் போட்டபோது வெளிச்சத்திலே கவனித்தாள்.

சோபனா அழுதுவிட்டு வந்திருப்பவள் போல் முகமும் கண்களும் சிவந்து காணப்பட்டாள்.

''என்னம்மா நடந்தது...? ஏன் இப்படி இருக்கே...?'' அனுதாபத்துடன் அருகில் வந்து கேட்டாள்.

''ஒண்ணும் நடக்கலை. நீங்க என் விஷயத்திலே தலையிடத் தேவையில்லை'' சீறினாள் சோபனா கோபத்துடன்.

அப்பொழுது மறுபடியும் வெளிச்சத்தில் அனு அவளைக் கவனித்தபோது சோபனா கழுத்தில் வழக்கமாக அணிந்து கொண்டிருக்கும் தங்கச் சங்கிலியைக் காணவில்லை.

''சோபனா! சங்கிலி எங்கேம்மா?'' கட்டுப்படுத்த இயலாத ஆவலில் கேட்டுவிட்டாள்.

திடுக்கிட்டுப் போனாள் சோபனா. அனுவை வெட்டி விடுகிறாப்போல் கடுமையாக விழித்தாள்.

''காணாமல் போயிட்டுது. இப்போ அதுக்கு என் தலையைச் சீவிடப் போறிங்களா?''

'எட்டுப்பவுன் எடையுள்ள சங்கிலியைத் தொலைத்து விட்டு எத்தனை அசட்டையான பேச்சு?' வியப்புடன் அனு அவளைப் பார்த்தாள்.

தாயின் முகத்தைப் பாராது வளர்ந்தவள். அன்பு என்பதையே அதிகம் அறியாதவள். இளமையின் உணர்வுகள் கொந்தளித்துக் கொண்டு நாலாப்புறமும் பரவி பரபரப்பதில் அர்த்தமும் உள்ளது என்ற இரக்கம் அவளுக்கு...

''சங்கிலி போனால் போகட்டும். இப்படி நீ தினமும் நேரம் கழித்து வருவது சரியில்லையம்மா. உனக்குக் கல்யாணத்திற்கு மாப்பிள்ளை பேசி முடிவு செய்து கொண்டிருக்கிறார் தாத்தா. காலேஜ் முடிந்து நம்ப காரிலே நேரே வீட்டுக்கு வரதுதான் ஒழுங்காயிருக்கும். பின்னாலே யாரும் எதுவும் பேசக்கூடாது பார்...''

''யார் எது சொன்னாலும் எனக்கு அக்கறையில்லை. எனக்கு நீங்க ஒண்ணும் புத்தி சொல்லத் தேவையில்லை.'' உரத்த குரலில் எடுத்தெறிந்தாள் சோபனா.

''குடும்ப கௌரவம்னு ஒண்ணு இருக்கே - அதை யோசிக்க வேண்டாமா? அந்தி வேளையிலே நீ டாக்ஸியிலும் பஸ்ஸிலும் தனியா வந்து இறங்கினா பார்க்கிறதுக்கு நல்லா இருக்கா.''

''எங்க குடும்ப கௌரவத்தை எப்படிக் காப்பாத்தணும்னு எனக்குத் தெரியும்.''

''உங்க குடும்பம், இப்போ என் குடும்பமாக மாறிவிட்டதனால்தான் இந்தப் பிரச்சனை. நீ இப்படி நேரம் கழிச்சு வரதை நிறுத்திக்காட்டா...''



''என்ன செய்வீங்களாம்?''

''செய்கிறதை பிற்பாடு சொல்கிறேன்.'' அதட்டி விட்டு அனு படபடத்த நெஞ்சோடு மாடிப்படிகளில் இறங்கினாள். அவள் காதுகளில் சோபனா தரக் குறைவாக முணுமுணுப்பது கேட்கத்தான் செய்தது. மனம் வேதனைப்பட்டது.

'சோபனா சீறும் சிறுத்தைக் குட்டி. தக்கபடி கையாள வேண்டியது அவசியம்...' எண்ணியபடி கீழே வந்தாள்.

தங்கவேலு தலையைச் சொரிந்து கொண்டு தயங்கியபடி நின்றான்.

நாளைக்கு நம்ம சசி அய்யாவுக்கு பிறந்தநாள். வருஷா வருஷம் இந்த வீட்டில் அதை தடபுடலாகக் கொண்டாடற வழக்கம். இன்னிக்கு காலேஜ் போகும் முன் என்கிட்ட அவர் சொல்லிவிட்டுப் போனார். அவர் சிநேகிதர்கள் இருபது பேருக்கு மேல் வருவாங்களாம். மாடி ஹாலை சுத்தம் செய்து வைக்கணுமாம். அலமாரியிலிருந்து எல்லா பாட்டு ரிகார்டுகளையும் எடுத்துத் துடைச்சுத் தயாராக வச்சிருக்கணுமாம். அத்தோட சிநேகிதர்களுக்குக் குடிக்க கூல்டிரிங், காப்பி, டீ, இத்தோட வடை, சமூசா, பாதாம் கேக், சிப்ஸ், மசாலா, முந்திரி பருப்புன்னு சாப்பிட ஒரு பெரிய லிஸ்டைக் கொடுத்திருக்கிறார். இதுகள் வாங்க பணம் வேணும்...'' மென்று விழுங்கினான்.

''பிறந்தநாள் பார்ட்டியா? இங்கேயா? தாத்தாவுக்கு இரைச்சல் - கூச்சல் - கும்மாளம் எதுவும் இப்போது ஆகாது. அதனால் இங்கே பார்ட்டி ஒண்ணும் வைக்கத் தேவையில்லை. சசி ஏதாவது சொன்னால் என்னிடம் அனுப்புங்க'' கண்டிப்பாகக் கூறிவிட்டு அப்பால் சென்றாள்.

அன்று இரவு வெகுநேரம் சென்ற பின்னர் வீடு திரும்பிய ஜெய்குமார் குளியலறையிலிருந்தான். அவன் வரவிற்காகச் சாப்பிடாது காத்திருந்த அனு ஹாலில் ஒரு பத்திரிகையைப் புரட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். சோபனாவும், ரத்னாவும் உணவிற்குப்பின் அறைக்குள் அடங்கிவிட்டிருந்தனர்.

மாடிப்படிகளில் பலத்த காலடி ஓசை கேட்டதும் அனு திரும்பினாள். கோபமே உருவாக சசி அவள் முன் வேகமாக வந்து

நின்றான். நெற்றிமீது புரண்டு கிடந்த முடியும் அழுக்காகிவிட்ட உடையும், வியர்வை வடிந்த முகமுமாக அவன் அலங்கோல நிலையிலிருந்தான்.

"தங்கவேலுவிடம் என்ன சொன்னீங்க?" உரத்த குரலில் அதட்டிக் கேட்டான் அவன்.

"நாளைக்குப் பார்ட்டி இங்கே இல்லை என்றேன்..." அசட்டையாகக் கூறிவிட்டு எழுந்து நின்றாள் அனு.

"ஏனோ?"

"மெதுவாகப் பேசு. தாத்தா தூங்குகிறார்..." எச்சரித்தாள் அனு. "பாட்டி இறந்து ஒரு வருஷம் ஆகலை. அதற்குள் பார்ட்டி வச்சு கூத்தடிப்பது ரொம்ப ரஸக் குறைவு. மேலும் தாத்தாவுக்கு வீட்டில் அமைதி அதிகம் தேவை. கல்யாணத்துக்கிருக்கும் இளம்பெண் சோபனா. நீ கண்ட வாலிபர்களை இங்கே அழைத்துக் கொண்டு வந்து ஆர்ப்பாட்டம் பண்ணுகிறதை அண்ணா விரும்பமாட்டார் அவ்வளவுதான்."

"என் சிநேகிதர்கள் கண்டவங்களா?"

"உனக்குச் சிநேகிதர்கள். எனக்கு அறிமுகமில்லாதவர்கள்."

"அதிகாரம் கையில் கிடைச்சதும் ரொம்பத்தான் அலட்டிக்கிறீங்க. உங்க பாட்டன் வீட்டுக் காசு பாழாப்போறாப்பல குதிக்கிறீங்களே?"

"ஒருவகையில் என் பாட்டன் வீட்டுப் பணந்தான். உன் தாத்தா எனக்கும் தாத்தாதான். அவர் பாடுபட்டு சேர்த்த பணம்தான் இது. அதெல்லாம் கிடக்கட்டும். நீ நிதக்கும் ஏன் நேரம் கழிச்சு வீட்டுக்கு வரே?"

"காலேஜ் முடிஞ்சதும் நான் பிரெஞ்சு கத்துக்கப் போகிறேன். பிறகு கராத்தே கிளாஸ், நேரமாகிறது."

"அங்கே டெலிபோன் பண்ணினேன். உன் சிநேகிதன் சக்ரவர்த்தி சொன்னான். நீ அந்தப் பக்கம் தலைகாட்டி ஒரு வாரமாகிறதாமே?"

"என் பின்னால் நான் எங்கே போறேன்னு துப்பு துலக்குறீங்களா? நீங்க என்னன்னு நினைச்சுட்டீங்க?" இரைந்து கத்தினான் சசி. ரத்னாவும் சோபனாவும் படுக்கை கொள்ளாது



ஆவலுடன் எழுந்து வந்து எட்டிப் பார்த்தனர். சசி, அண்ணியை எதிர்த்துப் பேசுவதைக் கேட்க அவர்களுக்குத் தாங்கொணா மகிழ்ச்சி.

"உன் அண்ணின்னு நினைச்சுட்டு கேட்கிறேன். தினமும் நீ எங்கே சுத்திட்டு இப்படி நேரங்கழிச்சு வரே? காரணம் தெரியலாமா?"

"கண்ட கழுதைகளுக்குக் காரணம் சொல்லிக் கொண்டிருக்க அவசியமில்லை.

அவமானத்திலே அனு முகம் சிவந்து, உடல் குன்றிப் போனாள். ஆனால் உடனடியாகச் சமாளித்து விட்டாள். "நீ சொல்லும் பிராணி உதைக்கும் ஜாக்கிரதை" என்றாள் கோபத்துடன்.

"என்னடா சொன்னே?" என்று ஆத்திரமாக உரத்து ஒலித்த குரலைக் கேட்டு அனைவரும் திகைப்புடன் திரும்பினர்.

"அண்ணிங்கிற மரியாதை இல்லாவிட்டாலும் பெண் என்கிற மரியாதையில்லாம திமிரா பேசற ராஸ்கல்..." கத்திக்கொண்டே அருகில் வந்த ஜெய்குமார் ஓங்கிப் பளார் என்று தம்பியின் கன்னத்தில் ஒரு அறை விட்டான்.

## 16

"இதுக்குப் போய் இத்தனை கோபப்பட்டு அடிச்சுட்டீங்களே! அனு குறுக்கே புகுந்து மறுபடியும் ஓங்கிய கணவனது கரத்தைப் பிடித்துக் கொண்டாள். கையை உதறி வேகமாக விடுவித்துக் கொண்ட ஜெய்குமாரின் கண்கள் நெருப்பாகக் கனன்றன. முகம் செவேரென்று இருந்தது... உக்கிரமாக உறுத்து விழித்த அவனைப் பார்க்கவும் அனுவுக்கு அச்சமாகத்தானிருந்தது.

"நீ பேசாம உள்ளே போ - " என்று மனைவியை நோக்கி ஒரு அதட்டல் போட்டான் அவன். அனு - சோபனா - ரத்னா யாருமே அங்கே நிற்கவில்லை. பொங்கிப் புரண்ட உணர்ச்சிகளின் மோதலில் மூச்சுத் திணற சுட்டு விடுகிறவன் போல் தம்பியை வெறித்தான்

அண்ணன்.

''இனி என் மனைவியை அவமரியாதையாகப் பேசினியோ உன் உடம்பிலுள்ள எலும்பெல்லாம் கூழாகிவிடும். ஜாக்கிரதை. நேத்திக்குப் பிறந்த வாண்டுபயல் நீ; அவள் உன் அண்ணி. பெத்த தாய்க்குச் சமம். இந்த வீட்டுப் பொறுப்பை ஏத்துக் கொண்டிருக்கிறாள். அவள் ஏன் கேட்கக் கூடாது. ரோஷமுள்ளவனாக இருந்தால் அதுக்குத் தக்கபடி நடந்து கொள்ளணும்.'' கன்னத்தைத் தடவிக்கொண்டு கண்களில் நீர் முட்டத் தடுமாறிக் கொண்டு நின்றான் சசி.

''உன் அறையைப் போய்ப் பார். கண்ணராவி. சுவத்திலே நிர்வாண போஸ்டர்கள். எங்கே பார்த்தாலும் அழுக்குத் துணிகள், மூலைக்கு ஒரு புத்தகம். கண்ட பத்திரிகைகள், சிகரெட் துண்டங்கள். அங்கே காலை வைக்க எனக்கே கூச்சமாக இருக்கு. வேலையாட்களை அனுப்பி அதைச் சுத்தம் செய்யச் சொன்னால் உன் வண்டவாளம் தெரிஞ்சு அவங்க கைகொட்டி சிரிப்பாங்களேன்னு, அனுதான் தினமும் போய் உன் அறையை சுத்தம் செய்கிறாள். ஊரைச் சுத்திட்டு நீ வரவரை கண் விழிச்சுக் காத்திருந்து கதவைத் திறக்கிறாள். உனக்குச் சோறு போடறா... இதெல்லாம் உனக்கு அன்போட செய்கிறவளை என்ன சொன்னே?... இன்னொரு தடவை ஏதாவது பேசினியோ பல் அத்தனையும் வெளியே கொட்டிடும். போடா, போய் குளிச்சிட்டு சீக்கிரம் வா... சாப்பாட்டறையில் அண்ணி நமக்காகக் காத்திருக்கிறாள்'' உத்தரவிட்டான்.

அண்ணன் முன் சப்த நாடியும் ஒடுங்கிப் போனான் சசி. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு தன் அறைக்குள் சென்று மறைந்தான்.

அண்ணன் மீதும் அண்ணி மீதும் பொங்கிக் கொண்டு வந்த கோபத்தைத் தாங்க முடியவில்லை. அறைக்குள் கிடந்த மோடா ஒன்றைக் காலால் வேகமாக ஆத்திரத்துடன் எட்டி உதைத்தான்.

அனு தன் நகைப்பெட்டியை நான்காவது முறையாகத் திறந்து சோதித்தாள். பெட்டியில் இருந்தவைகளை அப்படியே மேஜைமீது கவிழ்த்துவிட்டு நகைகளை வகை ஒன்றாகப் பிரித்துத் திரும்பத்



திரும்ப ஆராய்ந்தாள். தலை சுற்றியது. நான்கு ஜோடி தங்க வளையல்களில் ஒரு ஜோடியைக் காணவில்லை. கனமான வளையல்கள். குறைந்தது ஐந்து பவுன் எடையிருக்கும். இப்போதிருக்கும் விலைக்கு... கவலையுடன் பெருமூச்செறிந்தாள்.

சில தினங்களாகவே வீட்டில் அந்த மூவரும் அவளுக்குப் பல வழிகளிலும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். பழி வாங்குகிறவள் போல் ரத்னா அம்மாள் ஒவ்வொரு வாரத்தின் இறுதியிலும் இரண்டு நாட்கள் வெளியூர் கோயில்களை தரிசிக்க புறப்பட்டுக் கொண்டிருந்தாள். இந்த முறை தன் சொந்த ஊரான திருநெல்வேலிக்குப் பத்து நாட்கள் ஓய்வாகத் தங்க விரும்புவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டாள்.

அவளைப் பொறுத்தவரை அந்த வீடு அவள் நினைத்த பொழுது தங்குவதற்கும், பசிக்கும்போது சாப்பிடவும் உதவும் ஒரு தர்ம சத்திரம். ''சோபனாவைப் பெண் பார்க்க வரப் போகிறாங்க. வீட்டில் நீங்கதான் பெரியவங்க. அதனால் கூட உதவி செய்யணும்' ...மிகவும் பணிவாகக் கேட்டுக்கொண்டாள் அனு.

அப்படியிருந்தும் அவள் வேண்டுமென்றே அந்த நிகழ்ச்சிக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் ஊருக்குக் கிளம்பி விட்டிருந்தாள். ''நான் வாழ்க்கையில் பலவிதத்திலும் துக்கப்பட்டவள். நல்ல காரியங்களில் கலந்து கொள்ள லாயக்கில்லாதவள். வீட்டுக்கு நீ மருமகள், கெட்டிக்காரி, எல்லாத்தையும் சமாளிச்சுக்குவே...'' குத்தலாகப் பேசிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

பிள்ளை வீட்டவர்கள் அன்று இவளைப் பார்க்க வரப் போகிறார்கள் என்ற செய்தி தெரிந்ததும் சோபனா வேண்டுமென்றே அன்று கல்லூரியிலிருந்து வெகுநேரம் சென்ற பின்னர்தான் வந்தாள். பிள்ளை வீட்டவர்கள் வந்து காத்துக் கொண்டிருக்கும்படி நேர்ந்து விடுமோ? என்ன அவமானம். எண்ணியபடி அனு உள்ளுக்கும் வாயிலுக்கும் நடந்த நடை, பட்ட மன வேதனை? தவித்துப்போய் விட்டாள் அவள்.

கல்லூரியிலிருந்து வந்தவள் முகத்தைக் கழுவித் தலையை வாரிப் பொட்டிட்டு, பட்டுச்சேலை உடுத்திக் கொண்டு நகைகள் அணிந்து தயாராக வேண்டுமென்று அவளை வற்புறுத்தி ஒப்புக்கொள்ள

செய்வதற்குள் அனுவிற்குப் போதுமென்றாகி விட்டது. சோபனா மகா பிடிவாதக்காரி. அவசரத்திற்குத்தானே என்று அன்னம்மா பாட்டி தனக்கு அளித்திருந்த அந்த நகைகளைப் பெட்டியுடன் சோபனாவிடம் கொடுத்து அணிந்து கொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சோபனாவின் மனதில் கல்யாணம் என்பதைப் பற்றி என்னவிதமான எண்ணங்கள், கொள்கைகள் இருந்தனவோ அனுவுக்குத் தெரியாது. ஒரு சமயம் தன் அழகிற்கு மேல் உலகத்து மன்மதனே மாலையுடன் புறப்பட்டு வந்து விடுவான் என்று எண்ணினாளோ, அதுவும் தெரியாது. தாத்தா பார்த்துப் பேசி ஏறக்குறைய முடிவு செய்திருந்த அந்த வரனைப்பற்றி அவன் பேசியதெல்லாம் சோபனா காது கொடுத்துக் கேட்கவில்லை. மிகவும் அசட்டையாக இருந்தாள்.

அவளைப் பார்க்க வந்த மாப்பிள்ளை படித்தவன். பார்க்க நன்றாகவேயிருந்தான். தஞ்சாவூரில் மிகவும் பிரபலமானதொரு வியாபாரியின் ஒரே பிள்ளை. தாத்தாவுக்கு அந்தக் குடும்பத்துடன் நீண்ட நாட்களாகப் பழக்கமிருந்தது. வியாபாரத் தொடர்புமிருந்தது. பல வழிகளிலும் சோபனாவுக்கு ஏற்ற இடம் என்றுதான் அனுவின் மனதிற்குப்பட்டது. ஆனால் சோபனாவிடம் திருமணத்தைப் பற்றி, இளம் பெண்களிடம் காணப்படும் அந்த மகிழ்ச்சியான எதிர்பார்ப்பைக் காணவில்லை. அதற்குப்பதில் காரணமற்றதொரு வெறுப்பு. கலக்கம் நிறைந்த முகம். யாரும் காணாதபோது கண்ணீர். அவளது விபரீதபோக்கு அனுவுக்கு பெரும் புதிராக இருந்தது. இதைப்பற்றிக் கணவனிடமோ தாத்தாவிடமோ பேசவும் அச்சமாக இருந்தது. அவள் மனதிற்குள் ஒரு குறுகுறுப்பு. ஒரு சமயம் சோபனா வெளியே வேறு யாரையாவது விரும்புகிறாளா? விரும்பினால் வெளிப்படையாகச் சொன்னால் அவளது விருப்பத்தைப் பூர்த்தி செய்விக்க முயற்சிக்கலாமே.

பிள்ளை வீட்டவர்கள் வந்தனர். சிரமப்பட்டு சிங்காரித்துப் பெண்ணை அவர்கள் முன் அழைத்துச் சென்று நிறுத்தினாள் அனு. மாப்பிள்ளை முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியிலேயே அவள் புரிந்துகொண்டு விட்டிருந்தாள். அதற்குப்பின், காபி, பலகாரம் சாப்பிட்டுவிட்டு அவர்கள் தாத்தாவிடம் நீண்ட நேரம் கலகலப்பாய்



பேசிக்கொண்டு இருந்தனர். பின்னர்தான் சென்றனர். அவர்கள் எல்லோருக்கும் பெண் மிகவும் பிடித்துவிட்டது என்ற வரை அனு அறிந்துக் கொண்டு விட்டிருந்தாள். தங்களது சம்மதத்தை விரைவில் கடிதத்தில் தெரிவிப்பதாக அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றனர். ஆனால் சோபனா? ஒன்றுக்கும் பிடி கொடுத்தே பேச மறுத்தாள்.

''உனக்கு மாப்பிள்ளையை பிடிச்சிருக்கான்னு தாத்தா கேட்கச் சொன்னார்'' என்று அனு அருகில் வந்து உட்கார்ந்து மெல்ல பேசத் துவங்கினாள்.

சோபனா கோபத்தில் வெடித்தாள் வார்த்தைகளை.

''கல்யாணமே செய்து கொள்ள நான் விரும்பவில்லை. அப்படியிருக்கும்போது மாப்பிள்ளை பிடித்தது - பிடிக்கலை அனாவசியமான கேள்வி, வேண்டாத பிரச்சனை... எனக்கு இப்போ கல்யாணமே தேவையில்லை. அதைவிட என்னைக் கொன்று நீங்க எல்லோரும் சேர்ந்து குழி தோண்டிப் புதைக்கடுங்க...'' படுக்கைமீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு விம்மி அழுதாள் அவள்.

அனுவுக்கு தாங்கொணா குழப்பம். மனவேதனை. விஷயம் வேறு ஏதோ இருக்கிறது என்றவரை புரிந்து கொண்டு விட்டாள். ஆனால் அதைப்பற்றி மேலே துருவிக் கேட்கத்தான் அவளுக்குத் துணிவு இருக்கவில்லை. புகைந்து கொண்டிருக்கும் பட்டாசு வெடிக்கலாமென்ற நினைப்பில் அருகில் போக அஞ்சும் சிறுவனைப் போல அவளுக்கு சோபனாவை நெருங்கிப் பேசவே கொஞ்சம் பயமாகத்தானிருந்தது. ஆறு மாத காலத்தில் அந்தப் பெண் அண்ணி என்று ஒரு முறையேனும் அன்போடு அருகில் வந்தவள் இல்லை. அறிமுகமில்லாத ஒருத்தியைப் பார்ப்பது போல்தான் மிரட்சியுடன் தினமும் அவளை வெறுத்தாள். விலகியே சென்றாள். அந்நிலையில்... உள்ளுக்குள்ளே பலவும் எண்ணி அனு கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

மாப்பிள்ளை வீட்டவர்கள் சென்ற பின் தன் அலங்காரத்தைக் கலைத்து விட்டு சோபனா அணிந்திருந்த நகைகளைக் கழற்றிப் பெட்டிக்குள் வாரிப் போட்டு அண்ணியின் அறைக்குள் கொண்டு வந்து வைத்து விட்டுப் போயிருந்தாள். அப்படியே அதை எடுத்து இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டிருந்த அனு ... போது

கவனிக்கவில்லை. இரண்டு தினங்களுக்குப் பின்னர் பெட்டிக்குள் இருந்ததை ஒழுங்குபடுத்தி வைக்க முயற்சிக்கும் போதுதான் பார்த்தாள். ஒரு ஜோடி வளையல்களைக் காணவில்லை. பல முறை தேடி விட்டுப் பின்னர்தான் பதட்டத்துடன் வந்து சோபனாவிடம் கேட்டாள்.

''உங்க நகைகளை நான் விரும்பிக் கேட்டேனா? நீங்களே கொண்டு வந்து கொடுத்திங்க. போட்டுக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தினீங்க. இப்ப காணோம்னு கதை சொல்றீங்க... நல்ல வேடிக்கை...'' எடுத்த எடுப்பிலேயே எரிந்து விழுந்தாள் அவள்.

''உன்னிடம் கொடுத்தபோது சரியாக இருந்தன. இப்போ திடீர்னு ஒரு ஜோடியைக் காணலை...''

''அப்படின்னா நான் உங்க வளையல்களைத் திருடி விட்டதாகச் சொல்றீங்க. இல்லையா?'' கோபத்துடன் கேட்ட சோபனா உரத்துச் சிரித்து விட்டாள்.

''நீங்க உங்க பிறந்த வீட்டுக்கு யாருக்காகிலும் அனுப்பிவிட்டுக் காணாமல் போனதாகக் கதை கட்டலாம் அல்லவா?''

அனு திடுக்கிட்டுப் போனாள். சோபனா வயதில் அவளைவிடச் சிறியவள். ஆனால் வார்த்தைகளில் எத்தனை கபடமான கற்பனை! குரூரம்?...

கணவனிடமோ தாத்தாவிடமோ இதைப்பற்றிச் சொல்லி ஆலோசனை கேட்க அஞ்சி அவள் தனக்குள்ளேயே குழம்பியபடி இருந்தாள். இது சமயம் அவளது மனக் கலக்கத்தை அதிகப்படுத்துமளவு சசியும் அவளிடம் விரோதம் பாராட்டிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன் கல்லூரியிலிருந்து திரும்பிவந்த பொழுது தன் அறைக்குள் சென்றவன் தேள் கொட்டியது போல் அலறினான். காலையில் அவன் விட்டுப் போன அறையில் பல மாறுதல்கள். பாடுபட்டு பல நாட்களாக அவன் சேகரித்த அந்த சுவரொட்டிகள் போன இடம் தெரியவில்லை. பசையினால் அழுக்காகி விட்டிருந்த அறைச்சுவருக்கு வர்ணம் பூசி சுத்தப்படுத்தப்பட்டிருந்தது. தரை கழுவி சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்தது. புத்தகங்கள் ஒழுங்காக



அடுக்கப்பட்டிருந்தன. மேஜை இழுப்பறையில் கிடந்த சிகரெட் துண்டங்கள்... சூயிங்கம் துப்பல்கள் ஒன்றையும் காணவில்லை.

''என் அறைக்குள் யார் வந்தது?'' என்று அவன் இரைந்து கத்தியபோது ஜெய்குமார் எதிர்ப்பட்டான்.

''ஏண்டா கழுதையா கத்தறே? நான்தான் வந்தேன். தொடர்ந்து உன் அட்டகாசத்தை இனி அனுமதிக்க கூடாதுன்னு நான்தான் அறையை ஒழுங்கு செய்யச் சொன்னேன்...'' அதட்டினான்.

'இதெல்லாம் அண்ணியின் வேலை' என்றவரைக்கும் சசிக்கு அனுவின் மீது மனக்கசப்பு. இவங்க சொல்றது, நாம் கேட்பதா? என்ற வீம்பு, பிடிவாதம். எனவே அவன் அண்ணனிடம் அடிபட்ட பின்னர்கூட வேண்டுமென்றே தினமும் நேரம் சென்ற பின்னர்தான் வீட்டுக்கு வந்தான்.

அண்ணனுக்கும் தம்பிக்குமிடையே பிளவை ஏற்படுத்தக் கூடாதென்று மனம் கரைந்துபோன அனு, கணவன் உறங்கிவிட்ட பின் கீழே இறங்கி வந்து சாப்பாட்டு அறையில் சசிக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள். வெகு தொலைவில் மோட்டார் உறுமல் கேட்டதும் மெல்லக் கதவைத் திறந்து வைத்துவிட்டு அவன் வருகைக்காக வாயிலில் வந்து நின்று கொண்டிருந்தாள். அவ்வளவு நேரம் சென்ற பின்னரும் அலுத்துக் கொள்ளாது உணவைச் சூடுபடுத்திப் பரிமாறி உபசரித்தாள்.

சசிக்கு அவள் மேல் சந்தேகம். மிக்க அன்போடு கொழுந்தனைக் கவனிப்பது போல் அண்ணி நடிக்கிறாள் என்ற நினைப்பு.

அன்று இரவு அனுவுக்குத் தாங்க முடியாத தலைவலி. மருந்தைச் சாப்பிட்டுவிட்டு மயக்க நிலையில் சீக்கிரமே படுத்து விட்டாள். நடு இரவின் போது பலத்த இடியுடன் பெருத்த மழை கொட்டத் தொடங்கியது. விழிப்பு ஏற்பட்டு விளக்கைப் போட்டாள். நேரம் நடு இரவைத் தாண்டி விட்டதைக் கண்டு பரபரப்படைந்து போனாள். சசி வீட்டுக்கு வந்துவிட்டானா?... கவலையுடன் எழுந்து அவன் அறைக்குள் சென்று எட்டிப் பார்த்தாள். காணவில்லை. கீழே இறங்கி வந்தாள். சத்தமிடாது கதவைத் திறந்து வெளியே பார்த்தவள் திடுக்கிட்டுப் போனாள். மழையோடு வேகமாக வீசிய காற்றில்

வராந்தா முழுவதும் நனைந்து விட்டிருந்தது; சுவரோரமாக ஒண்டிக்கொண்டு சசி உட்கார்ந்திருந்தான். எத்தனை நேரமாக அவன் இங்கே இருந்தானோ தெரியாது.

''எப்போ வந்தே? மணியடிச்சது கூடக் கேட்கலை. நல்லா தூங்கிவிட்டேன்...'' அனுதாபத்துடன் சொல்லியபடி கதவை நன்றாகத் திறந்து உள்ளே வர வழி விட்டாள்.

விளக்கு வெளிச்சத்தில் கவனித்தாள். அவன் சொட்டச் சொட்ட நன்றாக நனைந்து விட்டிருந்தான்.

''தலையைத் துவட்டிக்கொண்டு வா... சூடாகச் சாப்பிட ஏதாச்சும் தருகிறேன்'' என்றபோது அவன் சினம் தாங்காது சீறினான்.

'போதும் அண்ணி. பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலை ஆட்டுகிற ப்லே ஆசாமி நீங்க. வந்து ஒரு மணிநேரமா மணியை அடிச்சுப் பார்க்கிறேன். கதவைத் திறக்கலை. மழையிலே என்னை வெளியே நிறுத்தி வச்சு வேடிக்கை பார்த்தீங்க. இப்போ சாப்பிடவான்னு உபசரிக்கிறீங்க... நீங்க பெரிய நடிகை... எங்க அண்ணன் உங்க பேச்சுக்கு ஆடறதில் அதிசயமில்லை. அவர் ஒரு முட்டாள்...'' கோபத்துடன் ஏளனமாகப் பேசிவிட்டு உடையிலிருந்து மழைத் தண்ணீர் தரை முழுவதிலும் சொட்ட அவன் வேகமாக மாடிப்படிகளைக் கடந்து தன் அறைக்குள் சென்று 'படீர்' எனக் கதவைச் சாத்திக் கொண்டு விட்டான்.

அதற்குப்பின் அன்று அனு உறங்கவேயில்லை.

மறுநாட் காலை. அவன் காப்பி கூடச் சாப்பிடாது யாரிடமும் சொல்லிக் கொள்ள விரும்பாது கல்லூரி நேரத்திற்கு முன்னதாகவே புறப்பட்டுப் போய்விட்டான். சோபனாவும் முகம் கொடுத்துப் பேசவில்லை. கல்லூரிக்கு நேரமானதும் அவள் புத்தகங்களுடன் 'விர்' என்று வெளியே சென்று காத்திருந்த காரில் ஏறிக் கொண்டு விட்டாள். இருவரும் சென்றபின் மாடியறைக்குள் வந்து உட்கார்ந்த அனுவுக்கு துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

தாத்தா அவளது திறமையைப் பற்றித் தவறாகக் கணக்கிட்டுக் கொண்டு பல பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டிருந்தார். ஆளுக்கு ஒரு மூலையாக இழுத்துக் கொண்டு போகும் அந்தக் குடும்பத்தின் பொறுப்பை இனி அவள் எப்படிச் சமாளிப்பாள்? குருவி தலையில்



பனங்காய் போலல்லவா... பாரமாகக் கனக்கிறது. எண்ணியபடி கண்கலங்கிப் போய் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தாள்.

தொலைபேசியின் மணி கிணுகிணுத்தது. விழிப்புற்று எழுந்து சென்று எடுத்தாள்.

''யாரது? சசியின் சிநேகிதன் கௌசிக் பேசுகிறாயா?... என்ன சொல்றே? சசியின் மோட்டார் சைக்கிளோடு லாரி மோதிக் கொண்டு விட்டதா? சசிக்குக் காயமா?...'' அவளது உடலும் உள்ளமும் கிடுகிடுவென நடுங்கின. ''இரு வந்துட்டேன். அவரைக் கூப்பிடறேன்...'' ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு வேகமாக ஹாலைத் தாண்டி அந்த கோடியறைக்குள் நுழைந்தாள். குளித்து விட்டு வேறு உடை உடுத்திக் கொண்டு முகத்தைத் துண்டால் துடைத்தபடி கண்ணாடி முன்னால் குமார் நின்று கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அவளுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை.

''உங்க தம்பி சசி... மோட்டார் சைக்கிள் விபத்தில்...'' பேச முடியாது திணறிக் கொண்டு தன்னையும் மீறிய பரபரப்பில் கணவனது தோளைப் பற்றிக் கொண்டு ''எனக்குப் பயமாக இருக்கு...'' என்று விக்கி அழுது விட்டாள்.

''பயப்படாதே, அழாதே... தைரியமாயிரு... நான் எல்லாத்தையும் கவனிச்சுக்கிறேன்.'' ஆறுதலாகச் சொல்லியபடி மனைவியை இறுக அணைத்துக் கொண்டான் ஜெய்குமார்.

# 17

அந்தத் தனியார் மருத்துவமனை மாடியில் ஏ.சி. - அறையில் அவன் கருத்தான கவனிப்பில்தான் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

லாரி விபத்தில் அவன் உயிருடன் இருப்பதே அதிசயமான சங்கதியாகும். எலும்புகள் முறிவின்றி பலத்த சிராய்ப்புக் காயத்துடன் அவன் தப்பிவிட்டிருந்தான். தொடை - கை - கால்கள் - தோள்பட்டை என்று பல இடங்களில் காயம் - அவைகள் மீது பலத்த பிளாஸ்திரிக்

கட்டு.

மயக்க மருந்தின் உதவியால் முதல் இரண்டு தினங்கள் தன் நினைவின்றி வேதனை தெரியாது உறங்கி விட்டு இருந்தான். விழிப்பு ஏற்பட்டபோது வெகு ஆழத்தில் மூழ்கி விட்டவன் நீர் மட்டத்திற்கு வருவது போன்ற ஒரு உணர்வு - கண்களில் எரிச்சல். இமைகளை மெல்லத் திறந்து பார்த்தான். மங்கலாக அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவு நேரம் என்றவரை புரிந்தது. படுக்கைமீது சற்றுப் புரளத் திரும்பிய போது உடல் முழுவதும் புண்ணாக நொந்தது. வேதனை தாளாது, அம்மா!' என்று ஓங்கிய குரலில் கூவ வாயெடுத்தான். அடக்கிக் கொண்டு ஜன்னல் அருகே தெருவைப் பார்த்தபடி அண்ணனும் அண்ணியும் அருகருகே நின்று கொண்டு இருப்பது தெரிந்தது. அவர்கள் பேசுவது நன்றாகக் கேட்டது. சட்டென்று கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டு விட்டான்.

''மூன்று நாளா நீ தூங்கவேயில்லை. இன்னிக்குக் கூட நீ இங்கேயே இவனைப் பார்த்துக் கொள்ள தங்கப் போறியா! இனிமேலே கவலையில்லைனு டாக்டர் சொல்லிவிட்டாரே. நர்ஸ் பார்த்துக் கொள்வாங்க - நீ வீட்டுக்கு வந்து கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள். வீட்டு வேலை, நடுநடுவே இவனைப் பார்த்துக் கொள்ள இங்கே ஓடி வருகிறது - ராத்திரி முழுவதும் கண் விழிக்கிறதுன்னு ஒரேயடியாக அலட்டிக்கிறே - பிறகு உன் உடம்புக்கு ஏதாவது வந்து விட்டால்...'' கவலைப்பட்டான் ஜெய்குமார்.

''இன்னிக்கும் இங்கேயே இருந்து பார்க்கிறேன். நினைப்பு வந்துட்டா நாளைக்கு நம்ம வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய்விடலாம்னுதான் டாக்டர் சொல்லியிருக்காரே. இன்னும் ஒரு போது... கண்விழிச்சா நான் கரைஞ்சா போயிடுவேன்...'' அவள் மெல்ல சிரித்தாள்.

''அத்தனை திமிரா மரியாதையில்லாமே உன்கிட்ட பேசினவன் சசி. கொஞ்சங்கூடக் கோபப்படாமல் நீ பரிவோடு அவனை கவனிக்கிறே. உனக்கு அவன்மேலே எத்தனை இரக்கம்! சட்டையெல்லாம் ரத்தக் கரைகளோட நினைவு இல்லாத நிலையிலே அவனைத் தூக்கிக் கொண்டு வந்த போது நீ எப்படி துடிச்சுட்டே... ரொம்ப ஆச்சர்யம்...'' என்றான் குமார்.



''இதில் ஆச்சரியம் ஒண்ணும் இல்லை. வந்த நாளிலிருந்து எனக்கு சசி மேலே ரொம்ப பிரியம். கோபமோ விரோதமோ இடையவே கிடையாது. தாய் முகத்தைப் பார்க்காது வளர்ந்த குழந்தைன்னு சசி - சோபனா இரண்டு பேரைப் பற்றியும் எனக்கு உள்ளூர ரொம்ப இரக்கம். எனக்கும் சிறு வயதிலேயே பெற்றோர்கள் காலமாகி விட்டாங்க. ஆனால் அந்தக் குறையே தெரியாம என் அண்ணனும் அண்ணியும் என்னைக் குழந்தையாக வளர்த்தாங்க. ஆனால் இவர்கள் இரண்டு பேரும் சிறு வயதில் அன்பையே அறியாது, வேலைக்காரர்கள், வந்தவர்கள் போனவர்கள் கவனிப்பில் வளர்ந்த குழந்தைகள். அதை நினைக்க நான் மிகவும் வேதனைப் படுறேன்... பாவம்!''

அப்போ தாத்தாவை யார் கவனிப்பது!''

''தங்கவேலுதான் இந்த மூன்று நாட்களும் கவனித்துக் கொள்கிறார். இன்னிக்கும் தொடர்ந்து கவனித்துக் கொள்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். சசி கண்ணை விழிச்சா அவனுக்கு ஏதாவது சாப்பிட கொடுக்கணும். இந்த மூணு நாளும் வெறும் டிரிப்பில்தானே அவனைப் போட்டு வச்சிருக்காங்க. இந்தச் சமயம் நான் ஏனோ தானோன்னு விட்டுட்டு வருவது சரியில்லை, தாத்தா புரிஞ்சுக்குவார்...'' என்றாள்.

''அப்போ நான் மட்டும் தனியா வீட்டுக்குத் திரும்பணுமா?...'' தயங்கியபடி நின்ற குமார் மெல்ல அவள் அருகே நெருங்கினான்.

''ஒண்ணு தெரியுமா அனு உனக்கு. நீ இல்லாத இந்த மூணு நாளா நம் வீடு வெறிச்சோன்னு கிடக்கு... தங்கவேலுதான் எங்களுக்கு எப்போதும் சாப்பாடு பறிமாறுவது வழக்கம். ஆனால் நீ வந்த பிறகு அந்தப் பொறுப்பை ஏத்துக் கொண்டதும் எல்லாமே மாறிப் போய்விட்டது. நேற்று தங்கவேலு கொண்டுவந்து பரிமாறின ரசம் எனக்குப் பிடிக்கவேயில்லை... உப்பு போதலைன்னு நான் அவனிடம் இரைஞ்சு கத்திட்டேன்.''

''உங்களுக்கு எதுக்கும் சட்னு கோபம் வந்துடறது. அதைக் கொஞ்சம் கட்டுப்படுத்த முயற்சிக்கணும். அன்னிக்கு அப்படித்தான் தம்பியைக் கைநீட்டி அடிச்சிட்டீங்க.''

''அவன் என்ன வார்த்தை சொன்னான்?''

'சொல்லிட்டுப் போறான். அறியாதவன். பின்னாடித் தன்னையே திருத்திக் கொள்வான். எனக்கு நம்பிக்கை இருக்கு. உங்களுக்கு, ரொம்ப கோபம், அவசரம். அடிச்சிட்டீங்க. இப்பவே சொல்லி வைக்கிறேன் நாளைக்கு அவனை வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வரப்போகிறேன். வந்ததும் வராததும் அந்த விபத்தைப் பத்திப் பேசி அவனை நீங்க கோவிக்கக்கூடாது. விபத்து என்பது யாரும் வேணுமின்னு செய்கிற காரியமில்லை. உங்க குடும்பத்து நண்பர் புகழேந்தி இப்போ போக்குவரத்து இலாகாவிலே தலைமை அதிகாரியாக இருக்கிறார். அவர் தாத்தாவைப் பார்த்து விபத்தைப் பற்றி நேரடியாகச் சொல்லிட்டுப் போக முந்தாநாள் சாயங்காலம் வீட்டுக்கு வந்திருந்தார். இந்த விபத்தைப் ப்ற்றி விவரமாக அவரே சொன்னார். சசி மேலே தப்பே இல்லையாம். அந்த லாரிக்காரன் முன் எச்சரிக்கை இல்லாம திடீர்னு 'யூ' டர்ன் எடுத்தானாம். நல்லவேளை தம்பி மெதுவாகப் போய்க் கொண்டிருந்ததினால் உயிர் பிழைச்சதாம். லாரியடியிலே சைக்கிள் நசுங்கிக் கிடந்ததைப் பார்த்தா இந்த விபத்திலே தம்பி உயிரோட இருப்பதே பெரிய விஷயம்... அவர் விவரமாக எல்லாவற்றையும் சொன்னதைக் கேட்டு தாத்தா சசி ஒரு கண்டத்திலிருந்து தப்பினானேயம்மான்னு வாய்க்கு வாய் சொல்லி உருகிப் போனார்.''

''தாத்தாவுக்கும் அண்ணிக்கும் சசி மேலே உள்ளூர ரொம்ப ஆசையின்னு சொல்லு.''

''தாத்தா பார்வைக்குத்தான் கடுமையாகத் தென்படுகிறார். மனத்திற்குள் எல்லார் மீதும் அவருக்கு ரொம்பப் பாசம். வெளியே காட்டிக்கொள்வதில்லை. இந்த விபத்துக்கு சசி பொறுப்பாளியில்லை. அதனாலே உங்களை எச்சரிக்கிறேன். அவனைப் பார்த்ததும் தடாபுடாவென்று கத்தி அதட்டாதீங்க. ஏற்கனவே அவன் அதிர்ந்து போயிருக்கான்.''

''உத்தரவு ராணியம்மா...'' ஜெய்குமார் சிரித்தான்.

''ஆபீஸ் விஷயங்களில் நீங்க இப்போ ரொம்ப அக்கறை காட்டுறீங்க. அதேபோல வீட்டு விஷயங்களிலும் இருந்தால் வீட்டில் எல்லோரும் ஒற்றுமையாக மகிழ்ச்சியாக இருக்கலாம் இல்லையா?''

''நான் என்ன செய்யணும் சொல்லு.''



''உங்க தம்பி, தங்கையின் படிப்பு - வளர்ச்சி - அவர்களது வருங்காலம் இவைகளில் அதிக சிரத்தை காட்டி எல்லோருடனும் சரளமாகப் பழகணும். எல்லோரையும் அன்பா அரவணைக்கப் போகக் கத்துக்கணும்.''

''நீதான் கற்றுக் கொடுக்கணும். இதில் நீ மிகவும் கெட்டிக்காரியாச்சே. நான் இப்போ எவ்வளவோ மாறிப் போயிட்டேனே'' ஜெய்குமார் சிரித்தபடி அவள் கன்னத்தை லேசாகத் தட்டினான்.

''சரி நேரமாச்சு. போய் கொஞ்சம் தாத்தாவையும் கவனிச்சுக்கங்க.''

பிரிய மனமில்லாதவன் போல் தயக்கத்துடன் அவன் கிளம்பினான். கதவருகில் போனவன் திரும்பினான்.

''ரெண்டு நாளா கண் விழிச்சிருக்கே. இன்னிக்கு நேரம் கிடைச்சா கொஞ்சம் அந்த சோபாவிலே படுத்துத் தூங்க முயற்சி பண்ணு'' பரிவுடன் சொல்லிவிட்டு வெளியேறினான்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே படுத்திருந்த சசி மனம் நெகிழ்ந்து போனான். மூடியிருந்த இமைகள் கனத்துக் கண்ணீர் காதோரத்தில் வழிந்து அப்படியே தலையணை மீது கொட்டியது.

அவன் ஏன் இத்தனை நாளாக பெருத்த மடையனாக இருந்திருக்கிறான். பரிவும் - பாசமுடன் கவனித்த அண்ணியை புரிந்து கொள்ளாது அவமானப்படுத்தினானே. நியாயமா?

கூடப் பிறந்த தங்கை சோபனா, இப்படிக் கண் விழித்து என்றாகிலும் அவனுக்குப் பணிவிடை செய்திருக்கிறாளா? ஒருமுறை அவன் நிமோனியா காய்ச்சலில் படுத்துக் கிடந்த போது எட்டிக் கூடப் பார்க்காது சினிமாவுக்குத் தன் தோழிகளுடன் போனாளே சுயநலக்காரி!

இத்தனை வருஷங்களாக அட்டை போல் வீட்டோடு ஒட்டிக் கொண்டு சுகமாகக் காலங்கழிக்கும் ரத்னா அத்தை மட்டுமென்ன? தூண்டிக் கொடுத்து வேடிக்கை பார்ப்பதுடன் சரி. ஒரு தலைவலி -காய்ச்சல் என்று யாராவது படுத்தால் விரல் அசைக்க மாட்டாங்களே! போகட்டும்; அன்பாக ஒரு வார்த்தையுண்டா! அதற்குக் கூட

அவங்களிடம் பஞ்சமாயிற்றே! ம்...

இந்த அனு அண்ணி வந்து சில மாதங்கள்தான் ஆகின்றன. பல ஆண்டுகள் பழகியது போல் அன்பும் பரிவும் காட்டுவதுடன் எத்தனை பொறுப்பு? சே! சே! அவங்ககிட்ட மரியாதையில்லாமல் நடந்து கொண்டது எத்தனை தவறு... மாபெரும் பிசகு... தன்னையே நொந்து கொண்ட அவனுக்கு வெட்கமாகத்தானிருந்தது. மெல்லத் திரும்பினான். வேதனை தாளமுடியாது அம்மா' என்று வாய்விட்டு அரற்றி விட்டான்.

சட்டென்று அருகில் ஓடி வந்தாள் அனுராதா.

''தம்பி! முழிச்சுப் பார்... உடம்பை என்ன செய்கிறது?'' அன்போடு விசாரித்தாள்.

தாயை அவன் பார்த்ததில்லை. ஆனால் அனுவின் கனிவுக் குரல் அவன் உடலைப் புல்லரிக்கச் செய்தது. கண்களில் நீர் முட்ட -கட்டுப்படுத்த முடியாது. ''அண்ணி!'' என்று அரற்றினான். பரபரப்புடன் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அருகில் உட்கார்ந்தாள் அவள்.

''நான் கிட்டத்தான் இருக்கேன். முழிச்சுப் பார் தம்பி.''

அவன் கண்களைத் திறந்தான். பார்வையைக் கண்ணீர் மறைத்தது. உடல் வலியைவிட வெட்கம்... நெஞ்சைப் பிசைந்த வேதனையைத் தாளமுடியவில்லை.

''அண்ணி மன்னிச்சுக்கோங்க... தாய் போல அன்பு காட்ற உங்களைப் புரிஞ்சுக்காம அன்னிக்கு...'' விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

அருகிலிருந்த துண்டை எடுத்து அவனது கண்ணீரைத் துடைத்தாள் அனு. நெற்றி மீது புரண்டு கிடந்த முடியை மெல்லத் தள்ளி ஒதுக்கி விட்டாள்.

''சசி! வீணாக மனதைக் குழப்பிக்காதே. என்னைப் பொறுத்தவரை நீயும் சோபனாவும் என் குழந்தைகளுக்குச் சமம். அப்படித்தான் உங்களை நான் பாவிக்கிறேன்.'' ''அண்ணி, உங்களைப்பத்தித் தவறா நினைச்ச பாவத்துக்கு எழுந்திருந்து உங்க காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்கணும்போல எனக்கு ஒரே



ஆத்திரமா இருக்கு...'' விம்மினான் அவன்.

''அதைவிட நான் சொல்வதைக் கேட்டா எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கும்.''

''சொல்லுங்க அண்ணி'' கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவன் ஆவலுடன் கேட்டான்.

''இரண்டு நாளா நீ தண்ணி, ஆகார நினைவு சரியா இல்லாமக் கிடந்தே. இன்னிக்கு என் கையால சமைச்சுக் கொண்டு வந்திருக்கிறேன். உனக்குப் பிடிச்ச பூண்டு ரசம்-உருளைக்கிழங்கு பொரியல் -எலுமிச்சை ஊறுகாய் ... ஒரு வாய் சாப்பிடு... பின்னால் படுக்கப் போகுமுன் ஒரு கிளாஸ் ஓவல் கலக்கித் தரேன், குடிச்சிட்டு நல்லாத் தூங்கு. நாளைக் காலை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவேன். அங்கே உன்னை இதைவிட சௌகர்யமாக பார்த்துக்க முடியும். சரிதானே?''

''அண்ணி! நீங்க இனி என்ன சொல்றீங்களோ அதையெல்லாம் நான் கேட்கத் தயார் - உண்மை...'' என்றான் உணர்ச்சிவசப்பட்ட சசி.

அனுராதா மகிழ்ச்சியுடன் எழுந்து சென்று டிபன் செட்டை எடுத்து வந்து திறக்கத் தொடங்கினாள்.

ஊரிலிருந்து வந்த ரத்னா அத்தைக்கு மிக்க வியப்பு. சதா ஏதாவது குற்றங் கண்டு பிடித்து முணு முணுத்தபடி இருந்த சசி திடீரென்று மாறிவிட்டிருந்தான். காரணம் அவளுக்கு விளங்கவில்லை. கல்லூரியிலிருந்து நிதமும் சீக்கிரமே திரும்பி வரத் தொடங்கினான். வந்ததும் அண்ணி அனுவுக்கு உதவியாகக் கடைகளுக்குக் காரைச் செலுத்திக்கொண்டு போய் வந்தான். சாமான்களைத் தூக்கி வந்து உள்ளே வைக்க உதவினான். அண்ணி கூப்பிட்டீங்களா என்று கேட்டபடி நாய்க்குட்டி போல் அவள் பின்னாலே ஓடிக் கொண்டிருந்தான். இந்தப் பையனுக்கு என்ன வந்து விட்டது? பத்துநாளில் மந்திரத்தில் கட்டுப் பட்டவன் போல் ஒரேயடியாகத் திசை திரும்பி விட்டானே!... ரத்னாவால் இந்த அதிசயத்தை ஏற்கவே முடியவில்லை.

சோபனாவுக்கும் தன் அண்ணனிடம் காணப்பட்ட மாறுதல் விசித்திரமாகவும் வேண்டாததாகவும் இருந்தது. சசி மீது அவளுக்கு எரிச்சல்.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் மாலை. மாடி ஹாலில் காத்திருந்தாள் சோபனா. அனுவைக் கண்டதும் விருக்கென்று எழுந்து உள்ளே சென்று விட்டாள். கையோடு கொண்டு வந்த பைல்களை மேசை மீது வைத்து விட்டுத் திரும்பிய பொழுது தான் அனுராதா கவனித்தாள். சோபாவின் இடுக்கிலே ஒரு கடிதச் சுருள் கிடந்தது. ஏதோ துண்டுக் கடிதம் என்று அப்புறப்படுத்த எடுத்த போதுதான் புரிந்தது. சோபனாவுக்கு யாரோ எழுதியிருந்த கடிதம் - பலமுறை அவள் படித்துக் கசக்கி விட்டு இடுப்பில் செருகிக் கொண்டிருக்கிறாள். நழுவி அங்கே விழுந்து விட்டிருக்கிறது.

முதலில் தயக்கமாக இருந்தது. ஆனாலும் சந்தேகம். வேகமாகத் தன் அறைக்குள் சென்று கதவை சாத்தித் தாளிட்டுக் கொண்டு கடிதத்தைப் பிரித்தாள்.

"மூன்று நாட்களாக நான் உன்னை எதிர்பார்த்து மேலே குறிப்பிட்டிருக்கும் முகவரியில் இருக்கும் லாட்ஜில் தங்கியிருக்கிறேன். என்னுடைய போன் செய்திக்கும் பதில் இல்லை. நீ வராது ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய். என்னை நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. எனக்கு வேண்டியது கணிசமான ஒரு தொகை. அந்த வளையல்கள், சங்கிலி இவைகளை விற்று வந்த பணம் போதவில்லை. நீ எழுதிய காதல் கடிதத்தைத் திரும்பப் பெற வேண்டுமானால் நீ இன்னும் நான்கு நாட்களுக்குள் நான் கேட்ட இருபதாயிரம் ரூபாய்களை நோட்டுகளாக கொண்டுவந்து நேரில் வந்து கொடுக்க வேண்டும் - என்னுடன் ஒரு நாள் லாட்ஜில் நீ தங்கியிருக்க வேண்டும். பின்னர் உன் வழிக்கு நான் வரமாட்டேன். இல்லாவிட்டால் உனக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணம் நடக்காது. ஒரு சாதாரண தொழிலாளியுடன் உனக்கு காதல் தொடர்பு உண்டு என்பதை பெரிய இடத்து அந்த மாப்பிள்ளை கேள்விப் பட்டால் உன்னை மணம் புரியத் துணிவானா? சிந்தித்துப் பார்.

— செல்லப்பன்"

நெஞ்சும் நாவும் உலற அனு செயலற்று நின்று கொண்டிருந்தாள்.



# 18

அனுவுக்கு எல்லாம் புரிந்து விட்டது. சோபனாவுக்குச் செல்லப்பன் என்பவனுடன் ஏற்கனவே தொடர்பு காதல் என்று ஆரம்பித்து அதை இப்போது பயமுறுத்தும் ஆயுதமாக உபயோகிக்கும் அவன் எப்படிப் பட்டவன் என்று அவளால் ஊகிக்க முடிந்தது. கசங்கிப் போன அந்தக் கடிதத்தை மறுபடியும் உற்றுப் பார்த்தாள். அவசரமாக நோட்டுப் புத்தகமொன்றிலிருந்து அசட்டையாகக் கிழிக்கப்பட்ட காகிதம் - அவனது கையெழுத்தையும் - காகிதத்தையும் பன்முறை ஊன்றிப் பார்த்தபோது செல்லப்பன் கற்பனையில் உருவாகி நின்றான்.

வாரி விடாது மேலே பம்பென்று எழுந்த முடி பிடரியில் புரள - தொங்கு மீசையும் - தாடியுமாக முண்டா பனியனும், லுங்கியும் தரித்து தெருமூலைக் கடையொன்றில் துண்டு பீடிகளைப் பொறுக்கிப் பற்ற வைத்துக் கொண்டு நின்ற ஒரு அடி மட்டத்துப் போக்கிரி அவள் நினைவில் வந்து நிற்கவே அவள் அருவருப்பும் கிலியும் தாளாது உடல் சிலிர்த்துப் போனாள்.

சோபனா பெரிய இடத்துப் பெண் - படித்தவள் - மட்டரகமான ஒரு மனிதனிடம் எப்படிச் சிக்கியிருப்பாள்? இந்த விஷயம் இதுவரை வீட்டில் யாருக்கும் தெரியாதிருப்பது ஆச்சர்யமே? கழுத்துச் சங்கிலி, வளைகள் காணாமல் போனதுடன் இன்னும் என்னென்னவற்றை சோபனா அறிவிழந்து போய் பறிகொடுத்து விட்டு நிற்கிறாளோ.

வளர்கின்ற ஒரு பெண் குழந்தையைக் கவனித்துக் கொள்ள இந்த வீட்டில் பொறுப்பான ஒரு பெண் பிள்ளை இல்லாது போனது எந்த விதமான விபரீதத்தில் முடிந்து விட்டிருக்கிறது? ரத்னா அம்மாள் வயதில் பெரியவள். சோபனாவுடன் நெருக்கமாகப் பழகிக் கொண்டிருந்தாள். அவள் கூட புரிந்து கொள்ளவில்லையே? தாத்தாவின் நரிக் கண்களுக்குத் தப்பி தவறான காரியம் நடந்து விட்டிருக்கிறது. இதை இனி எப்படி சமாளிப்பது? உண்மை அந்த தஞ்சாவூர்க்காரருக்கு எட்டி விட்டால்!... ஆயிரம் ஊசிகள் உடலைத் துளைத்து விட்டது போன்ற வேதனை. பலபல எண்ணி அனு உறக்கமே இன்றி இரவு முழுவதும் திகிலில் தவித்தாள்.

மறு நாட் காலை விடிந்ததும் அவளுக்குத் தாங்கொணா தலைவலி. விரைவில் குளித்துவிட்டு வேறு உடுத்துக் கொண்டு பூக்குடலையும் - தண்ணீர் குடத்தையும் சுமந்து கொண்டு, பிள்ளையாரை ஆராதிக்க வாயிலுக்கு விரைந்தாள். விடியுமுன்பே எழுந்து பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தான். அவனும் விரைவில் குளித்து விட்டு சுவாமியைக் கும்பிட வாயிலுக்கு வந்து கொண்டிருந்தான்.

''நான் குடத்தையும், குடலையையும் தூக்கிக் கொண்டு வரேன் - இப்படிக் கொடுங்கள்...'' வாங்கிக் கொண்டு அவன் முன்னே நடந்தான். அண்ணிக்கு ஏதாவது தன்னாலான உதவிகளைச் செய்வதில் அவனுக்கு இப்போதெல்லாம் மெத்த மகிழ்ச்சி - திருப்தி. அப்போது முன்னறையிலிருந்த தொலைபேசி மணி கிணுகிணுத்தது. அநு விரைவில் திரும்பி வீட்டிற்குள் ஓடினாள்.

விடியும் தறுவாயில் அவசரமாக யார் அழைக்கிறார்கள்? தாத்தாவின் உறக்கம் கலைந்து விடுமோ என்ற கவலை அவளுக்கு.

ரிஸீவரை கையில் எடுத்தாள். மறு பக்கத்திலே ஒலித்த குரல் அவளுக்கு மிகவும் புதியது. தகர டப்பாவைத் தரையில் வைத்து இழுப்பதைப் போன்று காதைக் கிழித்த கரகரத்த குரல்.

''சோபனாதானே பேசறது? இந்த போனுக்கு வேறே கனெக்ஷன் இல்லையில்லையா - நாம் பேசுகிறதை வேறே யாரும் கேட்க முடியாதுன்னு தெரிஞ்சு தான் கூப்பிட்டேன்.'' அதட்டியது ஓர் ஆண் குரல்.

திகிலில் அனுவுக்கு மூச்சு முட்டியது... நெஞ்சிலே ஒரு படபடப்பு - கையும், காலும் உதற, அவள் பேசத் தோன்றாது மௌனமாக உறைந்து போய் நின்றாள்.

''என்ன கம்னு இருக்கே?'' அதட்டியது மீண்டும் அந்த முரட்டுக் குரல்.

சட்டென்று துணிவும், ஒரு யோசனையும் தோன்றவே அவள் சமாளித்துக் கொண்டாள். சோபனாவாக நடிக்கத் தீர்மானித்தாள். ''ஆமாம்; சொல்லுங்க சீக்கிரம்'' குரலை மெல்லியதாக்கிக் கொண்டு போனில் கிசுகிசுத்தாள்.



''நேத்து பொழுது முழுவதும் காத்திருந்தேன். என்னைத் தட்டிக் கழிச்சுட்டதாக உன் நினைப்பு. ஆனால் நான் ஏமாற மாட்டேன். எச்சரிக்கிறேன். என் கையிலே நீ வசமா மாட்டிக்கிட்டிருக்கிறேங்கிறதை ஞாபகப்படுத்தரேன்... என்ன?...'' உறுமினான் அவன்.

''கேட்டுக்கிட்டிருக்கேன்... சுத்தாம பேசுங்கோ'' அநு மறுபடியும் குரலைத் தாழ்த்திக் கொண்டாள்.

''இந்த சங்கடத்துக்குள்ளே சிக்கினத்துக்கு நீயே தான் பொறுப்பு. இப்போ ஒதுங்கி ஓடறதிலே லாபமில்லே. உங்க வீட்டு ஏர்கண்டிஷன் சாதனத்தை ரிப்பேர் பண்ண வந்தப்போ நீதானே உள்ளார ஓடிப் போய் சூடா எனக்குக் காப்பி கொண்டு வந்து உபசரிச்சே, கண்களாலே மயக்கிச் சிரிச்சுப் பேசிக்கிட்டு நின்னே... மூணு வருசத்துக்கு முந்தி நடந்த கதையானா கூட நீதானே என் மனசிலே இல்லாத ஆசைகளைத் தூண்டிவிட்டே?''

''அதுக்கு இப்போ என்ன?'' முணுமுணுத்தாள் அநு.

''என்னவா? பெரிய மனுசர் வீட்டுப் பெண் நம்மைப் பார்த்து மயங்கிட்டாளேன்னு நான் பூரிச்சுப் போனேன். சைக்கிளை எடுத்துக்கிட்டு நீ படிக்கிற காலேஜ் வாசல்ல தவங்கிடந்தேன். அப்போவாவது நீ முகத்தாலே அடிச்சு உன் அந்தஸ்துக்கு நான் தகாதவன்னு விளக்கியிருக்கலாம். அதை விட்டுவிட்டு பல்லைக் காட்டிக்கிட்டு எங்கிட்ட நின்னு பலவும் பேசினே - ''

''தெரியாத்தனம்...'' அநு பெருமூச்செறிந்தாள் ஈனஸ்வரத்தில்.

''சொல்லமாட்டியா இப்போ? என் உணர்ச்சிகளைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்த்தே - அது உனக்கு பொழுதுபோக்கு. ஆனா ஒண்ணு நீ மறந்துட்டே... தினமும் நீ எங்கிட்ட நின்னு சிரிச்சுப் பேசினதை நான் வேறாகப் புரிஞ்சு கொண்டேன். மலையிலே விளைஞ்ச மூலிகையானாலும், கடையிலேதான் விலை போகணும்ம்னு எனக்குள்ள ஒரு தெம்பு ஏற்பட்டது. பணக்கார வீட்டு மகளா இருக்கட்டுமே படிக்காத - அழகு அதிகமில்லாத அந்தஸ்தில்லா என்கிட்டே மயங்கிட்டாளே... அப்படின்னு நினைச்சு உற்சாகத்திலே நான் ஆகாயத்திலே பறந்தேன். போதாதுக்கு என் ஆசையைத் தூண்டி விடறாப்போல ஒரு கடிதாசி வேறே எழுதிட்டே. இப்போ கேட்டா எல்லாம் வேடிக்கைக்குச்

10

செய்தேங்கிறே... உனக்கு வேடிக்கை எனக்கு வேதனையா... இதுக்கு உன்னை நான் சும்மா விடுவேன்னு நினைக்கிறியா?... நெருப்போட விளையாடினால் உன்னையும் சுட்டுடும். உன்னைச் சுட்டுப் பொசுக்கிவிட்டுத்தான் மறுகாரியம்னு கிளம்பிட்டேன். தெரிஞ்சுக்கோ...''

''தயவு செய்து அதையெல்லாம் மறந்து மன்னிச்சுடுங்கோ. நீங்க நினைக்கிறது நடக்க முடியாத காரியம்...'' அனு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் பேசினாள்.

''ஆமாம்; நடக்க முடியாததுதான் ஏன்னா நீ பெரிய ராணி. எங்கம்மாவுக்கு மருமகளா ஒண்டிக்குடித்தனத்திலே அந்த சந்து வீட்டிலே வந்து எங்களோட வசிக்க முடியாதுதான். ஆனால் கண்டவனுக்கு வேடிக்கையாக வேணும்னே காதல் கடிதாசி மட்டும் எழுதத் தெரியும். நீ எழுதிய கடிதாசியை உனக்கு வரப்போகிற மாப்பிள்ளைக்கே அனுப்பி உங்க குடும்ப மானத்தை ஊதித் தள்ளிடுவேன்...''

''ப்ளீஸ்... அதுமாதிரியெல்லாம் செய்யாதீங்க...''

''அப்படி வா வழிக்கு. அன்னிக்கு போன்லே உன் காலேஜுக்குக் கூப்பிட்டுச் சொன்ன அந்தத் திட்டத்துக்கு, நீ ஒப்புக் கொண்டு விடு. கடிதாசிலே நான் குறிப்பிட்ட அத்தனைப் பணத்தைத் திரட்ட முடியாட்டா உன் நகைப் பெட்டியைத் தூக்கிட்டு வந்து கொடுத்துடு. அதுகளை வித்து நான் வினாடியிலே பணமாக்கிக்கிறேன. அத்தோட இந்த ஐயாவுக்கு மனைவியா ஒரே ஒரு நாள் லாட்ஜ்லே தங்கி விடு. அப்புறம் உன் வழிக்கு வரமாட்டேன். உன் கடிதாசியை உன் மூஞ்சிலே விட்டெறிஞ்சுடறேன்... என்ன சொல்றே...?''

''ம்...ம்...''

''என்ன...ம்... ஒத்துக்கிறியா? சரி. உனக்கு லாட்ஜினுடைய போன் நெம்பரை கடிதாசிலே குறிப்பிட்டிருக்கேன். வர்ரதுக்கு முந்தி போன் பண்ணு. சனிக்கிழமை சாயங்காலம் உன்னை எதிர்பார்ப்பேன். ஏமாத்தினேயோ, அப்புறம் என்ன நடக்கும்னு சொல்ல மாட்டேன். பணமோ நகைப்பெட்டியோ கூட வரணும்.''

உறுமி விட்டு போனை டக்கென்று வைத்து விட்டான்.

முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு நடை



தள்ளாட அனு வாயில் பக்கம் வந்தாள். தன்னை மறந்த நிலையில் அவள் சிலையைக் கழுவித் துடைத்துப் பொட்டிட்டுப் பூ வைத்து முடித்தாள். கற்பூரத்தைக் கொளுத்தி வைத்துவிட்டு தட்டை தூக்கிய அவள் கரம் நடுங்குவதைக் கண்ணுற்ற சசி வியப்படைந்தான்.

''என்ன அண்ணி உடம்புக்கு?'' கவலையுடன் விசாரித்தான்.

தட்டை அவன் முன் நீட்டிய அனுவின் கண்களில் நீர் முட்டியது. துக்கம் தொண்டையை இறுக்கியது.

''தம்பி ஒரு உதவி செய்வியா? தாத்தாவுக்கு காபி கொடுத்துட்டு ஒடி வரேன். நீ காரை எடுத்து தயாரா வச்சுக் கொண்டு இரு. உன்னோட ஒரு முக்கிய விஷயம் பேசணும்...'' தடுமாறினாள் அவள்.

வீட்டை விட்டுச் சற்றுத் தொலைவில் கார் வந்ததும் சாலை ஓரத்திலே நிறுத்தச் சொன்னாள் அவள்.

''வீட்டிலே இதைப்பத்தி உன்னிடம் இரைஞ்சு பேச எனக்குப் பயமாக இருந்தது. அதனால்தான் இந்த ஏற்பாடு. தம்பி நாம் எல்லோரும் இப்போ ஒரு சிக்கலான நிலையிலே இருக்கிறோம். இந்த குடும்பத்தைப் பத்தின ஒரு பெரும் பிரச்சினை திடீர்னு உருவாகியிருக்கு. உங்க அண்ணாகிட்ட சொன்னால் அவர் கோபம் தாங்காது சோபனாவைப் பெண் என்றும் பாராமல் அடித்தாலும் அடித்து விடுவார். தாத்தாகிட்ட சொன்னால் அவமானத்திலே அவருக்கு ஒரு ஹார்ட் அட்டாக்கே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ரத்னா அத்தை கேள்விப் பட்டால் வேறு வினையே வேண்டாம். ஊரே தெரியும்படி தமுக்கடித்து நம் மானத்தைக் கப்பலேற்றி விடுவாங்க...

''உறவிலே நான் உனக்கு அண்ணி. தாய்க்குச் சமம் ஆனவள். ஒரு தாய் பிள்ளை கிட்ட கேட்கிறது போல உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். ஒரு சிக்கலான குடும்பப் பிரச்சனையைத் தீர்க்க நீ என் கூட துணையாக இருந்து உதவணும்'' கண்ணீருடன் திணறினாள்.

''என்ன உதவி வேணும் சொல்லுங்க. செய்ய சித்தமா இருக்கேன். மனம்விட்டு விஷயத்தைச் சொல்லாம என்னைக் குழப்புகிறீங்களே அண்ணி!''

''குழப்பலை... முதல்லே இந்தக் கடிதத்தை படிச்சுப் பார்'' என்று

சொல்லிவிட்டு கைப்பையைத் திறந்து அந்த கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

பிரித்துப் படித்தான் சசி. வினாடியில் அவன் முகம் செவேலென்று மாறியது. மூக்கும் மீசையும் துடித்தன - கோபத்துடன் பற்களைக் கடித்தான்! ''படவா ராஸ்கல் - பிளாக்மெயிலா பண்றான்? கராத்தே நான் கத்துக் கொண்டது நல்லதாப் போச்சு. இன்னிக்கே இந்த வாட்ஜுக்குப் போய் இவனை பின்னிக் கட்டிட்டு வரேன் -'' ஆத்திரத்துடன் இரைந்தான்.

''அதுக்குள்ளே நிதானத்தை இழந்தா காரியம் கெட்டு விடும். பூஜைக்கு வந்து கொண்டிருந்த நான் உள்ளே திரும்பிப் போகவே -அவன் போனில் பேசினான். நான் சோபனான்னு நினைக்கக் கொண்டு எல்லாவற்றையும் கக்கிவிட்டான் -'' அனு விவரமாக தொலைபேசியில் அவன் கூறியது அனைத்தையும் சொன்னாள். கேட்கக் கேட்க சசிக்குக் கட்டுக்கொள்ள இயலாத கோபம். ''இந்த சோபனா இத்தனை தவறான ஒரு காரியத்தைச் செய்திட்டு -உங்களிடம் எப்படி முறைக்கிறாள். பண்பு கெட்டவள். உங்க அருமை தெரியாத முட்டாள். எனக்கு வர கோபத்திலே அந்தப் பயல் கழுத்தை நெரிச்சு காலாங்கரையில் புதைக்கணும் போல் பத்திக்கிண்டு வரது.'' பற்களை மறுபடியும் கடித்தான்.

''இரண்டு நாள் அவகாசம் இருக்கு. அதனாலே நிதானத்தை இழக்காமல் நாம் யோசித்து இந்த பயமுறுத்தலுக்கு ஒரு முடிவு கட்டணும். நீ யாரிடமும் இதைப் பற்றிப் பேசக் கூடாது. முள்ளை முள்ளால்தான் எடுக்கணும், அதனால் நீ என்னோட பூரணமா ஒத்துழைத்தால் -'' அனு முடிப்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.

''ஆணை இடுங்க அண்ணி என் உயிரைக் கொடுத்தாகிலும் வீட்டின் மானத்தைக் காப்பாற்ற நான் தயார்'' என்றான்.



# 19

அன்று வெள்ளிக்கிழமை. அதிகாலையிலேயே எழுந்து விட்டிருந்த ஜெய்குமார் குளித்துவிட்டு உடுத்திக் கொண்டு முடியைச் ஷேவி[illegible] கண்ணாடி எதிரில் நின்று கொண்டிருந்தான். தோட்டத்திற்குள் கார் வருகின்ற ஓசை கேட்டதும் ஆவலுடன் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். அவனுடைய ஃபியட்டை சசி ஓட்டிக் கொண்டு, திறந்து கிடந்த கராஜிற்குள் நுழைவதைக் கண்ணுற்றான்.

அவனுடைய பொருள்களை - அதுவும் கார், கடிகாரம் பேனா இவைகளை மற்றவர்கள் யாரும் விரலால் கூடத் தொடுவது அவனுக்குப் பிடிக்காது. சட்டென்று எழுந்த கோபத்தில் பரபரப்புடன் பால்கனிக் கதவைத் திறந்து வெளியே வந்து நின்று நன்றாகப் பார்த்தான்.

இந்தப் பொடிப் பயலுக்கு என்ன தைரியம். அண்ணனைக் கேட்காமல் காரை எடுத்துக்கொண்டு - அவன் யோசித்து முடிக்குமுன் வண்டியினின்று பூக்கூடை, பிரசாத தட்டு இவைகளுடன் இறங்கிய அனுவின் மீது பார்வை விழுந்தது. குபுகுபுவென்று பொங்கி எழுந்த சோடா பாட்டிலின் நுரைபோல அவனது கோபம் சட்டென்று அடங்கிவிட்டது. அதற்குப் பதில், லேசாக ஒளி பரவிக்கொண்டு வந்த விடியற்காலை வெளிச்சத்திலே அவளை ஏற இறங்கப் பார்த்து மகிழ்ந்து போய் விட்டான்.

வெள்ளிக் கிழமைகளில் அவன் மட்டுமே திருவள்ளுருக்குப் போய் வருவது - அவள் வீட்டிலே ஓய்வாக இருந்து வீட்டை மேற்பார்வையிட்டால் போதும் என்பது அவனது சமீப கால உத்திரவு. மோட்டார் சைக்கிள் விபத்திற்கு பின்னர் சசிக்குப் பணிவிடை செய்து அவள் மிகவும் சோர்ந்து விட்டிருந்தாள். ஆரோக்கியம் சிறிது நலிந்து விட்டிருந்தது. உடல் இளைத்து, முகம் கறுத்து, உற்சாகமின்றிக் காணப்பட்ட மனைவியைப் பற்றி அவன் கவலைப்பட்டான்.

அதிகமான பளுவைச் சுமந்து செல்லும் மாட்டை மேலும் அடித்துத் துன்புறுத்தி துரிதமாக ஓடச் செய்யும் கொடுமை போன்றிருந்தது. அனுவின் மீது சுமத்தப்பட்டிருந்த பொறுப்புக்களின் சுமை.

''பாவம், அனு ஒருத்தியே எத்தனை நாள் சமாளிக்க இயலும்?'' என்று இரங்கி நெஞ்சம் நெகிழ்ந்து போனான்.

இப்பொழுதெல்லாம் அவனுக்கு அவளைப் பற்றிய சிந்தனைதான் அதிகம். அவள் முகம் சிறிது வாடிக் காணப்பட்டாலும் பொறுக்க முடியாது தவித்தான். தன் உணர்வுகளின் போக்கை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. நாளுக்கு நாள் அவன் உள்ளத்தில் அனுவின் பால் அன்பு பொங்கிக் கட்டுக் கொள்ள இயலாத அளவுக்குப் பெருகிக் கொண்டு போவதை அவன் உணரத்தான் செய்தான். அழகும் - பொறுப்பும் - பொறுமையும் -பண்பும் உள்ள ஒரு மனைவி தனக்கு வாய்த்திருப்பது பற்றி உள்ளூர அவனுக்குப் பெருமையும் கூட.

வெள்ளிக் கிழமைகளில் அவள் விடியற்காலையில் வெளியே இருந்த கோயில்களுக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். பூஜை, கோயில் இவைகள் மீது அவன் அதிகம் அக்கறை காட்டியதில்லை. ஆனால் அவள் இவைகளைக் கவனிக்கிறாள். வீட்டின் பழக்கவழக்கங்களைக் கை விடாது கடைப்பிடிக்கிறாள் என்பதில் அவனுக்கு மிக்க மகிழ்ச்சி.

ஸ்நானம் செய்து அவசரமாகக் காய வைத்து கூந்தலை அவள் தளர முடிந்து கொண்டு அதன்மீது கட்டுக் கதம்பத்தைச் சூட்டிக் கொண்டிருந்தாள். வெள்ளிக் கிழமைகளில் மட்டும் அவள் அலங்காரமாக உடுத்திக் கொள்வது வழக்கம். அதுவும் அவனது வேண்டுகோளுக்குப் பின்னர்தான். அவன் எதைச் சொன்னாலும் உடனடியாகச் செய்துவிடும் ஒரு நல்ல பழக்கமும் அவளிடமிருந்ததை உணர்ந்து அவனுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி.

கோவிலுக்குப் போய்வர அவனது காரை எடுத்து வரும்படி சசியிடம் அவள்தான் சொல்லியிருக்க வேண்டும். 'அவளுக்கு இல்லாத உரிமையா, இனி?' - எண்ணியபடியே மெல்ல உள்ளே நடந்து சென்று கொண்டிருந்த மனைவியை உற்றுக் கவனித்தான். முதல்நாள் மாலை அவன்தான் வற்புறுத்தி அவளைக் கடைக்கு



அழைத்துச் சென்று தன் பரிசாக அந்தக் கருநீலப் பட்டுச்சேலையை வாங்கிக் கொடுத்திருந்தான். அதைத்தான் அவள் கோவிலுக்குப் போய்வர அணிந்து கொண்டிருந்தாள். கழுத்திலே அன்னம்மா பாட்டியின் வைர அட்டிகை பளபளத்தது. காதுகளில் பாட்டியின் ஜிம்மிக்கள் மின்னின. நெற்றியிலே பளிச்சிட்ட குங்குமத்தின் கீழ் கீற்றுபோல திருநீறு பூசிக்கொண்டிருந்தாள். அந்தக் கோலத்தில் அவள் எவ்வளவு அழகாகக் காணப்பட்டாள். மகிழ்ச்சியில் பூரித்துப்போன ஜெய்குமார் உடலிலே ஒரு இன்பச் சிலிர்ப்பு -நெஞ்சிலே ஒரு படபடப்பு...

கைக்கடிகாரத்தை அணிந்து கொண்டு ப்ரீப்கேஸைத் திறந்து பைல்களை ஆராய்ந்து மூடிவிட்டு அவன் புறப்படத் தயாரானான். அது சமயம் அனு காப்பி டம்ளருடன் உள்ளே வந்தாள். பட்டுப்புடவையின் சரசரப்பும், கதம்ப மலர்ச் சரத்தின் மணமும் அவனது மேனியைப் புல்லரிக்கச் செய்தன. ஓடிச்சென்று அவளை ஆசையுடன் நெஞ்சோடு அணைத்துக் கொள்ள வேண்டுமென்றதொரு வேகம்... அதற்குத்தான் அவள் ஒரு தடை உத்தரவு பிறப்பித்து விட்டிருந்தாளே.

சோபனாவுக்குக் கல்யாணம் முடியும்வரை அவன் பொறுமையுடன் காத்திருக்க வேண்டுமே!

டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டான். ''இந்தப் புடவை உனக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கு...'' சொல்லிக்கொண்டே மெல்ல அருகில் நெருங்கினான்.

''தாங்க் யூ! -'' நெருப்பைக் கண்டவள் போல் அவள் பின்னால் சிறிது நகர்வதை அவன் கவனிக்கத் தவறவில்லை; ஆசையுடன் அவன் அருகில் நெருங்கிய போதெல்லாம் அவள் உடல் நடுங்கியது. அச்சத்தில் நகர்ந்து ஓடினாள். 'இந்த விபரீத உணர்வுகளுக்குத் தானே நான் காரணம்' என்று தன்னை கடிந்து கொண்டபடி காப்பியைப் பருகிக்கொண்டே அவளை ஓரக் கண்ணால் பார்த்தான். திருமணமான புதிதில் அன்புடன் மனைவி என்ற உரிமையைக் கோரி நெருங்கி வந்தவளை வார்த்தைகளால் சாடி வெருட்டினான். அந்த அச்சத்திலே அதிர்ந்து போய்விட்டிருக்கிறாள் அவள். அவளிடம் இப்போது திடீரென்று அன்பை எப்படி எதிர்பார்ப்பது?...

''தஞ்சாவூர்க் கதம்பம் மூக்கைத் தூக்குகிறது. உனக்கென்ன வீட்டுக்குப் பெரிய மருமகள்... சம்பந்தியம்மா! உன்னைத்தானே முதலில் கவனிக்கணும். வரப்போகிற மாப்பிள்ளை கெட்டிக்காரன். யாரை முதலில் காக்காய் பிடித்தால் காரியம் விரைவில் நடக்கும் என்பதைப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறான். ஒரு கூடை கதம்பத்தை வாங்கித் தன் காணிக்கையாக அனுப்பிவிட்டிருக்கிறான்!'' வேடிக்கையாகக் குமார் சிரித்தான்.

முதல் நாள் மாலை தஞ்சாவூர்காரர்களிடமிருந்து பழம் பாக்கு வெற்றிலையுடன் கடிதமும் வந்துவிட்டிருந்தது. ''பெண்ணைப் பிடித்துவிட்டது. முகூர்த்தம் எப்பொழுது என்று பேசி முடித்துவிடுவது நலம்...'' எனக் கேட்டு அனுப்பியிருந்தார்கள்.

வெட்டிவேரும், தாழம்பூவும், ஜாதி மல்லியும் கலந்த கதம்பத்தின் மணம் பூஜை அறையைத் திறந்த போதெல்லாம் குப்பென்று முகத்தில் மோதியது. அத்துடன் ஒரு பயங்கர நினைவு நெஞ்சை அழுத்தியது அவளுக்கு.

'சோபனா இப்படி ஒரு வம்பில் சிக்கிக்கொண்டு இருக்கிறாளே. இந்தச் சமயத்தில் அவசரப்பட்டு கல்யாணத்திற்குத் தேதி வைப்பது எப்படி?'

ஜெய்குமார் அறைக்குள்ளே முன்னும் பின்னுமாக உலாவினான். அனு கவனிப்பாள் கேட்பாள் என்ற நம்பிக்கையுடன் பலமுறை அவள் முகத்தைக் கவனித்தான்.

ஆனால் அவள் பலத்த சிந்தனையில் தன்னையே மறந்து நின்று கொண்டிருந்தாள்.

முடிவில் பொறுமையை இழந்தான் அவன், ''நானே சொல்லி விடுகிறேன். இப்போது இந்த அறை எப்படியிருக்கிறது?'' கேட்டுவிட்டு ஆவலுடன் அவள் முகத்தைப் பார்த்தான்.

திடுக்கிட்டுப்போன அனு சுற்றிலும் கவனித்தாள். அந்தப் புத்தக அலமாரி, பீரோ, படுக்கை எல்லாமே அறையினின்று அகற்றப்பட்டிருந்தன. முன் பகுதியில் ஒரு சிறு வட்ட மேஜையும் இரண்டு சோபாக்களும் புதிதாகப் போடப்பட்டிருந்தன. உள்



அறைக்குள் புதிதாக ஒரு கட்டில், அதன் மீது மெத்தை, தலைப்பக்கத்திலே ஒரு மின் விளக்கு. சுவரில் தொங்கிய வாணியின் படத்தைக் கூடக் காணவில்லை. வியப்புடன் அவள் மௌனமாக விழித்தாள்.

''இறந்து போனவர்களின் நினைவை மதிக்க வேண்டுமே தவிர அத்துடன் எண்ணங்களையும் புதைத்துக் கொண்டு என்னையே நான் அழித்துக் கொள்ளக் கூடாது என்கிற அறிவு இப்போதுதான் எனக்கு உதயமாயிற்று. அதனால்தான் இந்த மாற்றங்கள். கடந்து போனவைகளை எல்லாம் நினைவினின்று அகற்ற அவள் புத்தகங்களை முதியோர் நூல் நிலையம் ஒன்றுக்கு இலவசமாக வழங்கிவிட்டேன் - துணிகளையும் - நாற்காலி - படுக்கை முதலியவைகளையும் அனாதை இல்லம் ஒன்றுக்கு அனுப்பி விட்டேன். அறையைச் சுத்தப்படுத்தியது போல் உள்ளத்தில் ஊறிக்கிடந்த எண்ணங்களையும் உதறிவிட்டு மனதைத் திறந்து தயாராக வைத்துக் கொண்டிருக்கிறேன் - இனி அங்கே உனக்குத் தான் இடம். புரிகிறதா.'' மிகவும் அருகில் வந்து நின்றான்.

நெஞ்சம் உருகி - உணர்ச்சி வசத்தில் கண்கலங்கிப் போனாள் அனு. பாசமும் பரிவும் காட்டிக்கொண்டு கணவன் நெருங்கி வரும்போது அவள் விலகி ஓட வேண்டிய ஒரு பயங்கர நிலை - வழி மறைக்கிறதே! அதை அவள் எப்படி அவனிடம் வாய்விட்டுப் பேச முடியும்? வேதனையுடன் நின்றாள்.

''என்ன அனு?'' - பதறிப் போன ஜெய்குமார் அருகில் வந்து அவள் முகத்தை மெல்ல நிமிர்த்தினான். பெருகி வந்த கண்ணீரைத் தன் கைக்குட்டையால் மெல்லத் துடைத்தான்.

''ஏன் உடம்பு இப்படி நடுங்குகிறது?... உடம்புக்கு என்ன?'' கவலையுடன் விசாரித்தான்.

''வாணி அக்காவின் படத்தைக் கூட எடுத்து விட்டீர்களே... அதை நினைச்சேன். மனசு கஷ்டப்படுகிறது'' சமாளித்தாள் அவள்.

''உன் உள்ளத்திற்குத் துன்பம் கொடுக்கும் எந்த நினைவும் தேவையில்லை என்பதால்தான் எடுத்து விட்டேன். இனி எனக்கு நீ, உனக்கு நான் - இடையே கடந்த காலத்தின் நிழல் கூட நெருங்காது. புரிந்து கொள்'' அவளது கரங்களைப் பற்றித் தன் முகத்தின்மீது

பொருத்திக் கொண்டான்.

''தாத்தாவுக்கு காப்பி பலகாரம் தரலை... நேரமாயிற்று - '' சட்டென்று தன் கரங்களை விடுவித்துக் கொண்டு அவள் வேகமாகக் கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

காப்பியைக் கோப்பையில் நிறைத்து நீட்டிய அவளது கரங்கள் நடுங்குவதைக் கிழவர் கவனித்தார். அவள் உடுத்தியிருந்த புதிய சேலை - அலங்காரம் அனைத்தும் அவரது கூரிய கண்களுக்குத் தப்பவில்லை. பேரன் மனைவி பெருத்த அழகி என்பதில் அவருக்கும் மிக்கப் பெருமைதான்.

'' நேற்று குமார் உன்னைக் கடைக்குக் கூட்டிக் கொண்டு போனதாகச் சொன்னியே - என்ன விஷயமோ?...'' கிழவர் கேலியாகக் கேட்டு விட்டு அவள் முகத்தைப் பார்த்தார்.

அனுவின் கன்னங்களும் மூக்கும் சிவந்து போயின - மெல்லக் கீழே குனிந்து கொண்டாள்.

''ஆமாம் தாத்தா. அவருக்கு நேற்று பிறந்த நாள். அதன் நினைவாக எனக்கு ஒரு சேலை எடுக்கப் பிரியப்பட்டார். வற்புறுத்தினார். மறுக்க முடியவில்லை. இன்று காலை கோயிலுக்கு இருக்கட்டுமே என்று புதிய புடவை உடுத்திக் கொண்டேன்'' வெட்கத்துடன் சொன்னாள்.

கிழவர் மீசையை மெல்லத் தடவிக் கொண்டார்.

''பலே! பலே! இப்ப அவனுக்கு புடவை கூட பார்த்து எடுக்கத் தெரிஞ்சு விட்டதே!'' உரத்துச் சிரித்தார்... துன்ப நினைவுகளை உதறி விட்டு குமார் மெல்ல மனைவியின் பக்கம் ஈர்க்கப்பட்டு வருவதைக் குறித்து அவருக்கு மிக்க மகிழ்ச்சி; திருப்தி. மேலே அதைப் பற்றி பேசி அவளைக் கலவரப்படுத்த விரும்பாத கிழவர் காப்பியை வேகமாகச் சுவைத்துப் பருகத் தொடங்கினார் - தலையில் கூந்தலுடன் அசைந்த கதம்ப மலர்ச்சரத்தின் மீது அவர் பார்வை லயித்தது.

''ஆமாம்; அந்த தஞ்சாவூர்க்காரங்க ரொம்ப அவசரப் படுகிறாங்களே - கல்யாணத்தை எப்ப வச்சுக்கலாம்னு நீ நினைக்கிறே? அதைப்பத்தி யோசிச்சியாம்மா?'' கிழவர் கேட்டார்.

சோபனாவின் கல்யாணம் என்ற செய்தி மீண்டும் அவள்



நெஞ்சில் ஒரு திகிலைக் கிளப்பியது - தாத்தாவிடம் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் அவளுக்குத் தடுமாற்றம் - சுதாரித்துக் கொண்டாள்.

''அதுக்கு முன் ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கு. உங்கள் நண்பர் புகழேந்தியை நானும் சசியும் பார்க்க வேண்டியிருக்கு. போன் செய்து அதற்கு ஏற்பாடு செய்வீர்களா? - ''

''சசி ஆண் பிள்ளை. அவனுக்கு ஏற்பட்ட விபத்தைப் பற்றி ஏதேனும் விசாரிக்கப் பிரியமிருந்தால் அவன் தனியே போய்ப் பார்த்து விட்டு வரட்டும். நீ கூட அவசியம் போகணுமா?''

''உங்கள் வார்த்தைக்கு மறுப்பு சொல்ல மாட்டேன். இந்த ஒரு முறை மட்டும் சசியுடன் போக நீங்க உத்தரவு கொடுத்தால் - ''

கிழவர் மறுபடியும் உரத்த குரலில் சிரித்தார் - நாற்காலியைச் சிறிது தூரம் நகர்த்திக் கொண்டு போனார்.

''சின்னவன் இப்போதெல்லாம் உன் உத்தரவில்லாமல் எதுவுமே செய்கிறதில்லை. கவனிச்சிட்டு வரேன். சரி! உன் பிரியத்தைக் கெடுப்பானேன். நான் புகழேந்திக்கு போன் பண்ணி எப்போ எந்த நேரம்னு விசாரித்துச் சொல்றேன்... ரெண்டு பேரும் போய்ப் பார்த்திட்டு வாங்க... மத்ததெல்லாம் இன்ஷூரன்ஸ் காரங்க பாடு. நமக்கேன் தொல்லை'' என்றார்.

''அப்படியே இன்னொரு காரியமும் செய்ய வேண்டியிருக்கு. இந்த மூணு நாளைக்கு சோபனா காலேஜ் போக வேண்டாம். வீட்டிலேயேதான் இருக்கணும்னு நீங்க உத்திரவு போடணும். கல்யாணம் நெருங்கிக் கொண்டு வரும் சமயம். கடைத்தெருவிலும் சினிமா தியேட்டரிலும் அவள் காணப்படுவது நல்லதில்லை. தாத்தா உத்திரவுக்குத்தான் அவள் பயப்படுவாள். அதனால்...''

கிழவர் புன்னகைத்தார். ''நீ உண்மையில் ரொம்பக் கெட்டிக்காரி. யார் யாரை எப்படி நடத்தணும். என்ன உபாயத்தைக் கையாளணும்னு தெரிஞ்சு வச்சிருக்கே. அப்படியே செய்துடறேன், இன்னும் ஏதாவது?...''

''நானும் சசியும் வெளியே போயிருக்கும்போது நீங்க உங்களைப் பத்திரமாகக் கவனிச்சிக்கணும். அது போதும்...''

தாத்தாவும் பேரன் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மனம் விட்டுச் சிரித்தனர்.

# 20

**சி**வபாதம் நேரத்தின் அருமையை மிகவும் உணர்ந்தவர். உடனடியாகப் புகழேந்தியுடன் அவர் வீட்டிலேயே தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"என் பேரன் மனைவியும் சசியும் உன்னைப் பார்க்க வேணுமாம். இன்னிக்குக் காலை அவர்களை ஆபீசில் பார்க்க இயலுமா?"

"அந்த விபத்து விஷயமாகவா - அவங்க என்னத்துக்கு வரணும்? தேவையில்லையே..." புகழேந்தி உரத்த குரலில் மறுபுறத்தில் பேசினார்.

"உன் ஆபீசையும் உன் அதிகார தர்பாரையும் பார்க்க ஆசைப்படுகிறாங்க. வரட்டுமே. என்ன சொல்றே..." கிழவர் சிரித்தார்.

"பத்து மணிக்கு வரச் சொல்லுங்க. அப்போ நான் கட்டாயம் ஆபீஸில் இருப்பேன்."

போனைக் கீழே வைத்தார் சிவபாதம். அவர் மனதிலே ஒரு நெருடல். 'அனு எதற்காக புகழேந்தியைச் சந்திக்கப் போக வேண்டும்?...ம்'... தமக்குள்ளேயே கேட்டுக் கொண்டார். பின்னர் இண்டர்காமில் பேத்தி சோபனாவை அழைத்தார்.

அன்று காலேஜிற்கு மற்ற நாட்களை விட மிகவும் முன்னதாகவே புறப்பட்டுவிட வேண்டுமென்ற துடிப்பு சோபனாவுக்கு. விடியற்காலையிலேயே அவள் குளித்து முடித்து உடுத்திக் கொண்டு தயாராகி விட்டிருந்தாள். அண்ணா திருவள்ளூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் தலை மறையட்டும் என்று அடுக்குப் புத்தகங்களுடன் தன் அறையில் உட்கார்ந்திருந்தாள். தாத்தாவின்



அழைப்பு திகைப்பை உண்டாக்கியது. கல்யாணத்தைப் பற்றி ஏதாவது தொண தொணக்கத்தான் கிழவர் அழைக்கிறார் என்ற எரிச்சல் அவளுக்கு. புத்தகங்களை வாரி நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அவள் மெல்லக் கீழே இறங்கிச் சென்றாள்.

சில நிமிஷங்களில் பதட்டத்துடன் அவள் மாடிக்குத் திரும்ப விரைந்து வந்தாள். ஒரே மூச்சில் படிகளைக் கடந்து வந்த அயற்சியில் அவளுக்கு மூச்சிறைத்தது. கோபத்திலே முகம் சிவந்து நெஞ்சு படபடத்தது.

மாடி ஹாலில் சசியும் அண்ணி அனுவும் ஏதோ தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டாள். பொங்கி எழுந்த கோபத்தை அவளால் அடக்க முடியவில்லை.

"இது உங்கள் வேலையா அண்ணி? பரீட்சை சமயத்தில் காலேஜிற்குப் போக வேண்டாம் என்று தாத்தா உத்தரவு போட்டிருப்பதன் நோக்கம்? நீங்கள் என் விஷயத்தில் அதிகமாகத் தலையிடுகிறீங்க. எச்சரிக்கிறேன்" உரத்த குரலில் ஆவேசம் வந்தவள்போல் கத்திவிட்டு, வாரிக் கொண்டு வந்த புத்தகங்களையும் கைப்பையையும் ஒரு மூலையை நோக்கி விசிறி எறிந்தாள்.

தடால் என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான் ஜெய்குமார். காரணத்தைப் புரிந்து கொண்டதும் கோபவேசத்துடன் ப்ரீஃப் கேஸைச் சுமந்த வண்ணம் தங்கையருகே வேகமாக வந்தான். அண்ணனைக் கண்டதும் சோபனா உண்மையில் மிகவும் அரண்டு போய்விட்டாள்.

"நான் கேட்டுக்கொண்டுதான் வந்தேன். இதெல்லாம் என்ன? கோபம் வந்ததும் சாமான்களை விசிறி அடித்துப் பச்சைப் பிள்ளைபோல் அடம் செய்கிறதை இப்பவே நிறுத்திக்கணும். சொல்லிட்டேன், அந்தத் தஞ்சாவூர்க்காரர்கள் வீட்டில் உனது அட்டகாசம் செல்லுபடியாகாது. அவர்கள் எல்லாம் கண்டிப்பும் கறாருமாக வாழ்கிறவங்க, தெரிஞ்சுக்கோ. ஒரு பெண்ணுக்கு பொறுமை என்பது ரொம்ப அவசியமான குணம். உன்கிட்ட அது துளிகூட காணலையே!" உரத்த குரலில் அதட்டினான்.

சோபனாவுக்குத் துக்கம் நெஞ்சை இறுக்கியது. வார்த்தைகளை வாரிக் கொட்ட வேணும் என்று மனம் துடித்தது. ஆனால் பேசத்தான்

முடியவில்லை. கண்களில் முட்டிக்கொண்டு வந்த நீரை விரலால் சுண்டிவிட்டுக் கொண்டு அனுவின் பக்கம் ஆத்திரமாகத் திரும்பினான்.

"பரீட்சை சமயம் காலேஜ் போக வேண்டாமா?" தடுமாறினாள்.

"இந்த வருஷம் நீ பாஸாகாது போனால் தலைமுழுகிவிடாது. நீ படிச்சு உத்தியோகம் போக வேணுங்கிற அவசியமில்லை. இது உன் கல்யாணப் படிப்பு, ஞாபகம் இருக்கட்டும். நானும் பார்க்கிறேன், இந்த வீட்டில் யாருக்கு எது நடந்தாலும் அனு மேலே சீறி விழறதே வழக்கமா போச்சு. அவள் என் மனைவி, இந்த வீட்டின் தலைவிங்கிறது எல்லோருக்கும் நினைவிருக்கட்டும். அவகிட்ட மரியாதைக் குறைவா யார் நடந்து கொண்டாலும் அது என்னையும் பாதிக்கும். நான் பொறுக்க மாட்டேன்..." ஜெய்குமார் உக்கிரமாக எல்லோரையும் வெறித்தான்.

அறைவாயிலில் ஒதுங்கியபடி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ரத்னா அம்மாள் சட்டென்று முகத்தை உள்ளே இழுத்துக் கொண்டாள். நெருப்பாக பளபளத்த மருமகனின் கண்களைப் பார்க்கக்கூட அவளுக்குப் பயமாக இருந்தது.

தாறுமாறாகக் கிடந்த புத்தகங்களை வாரி அடுக்கி மேஜை மீது வைத்துக் கொண்டிருந்த சசி கவனித்தான். பென்சில்கள் வைத்திருந்த பிளாஸ்டிக் பெட்டி திறந்து அதிலிருந்த பொருள்கள் தரையில் சிதறிக் கிடந்தன. ரப்பர், கலர் பென்சில் இவைகளிடையே பளிச்சென்று மின்னிய ஒரு பொருளை ஆவலுடன் குனிந்து, கையில் எடுத்தான். அவனுக்கு மிக்க வியப்பு. பாட்டி அன்னம்மாளின் நவரத்தின மோதிரம் அது. அது எப்படி அந்தப் பெட்டிக்குள் வந்தது?

"அண்ணி! இதைப் பார்த்தீங்களா..." கூவிக் கொண்டு ஓடி வந்து அனுவிடம் கொடுக்க வந்தான். ஜெய்குமார் கையை நீட்டி அதைச் சட்டென்று வாங்கி வியப்புடன் உற்றுப் பார்த்தான்.

"ஆமாம், இது அன்னம்மா பாட்டியின் மோதிரம். கார் விபத்திலே காணாமற்போன நகை செட்டைச் சேர்ந்தது. இது எப்படி உன்னிடம்?" தங்கையை மீண்டும் உறுத்து சந்தேகத்துடன் விழித்தான்.

சோபனா நடுங்கிப் போய்விட்டாள். தாங்க முடியாத



கலவரத்தால் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள்.

"இது உங்க அறையில் புத்தக அலமாரி இடுக்கில் கிடந்தது. ஒருநாள் படிக்க புத்தகம் தேடிக் கொண்டு உங்கள் அறைக்குள் போனபோது கிடைச்சது..." குழறினாள்.

கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்ட குமார் "என்னைக் கேட்காமல் என் பொருளைத் தொட்டால் எனக்குப் பிடிக்காது என்பது உனக்குத் தெரியும்... அப்படியிருந்தும் நீ என் அறைக்குள் புகுந்து அலமாரியைக் குடைந்திருக்கிறாய்... சரி போகட்டும். மோதிரம் கிடைச்சதும் நீ என்ன செய்திருக்கணும். உடனே தாத்தாவிடம் கொண்டு கொடுத்திருக்கணும், இல்லையா?" இரைந்தான்.

"போன வாரந்தான் கிடைச்சது. இதை என் காலேஜ் சிநேகிதிகளிடம் காட்டி விட்டு பின்னால்..."

"தாத்தாவைவிட உன் சிநேகிதிகள் முக்கியமானவர்கள். என்ன கதை இது. உன் போக்கே எனக்கு ஒழுங்கானதாகப் படலையே. அன்னம்மா பாட்டி நகைகள் எல்லாம் சட்டப்படி அனு அண்ணிக்குச் சேர வேண்டியதுங்கிறது உனக்குத் தெரியும். அப்படியிருந்தும் அதை மறைச்சு வச்சுக் கொண்டால் அதுக்குப் பேர் என்ன தெரியுமா?... திருட்டுன்னு பேர் - " உறுமினான்.

"அண்ணா! வந்து..." துக்கத்துடன் திணறினாள் அவள்.

"இந்த வீட்டில் உனக்கு என்ன குறை வச்சிருக்கிறோம். உனக்கு தாத்தா என்ன கொடுக்கவில்லை? நீ ஏன் இப்படி நடந்து கொள்ளணும். வெட்கம் வெட்கம்" சீறிவிட்டு ஜெய்குமார் மோதிரத்தை மனைவியிடம் கொடுத்தான்.

"தாத்தாவிடம் கொண்டு கொடு. அவர் சொல்படி செய்" உத்தரவிட்டுவிட்டு வேகமாகப் படிகளில் இறங்கி கீழே சென்று விட்டான்.

அனுவும் சசியும் ஒருகணம் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

'வீட்டிலே இனி எடுத்துப் போக பணம் நகைகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஏதேச்சையாக கிடைத்த மோதிரத்தை சோபனா

செல்லப்பனுக்காக ஒளித்து வைத்துக் கொடுக்கிறாள் - தன் வீட்டிலேயே திருடி எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையா? சே...' இருவர் மனதிலும் ஒரே எண்ணம் ஓடியது.

கிழவர் மோதிரத்தை வாங்கி ஆச்சரியத்துடன் பார்த்தார். ''அம்மாவுடைய நவரத்தின செட்டில் இருந்த மோதிரந்தான் இது! இதை மட்டும் விட்டுட்டுப் போக வாணிக்கு எப்படி மனசு வந்தது? இந்த ஒண்ணை விற்றாலே பத்தாயிரத்துக்கு மேலே கிடைக்கும். அத்தனை அவசரம் அவளுக்கு - ஆமாம், இந்த சோபனா இதை ஏன் எடுத்து ஒளிச்சு வச்சுக் கொண்டிருந்தாள்? எனக்கு ஒண்ணுமே புரியலை.'' முணுமுணுத்தபடி அனுவிடம் அதைத் திருப்பிக் கொடுத்தார்.

''அன்னம்மா பாட்டியின் நகைகள் உன்னைச் சேர்ந்தவை. அதனால் இது உன் சொத்து. ப்த்திரமா வச்சுக்கோ. பத்து மணிக்கு புகழேந்தி அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறான். சசிக்கு இடம் தெரியும். போய் விட்டு சீக்கிரம் திரும்புங்கள்'' உத்திரவு கொடுத்தார்.

தன் அறைக்குள் சென்று அந்த மோதிரத்தை மிகவும் கவனமாக உற்றுப்பார்த்தாள் அனு. கிழவர் சொல்லியதில் சந்தேகமேயில்லை. நடுவே பதித்திருந்த அந்தப் பெரிய வைரம் ஒன்றே மிகவும் விலைமதிப்புள்ளது என்பதை உணர்ந்தாள். நகையின் உட்புறத்தில் ஆங்கிலத்தில் 'ஏ' என்ற எழுத்து ஒரு பூவைப் போன்ற வடிவில் பொறிக்கப்பட்டிருப்பதைக் கவனித்தாள். பாட்டியின் நகை அனைத்திலும் இப்படி ஒரு பெயர்ச் சின்னம் இருந்ததை அவள் ஏற்கனவே கவனித்திருந்தாள். மோதிரத்தைப் பத்திரமாக இரும்பு பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு மற்றக் காரியங்களைக் கவனிக்கக் கீழே இறங்கிச் சென்றாள்.

காலையில் கோயிலுக்குப் போகும் வழியில் சசி சொன்ன சில செய்திகளைக் கேட்டு அவள் ஏற்கனவே கலங்கிவிட்டிருந்தாள்; இந்த மோதிர சம்பவம் அவளது மனப்போராட்டத்தை இன்னும் சிறிது அதிகப்படுத்தி விட்டிருந்தது. அன்றுகாலை அவளுக்கு வீட்டின் வேலை எதிலுமே நாட்டம் இருக்கவில்லை. குழம்பிக் கொண்டிருந்தாள்.

சசி இரண்டு நாட்களாகக் கல்லூரிக்குப் போகவில்லை. சோபனா



சம்மந்தப்பட்டிருந்த அந்த விஷயத்தைப் பற்றி ஆராய்ந்து அறிந்துவரப் புறப்பட்டிருந்தான். கடிதத்திலே காணப்பட்ட முகவரியில் இருந்த அந்த லாட்ஜை சுற்றி வட்டமிட்டக் கொண்டிருந்தான். இடைவே சகோதரியின் காலேஜின் வாயிலில் ஒதுக்குப் புறமான ஒரு இடத்திலிருந்து கொண்டு சோபனாவைக் கண்காணித்தான். அந்த இரண்டு தினங்களும் சோபனா கல்லூரிக்குப் போய் நேரே வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அவன் எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை.

அன்று மாலை அவன் நேரேயே அந்த லாட்ஜிற்குச் சென்று வேலைக்காரப் பையன் ஒருவனைப் பிடித்து லஞ்சம் கொடுத்து கொஞ்சம் செய்திகளைத் தெரிந்து கொண்டிருந்தான்.

செல்லப்பன் என்பவன் அந்த லாட்ஜில் இரண்டு வாரங்களாகத் தங்கியிருக்கிறான். வேலை எதுவும் செய்கிற வகை தோன்றவில்லை - அடிக்கடி வெளியே சென்று வருகிறான். எட்டாம் நம்பர் அறையைத்தான் வாடகைக்கு எடுத்திருக்கிறான். இருட்டும் சமயந்தான் தினமும் திரும்புகிறான்.

பையன் கொடுத்த தகவலை வைத்துக் கொண்டு அருகிலிருந்த குளிர் பானம் விற்கும் கடையில் வெகுநேரம் காத்துக் கொண்டிருந்தான். முடிவில் அவன் தேடிச் சென்ற அந்தச் செல்லப்பனும் அதே கடைக்கு வந்து சேர்ந்தான்.

அனுவின் கற்பனையில் எள்ளளவும் பிசகியிருக்கவில்லை. ஆசாமி மகா மட்ட ரகத்தைச் சேர்ந்த போக்கிரி என்பதை அவனது நடை உடை பேச்சு எல்லாம் விளம்பரப்படுத்தின. சோபனா - அவன் தங்கை, படித்தவள் - அழகி - நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள்... இருந்தும் இப்படி ஒரு தவறான பாதையிலா செல்வாள்? எண்ணிய மாத்திரம் அவன் உள்ளமும் உடலும் ஆத்திரத்தில் நெருப்பாக எரிந்தன. ஒரே பாய்ச்சலில் அவனுடைய கழுத்தை நெரித்துக் கொன்றுவிட வேண்டுமென்ற ஆவேச உணர்வில் உடல் நடுங்க நெஞ்சம் பதைக்க அவன் வீட்டிற்கு விரைந்து வந்தான். அனு அண்ணியிடம் கண்டதைச் சொல்ல வேண்டுமென்ற துடிப்பு. ஆனால், அண்ணன் ஜெய்குமார் அன்று தன் மனைவியிடம் வெகுநேரம் பெல்களைக் கவனித்சுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். சசிக்கு

அவளிடம் பேசவே வாய்ப்பு இருக்கவில்லை. மறுநாள் விடிந்ததும் கோவிலுக்குப் போகும் வழியில் காரை ஓட்டிக்கொண்டே நல் மனதில் அடக்கிக் கொண்டிருந்ததைக் கொட்டினான் அவன்.

பத்து மணி அளவில் அவன் புகழேந்தியின் ஆபீஸ் முன்னாலிருந்த ஒரு பெரிய புளியமரத்தின் நிழலில் காரைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

வராந்தாவில் புன்முறுவலுடன் புகழேந்தி அவர்களது வரவிற்காகக் காத்துக் கொண்டிருந்தார். அனு துணிவுடன்தான் புறப்பட்டிருந்தாள். ஆனால் ஆபீஸ் அறையில் அவர் முன்னிலையில் ஆசனத்தில் அமர்ந்து கொண்டதும் அவளுக்கு அவமானம் பிடுங்கி தின்றது.

'இப்படி ஒரு சிக்கல் அவள் குடும்பத்தில் இப்போது அவசியமா?' என எண்ணி மனம் வெகுண்டாள். நடுங்கும் விரல்களால் கைப்பையைத் திறந்து அந்தக் கடிதத்தை எடுத்தாள். சசி மௌனமாக இருந்தான். அவள் மட்டும் பேசினாள்.

''ஸார், நீங்கள் குடும்பத்து நண்பர் என்பதினால் உங்களிடம் வந்திருக்கிறோம். இது உங்கள் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது. கிரைம் பிராஞ்சு கவனிக்க வேண்டியது என்பது தெரியும். ஆனாலும் காவல்துறை அதிகாரி என்ற முறையில் நீங்கள் எங்களுக்கு இதைப் பற்றி தக்க ஆலோசனை சொல்லி உதவுவீர்கள் என்ற நம்பிக்கை. குடும்பத்தின் கௌரவமே நாசமாகி விடும் பயங்கர நிலையில் இருப்பதால் நேரடியாக நாங்கள் கிளம்பி வந்திருக்கிறோம்'' சொல்லிவிட்டு, கசங்கிப்போன அந்தக் கடிதத்தை அவர்கள் முன்னிலையில் வைத்தாள். புகழேந்தி புருவங்களை சுளித்துக்கொண்டே படித்தார்.

அனுவின் உடலும் உள்ளமும் அவமானத்தில் கூசின. என்ன சொல்லப் போகிறாரோ என்ற எதிர்பார்ப்பிலே நெஞ்சு படபடத்தது. முகத்திலே துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

புகழேந்தியின் நீண்டநாள் உத்தியோக அனுபவத்தில் இது ஒன்றும் புதிய செய்தியல்ல. அவர் முகத்திலே ஆச்சர்யமோ, கோபமோ எந்தவிதமான சலனமும் ஏற்படவில்லை.

''ஸாரி மேடம். உங்க வீட்டில் இதுமாதிரியான சங்கடம்



ஏற்பட்டிருக்க வேண்டாம். ஆனாலும் கவலைப்படாதீங்க. இந்தக் கடிதம் என்கிட்டேயே இருக்கட்டும். கிரைம் பிராஞ்சில் இருக்கும் என் ஸ்நேகிதன் தாமோதரனைக் கலந்து கொண்டு பின்னர் உங்களை போனில் அழைக்கிறேன். நீங்கள் இப்போ வீட்டுக்குப் போகலாம்-'' என்றார் கனிவுடன்.

அனு தயக்கத்துடன் எழுந்திருந்தாள். ''ஸார்! ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன்! இதைப் பற்றி தாத்தாவுக்கோ, என் கணவருக்கோ வீட்டில் யாருக்குமோ தெரியாது. நானும் சசியும் மட்டுமே உங்கள் துணையோடு இதற்கு ஒரு முடிவு கட்டுவதுன்னு புறப்பட்டு வந்திருக்கிறோம்... அதனால்...''

''ஓ.கே.மேடம். இது நமக்குள்ளே மட்டும் ரகசியமாக இருக்கும். கவலைப்பட வேண்டாம்...'' புகழேந்தி புன்னகையுடன் விடை கொடுத்தார்.

## 21

அன்று மாலை ஜெய்குமாரைத் தவிர மற்ற எல்லோரும் சாப்பாட்டு அறையில் கூடியிருந்தார்கள். சற்றுத் தொலைவில் தாத்தா சக்கர வண்டியை வரார்தாவில் முன்னும் பின்னும் தள்ளிக் கொண்டிருந்தார். சசியும், அனுவும் வெளியே கிளம்பத் தயாராக உடுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். அவசரமாகக் காப்பியை மட்டும் சாப்பிட்டு விட்டு இருவரும் எழுந்தனர். அனு தன் கைப்பையைத் திறந்து கார் சாவியை எடுத்து சசியிடம் கொடுத்தாள். ''அம்பாசிடருடன் நான் வாசலில் காத்திருக்கிறேன். நீங்க காரியங்களை கவனிச்சிட்டு மெல்ல வந்தா போதும்...'' சொல்லிக் கொண்டே சாவியை விரலில் சுழற்றிக் கொண்டு அவன் வெளியே நகர்ந்தான்.

உப்புமாவைக் கரண்டியால் அள்ளி வாயில்போட்டுக் கொண்ட சோபனாவுக்கு அதை விழுங்க முடியவில்லை.

"ஆனாலும் இந்த சசி அனு அண்ணிக்கு இப்படி அடிமையாகவா போய் விடுவது?..." அவளுக்கு ஆத்திரம்.

'பார்த்தியா வேடிக்கையை' என்று கண்களால் பேசிய ரத்னா அத்தையின் பக்கம் அவள் பார்க்க விரும்பாது காப்பியை எடுத்து வேகமாக விழுங்கினாள்.

அனு அவளது தோள்பட்டை மீது லேசாகத் தட்டினாள்.

"உன்னைத்தானே சோபனா! நான் சொல்கிறதைக் கொஞ்சம் கவனமாகக் கேட்டுக்கொள். அண்ணா திருவள்ளூரிலிருந்து ரொம்ப களைப்பா வருவார். அவருக்கு உடனடியா பழரசம் எடுத்துப் போகும்படி தங்கவேலுவுக்கு நினைவுபடுத்து. தாத்தாவின் சாப்பாடு எல்லாம் ஏழு மணிக்குள் தயாராகிவிட வேண்டும். அதைக் கொஞ்சம் கவனிச்சுக்கோ. இருட்டறத்துக்கு முந்தி வாசல் பிள்ளையாருக்கு விளக்கேற்றி விட்டு வீட்டு பூஜையறை குத்துவிளக்கையும் ஏற்றி விடு. இன்னிக்கு எனக்கு வெளியே கொஞ்சம் வேலையிருக்கு. வர நாழியாகும். அதுவரை வீடு உன் பொறுப்பு."

வேலையாளை, ஏவுவது போல் அண்ணி மற்றவர்கள் எதிரில், தனக்கு உத்தரவிட்டதை அவளால் ஏற்கவே முடியவில்லை. கன்னங்களும் காதுகளும் கபகபவென்று எரிய ஆத்திரத்தில் வார்த்தைகளை அள்ளிக் கொட்ட அவள் சட்டென்று திரும்பினாள்.

மீசையைத் தடவிக் கொண்டு - அவளை வெறித்த தாத்தா வரந்தாவினின்று சாப்பாட்டு அறையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார். யாரோ தொண்டையை இறுக்கிப்பிடித்துக் கொண்டு விட்டது போன்ற வேதனையில் அவள் தலையை மெல்ல ஆட்டிவிட்டு நகத்தைக் கடித்துக் கொண்டு எதிரேயிருந்த தட்டைப் பார்த்து விழித்தாள்.

தோட்டத்தினின்று காரை வேகமாக வெளியே திருப்பிய சசியின் உள்ளத்திலே பல எண்ணங்கள் அலை மோதின. தங்கள் குடும்பம் என்ற பந்தம் அவனை இவ்வளவு ஆழமாக ஈர்த்துக் கொள்ளும் என்று அவன் இது வரை நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. சோபனா செய்து விட்ட தவறான காரியத்தை மூடி மறைப்பது சுலபமா? முடியாது போய் அம்பலத்திற்கு வந்து விட்டால் - முதுகுத் தண்டு சில்லிட்டு விட்டது போன்ற பயங்கர உணர்வில் பேசக் கூடத் தோன்றாது அவன்



வண்டியை சாலையில் ஓட்டிக் கொண்டு சென்றான்.

அனுவுக்கு உள்ளூர பற்பல கவலைகள். கணவனிடம் கூட கலந்து ஆலோசிக்காது வீட்டுக்குப் பெரியவரான தாத்தாவிடமும் சொல்லாமல் அவர்கள் இருவருமே கூடிப் பேசி இந்தத் தீர்மானத்திற்கு வருவது சரியா? எடுத்துக் கொண்ட காரியத்தில் தோல்வி ஏற்பட்டால்?

"அண்ணா இதைப் பற்றிக் கேள்விப் பட்டால் என்ன நினைப்பார்? அண்ணி மரகதம் அவளைப் பற்றி என்ன எண்ணுவாங்க? அவள் பிறந்த வீட்டில் பெண்கள் கனவில் கூடச் சிந்திக்க முடியாத அசம்பாவிதம் அவள் புகுந்த வீட்டில் நடந்து விட்டிருக்கிறது! புகுந்த வீட்டின் கௌரவத்தைக் காப்பது அவள் கடமையாயிற்றே. ஊஹூம் - என்ன நடந்தாலும் அண்ணன் அண்ணியிடம் மூச்சுவிடக் கூடாது. சொன்னால் அவளுக்குத்தானே அவமானம்!' பலவாறு எண்ணி துன்பப் பெருமூச்செறிந்தாள்.

மாலை வெய்யில் மங்கிக்கொண்டு வந்தது. அதைப் போலவே அவளது துணிவும் அடங்கத் தொடங்கியது.

புகழேந்தியின் ஆபீஸ் முன்னால் வண்டியை சசி நிறுத்தியதும் அனு ஆசனத்தில் உறைந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

"அண்ணி! தலைக்கு மேலே வெள்ளம் ஓடுது. இனி கவலைப்பட்டு என்ன பயன் - பயப்பட்டுதான் என்ன நடக்கப் போகுது. இறங்குங்க..." சசியின் பரிகாசக் குரல் விழிப்புறச் செய்யவே அவள் மெல்ல வேண்டா வெறுப்பாக இறங்கி நடந்தாள்.

புகழேந்திதான் அந்த நேரத்தில் அவர்கள் அங்கு வர வேண்டுமென்று தொலை பேசியில் அழைத்து உத்திரவிட்டிருந்தார். அவர் மட்டும் ஆபீஸில் தனியே இருக்கவில்லை. கூட உட்கார்ந்திருந்த வாட்ட சாட்டமானவர் யார் என்பதை அவர் சொல்லாமலேயே புரிந்து கொண்டு விட்டாள்.

"கிரைம் பிராஞ்சில் இருக்கும் என் நண்பன் தாமோதரனும் உதவிக்கு வந்திருக்கிறார். உட்காருங்க. ஏற்கனவே விஷயத்தை அவரிடம் பூராவும் சொல்லியிருக்கிறேன். இது மாதிரி சங்கதிகள் அடிக்கடி இப்போதெல்லாம் நடக்க ஆரம்பிச்சிருக்கு. வேலை தேடிக் கொண்டு வாழப் பிரியமில்லாத சோம்பேறி வாலிபர்கள் பலர்

விஷமமாக இப்படிப்பட்ட காரியத்தில் இறங்கி விடுகிறாங்க... பிசகு முழுவதும் ஒரு பக்கத்தையேதான் சேர்ந்ததுன்னு சொல்ல முடியாதல்லவா? - '' புகழேந்தி மெல்லச் சிரித்தார். அவர் காட்டி உபசரித்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்ட அனு அவமானத்தில் ஒடுங்கிப் போனாள்.

'புகழேந்திக்கு சிவபாதத்தின் மீது இதுவரை அபாரமானதொரு மதிப்பு இருந்தது. இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் அவர்கள் குடும்பத்தின் மீது அவருக்கு நல்லெண்ணம் இருக்குமா?' தனக்குள்ளே எண்ணிக் குமைந்த அனு, தாமோதரன் முகத்தைப் பார்க்கக் கூசியபடி தரையைப் பார்த்தாள்.

அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு சசியும் உட்கார்ந்தான். 'ஒருவருக்கு மட்டுமே தெரிந்த சங்கதியைத்தான் ரகசியம் என்பார்கள். இப்போது நான்காவது மனிதருக்கும் தெரிந்து விட்டது இனி...' அவன் குழம்பினான்.

''நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும்'' தாமோதரனின் கனத்த குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது.

''இந்த போனில் லாட்ஜ் நம்பரைக் கூப்பிட்டு அவனுடன் சோபனாபோல் பேச வேண்டும். நாங்கள் சொல்கிறபடி பேச வேண்டும். என்ன சொல்ல வேண்டும் என்பதை இந்தக் காகிதத்தில் எழுதி வைத்திருக்கிறேன். அதன்படி ஒரு வார்த்தைகூட விடாது அப்படியே பேசுங்கள்...'' என்றார்.

அவர் கொடுத்த காகிதத்தை வாங்கிப் படித்த அனுவுக்கு மிக்க வேதனையாகவும் வெட்கமாகவும் இருந்தது.

காதலி ஒருத்தி தன் காதலனுடன் பேசுவது போல் கொஞ்சலும் கெஞ்சலுமாக சில வாக்கியங்களை அவள் எவனோ ஒரு போக்கிரியிடம் பேச வேண்டும். நடிப்பு என்றாலும் அந்தச் செய்கையின் நினைப்பில் எழுந்த அருவருப்பு அவள் உடலையும் உள்ளத்தையும் கூச வைத்தது. இனி பயந்து கொண்டோ, மிரண்டு கொண்டோ பின்வாங்க இயலாத கட்டம். எச்சிலை விழுங்கிக் கொண்டு அவள் தொலைபேசியில் எண்களைச் சுழற்றி விட்டு செல்லப்பனை அழைத்தாள்.

''ஹலோ...! நீங்கதானே பேசறது...'' அவள் முடிக்கு முன் அவன்



மறுபக்கத்தில் பேயாகச் சிரித்தான்.

''ஆமாம்! உன் காதலன் செல்லப்பன் பேசுகிறேன். நீ கடைசியில் என் நிபந்தனைக்கு ஒப்புக்கொள்வேன்னு எனக்குத் தெரியும். உன்னைப் போலொத்த உல்லாசச் சிட்டுகள் காரியத்தில் இறங்கினதும் கோழைகளாகிவிடுவாங்க புரியுது... சொல்லு...''

அனுவுக்குத் தலையிலடித்தது போன்ற அதிர்ச்சி. வெட்கத்தை விழுங்கிக் கொண்டாள்.

''இப்போ நான் அங்கே வரலாமா? கொஞ்சம் இருட்டியதும் வர பிரியப்படுகிறேன்...''

''நாளைக்குத்தான் வருவேன்னு எதிர்பார்த்தேன், ஒரு நாளைக்கு முன்னாடியே ஓடி வரத் துடிக்கிறியா... மகராசியா வா... வெறுங்கையோடு மட்டும் வராதே...''

''பணத்தோடுதான் வரேன்.''

''அப்போ சட்டுபுட்டுனு நேரே வந்துடு - ரொம்ப நேரம் காக்க வெக்காதே...''

''ரொம்ப அவசரப்படுத்துறீங்களே!''

''அவசரம் இருக்காதா. பணத்தோட ஒரு அழகுப் பொக்கிஷம் அனாமத்தா கிடைச்சா - ஹி - ஹி இன்னிக்கு ராத்திரி என்னோட லாட்ஜிலேதானே இருப்பே - மறுக்கக் கூடாது. உனக்கும் எனக்கும் சூடான சாப்பாடு ரூமுக்கே கொண்டார ஏற்பாடு பண்ணிடறேன்.''

''நீங்க சொல்றதுதுக்கு நான் ஒப்புக் கொள்றாப்பல அந்தக் கடிதாசியை நீங்க திருப்பித் தந்திடுவீங்க இல்லையா?''

''பணமும் நீயும் கிடைச்சதும் அந்த கடிதாசி எனக்கு எதுக்கு? எடுத்து தயாரா வெச்சிக்கிட்டுத்தானிருக்கேன்.''

''இந்த விஷயம் நம்ப ரெண்டு பேருக்கு மட்டுமே தெரியும். மத்தவங்களுக்குத் தெரியக்கூடாது. அதனாலே நீங்க எனக்காக அறையிலேயே காத்துக்கிட்டு இருங்க போதும். நான் சரியாக ஏழு மணிக்குக் கதவை மெல்ல மூணுவாட்டி தட்டுவேன்.''

''சரி என் ராசாத்தி... காத்துக்கிட்டிருப்பேன். ஏமாத்தினியோ... உனக்குத்தான் ஆபத்து.''

போனைக் கீழே வைத்துவிட்டு, அனலாகப் பற்றி எரிந்த முகத்தைப் புடவைத் தலைப்பால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள். சசியின் பக்கம் திரும்பியபோது ஓவென்று வாய்விட்டு அழவேண்டும் போன்றதொரு துன்ப உணர்வில் அவள் நெஞ்சு பதைத்தது. கண்களில் லேசாக முட்டிய கண்ணீரைச் சமாளித்துக் கொண்டாள்.

''ரொம்ப நல்லா நடிச்சுட்டிங்களே, சபாஷ் . .'' என்றார் தாமோதரன்.

அனுவின் காதுகளில் அந்த வார்த்தைகள் விழவே இல்லை.

சிறிது பொழுதில் அவர்கள் புறப்பட்டார்கள். இருட்டி விட்டதால் சாலை விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின. போக்குவரத்தும் மிகவும் நெரிசலாக இருந்தது. கவனமாக வண்டியை ஓட்டிக் கொண்டு சென்ற சசி லாட்ஜிற்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு சந்தில் தாமோதரன் சொல்படி நிறுத்தினான். போலீஸ் அதிகாரிகள் இருவரும் முன்னால் தனியே நடந்து சென்றனர். லாட்ஜின் வாயிலிலே நின்று விட்டான் சசி. அனு மட்டுமே தனியே கால்கள் தள்ளாட ரிஸப்ஷன் அருகே வந்து விசாரித்துவிட்டு மாடிப்படிகளில் ஏறினாள்.

செல்லப்பனை போன்று அந்த லாட்ஜும் மட்டரகமானதாக இருந்தது. வராந்தாவில் எரிந்த மங்கிய விளக்கொளியில் அழுக்கடைந்த சுவர்களை அருவருப்புடன் கவனித்துக் கொண்டு மெல்ல நடந்தாள். ஒரு மூலையிலிருந்த குப்பைத் தொட்டியை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த பூனை காலடி ஓசை கேட்டு விருக்கென்று ஓடியது. அனு ஒரு கணம் நடுங்கிப் போய்விட்டாள். தயக்கத்துடன் பின்னால் திரும்பிப் பார்த்ததும் தான் அவளுக்கு உயிர் வந்தது. நல்லவேளையாக தாமோதரனும் புகழேந்தியும் அருகே வந்து கொண்டிருந்தனர்.

அறைக்கு முன் வந்து நின்றாள். திக்திக்கென்று மார்பு அடித்துக் கொண்டது. மெல்ல விரல்களால் தட்டினாள்.

''யாரது சோபனாவா?'' உள்ளேயிருந்து வந்தது அதட்டலான குரல்.



தாமோதரன் சற்றுத் தொலைவிலிருந்தபடியே கைகளால் ஜாடை செய்வதைப் புரிந்துகொண்டு துணிவுடன், ''நான்தான் சோபனா வந்திருக்கிறேன். கதவைச் சீக்கிரம் திறங்கள்'' என்றாள் மெல்லிய குரலில்.

''அடி சக்கை! வந்துட்டியா?...'' ஆர்ப்பாட்டமாகச் சொல்லிக் கொண்டே கதவைத் திறந்த தாடி மீசை ஆசாமி அவளைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

''யார் நீ'' என்று அதட்டிவிட்டு கதவைச் சட்டென்று மூடத் திரும்பினான்.

அதற்குள் புகழேந்தியும் தாமோதரனும் உள்ளே நுழைந்து விட்டனர். அனுவும் சசியும் பின்னால் தொடர்ந்ததும் தாமோதரன் கதவைச் சாத்திவிட்டு அவனை அணுகினார். போலீஸ் உடுப்பைக் கண்டதுமே செல்லப்பனுக்கு உதறல் கண்டுவிட்டது.

''பிளாக்மெயிலா பண்றே... எடுடா அந்த கடுதாசியை'' என்று கர்ஜித்த தாமோதரன் ஓங்கி விட்ட அறையால் அவனுக்குப் பொறி தட்டியது. அவனையுமறியாது கை சட்டைப் பைக்குள்ளிருந்த கடிதத்தை எடுத்து அவரிடம் நீட்டியது.

புகழேந்தி அதை வாங்கி சசியிடம் கொடுத்தார். ''கையெழுத்து சரிதானா என்று பார்த்துக் கொள். இந்த பயல் கடிதத்தைக் கூட ஃபோர்ஜ் பண்ணுவான். அப்படிப்பட்ட அயோக்யன்...'' என்றார் கோபத்துடன்.

சசிக்கு அதைப் படிக்க வெட்கமாகத்தானிருந்தது. சந்தேகமில்லாது அது சோபனாவின் கையெழுத்துதான். ஆமாம் என்று அவன் ஒப்புக் கொண்டான்.

''அந்த வளையல், செயின் எல்லாம் எந்தக் கடையில் அடகு வச்சே... இப்ப கூடவந்து இடத்தைக் காட்டணும்...'' தாமோதரன் இடுப்பிலிருந்த பெல்டைக் கழற்றினார். கதி கலங்கிப் போனான் செல்லப்பன். தடால் என்று அவர் காலடியில் விழுந்து கும்பிட்டான்.

''அடிக்காதிங்க ஸார். நான் தாங்க மாட்டேன். செத்து விடுவேன். எல்லாத்தையும் ஒத்துக்கிறேன். தெரியாம செஞ்சுட்டேன். இனிமேல் அவங்க வழிக்குப் போக மாட்டேன். உங்களை கும்பிடறேன்

விட்டுடுங்கோ'' என்று வாய்விட்டு புலம்பி அழத்தொடங்கினான்.

''இந்த கல்லுளிமங்கன் வேஷமெல்லாம் நம்ப கிட்ட பலிக்காது. எழுந்திரு, நகையை எங்கே வித்தே?'' பெல்டைக் கையில் எடுத்துக் கொண்டார் தாமோதரன். நடுங்கிப் போனான் அவன்.

''இங்குதான் வச்சிருக்கிறேன். யாராவது அடையாளம் கண்டு கொண்டா ஆபத்துன்னு பயந்து இட்டுத்தான் வச்சிருந்தேன். இதோ கொடுத்திடறேன். என்னை வுட்டுடுங்கோ ஸார்,'' அலறி அழுது கொண்டு அறையின் மூலையிலிருந்த பெட்டியைத் திறந்து வளையல்களையும் சங்கிலிகளையும் எடுத்து அவரிடம் கொடுத்தான்.

''இவ்வளவு தாங்க. வேறு ஒண்ணும் கிடையாது, என்னை வுட்டுடுங்கோ. உங்களுக்குப் புண்ணியம்'' அழுது கொண்டு புலம்பினான்.

''இது போதாது. நான் சொல்றபடி போலீசுக்கு உன் கைப்பட ஒரு கடிதமும் எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுக்கணும். அப்பத்தான் விடுவேன்.'' உறுமிய தாமோதரன் அவனிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்து தாம் சொல்லியபடி எழுதச் சொன்னார். மிரண்டு விட்டிருந்த அவன் எழுதினான்.

பண ஆசைப்பட்டு பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணைப் பயமுறுத்தியது தன் குற்றம் என்று அவன் ஒப்புக் கொண்டதாக அமைந்த கடிதத்தில் கையெழுத்திட்டு அவரிடம் நீட்டினான்.

''இனிமேல் ஒழுங்காக வேலை செய்து பிழைக்கிற வழி பார். இந்த மாதிரி வேலையில் இறங்கினாயோ...'' என்று உறுமிய தாமோதரன் அவன் முடியைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி அறையின் மூலைக்கு அவனை நெட்டித் தள்ளினார். மழையில் நனைந்த கோழிபோல அவன் நடுங்கிப்போய் நின்றான். அவர்கள் எல்லோரும் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினர்.

அனு வீட்டிற்கு வந்தபோது இரவு ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது. சோபனா தன் அறைக்குள் தனியே உட்கார்ந்திருந்தாள். ஓசைப் படாது உள்ளே வந்து நின்ற அண்ணியை வியப்புடன் அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''நீ கேட்டுக் கொண்டிருந்த கடிதம் இதுதானே? சரியாகப்



பார்த்துவிட்டு யார் கண்ணிலும் படாமல் கிழித்துப் போடு. காணாமல் போன உன் சங்கிலியையும் என் வளைகளையும் வாங்கிக் கொண்டு வந்து விட்டேன். இந்தா உன் சங்கிலி. இனியாவது பத்திரமாக வைத்துக் கொள்'' அவைகளை மேசை மீது வைத்து விட்டு அனு பிருக்கென்று வெளியே சென்று விட்டாள்.

மேசை மீதிருந்த பொருள்களைப் பார்த்த சோபனாவின் முகம் வெளுத்து நா வரண்டு - நெஞ்சுலர்ந்து போயிற்று. அவளது துணிவு பொடிப் பொடியாகியது.

## 22

அடுத்த நாள் காலை தாத்தாவைக் காண அனு அறைக்குள் சென்ற பொழுது அவர் தனியாக இருக்கவில்லை. ஜெய்குமாரும் புகழேந்தியும்கூட அருகே உட்கார்ந்திருந்தனர். கதவைத் திறந்து கொண்டு அவள் உள்ளே வந்ததைக் கூட பார்க்காது அவர்கள் உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்தனர். அந்த வீட்டிற்கு வந்ததிலிருந்து அன்று தான் அவள் தாத்தாவை அப்படி ஒரு உற்சாக நிலையில் முதல் முதலாகப் பார்த்தாள். புஸ் என்று மீசைகள் முகம் முழுவதும் வியாபிக்க பொய் பற்கள் வரிசையாக மின்ன வாயைத் திறந்து அவர் சிரித்தபோது உடல் முழுவதும் மகிழ்ச்சியில் குலுங்கிக் கொண்டிருந்தது.

புகழேந்தி அவளைப் பார்த்துவிட்டார். ''வாங்ககோம்மா... உங்கள் நடிப்பைப் பற்றித்தான் விவரிச்சுக் கொண்டிருந்தேன்'' அவர் சொல்லி முடிக்குமுன் மற்ற இருவரும் அவள் பக்கம் திரும்பினர். குப்பென்று அவள் முகம் சிவந்து போயிற்று; அத்துடன் நெஞ்சிலே ஒரே துடிப்பு. கணவன் பக்கம் திரும்பிப் பார்க்கவும் அஞ்சி தலையைக் குனிந்து கொண்டு அவள் கையில் கொண்டு வந்த பத்திரிக்கைகளை மேஜை மீது வைத்தாள்.

''சித்த முன்னாடி வந்திருந்தால் நீ ஒரு நாடகத்தையே பார்த்திருப்பே. நேத்திக்கு நடந்த அந்தச் சங்கதி முழுவதையும்

அப்படியே இங்கே எங்க கண் முன்னாடி புகழேந்தி கொண்டு வந்து நிறுத்திட்டான். படிக்கிற காலத்திலே பிடிச்சு இவன் ஒரு நாடகப் பைத்தியம். அப்போது பிரபலமாக இருந்த ஒரு அமெச்சூர் குழுவில் இவன் ஒரு நடிகனாக இருந்தான். நாடகத்தில் கூட போலீஸ்காரன் வேஷந்தான் போடுவான்...'' தாத்தா பலமாகச் சிரித்தார்.

''அனு அம்மா என்னைத் தோற்கடிச்சுட்டாங்க...'' புகழேந்தி உற்சாகத்துடன் சொன்னதும் அவள் மெல்லத் தன் கணவன் முகத்தைப் பார்த்தாள். அவனைக் கலந்து கொள்ளாமல் அந்தக் காரியத்தில் இறங்கியதைக் குறித்து என்ன சொல்லப் போகிறானோ என்று உள்ளூர அவளுக்குக் கலக்கந்தான்.

ஆனால் குமாருக்கு மனைவியின் துணிச்சலை எண்ணி மிக்க பெருமையாகத்தானிருந்தது. மெல்லியதாகப் புன்னகைத்தபடி அவளைப் பார்த்தான்.

''எங்களுக்கெல்லாம் கொள்ளைப் பசி. எல்லோருக்கும் காப்பி பலகாரத்தை இங்கேயே கொண்டு வரும்படி தங்கவேலுவிடம் சொல்லு'' உத்தரவிட்டார் கிழவர்.

அனு வேகமாகத் திரும்பியபோது ஜெய்குமார் அவளைத் தாண்டிக் கொண்டு கதவைத் திறந்து அவளுக்கு வழிவிட்டு உபசரித்தான். அப்படியே மெல்லப் பின்தொடர்ந்து வெளியே வந்தான். சாப்பாட்டு அறையின் ஓரத்தில் கிழவர் பார்வையைத் தாண்டிய இடத்திற்கு வந்ததும் அவனால் பேசாதிருக்க முடியவில்லை.

''எனக்கு என்ன சொல்வதென்றே தெரியலை. உண்மை தெரிந்து நாங்கள் மனவேதனையடையக் கூடாதுன்னு மூடி மறைச்சு வச்சு துணிவுடன் பொறுப்பை ஏற்று நீ வெற்றி கண்டதைப் பற்றிப் புகழ்வதா? காரியம் முடிஞ்சதும் உண்மையை எங்களுக்கு நாசூக்காக அதிர்ச்சி ஏற்படாத வகையில் எடுத்துச் சொல்ல புகழேந்தியை இங்கே வரச் சொல்லி ஏற்பாடு செய்ததைப் பாராட்டுவதா? உன்னை சிறிதளவும் மதிக்காத சோபனாவுக்கு வாழ்வளிக்க முன் வந்த உன் நல்லெண்ணத்திற்கு நன்றி கூறுவதா? ஒரே பிரமிப்பாக இருக்கு'' உணர்ச்சி வசத்தில் மெல்லிய குரலில் வியந்தான்.

''இது என் குடும்பம். இதனுடைய பிரச்சனைகளில் எனக்கும்



பங்கு உண்டு இல்லையா!'' பதிலளித்து விட்டு அவள் சட்டென்று சமையலறைக்குள் புகுந்தாள். ஆனாலும் கணவனது புகழ் உரைகளைக் கேட்டு அவளுக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி! நெஞ்சிலே ஒரு இன்ப நிறைவு.

அன்று மாலை அவள் ஆபீஸிலிருந்து திரும்பி வந்ததும் தாத்தா அவளுக்கு அழைப்பு விடுத்தார். அவசரமாக முகத்தைக் கழுவித் துடைத்து பொட்டு இட்டு தலையை வாரி சீர்ப்படுத்திக்கொண்டு அவள் கீழே விரைந்தாள். சக்கர வண்டியைத் தள்ளிக்கொண்டு தாத்தா அவளை எதிர்நோக்கி வந்தார்.

''உட்கார் அம்மா. கொஞ்ச நாட்களுக்கு இனி ஆபீஸ், தொழிற்சாலை இவைகளை மேற்பார்வையிடப் போகவேண்டாம். ஓய்வு இல்லாமல் நீ உழைத்தால் எங்கே உன் ஆரோக்கியம் கெட்டு விடுமோன்னு கவலையாயிருக்கு.''

''நான் நல்லாத்தானே இருக்கேன். அப்படி ஒன்னும் வேலை அலுப்பா இல்லையே!'' புன்னகைத்த வண்ணம் அவர் காட்டின ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''நீ கட்டாயம் எங்களுக்காக நல்ல சுகத்தோடு பல காலம் இருக்கணும்மா.'' அவர் குரல்கம்மியது காலையில் அந்த முகத்தில் காணப்பட்ட உற்சாகம் மறைந்து வேதனையின் சாயை பரவி நின்றது. அனு வியப்புடன் அவரைப் பார்த்தாள்.

''காலையிலே அப்படி சிரிச்சுக் கொண்டு சந்தோஷமா இருந்தாரேன்னு தானே யோசிக்கிறே. வெட்கத்தை மறைக்க அப்படி ஒரு வேஷம் போட்டேன். புகழேந்தி நடந்ததையெல்லாம் விவரிக்கச் சொன்னபோது என் பேத்தி மேலே எனக்கு வந்த கோபத்தை விவரிக்கவே முடியாது. தன்னுடைய தவறான செய்கையால் என் குடும்பத்தையே நாசமாக்கிவிட இருந்தாளே பாவி மகள்! பதைபதைச்சுப் போனேன். ஆத்திரத்திலே இரத்தம் கொதிச்சது... உடம்பெல்லாம் ஆடிச்சு... ஆனால் அதை வெளியே காட்டிக்கலை. ஏதோ ஒரு வேடிக்கை கதையைக் கேட்பது போல சிரிச்சு மழுப்பினேன். நீ மட்டும் துணிவோடு இந்த மாதிரி ஒரு முடிவு எடுத்திருக்காவிட்டால் இன்னும் என்ன விபரீதங்கள் நேர்ந்திருக்குமோ தெரியாது... அம்மா அனு! நீ எங்க குடும்பத்து

மானத்தைக் காக்க வந்த தெய்வம்'' உணர்ச்சி வசத்தில் அவர் குரல் தடைப்பட்டது. சக்கர வண்டியைச் சட்டென்று வேகமாகத் தள்ளிக் கொண்டு ஜன்னலருகே சென்று வானத்தை வெறித்துப் பார்த்தார்.

அனு எழுந்து மெல்ல அருகில் சென்றாள். ''தாத்தா'' துணிவோடு அவள் அழைத்தாள்.

''என்னை தெய்வமாக்கி உயர பீடத்திலே வச்சுட்டீங்களே நியாயமா? என் கடமையைச் செய்தேன். அதுக்கு இப்படிப் புகழ்கிறீங்களே, அது சரியா?''

கிழவர் சட்டென்று நாற்காலியைத் திருப்பிக் கொண்டு அருகில் வந்தார், ''ஆமாம் அம்மா, உன் கடமைகளைச் சிறிதும் தவறாமல் நீ செய்து கொண்டு வருகிறாய். நான்தான் இன்னமும் என் கடமையைச் செய்யத் துவங்கலை. அதுக்கும் காலம் நெருங்கிக் கொண்டு வருகிறது. இன்னிக்குப் பகல் நான் சோபனாவோடு பேசிக் கொண்டிருந்தேன்.''

''என்ன பேசினீங்க தாத்தா?'' திடுக்கிட்டு அனு கேட்டாள்.

''எனக்கு என்ன அத்தனை விவேகம் இல்லையா? அந்தச் சங்கதியைப் பற்றி நான் கண்டு கொள்ளவேயில்லை. விடியற்காலை அந்த தஞ்சாவூர்க்காரர் போனில் என்னோடு பேசினார். பெண்ணின் அபிப்பிராயத்தை சொல்லலையேன்னு ஞாபகப் படுத்தினார். அதனால் தான் சோபனாவைக் கூப்பிட்டு நேரிடையாகவே விசாரித்து விட்டேன்.''

''அவள் என்ன சொன்னாள்?''

''அவளுக்கு அந்த பையன் சந்திரமோகனைக் கட்டிக்க கசக்கிறதா? மாப்பிள்ளையை உனக்கு பிடிச்சிருக்கான்னு கேட்டேன். 'உங்களுக்கு பிடிச்சா எனக்கும் பிடிச்சது போல' அப்படின்னு சுத்தி வளைச்சு கல்யாணத்துக்கு ஒப்புதல் தெரிவித்து விட்டாள். சோபனா சுபாவத்திலே கர்வி. பிடிவாதக்காரி. ஒரே நாளில் இப்படி பணிவா, குழைந்து பேசும் அளவுக்கு மாறி விட்டதைக் காண எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முகூர்த்தத்தை எப்போ வைக்கலாம்னு கேட்டதுக்கு என்ன சொன்னா தெரியுமா? அனு அண்ணியை கலந்து கொண்டு அவங்க ஆலோசனைப்படி செய்யுங்க தாத்தான்னா. நீ வந்த பிறகு இந்த வீட்டில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டிருக்கு.



ஆனா சோபனாவிடம் காணப்படும் இந்த மாறுதலை நான் ஒரு அற்புதம் என்றுதான் சொல்லுவேன். சாதாரண மனிதர்களால் அற்புதங்களை செய்ய முடியாது.''

''அதனால்தான் உன்னை இந்த வீட்டை வாழ்விக்க வந்த தெய்வம் என்றேன். சரி தானே... நான் சொன்னது'' முடிவில் வேடிக்கையாகச் சொல்லி விட்டுச் சிரித்தார்.

அனுவுக்கு கட்டுக் கொள்ளாத மகிழ்ச்சி. ''மறுபடியும் மறுபடியும் என்னை தெய்வமாக்கி வேடிக்கை பார்க்கிறீர்களே தாத்தா'' அவளும் கூடச் சிரித்தாள்.

''இல்லேம்மா உன்னை இந்த வீட்டு மருமகளாக வாழ வைக்க வேண்டியது என் கடமை. காலம் வெகு தூரமில்லை'' என்றார் மன மகிழ்ச்சியுடன்.

அன்று இரவு வீட்டு வேலைகளுக்குப் பின்னர் எல்லோரும் உறங்கச் சென்றதும் அனு தன் அறைக்குள் வந்து கதவைச் சாத்திக் கொண்டு களைப்புடன் படுக்கைமீது உட்கார்ந்தாள். லேசாக யாரோ கதவைத் தட்டும் ஒலி கேட்டது. எழுந்து சென்று திறந்தாள்.

சோபனா வெளியே நின்று கொண்டிருந்தாள். ''அண்ணி! தூங்க ஆரம்பிச்சுட்டீங்களா? உங்களோடு ஒரு ஐந்து நிமிஷம் பேச விரும்புகிறேன்'' மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டாள்.

வெடுக்கென்று தூக்கி எறிந்து பேசும் சோபனாவா இப்படிக் குழைகிறாள்? அனுவால் நம்ப முடியவில்லை.

''அண்ணி ரொம்ப களைப்பா இருக்கிறீங்களா?'' சோபனா கனிவுடன் கேட்டது அவளைத் திகைக்க வைத்தது. தாத்தா சொல்லியது உண்மைதான். இந்தப் பெண் ஒரே நாளில் மிகவும் மாறிவிட்டிருக்கிறாளே!

''வா, உள்ளே வந்து உட்கார்...'' உபசரித்தாள் அனு.

கதவைச் சாத்திக் கொண்டு வந்த சோபனா உட்காரவில்லை. தயக்கத்துடன் நின்றாள்.

''அண்ணி!...'' அவளால் பேசமுடியவில்லை. தொண்டையை என்னவோ அடைத்தது. ''நீங்க எனக்கு செஞ்சிருக்கிற உதவியை நான் உயிர் உள்ள வரைக்கும் மறக்கவே மாட்டேன். என்னைப் பெற்ற தாய்

உயிரோட இருந்தாகூட இத்தனைத் துணிவா புகுந்து இந்தச் சங்கடத்திலிருந்து என்னைக் காப்பாத்தியிருப்பாங்களோ என்னவோ தெரியாது. ஆனா நீங்க எனக்கு வாழ்வு கொடுக்க அஞ்சாம செஞ்சிருக்கிற காரியத்தைப் பத்தி சசி அண்ணன் விளக்கினபோது நான் என்னைப் பற்றி ரொம்ப வெட்கப்பட்டேன். இவ்வளவு நல்ல குணமுடைய உங்களைப் புரிஞ்சுக்க மறுத்து இத்தன்னை நாளும் உங்களை மரியாதைக் குறைவா நடத்தினதுக்கு வேதனைப்படறேன். ஒரு குழந்தை தாயைக் கேட்பது போல் கேட்கிறேன். மனசார என்னை மன்னிச்சு நான் போகிற இடத்தில் நல்லா வாழணும்னு உங்க மனம் நிறைந்து வாழ்த்துங்கோ ப்ளீஸ் அண்ணி!'' அவளது வார்த்தைகள் ஒரு பெரும் விம்மலில் முடிந்தது. திடீரென்று அனுவின் கால்களில் விழுந்து கும்பிட்டு குலுங்கக் குலுங்க அழுதாள்.

பதறிப்போனாள் அனு. அவளை வாரி எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''சோபனா! சுப காரியங்கள் நடக்க இருக்கையிலே நீ அழக்கூடாது. நாம் கடந்து போனதை மறந்துடுவோம். இனி மேலே நடக்கப் போறதிலே ஒருவருக்கொருவர் துணையாக இருப்போம். சரிதானே'' சமாதானப்படுத்தினாள்.

கண்களைத் துடைத்துக் கொண்ட சோபனா அண்ணியின் கரத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு படுக்கை மீது உட்கார வைத்துத் தானும் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''அண்ணி! இந்தச் சம்பவத்தின் முழு விவரத்தை உங்க கிட்ட சொல்லா விட்டால் என் தலையே வெடிச்சு விடும் போல் இருக்கு. உண்மையிலேயே எனக்கு அந்த செல்லப்பன் மேல் எந்தவிதமான எண்ணமும் கிடையாது. நான் விபரீதமாக நடந்து கொண்டதற்குக் காரணம் என் தோழி ஜலஜாவின் தூண்டுதல்தான். உங்களைப்போல அறிவுமிக்க ஒரு அண்ணியோ, தாயோ வீட்டில் இல்லாததினால் நான் எடுப்பார் கைப்பிள்ளையாக வளர்ந்து விட்டவள். படிப்பு - அழகு - அந்தஸ்து இவைகளைப் பற்றி எனக்கு அதிக கர்வம் உண்டு. ஏழைகள் - அழகற்றவர்களைக் கண்டால் ஏளனம் செய்கிற மட்டமான குணமும் உண்டு. அவர்களைப் பரிகசித்து - துன்புறுத்தி அதில் இன்பம் காணும் ஒரு குரூர புத்தி. அதைக் கண்டிக்க வீட்டில் யாரும்



இல்லாததால் என் பார்வையில் பட்ட ஏழை அப்பாவிகளைப் பரிகசித்து மகிழ்வது ஒரு வழக்கமாகி விட்டது.

''இந்தச் சம்பவம் நடந்தபோது நான் பள்ளி மாணவியாக இருந்தேன். ஒரு விடுமுறை நாளின் போது ஜலஜா என்னைப் பார்க்க வீட்டிற்கு வந்திருந்தாள். ஏர்கண்டிஷனைப் பழுது பார்க்க வந்த செல்லப்பனைக் கண்டதும் அவளுக்கு விசித்திரமானதொரு யோசனை தோன்றியது. படிப்பு - அழகு - அந்தஸ்து அதிகமில்லாத அவனை நான் காதலிப்பது போல் காட்டிக்கொண்டால் அவன் எப்படி நடந்து கொள்வான்? இந்த விஷப்பரீட்சையைச் செய்து பார்க்கும்படி என்னைத் தூண்டி விட்டாள். உற்சாகப்படுத்தினாள். நான் ஒத்துக்கொண்டேன். அவள் சொல்படி காப்பியை எடுத்துச் சென்று சிரித்துப்பேசி அவனுக்கு உபசாரம் செய்தேன். பலமுறை அவனை பார்த்துப் புன்னகைத்தேன். அவன் மயங்கிப்போய் நிலை தடுமாறி நின்றதைக் காண எங்களுக்குள் ஒரே சிரிப்பு. இன்னும் அவனை வேடிக்கை செய்ய வேண்டித்தான் அந்தக் காதல் கடிதத்தை ஜலஜா சொன்னபடி எழுதி அனுப்பினேன். அதுவே என் தலைவிதியை நிர்ணயிக்கும் பயங்கர ஆயுதமாகும் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை.

''செல்லப்பனை வேடிக்கை செய்து அதன் விளைவை ரசித்து மகிழ நினைத்த எனக்கே அவன் வேடிக்கை காட்டத் தொடங்கிவிட்டான். கல்லூரி வாசலில் வந்து நின்று கழுத்தை அறுத்தான். பயந்து கொண்டு பேசினேன். பிறகு பணம் வேண்டும் என்று பயமுறுத்தினான். கையில் கிடைத்ததை அவ்வப்போது கொடுத்தேன். கடைசியாக அவன் எல்லை மீறி பயமுறுத்தத் தொடங்கியபோது எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. யாரிடமும் சொல்ல பயம். இந்த நிலையில்தான் நீங்க என்னைக் காப்பாத்தினீங்க. இல்லாவிட்டால் நான் என்ன செய்திருப்பேனோ தெரியாது. அண்ணி! சத்தியமா சொல்றேன். வேறு தவறான எண்ணத்தோடு நான் அவனிடம் பழகலை. எல்லைமீறி எதுவும் செய்யவில்லை. சிநேகிதியின் தூண்டுதல் பேரில் வேடிக்கையாக ஆரம்பித்தது பயங்கரமாக முடிந்தது.

''ஏழை என்று அசட்டையாக பிறருடைய உணர்வுகளைக் காலடியில் போட்டு மிதிப்பது எத்தனை தவறான செய்கை!

எப்படிப்பட்டதொரு ஆபத்தில் நீ சிக்க இருந்தாய் பார்த்தியா, போகட்டும். இதை ஒரு கெட்ட கனவாக மறந்துவிடு. ஏழைகளைப் பற்றிய உன் மனப்போக்கை மாத்திக்கோ.''

''அப்படியே செய்கிறேன் அண்ணி! கடந்த சில மாதங்களாக நான் ஒரு நாள் கூட நிம்மதியா தூங்கினதில்லை. எப்பவும் அவனைப் பற்றி நினைச்சு மனதில் ஒரே திகில். நேற்று ராத்திரிதான் முதல் முதலா நான் நிம்மதியா தூங்கினேன். என் மனசில் இப்போதுதான் அமைதி. இந்த திகிலிலிருந்து எனக்கு விடுதலை வாங்கியளிச்ச உங்களுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்.

''உங்களை எனக்கு ரொம்ப பிடிக்குது. என் மனசைத் திறந்து பேச எனக்கு ஒரு அன்பான அண்ணி இருக்காங்களேன்னு நான் ரொம்ப பெருமைப்படறேன்.'' உணர்ச்சிவசத்திலே பேசிக் கொண்டே போன சோபனா அவளை இறுக அணைத்துக் கொண்டு கன்னத்திலே ஒரு முத்தமிட்டாள்.

# 23

வேலையாள் கொண்டு வந்து வைத்த பத்திரிக்கைக் கட்டுகளிலிருந்து அவசரமாக அந்த வாரப் பத்திரிக்கையைக் கையில் எடுத்துக் கொண்ட ரத்னா அம்மாள் பின்பக்கம் விரைந்தாள். ஏடுகளைப் புரட்டி, ராசிகள் என்ன சொல்கின்றன என்ற பகுதியை ஆவலுடன் படித்தாள்.

விருச்சிகம் - அலைச்சல் மிக்க நேரம். இடப்பெயர்ச்சி ஏற்படலாம். குடும்பத்தில் விரோதம் ஏற்படலாம், ஆரோக்கிய நலிவும் பணவசதி குறைவும் ஏற்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன. ஒரு திடீர் பயணம் ஏற்படலாம். மதிப்பும் சிறப்பும் மங்கும் வேளை - மொத்தத்தில் இந்த ராசிக்காரர்களுக்கு சுமாரான வாரம்.

உதட்டைக் கடித்துக் கொண்டாள். அந்தப் பத்திரிக்கையில்



வெளிவரும் ராசிபலனைப் பற்றி அவளுக்கு அபாரமான நம்பிக்கை. அதுவும் அந்த வாரம் அதில் காணப்பட்டவை அனைத்தும் அவள் விஷயத்தில் மிகவும் பொருத்தமாக இருப்பதை உணர்ந்து அவளுக்கு மிக்க வியப்பு.

சோபனாவின் கல்யாணத்திற்கு சில தினங்களேதான் இருந்தன. வீடு அமளிப்பட்டுக் கொண்டிருந்தது. திருமணத்திற்கு தாத்தா உள்பட அனைவரும் தஞ்சாவூருக்குப் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ராசிபலனைப் பொறுத்தவரை ஒரு திடீர்ப் பயணம் அவளுக்கு இருந்தது என்னவோ உண்மை. இடப்பெயர்ச்சி என்றதும் சரியாகத்தானிருந்தது.

பெண்ணைக் கொடுத்துவிட்டு அந்த வீட்டிலேயே குடியேறிவிட்ட நாளிலிருந்து அவள் சோபனாவுடன் மாடியறையில் தான் சுகமாகத் தங்கிக்கொண்டிருந்தாள். சில நாட்களுக்கு முன்னர் அந்த சுகத்திற்கு ஒரு தடுமாற்றம் ஏற்பட்டு விட்டது. குளுகுளுவென்ற ஏ.சி. அறையினின்று அவளது பெட்டி முதலிய சாமான்களை வேலையாட்கள் கீழே பூஜையறை பக்கத்திலே பல ஆண்டுகளாகப் பூட்டிக்கிடந்த சிறு அறைக்குள் கொண்டு வந்து வைத்து விட்டிருந்தனர்.

'ஏன் இப்படி ஒரு ஏற்பாடு...?' ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மெல்ல அனுவிடம் கேட்டுப் பார்த்தாள்.

''சோபனாவின் திருமணத்திற்குப் பின்னர் அடிக்கடி மாப்பிள்ளை சென்னைக்கு வரக்கூடும். அவர் வந்தால் தங்குவதற்கு சோபனா அறை இனி தேவைப்படும். உங்களுக்கு அந்த அறையில் வசதிகள் செய்து கொடுக்கும்படி தாத்தா சொன்னார்'' என்றாள் அனு.

தாத்தாவின் உத்தரவு என்றபின் பேச்சேது மூச்சேது?

ஆனால் அவள் உள் மனதில் ஒரு திகில் புயலைப் போல உருவாகத் தொடங்கியது. அதன் பயனாக அவள் உடல் முழுவதும் திடீரென்று வியர்த்துக் கொட்டியது.

தாத்தா தொடர்ந்து இன்னும் என்ன புது உத்திரவுகளைப் பிறப்பிப்பாரோ? என்னென்ன மாறுதல்கள் ஏற்படவிருக்கின்றனவோ? சும்மா சொல்லக்கூடாது. அந்த வார இதழில் காணப்பட்ட ராசி பலன்கள் எல்லாமே

பொருத்தமானதாகத்தானே இருக்கின்றன? ஆரோக்கிய நலிவு என்று காணப்பட்டது. தாத்தாவின் உத்திரவைக் கேட்ட நாளிலிருந்து மேலேயிருந்து கீழ் அறைக்குப் பிடித்துத் தள்ளாத குறையாக அனுப்பப்பட்ட நாளிலிருந்து நெஞ்சிலே ஒரு படபடப்பு -மூச்சடைப்பு எல்லாம் அவளுக்கு வந்து விட்டிருந்தன. திடீர் பயணம்?... தஞ்சாவூர் கல்யாணத்திற்குக் கிளம்ப வேண்டியிருக்குமே அதுவா அல்லது?... அவளுக்குத் தலைசுற்றியது. குடும்பத்திலே விரோதம்! அதுவும் சரியாகத்தானிருந்தது.

சசியும் - சோபனாவும் அவளது இரண்டு கைகள் போல உதவிக்கொண்டு அவளைச் சுற்றி வம்புக்கு அலைந்து கொண்டிருந்த காலம் போய் இருவரும் அண்ணியின் பின் ஓடத் தொடங்கியிருந்தனர். அப்படி அந்த அனு என்னதான் மந்திரமாயம் போட்டாளோ தெரியாது. பிடிவாதக்காரி சோபனாகூடவா மாற வேண்டும். அதுவும் ஒரே நாளில்? நம்ப முடியாத அதிசயம்.

அவள் மருமகன் குமார்? இனி அவளுக்கு என்ன மதிப்பு இருக்கிறது. அவள்தான் அவனின் மாஜி மாமியாராயிற்றே. முன்பெல்லாம் அப்போதைக்கப்போது அவன் இரண்டு வார்த்தைகளாவது அவளிடம் பேசுவதுண்டு.

''உடம்புக்கு சுகமில்லையா? ஒரு மாதிரி இருக்கீங்களே. டாக்டரை வரவழைச்சு பார்க்கிறதுதானே...'' மாமியாருக்காக மனம் கரைந்து போவான்.

இப்போது?

எதிரே வந்தால்கூடப் பாராது போல் வேகமாக மாடிப்படிகளில் இறங்கி ஓடிக் கொண்டிருந்தான். இளைய மனைவி அனுவைத் தவிர அவன் கண்களில் யாருமே படவில்லை. அப்படி ஒரு மயக்கம் அவனுக்கு.

அத்துடன் இருந்தாலும் அத்தை ரத்னா அம்மாள் கொஞ்ச நாட்களில் தானே சமாதானமடைந்திருப்பாள். தங்கவேலு அவளைக் கண்டபோதெல்லாம் புகழ்ந்து எரிச்சலைத் தூண்டிவிட்டிருந்தான். சோபனாவின் அறையை மாப்பிள்ளையின் வருகைக்காக எப்படி அலங்காரம் செய்திருக்கிறார்கள் என்று அவள் காதுகளைத் துளைத்துத் தீர்த்தான்.



''அந்தக் கட்டில் - பீரோ - சோபா எல்லாம் டெல்லியிலிருந்து வரவழைச்சாங்க. ரோஸ்வுட்லே செஞ்சது. பார்க்கப் பளபளன்னு கன ஜோரா இருக்கு.'' அவன் புகழ்ந்ததைக் கேட்ட பின்னரும் அவளால் வாளா இருக்க முடியவில்லை. யாரும் இல்லாத ஒரு மாலைப் பொழுதில் அவள் விரைந்து மாடிப்பக்கம் சென்று, சோபனா அறையைத் திறந்து நோட்டம் விட்டாள். உண்மைதான் அனு பணத்தை வாரிக் கொட்டி அறையை நேர்த்தியாக அலங்கரித்து விட்டிருந்தாள். அத்துடன் அந்தப் பெண்ணைத் தன் கையில் போட்டுக் கொண்டு விட்டிருந்தாள். தந்திரக்காரி... வியந்தபடியே வேலையாட்கள் சுத்தப்படுத்த திறந்தபடியே விட்டிருந்த ஜெய்குமாரின் அறைப் பக்கம் எட்டிப் பார்த்தாள். அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அறைக்குள் நுழையுமுன்பே அலங்காரமாக எதிர்ச் சுவரில் காணப்பட்ட வாணியின் படம் காணவில்லை. அதற்குப் பதில் அனு - ஜெய்குமார் இருவரின் திருமணப்படம் ஒன்று பெரிதாக்கி மாட்டப்பட்டிருந்தது.

வாணியின் இடத்துக்கு அனு வந்து விட்டாள் என்ற நிலை தவிர்க்க முடியாதது. ஏற்றுக் கொண்டு விட்டிருந்தாள். ஆனால் ஒரேயடியாக வாணியின் நினைவுகூட கணவன் மனதில் இருக்கக் கூடாது என்று ஒழித்துக் கட்ட முடிவு செய்து விட்டாளே பாவி...

ரத்னம்மாளின் ரத்தம் கொதித்தது. மூச்சு முட்டியது. கீழே இறங்கி வந்தவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

சோபனா அப்பொழுதுதான் அனுவுடன் வீட்டிற்குள் வந்து கொண்டிருந்தாள். கனமானதொரு புடவைப் பார்சலை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் அண்ணியுடன் கொஞ்சிப் பேசிக் கொண்டு, அவளிடம் கேட்டுப் பயன்? நாள் முழுவதும் அண்ணி மீது குற்றம் கண்டுபிடித்துக் கொண்டு அலைந்த சோபனாவுக்கு இப்போது அனு மகாமந்திரமாகி விட்டாளே...

சசி? அவன் அதற்கு மேல்... அத்தையம்மாளிடம் பேசப் பொழுதேது அவனுக்கு.

மொத்தத்தில் அந்த வீடே தலைக்குப்புறவாகி விட்டிருந்தது. யாரிடம் கேட்பது? மனத்திலே குமுறிய வேதனையை அடக்கிக் கொண்டு, ''சோபனா, என்ன கல்யாணப் புடவையா? நான்

பார்க்கலாமா?'' தவறிப் போய் ரத்னா கேட்டு விட்டாள்.

''தாத்தா பார்த்த பின்தான் மத்தவங்களுக்குக் காட்டணும்னு அண்ணி சொல்லியிருக்காங்க.'' அவள் கூறிவிட்டு வேகமாக தாத்தாவின் அறைக்குள் புகுந்து விட்டாள்.

முகத்திலடித்தாற் போல் பதிலளிக்கும் சோபனாவிடம் கேட்டால் இன்னும் ஏதேனும் கடுமையான பதில்தான் வரும். வெட்கத்தில் குன்றிப் போன ரத்னா உள்ளுக்கும் வாயிலுக்கும் பலமுறை நடந்தாள்.

யாரைக் கேட்பது? எப்படித் தெரிந்து கொள்வது? யாரும் பிடி கொடுத்துப் பேச மாட்டேன் என்கிறார்களே என்ற கவலையில், காப்பி டம்ளருடன் சமையலறையிலிருந்து வெளிப்பட்ட தங்கவேலுவிடம் ஓடி வந்தாள்.

''நீ சின்ன அய்யா அறைக்கு தினமும் பழரசம் எடுத்துட்டுப் போறியே ஒண்ணு கவனிச்சியா?''

தங்கவேலு விழித்தான்.

''வாணி அம்மா போட்டோவைக் கழற்றி எங்கேயோ பரணியில் விசிறியடிச்சுட்டாங்களே. அவதானே வீட்டுக்கு மூத்த மருமகள். இறந்து தெய்வமாகி இவங்களை காத்து நிக்கிற மகராசி. ஒரு நல்ல நாள் கிழமை போது அவ படத்துக்கு பூ வைச்சு கையெடுத்து கும்பிட வேண்டாமா? இதென்ன அநியாயம்?'' துக்கத்தில், அவள் தடுமாறினாள்.

தங்கவேலு தொண்டையைக் கனைத்துக் கொண்டான். அவளைப் பார்த்து பற்கள் அனைத்தும் தெரிய மெல்லச் சிரித்தான். '' அத்தையம்மா நீங்க பெரியவங்க. புரிஞ்சுட்டீங்க. இந்த வீட்டு இளைய மருமகள். படிச்சவங்க. நாலும் தெரிஞ்சவங்க. அவங்களுக்குத் தெரியாத விவகாரமா? பக்தியும் மதிப்பும் மனசுக்குள்ளேயிருந்தா போதும். படத்திலே என்ன இருக்குன்னு எடுத்து அதை வேறே எங்கேயாவது வச்சிருப்பாங்க. மேலும் அவங்க ரெண்டு பேரும் இணைஞ்சு வாழ வேண்டிய போது பழைய துக்கமான சம்பவத்தை நினைப்பூட்டும் படம் எதுக்குன்னு ஐயாதான் எடுத்து எங்கேயோ பத்திரமா வச்சிருக்கலாம். உங்க பொண்ணே



போனப்புறம் வெறும் படத்தைப் பத்தி கவலைப்பட்டு என்ன ஆவப் போகுது'' துணிவுடன் பதிலளித்துவிட்டு அவன் கிழவர் அறையை நோக்கி நடந்தான்.

அந்த வார ராசி பலன் எழுதிய ஜோசியன் மிகவும் கெட்டிக்காரன் தான். ஒவ்வொன்றும் பலித்துக் கொண்டு வருகிறதே. மதிப்பும் மங்கும் என்பது உண்மை.

மாடியிலிருந்து அனு அவளை மெல்லக் கீழே இறக்கி விட்டாள். அவளது மகளின் படத்தை மருமகன் பரணில் தூக்கி எறிந்து விட்டான். மாஜி மாமியாரைப் பற்றி இனி அவனுக்கு அக்கறை இல்லை. வீட்டு வேலைக்காரன் கூட அமுத்தலாக பதிலளிக்கும் அளவுக்கு அவள் மட்டமாகி விட்டாள். இப்படியே போய்க் கொண்டிருந்தால்... துன்பமானதொரு பெருமூச்சுடன் அவள் சட்டென்று கோவிலுக்குக் கிளம்பிவிட்டாள்.

சோபனாவின் திருமணம் சிறப்பாக தஞ்சையில் நடந்தேறியது. அதற்கு வந்திருந்த அனுவின் அண்ணன் மாணிக்கத்தையும் அண்ணி மரகதத்தையும் கண்ட ரத்னாவின் வயிறு பற்றி எரிந்தது. பெரிய இடத்தில் தங்கையைக் கொடுத்துவிட்ட மகிழ்ச்சியில் அவன் ஒரு சுற்று ஊதி விட்டிருந்தான்.

அனுவின் கல்யாணத்தின்போது அவன் முகத்திலே வழிந்த அந்த காட்டுப்பூச்சியின் களை மறைந்தோடி விட்டிருந்தது.

பட்டு வேட்டியும் சில்க் ஜிப்பாவுமாக அவன் பந்தலில் பெரிய மனிதனாக வளைய வந்து கொண்டிருந்தான். தலை கொள்ளாத பூச்கமையுடன் கழுத்தை நெளித்துக் கொண்டு மரகதம் பெண்கள் பகுதியில் பெருமையாக நின்ற காட்சியை அத்தையம்மாளால் காணப் பொறுக்கவில்லை.

புது சம்பந்திகள் என்னத்தைக் கண்டோ அவர்களை விழுந்து விழுந்து வேறு உபசரித்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்டு வேறு அவளுக்கு எரிச்சல்.

கல்யாணத்திற்குப்பின் சென்னைக்குத் திரும்பிய ரத்னாவுக்கு அமைதியே இல்லை. தொடர்ந்து அந்த வீட்டில் அவள் இனி தங்கினால், ஒட்டிக் கொண்டிருக்கும் துளி மதிப்பும் மண்ணாகி விடும்

என்ற அச்சத்தில் தவித்தாள். உறக்கமில்லாது யோசித்தாள் யோசித்தாள் - பின்னர் ஒரு முடிவுக்கு வந்தாள்.

திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயிலுக்கு அருகேயே அவளுக்கு வீடு இருந்தது. நல்லவேளையாக பின்பகுதியை அவள் வாடகைக்கு விடாது பூட்டி வைத்திருந்தாள். வாணியைக் கொடுத்துவிட்டு அந்த வீட்டிற்குள் புகுந்து கொண்டு கொத்துச்சாவியை இடுப்பில் வைத்துக் கொண்டு அதிகாரம் செய்த நாட்களில் அவள் வாரிச் சேர்த்துக் கொண்டது கொஞ்சம் கையிருப்பாக வேறு இருந்தது.

இப்படி ஒரு சரிவு வரும் என்று முன்கூட்டியே எதிர் பார்த்திருந்தால் அவள் இன்னமும் கொஞ்சம் வாரிச் சேர்த்துக் கொண்டிருப்பாள். எப்பொழுதுமே தன் காட்டில் மழை பெய்து கொண்டிருக்கும் என்ற எதிர்பார்ப்பில் ஏமாந்துவிட்டாள்...

எண்ணிக் குமைந்தாள். இனி இங்கிருந்து கிளம்ப வேண்டியதுதான் சரியான முடிவு என்ற தீர்மானம் எழவே அவள் மறுநாள் காலை கிழவரைக் காண அவர் அறைக்குச் சென்றாள்.

''அங்கே வீடு கவனிக்காமல் கொள்ளாமல் பாழாகிக்கிட்டு வருது. அதனாலே நான் ஊரோடேயே போய் இருக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்... உங்ககிட்ட யோசனை கேட்கலாம்னு வந்தேன்'' அவள் மென்று விழுங்கினாள்.

புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு தரையைப் பார்த்தபடி தயங்கி நின்ற அவளைக் கிழவர் ஏற இறங்கப் பார்த்தார். தமது மீசையை மெல்லத் தடவிக் கொண்டார். தலையை ஆட்டினார்.

''அதுதான் சரியான முடிவு அம்மா. என் காலம் வரைக்கும் நீ தாராளமா இங்கே தங்கலாம். அனு நல்ல பெண். உன்னை நல்லா கவனிச்சுக்குவா. எனக்கப்புறம் நிலைமை இப்படியே இருக்கும்னு சொல்ல முடியாது. சசிக்கு வரப்போகிறவள், எப்படியிருப்பாளோ, உன்னைச் சரியாக நடத்துவாளோ என்னவோ அதனாலே நீ இப்போ எடுத்திருக்கிற முடிவு புத்திசாலித்தனமாகப் படறது. அப்படியே செய். ஆனால் எப்பவும் இந்த வீட்டுக் கதவு உனக்குத் திறந்திருக்கும். கவலைப் படாதே. வரணும்னு தோணும்போது வந்து போய்க் கொண்டிரு'' உத்திரவு கொடுத்தார்.



ரத்னாவுக்கு மிக்க ஏமாற்றம். 'இரு; நீ போகக் கூடாது' என்று கிழவர் ஒப்புக்குக்கூட வற்புறுத்தவில்லையே! அத்தனை வருஷம் வீட்டோடு இருந்தும், வீடு கூட்டும் வேலைக்காரி கூட அவள் போவதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடையவில்லையே!

எம்மா போறீங்கன்னு யாருமே கேட்கவில்லை...

இதற்குப் பின்னரும் இருக்கவா முடியும் - ஒரு சில தினங்களுக்குப் பின்னர், அவள் நிரந்தரமாக அந்த வீட்டை விட்டு ஊருக்குக் கிளம்பிச் சென்று விட்டாள்.

# 24

நரேந்திர ஜோஷியின் மலபார் ஹில்ஸ் ஃபிளாட்டின் பெரிய முன்னறையில் சிவபாதம் உட்கார்ந்திருந்தார். தரைமீது விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தையே பார்த்துக் கொண்டிருப்பவர் போல் தென்பட்ட அவர் உள்ளத்தில் தாங்கொணா கவலை. பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த அனு அடிக்கொரு தடவை சக்கர நாற்காலி பக்கம் தன் பார்வையைச் சுழற்றிக் கொண்டிருந்தாள். கிழவர் எதையோ மனதிற்குள்ளே வைத்துக்கொண்டு தவிப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அவரது அறுவை சிகிச்சையைப் பற்றி டாக்டர் வேதநாயகத்திடம் ஆலோசனை கேட்க அவர்கள் அனைவரும் பம்பாய்க்கு வந்திருந்தனர்.

சோபனாவும் அவள் கணவனும் சென்னைக்கு வந்து வீட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தனர். வியாபாரத்தைக் கவனிக்க வேண்டி ஜெய்குமார் சென்னையிலேயே இருக்க வேண்டி வந்துவிட்டது. சசிக்குக் கல்லூரி விடுமுறை துவங்கி விட்டிருந்தது. அதனால் அவன் அண்ணிக்குத் துணையாகப் புறப்பட்டிருந்தான். வழக்கம் போல் மானேஜர் வெங்கடேசனும் கூடவே வந்திருந்தார்.

பம்பாய்க்கு வரும்போதெல்லாம், வியாபாரத் துறையில்

நெருங்கிய நண்பரான நரேந்திரனின் அந்த பெரிய ஃபிளாட்டில்தான் அவர் தங்குவது வழக்கம். வீட்டையும் வேலையாட்களையும் கொடுத்து, காரையும் டிரைவரையும் கூடக் கொடுத்து உதவியிருந்தார் அந்த நண்பர்.

ஒரு வாரமாக மருத்துவமனைக்கும், ரத்தப் பரிசோதனைச் சாலைக்கும் அவர்கள் அலைந்து கொண்டிருந்தனர். டாக்டர் தெரிவிக்கும் முடிவுடன் அவர்கள் ஊருக்குக் கிளம்ப வேண்டிய வேலைதான் பாக்கியாக இருந்தது.

வந்த ஒரே நாளில் அந்த வீட்டு சமையற்காரனின் சாப்பாடு சசிக்கு அலுத்து விட்டது. அண்ணி தயாரிக்கும் காரக்குழம்பையும் தங்கவேலு சூடாக வார்த்துப்போடும் தோசையையும் நினைத்துக்கொண்டு அவன் மாதுங்காவுக்கு வெங்கடேசனுடன் புறப்பட்டுவிட்டிருந்தான். அங்கே அவனுக்குத் தெரிந்த ஒரு தென்னிந்திய ஓட்டல் இருந்தது. மசாலா தோசைக்கும் அது பெயர் போனது. அந்த வீட்டுப் பூரி பர்த்தாவுக்குக் காத்திராமல் அவன் கிளம்பிவிட்டிருந்தான்.

சுற்றும்முற்றும் பார்த்து விட்டு சிவபாதம் ''அம்மா அனு'' என்று மெல்ல அழைத்தார்.

பத்திரிகையினின்று திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள்.

''அவங்கள்ளாம் வெளியிலே போகட்டும்னு காத்திருந்தேன். இப்படி வா ஒரு முக்கிய சங்கதி'' என்றார்.

'டாக்டர் வேதநாயகம் ஏதாவது கவலைக்கிடமான செய்தியைத் தெரிவித்து விட்டாரோ?'... அனுவுக்கு உள்ளூர அச்சம்.

''தாத்தா, டாக்டர் என்ன சொன்னார்?'' எனக் கேட்டுக் கொண்டே எதிரே வந்து ஒரு சோபாவில் உட்கார்ந்தாள்.

சிவபாதம் லேசாகச் சிரித்தார். ''பம்பாய்க்கு நான் டாக்டரைப் பார்க்கதான் புறப்பட்டு வந்திருப்பதாக எல்லோரும் நினைக்கக் கொண்டிருக்காங்க. அதுதான் இல்லை. வேதநாயகம் எனக்காக ஒரு பயணம் சென்னைக்கே வந்து விட்டுப் போவார். அது ஒரு பெரிய விஷயமில்லை. உன்னுடைய பிரச்சனைக்கு முடிவு காணும் எண்ணத்தோட தான் இங்கே நானும் வெங்கடேசனும் வந்தோம்.



உன்னிடம் சொல்லி கலவரப்படுத்த வேண்டாம்னு நான் மௌனமாக இருந்தேன்.

''கடந்த இரு மாதமாக வாணிக்கு நாங்கள் அனுப்பி வைக்கும் தொகை திரும்பி வந்து கொண்டிருந்தது. வம்புக்காரி அதிக பணம் வேண்டி சண்டித்தனம் செய்கிறாள். நேரிடையாக வந்து விசாரித்து முடிவில் உன்னை அவள் சந்திக்கும்படி செய்து கெஞ்சியோ - மிஞ்சியோ அவளிடமிருந்து குமாருக்கு விடுதலை வாங்கி விட ஏற்பாடு செய்வதுன்னு தீர்மானம். இதனால் ஏற்படப் போகும் விளம்பரம், அவமானம் இவைகளைப் பாராட்டாதுதான் புறப்பட்டிருந்தோம். காரியம் முடியும்வரை மற்றவர்களுக்காக டாக்டரிடம் கலந்தாலோசிக்க வந்ததாகக் கதை சொல்லிவிட்டுக் கிளம்பியிருந்தோம்...''

''வாணி அக்காவைச் சந்திக்க முடியலையா!'' அனுவின் வார்த்தைகள் தடுமாறின.

அப்படியானால் அவள் நிலை... பதற்றத்தில் உடல் ஆடியது.

''கொஞ்ச நாட்களாக அவள் அந்தேரியில் ஒரு மாடிப் பகுதியில் குடியிருந்தாள். இங்கே வந்த முதல் நாளே வெங்கடேசன் அவளை நேரில் சந்திக்கப் புறப்பட்டார். அவள் அங்கிருந்து போய் மூன்று மாதங்களாகிறதுன்னு தகவல் கிடைச்சது. அங்கிருந்தவங்க கொடுத்த கொலாபா முகவரிக்குப் போனபோது அவள் அங்கேயுமில்லை. தாதரில் இருப்பதாகக் கேள்விப் பட்டு அங்கே போய் அலைந்ததுதான் மீதம். வைக்கோல் போருக்குள்ளே விழுந்து விட்ட ஊசியைத் தேடுவது போல் - இந்த பெரிய பம்பாய் நகரத்தில் பாவம் வெங்கடேசன் வாணியை எங்கே போய் தேடுவார். அது சுலபமான வேலையாகத் தோணலை. உனக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாது இப்படி ஒரு சங்கடமான்னு நான் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கேன். என்னுடைய உள்ளத்தவிப்பை உனக்கு எடுத்துச் சொல்ல முடியாதம்மா...''

காய்ந்து போன உதடுகளை நாவால் தடவிக் கொண்டாள் அனு. அழுகை அவளது தொண்டையை அடைத்தது. சமாளித்துக் கொண்டு தாத்தாவைப் பார்த்து புன்னகைத்தாள். ''எல்லாத்துக்கும் நேரம் காலம் வரணும். நாம் அவசரப்பட்டால் முடியுமா? வாணி

அக்காவைப் பற்றிய கவலையை விடுங்க. டாக்டரின் முடிவு அனுகூலமானதாக இருக்கணுமே என்பதுதான் என்னுடைய தற்போதைய கவலை...'' எழுந்திருந்தாள்.

தாத்தாவிடம் அப்படித் துணிவாகப் பேசிவிட்டாள். ஆனால் அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் கொஞ்ச நஞ்சமல்ல. வாணி வேணுமென்றே ஒளிந்து கொண்டு அவர்களுக்கு வேடிக்கை காட்டத் தொடங்கினால்... அவளது வாழ்க்கையின் பிரச்சினைக்கு முடிவே காண முடியாதே! அப்படியானால் அவள் தொடர்ந்து ஜெய்குமாருடன் போலியாக வாழ்வதின் பயன்? பொங்கிக் கொண்டு வந்த கண்ணீரைச் சமாளிக்க அவள் குளியலறைக்குச் சென்று மறைந்து கொண்டாள்.

பகல் உணவிற்குப் பின்னர் சசிக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. வந்ததிலிருந்து வெளியே எங்கும் செல்லாது அடைப்பட்டுக் கிடந்த அனுவுக்கு எங்கேயாவது போய் வர வேண்டுமென்ற தவிப்பு.

கடைகளுக்குச் சென்று வர விரும்புவதாக தாத்தாவிடம் விடை பெற்றுக் கொண்டு சசியுடன் அவள் கிளம்பினாள். ''முதலில் மகாலக்ஷ்மிக்கு போக வேண்டும்'' அவள் சொன்ன போது சசி சிரித்தான்.

''எந்த மகாலக்ஷ்மி? கோவிலா - ரேஸா?''

'வாழ்க்கை என்னும் பந்தயத்தில் தோற்று விட்டிருக்கும் எனக்கு ரேஸ் ஒரு கேடா?' என உரத்த குரலில் கத்த வேண்டும் போன்றதொரு ஆவேசம் அவளுக்கு. சிரமப்பட்டு, பொங்கி எழுந்த உணர்வுகளை அடக்கிக் கொண்டு மெல்லச் சிரித்தாள்.

''உன் அண்ணி எங்கே போவாங்கன்னு உன் மனசில் படுகிறதோ அங்கே கூட்டிக் கொண்டு போ'' என்றாள்.

''ஸாரி அண்ணி, விளையாட்டாகச் சொன்னேன். முதலில் கோவில்; பின்னால் கடைகள், சரிதானே'' என்று கூறிவிட்டு டிரைவரிடம் தாங்கள் போகவேண்டிய இடங்களைப் பற்றிச் சொல்லியபடி காரின் கதவை அண்ணிக்குத் திறந்துவிட்டு உபசரித்தான்.



பம்பாய் நகரம் அனுவுக்குப் புதிது. சசி கைடாக மாறினான். ''இதுதான் பழைய ஃபெராஸ் ரோடு. அந்த கட்டிடங்களைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்துக்கோங்க. கதாசிரியர்கள் சினிமாக்காரர்கள் எல்லோர் கற்பனையிலும் படாத பாடுபடும் இடம் இதுதான்.'' கண்களைச் சிமிட்டி விட்டு சசி, ''சிவப்பு விளக்கு எரியுதே'' என்று மெல்ல சீட்டியடிக்கத் தொடங்கினான்.

அனு கேள்விப்பட்டிருந்தாள்; இப்போது நேராகவே பார்த்ததும் அவள் உடல் சிலிர்த்தது. நெஞ்சை வேதனை அடைத்துக் கொண்டது. உடனடியாக நினைவு வாணியைப் பற்றி ஓடியதும் அவள் கண்கள் கலங்கின.

''எத்தனையோ மேன்மையாக வாழவேண்டியவள். நல்ல குடும்பத்துப் பெண் வாணி - அங்கு வசிக்கும் பெண்களில் ஒருத்தியாகச் சீரழிந்து விட்டிருக்கும் உண்மை சசிக்குத் தெரிந்தால் இப்படி பரிகாசமாகப் பேச வாயிருக்குமோ?... ஏன், அவள் கணவன் குமாருக்குத் தெரிந்தால்...' மேலே அவளால் சிந்திக்க முடியவில்லை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

''இதற்குப் பெயர் சோர் பஸார். இங்கே கிடைக்காத பொருள் இல்லை. உள்ளே வந்து பாக்கிறீங்களா'' சசி அவளை வற்புறுத்தி அழைத்துக்கொண்டு சென்றான். அந்தி வேளை எக்கச்சக்கமான கூட்டம் நெரிசல் நடுவில் இடித்துத் தள்ளிக் கொண்டு அவர்கள் உள்ளே நடந்தார்கள்.

''என் சிநேகிதன் ஒருத்தனுக்கு அடுத்த மாசம் கல்யாணம். பழம் பொருள்களைத் தேடிச் சேகரிப்பது அவனது பெரும் பொழுதுபோக்கு. அவனுக்கு இங்கேயிருக்கும் ஆன்டிக் சாமான்கள் விற்கும் கடையில் ஏதாவது ஒரு பரிசு வாங்கிக் கொண்டு போகலாம்னு நினைக்கிறேன். வரீங்களா,'' சசி அருகில் காணப்பட்ட ஒரு கடைக்குள் நுழைந்தான்.

''பகதூர் பாதுஷா பாதாம்கீர் சாப்பிட்ட கிண்ணம் என்று எதையோ எடுத்துக் காட்டுவான். இதையெல்லாம் நான் நம்புகிறதில்லை. சோபனாவுக்கு ஆன்டிக் பொருட்கள் மீது ரொம்ப மோகம். முன்பு ஒரு தடவை டெல்லியில் ஒரு நடை பாதையில் ஔரங்கசீப் மகள் ஜைபுன் நிஸ்ஸா உபயோகித்த மைக்கூண்டு ஒன்றை

மூன்னூறு ரூபாய்க்கு வாங்கினாள். ஜைபுன் நிஸ்ஸாவின் உடமைக்கு இத்தனை குறைவான விலையான்னு அப்பவே எனக்குச் சந்தேகம். ஊரில் கொண்டுபோய் ஒரு நிபுணரிடம் காட்டியபோது... அவர் சிரித்த சிரிப்பு...'' சசி சிரித்துக் கொண்டே உள்ளே சென்றான்.

கடைக்குள்ளே நல்ல கூட்டம். இரும்புக்கரண்டியிலிருந்து வெண்கல உலக்கை வரை பலவித பொருட்கள் குவிந்து கிடந்தன. ஒரு மூலையில் கம்பளச் சுருள்கள். இன்னொரு பக்கத்தில் துரு ஏறி பாசி படிந்த பாத்திரங்கள் தங்கள் பழமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

விற்பனையாளர்கள் வெளிநாட்டு யாத்ரீகக் கோஷ்டி ஒன்றுடன் மிகவும் மும்முரமாகப் பேசி கொண்டிருந்தனர். காற்றுவாக்கில் திப்பு சுல்தான், ஹைதர் அலி, மகாத்மா காந்தி எல்லோர் பெயரும் கேட்டன. சசி அனுவின் பக்கம் திரும்பிக் கண்களைச் சிமிட்டி விட்டு ஆவலுடன் அந்தக் கோஷ்டிக்குப் பின்னால் சென்று அவர்களோடு கலந்து கொண்டு விட்டான்.

அப்பொழுதுதான் அனு கவனித்தாள். கிழிந்து தொங்கிய அழுக்குப் புடவைத் தலைப்பைத் தலைமீது இழுத்துப் போர்த்திக்கொண்டே இரைந்த குரலில் ஒரு கிழவி இந்தியில் கடைக்காரனுடன் ஏதோ தர்க்கித்துக் கொண்டிருந்தாள். போ...போ... என்பது போல் அசட்டையாக அவன் வெருட்டிக் கொண்டிருந்தான்.

கோபத்துடன் திரும்பிய கிழவி அனுவைப் பார்த்ததும் தெரிந்தவள்போல் புன்முறுவலித்தாள். அடிக் குரலில் ஏதோ இந்தியில் கிசுகிசுத்தாள். அனு புரியாமல் விழிப்பதைக் கண்டதும் ''மதராஸ் மனுசியா? எனக்கு கொஞ்சம் தமிள் தெரியும். அழகான நகை வச்சிருக்கேன். அந்தப் பாவி ரொம்பக் கொரைச்ச வெலைக்கு கேட்கிறான்...'' கையைச் சொடுக்கிவிட்டு இன்னமும் சற்று அருகில் நெருங்கி வந்தாள்.

அனு பதிலளிக்குமுன் இடுப்பிலிருந்த சுருக்குப் பையை உருவி அவிழ்த்து அதிலிருந்த ஒரு வெல்வெட் பெட்டியை அவளிடம் நீட்டினாள்.

''நீயே பாரு. பொருள் எப்படிப்பட்டதுன்னு புரிஞ்சுக்குவே'' வற்புறுத்தினாள் கிழவி. பெட்டியை அவள் கையில் திணித்தாள்.



ஆவலை அடக்கமாட்டாது அதைத் திறந்து பார்த்த அனு திகைப்பில் கல்லாகச் சமைந்து போனாள்.

காணாமற் போனதாகச் சொன்ன அன்னம்மா பாட்டியின் நவரத்தினக் காதணிகள் பெட்டிக்குள்ளிருந்தன. சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொருட்டு அவைகளில் ஒன்றைக் கையில் எடுத்துத் திருப்பிப் பார்த்தாள். உமிசத்தின் பின்னால் 'ஏ' என்ற ஆங்கில எழுத்து ஒரு பூவைப் போன்று பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

கிழவியின் கையைச் சட்டென்று பற்றி அவளை மெல்ல வெளியே இழுத்துக் கொண்டு சென்றாள். என்னென்னவோ எதிர்பார்ப்புகளின் உணர்விலே அவள் உடல் முழுவதும் பதறியது. அருகே ஒரு பாணி பூரிக் கடை. அதைச் சுற்றி ஒரு கும்பல். அவர்களின் பின்னால் நின்று கொண்ட அனுவுக்கு மூச்சு முட்டியது.

''பிடிக்குதா! ஆயிரம் ரூபாய். என்ன பார்க்கிறே! நடுவிலே நல்ல வைரம் இருக்கு...'' கிழவி பொரிந்து கொட்டினாள்.

நெற்றியில் பூத்து கழுத்தை நனைத்த வியர்வையைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள் அனு. அந்தக் காதணிகளை மீண்டும் ஒரு முறை பார்த்தாள்.

''இதுதான் இருக்கா? இதுக்கு ஜோடியா நெக்லஸ் பிராஸ்லெட் எல்லாம் இருந்தா வாங்கிக்குவேன்... வேறே கிடையாதா?

கிழவியின் கண்கள் பேராசையில் பளபளத்தன. ''ஓ செட் பூராவும் இருக்கு. அவ பெரிய சந்தேகக்காரி. என்கிட்ட கொடுக்கமாட்டா. இருபதாயிரம் கேட்கிறா. வாங்கிக்கிறியா, இதை விக்கிறவகிட்ட உன்னை அழைச்சிட்டுப் போறேன்? வரியா? ஆனா ஒன்னு, நீ பேரம் பண்ணிக்கோ. என் கமிஷன் மட்டும் கறாரா கொடுத்துடணும், என்ன சொல்ரே?''

''கொடுக்கிறேன் அம்மா. சிரமப் படுகிறீங்க. உங்க வயத்தில் அடிப்பேனா. அவங்க இருக்கிற இடத்துக்கு இப்பவே கூட்டிக்கிட்டு போக முடியுமா?'' பரபரப்புடன் கேட்டாள் அனு.

அது சமயம் கடையிலிருந்து வெளிப்பட்ட சசி அவளருகே வேகமாக வந்தான். ''இங்கே இருக்கிறீங்களா! பயந்துட்டேன்.

ஆமாம், யார் இந்த அவதாரம்?...'' கேட்டுக் கொண்டே அருகில் வந்தான்.

''சசி எனக்கு ஒரு உதவி செய்ய வேணும். இந்த அம்மாவோட நாம் இப்போ இவங்க காட்டுகிற இடத்துக்குப் போயாகணும். ரொம்ப முக்கியம். எதுக்கு என்னத்துக்குன்னு விவாதிக்காதே. என்னோடு வா... உன் கிட்ட கொஞ்சம் பணம் இருக்கா. எனக்கு அவசரமா ஒரு நகை வாங்கியாகணும்'' என்றாள்.

பரேல் என்னும் பகுதிக்குக் காரை ஓட்டச் சொன்னாள் கிழவி. மில் தொழிலாளிகள் வசித்த நெருக்கமான ஒரு கட்டிடத்து முன் காரை நிறுத்தும்படி சொல்லி விட்டு இறங்கினாள். அனுவும் சசியும் கிழவியைப் பின் தொடர்ந்தனர். மாடிப் படிகளைக் கடந்து நீண்டதொரு வராந்தாவிலே நடந்து முடிவில் ஒரு அறைக்கு முன் வந்ததும் அவள் லேசாகக் கதவைத் தட்டினாள்.

''நீதானே! வந்து தொலையேன். கதவு திறந்து தானே கிடக்கு!'' - உள்ளேயிருந்து எரிச்சலோடு ஒரு பெண் குரல் கேட்டது. தொடர்ந்து வாய் ஓயாத பலத்த இருமல் சத்தம்.

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு கிழவி விரைந்தாள். சசி வராந்தாவிலேயே நின்று விட்டான். அனு தயங்கியபடி உள்ளே சென்றாள். மங்கலாக உள்ளே ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தொய்ந்து கிடந்த நாடாக் கட்டிலில் படுத்திருந்த பெண் உருவம் இருமிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தது. நாரும் தோலுமாக நைந்து கிடந்த அவளை உற்றுப் பார்த்த அனுவின் நெஞ்சு திக்திக்கென்று வேகமாக அடித்துக் கொண்டது.

அவள் வியப்பும் சந்தேகமுமாக அனுவை நிமிர்ந்து பார்த்தாள்.

''நீங்க வாணி அக்காதானே...?'' கேட்டு முடிப்பதற்குள் நெஞ்சே வெடித்துவிடும் போன்ற வேதனை ஒரு பரபரப்பு அவளுக்கு.

''நீ?'' - கேட்டு விட்டு அவள் மீண்டும் இருமினாள்.

''நான்தான் அனுராதா'' - சொல்லிக் கொண்டே அருகில் வந்து நின்றவளை அவள் நிமிர்ந்து நன்றாகப் பார்த்தாள்.

''பேஷ்! பேஷ்!'' என்று கூறிவிட்டு உரத்த குரலில் அறை அதிரும்படி அவள் சிரித்தாள் - இருமினாள் - சிரித்தாள் - சிரித்துக் கொண்டே இருந்தாள்.



# 25

மூன்று நாட்களாக சசிக்கு பசி, தூக்கம் எல்லாம் மறைந்தோடி விட்டிருந்தன. மாதுங்காவில் கிடைத்த மசாலா தோசையை மறந்து அந்த குஜராத்தி சமையற்காரன் கொண்டு வந்து வைத்த சப்பாத்தி சப்ஜியை விழுங்கி விட்டு எழுந்திருந்தான். அவனது அறுவைப் பேச்சுக்கள் கூட அடங்கி விட்டிருந்தன. அவனுக்குத் தாங்கொணா அதிர்ச்சி. வேதனை கலந்ததொரு அச்சம் தொடர்ந்து இனம் விளங்காத ஒரு தவிப்பு.

கையைக் கழுவிக்கொண்டு சமையலறை உள்ளே எட்டிப் பார்த்தான். அனு சாத்துக்குடிச் சாற்றை ஒரு பாட்டிலில் ஊற்றிக் கொண்டிருந்தாள். ஸ்நானம் செய்து விட்டுக் கூந்தலைத் துடைத்துக் கொள்ள நேரமின்றி அப்படியே ஒரு துண்டால் சுற்றி முடிந்து கொண்டிருந்தாள்.

''நான் வேணுமானால் உதவி ஏதாவது செய்கிறேன். நீங்க போய் முதல்லே தலையை துவட்டிக்கோங்க அண்ணி! உங்க உடம்புக்கு ஏதாச்சும் வந்துட்டுதுன்னா...'' பரிவுடன் சொல்லிக்கொண்டு உள்ளே வந்தான்.

மூன்று நாட்களாக அவள் உடல் அயர்ச்சியைப் பாராது டாக்டர் வேநாயகத்தின் தனியார் மருத்துவமனையில் நோயாளியுடன் இரவும் பகலும் தங்கியிருந்தாள். அதன் பயனாகச் சோர்ந்து காணப்பட்டாள்.

''இது ஒண்ணுதான் பாக்கி. எல்லாம் ரெடி...'' புன்னகைத்தபடி பழரசம் நிறைந்த பாட்டிலை எடுத்து அருகிலிருந்த பிளாஸ்டிக்கூடையில் திணித்து வெள்ளைத் துணியால் மூடினாள்.

''நோயாளி பலஹீனமாக இருந்ததால் ஒருவரும் பேசக்கூடாதுன்னு டாக்டர் உத்திரவு போட்டிருந்தார். அதனால் தாத்தா இன்னிக்கு சாயங்காலம் ஆஸ்பத்திரிக்கு வந்து அவங்களைப் பார்க்கப் போகிறார்.'' சொல்லிக் கொண்டே அவள் துண்டை

தலையினின்று உருவி பரபரப்புடன் கூந்தலைத் துடைத்துக் கொண்டாள்.

''அண்ணாகூட நாளை காலை ப்ளேனில் வருகிறாராமே...'' கேட்டுவிட்டு அவள் முகத்தை சசி ஆவலுடன் பார்த்தான்.

''ஆமாம். தாத்தா போனில் கூப்பிட்டு உடனே வரச் சொன்னார். விஷயம் இன்னதுன்னு தெரிவிக்கலை - பேசிக் கொண்டு நிற்க இப்போ பொழுது இல்லை. ஆஸ்பத்திரிக்குக் கிளம்ப நான் தயாராக வேண்டாமா?'' மெல்லச் சிரித்தபடி அவள் தன் அறைக்குள் விரைந்தாள். அவளால் சிரிக்கக்கூட முடிந்தது. அவனால்?

நெஞ்சை அழுத்திய வேதனையையும் அவமானத்தையும் தாள முடியாது ஓவென்று வாய்விட்டு அழவேண்டும் போன்ற ஒரு பதட்டம். அனு அண்ணியை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லையே?

மூன்று நாட்களுக்கு முன்னர், அந்த இரவில் அழுக்குப் பிடித்த கட்டிடத்தின் வராந்தாவிலே அவள் அறைக்கு முன் தயங்கிக் கொண்டு நின்றபோது அனு அவனிடம் வந்தாள். 'ஓடிப்போய் மானேஜர் வெங்கடேசனை இந்த முகவரிக்கு வரச்சொல். அவசரம். கொஞ்சம் செலவுக்குப் பணமும் எடுத்து வரச்சொல்' உத்தர விட்டாள்.

என்ன ஏது என்று கேட்க நேரமின்றி அவன் மாடிப்படிகளில் மின்னலாக இறங்கி ஓடினான். சிறிது பொழுதில் வெங்கடேசன் ஒரு டாக்சியில் விரைந்து வந்து சேர்ந்தார். அப்பொழுதுகூட அவனுக்கு ஒரே குழப்பம். ஒரு நகை வாங்கவா அனு அண்ணி இத்தனைக் கலாட்டா பண்ணுகிறாங்க? வெங்கடேசனும், அனுவும் அந்த நோயாளிப் பெண்ணிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அவள் என்னவோ உரத்துக் கத்திக் கொண்டிருந்தாள். இடையே இருமல் சப்தம்.

'அப்படி அதிசயமான நகை அது என்னவாக இருக்கும்?' எண்ணிக் கொண்டு அலுப்புடன் முன்னும் பின்னும் உலாவினான்.

வெங்கடேசன் விழுந்தடித்துக் கொண்டு எங்கேயோ கீழே ஓடினார். கொஞ்ச நேரம் சென்றபின் மூச்சு வாங்கப் படிகளைக் கடந்து திரும்ப வந்தார். அப்பொழுதுதான் அனு அவனை உள்ளே வரச்



சொல்லிக் கூப்பிட்டாள்.

''சசி! இவங்களைக் கொஞ்சம் கைத்தாங்கலா பிடிச்சுத் தூக்கி எடுத்துட்டுப் போகணும். எங்கே ஒரு கை கொடு பார்க்கலாம். மெல்ல'' என்று உத்தரவிட்ட போது அவன் முதன் முதலாக அந்த நோயாளிப் பெண்ணைப் பார்த்தான்.

இருமிக்கொண்டு அவனைக் குரோதமாக உற்றுப் பார்த்த வாணி அண்ணியைக் கண்டு அவன் திகைத்துப் போய் நின்று விட்டான். 'எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் செத்துப் போனவள்? இப்போது... இங்கே!'

''வாணி அக்கா! இது வேறே யாருமில்லை. நம்ப தம்பி சசி...'' அனு அறிமுகம் செய்தபடி அவளை மெல்ல படுக்கையினின்று தூக்கி உட்கார வைத்தாள். தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு! 'அனு அண்ணிக்கு அவளை எப்படித் தெரியும்?'

மருத்துவமனைக்கு வர மறுத்து பிடிவாதம் செய்து, முரண்டுகொண்டு அடம் செய்த வாணியைக் கெஞ்சி - மிரட்டி சமாதானப்படுத்தி அவனும் அனுவும், கூட இருந்த அந்தக் கிழவியும் தூக்கி எடுத்துச் சென்று வெளியே நின்ற காருக்குள் படுக்க வைத்தனர். அறைக்குள்ளிருந்த அவளது சொத்தான ஒரே ஒரு தகரப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வெங்கடேசன் பின்னால் ஓடி வந்தார். மருத்துவமனையில் வாணியை அனுமதித்து விட்டு அவர்கள் வீடு திரும்புவதற்குள் அன்று இரவு வெகு நேரம் ஆகிவிட்டது.

உள்ளுக்கும் வெளி வராந்தாவுக்குமாக சக்கர வண்டியைத் தள்ளிக்கொண்டு அமைதியின்றி இருந்த தாத்தா சிவபாதத்தை மானேஜர் சட்டென்று ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றுவிட்டார்.

சமையற்காரன் மேஜைமீது வைத்துவிட்டுப் போயிருந்த உணவை எடுத்து அவனுக்குப் பரிமாறிக் கொண்டே அனு கதை முழுவதையும் விவரமாகச் சொன்னபோது அவனுக்கேற்பட்ட திகைப்பு?

செம்பூரிலிருந்த அந்தத் தனியார் மருத்துவ மனையை நோக்கி கார் விரைந்து கொண்டிருந்தது. ஓரக்கண்ணால் அனுவை வியப்புடன் பார்த்த வண்ணமிருந்தான் அவன்.

''இதுவரை இறந்து விட்டதாக எல்லோரும் கருதிக் கொண்டிருந்த வாணி உயிருடன் இருக்கிறாள்' என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

'நோயாளியான அவளுக்கு ராஜ வைத்தியம் நடந்து கொண்டிருக்கிறது. அண்ணன் ஜெய்குமார் அடுத்தநாள் வரப்போகிறார். எதற்கு? மேற்கொண்டு என்ன நடக்கப் போகிறது?' அவனால் ஊகிக்கவே முடியவில்லை.

''தாத்தா இடித்த புளிமாதிரி விஷயத்தைக் கேள்விப்பட்டும் அசைந்து கொடுக்காமலிருக்கிறாரே ஏன்?''

சிந்தனைகள் பலவும் உள்ளத்தில் அலைபாய கவலையுடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவனால் கட்டுக் கொள்ள முடியவில்லை.

''அண்ணி'' உரத்த குரலில் அழைத்தான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

''நீங்க இப்படி ஒரு காரியம் செய்வீங்களா? எங்களுக்கெல்லாம் ஆயிரம் புத்தி சொல்வீங்களே! ரொம்ப தப்பு செஞ்சுட்டீங்க'' காரமாகச் சொன்னான்.

''என்ன தப்பு?''

''பாம்புக்குப் பால் வாக்குறீங்க. என்ன நடக்கப் போகிறது தெரியுமா?''

''என்ன நடக்கும்?''

''அண்ணாவைப்பத்தி உங்களுக்குத் தெரியாது. நேரில் அவங்களைக் கண்டதும் அவர் எப்படி மாறி விடுவார் தெரியுமா?''

''மாறட்டுமே. நடக்கிறதெல்லாம் நடக்க வேண்டியதுதானே.''

''அண்ணி! விளையாடாதீங்க நீங்க இல்லாத அந்த வீட்டை என்னால் நினைச்சுப் பார்க்கக் கூட முடியாது அண்ணி. உங்களைத் தவிர...'' அவனால் பேச முடியவில்லை. என்னவோ நெஞ்சை அடைக்க அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

வண்டி மருத்துவமனையருகே வந்து நின்றது. அனு கீழே இறங்கினாள். கூடையைத் தூக்கிக் கொண்டு அவன் பின்னால் நடந்தான்.



''பாம்புப் புற்றுக்குள்ளே தானே யாராவது கையை விட்டு வேடிக்கை பார்ப்பாங்களா? வாணி அண்ணி ஒரு கருநாகம். நம்பாதீங்க அவங்களை ''கோபத்துடன் முணுமுணுத்தபடி பின்னால் வந்து கொண்டிருந்தான். நோயாளி படுத்திருந்த அறைக்கு முன்னால் வந்தவுடன் வெறுப்புடன் கூடையை அவளிடம் கொடுத்து விட்டு நிற்கப் பிடிக்காது வெளியே சென்று விட்டான்.

இரண்டு நாள் கவனிப்பில் வாணியின் உடல்நிலை வெகுவாகத் தேறிவிட்டிருந்தது. மண்டையை உடைத்த தலைவலி, நெஞ்சைப் பிளந்த இருமல் எல்லாம் மறைந்து விட்டிருந்தன. இரவு முழுவதும் அவள் நன்றாக உறங்கி விட்டிருந்தாள். விடியற்காலையில் நர்ஸ் வந்து சூடான நீரில் துண்டை நனைத்து உடலைத் துடைத்த போது மிகவும் இதமாக இருந்தது. சுத்தமான படுக்கை விரிப்பு ஏ.சி. அறையின் குளுமை - போஷணையான உணவு இதையெல்லாம் அவள் அனுபவித்து எத்தனை நாட்களாகி விட்டிருந்தனவோ.

காலடிச் சத்தம் அருகில் வருவதைக் கேட்டு கண் விழித்தாள். முகத்தின் மீது மெல்லியதாக மோதிய சந்தன சோப்பின் மணம் அவளை என்னவோ செய்தது.

''கொஞ்சம் சூடாக ஹார்லிக்ஸ் சாப்பிடுகிறீர்களா அக்கா!'' அந்த குழைவான இனிய குரல்... மேலே பட்ட அந்தப் பட்டு விரல்களின் மிருதுவான தடவல்... இது வரை அவள் அனுபவித்திராத புதிய ஒரு உணர்வில் மெய் சிலிர்த்துப் போனாள்.

மெல்லக் கண் விழித்து உற்றுப் பார்த்தாள். மூன்று நாட்களாக அவளுக்கு அத்தனை நிதானம் இருக்கவில்லை. அனுராதா அவளைக் கண்டு பேச வந்த போது... ஆஸ்பத்திரிக்கு வலுக் கட்டாயமாகத் தூக்கிக் கொண்டு வந்த அந்த இரவில் அவள் போதை மருந்தின் பிடியில் இருந்தாள். அளவுக்கு மீறி அதிகமாக ஊசியினால் அன்று மாலை மருந்தைத் தானே உடலில் செலுத்திக் கொண்டு விட்டிருந்தாள். அதனால் அவள் பேச்சில் தடிப்பும், காரமும், எளனமும், விரசமும் இருந்தன. உணர்வுகள் நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருந்தன. பின்னர் தாங்க முடியாத மயக்கத்திலே உறங்கினாள். நன்றாக உறங்கி விட்டாள்.

அனுராதா என்ற பெயர் எங்கேயோ காதில் ஒலித்துக்

கொண்டேயிருந்தது. வந்தவள் யார் என்று மட்டும் புரிந்து விட்டிருந்தது. பலமுறை அவளது முகத்தை உற்றுப் பார்க்க முயன்றபோது திரை போன்று பார்வை நடுவே ஏதோ ஒன்று மறைக்க அவள் மயக்க நிலையில் பிதற்றிக் கொண்டிருந்தாள்.

இளம் சூரியனின் பனிச்சென்ற வெளிச்சத்திலே அவள் கண்களை நன்றாகத் திறந்து பார்த்தபோது அழகான பட்டு நெற்றியின் நடுவில் பொலிந்த குங்குமம், கண்களில் பட்டது. பின்னர் கூரான அந்த மூக்கும் முக வாயும், கனிவான புன்னகையும் கருணை நிழலாடிய கண்களும்... அனு உண்மையிலே யார்? அவள் யார்?

''என்னக்கா பார்க்கிறீங்க. இப்ப உடம்பு எப்படி இருக்கு?''

ஹார்லிக்ஸ் நிறைந்த டம்ளரை அவளிடம் நீட்டினாள் அனு.

மெல்ல அதைக் குடித்து முடித்து விட்டு டம்ளரை மேசைமீது வைத்தாள். வாயைத்துடைத்துக் கொண்டாள். உடலில் சிறிது தெம்பு கூடியது. நிமிர்ந்து படுக்கையில் சாய்ந்தபடியே அந்தப் பெண்ணின் கைகளைப் பற்றினாள். வெல்வெட்டைப் போன்று அவைகள் மெத்தென்று இருந்தன. அந்த முகம்... எத்தனை அழகு... கண்களின் எத்தனை மென்மையான பார்வை?

''நீ அனுராதா? இல்லை... எங்கள் காந்திமதி...''

''என்னக்கா சொல்றீங்க? என் பெயர் அனுராதாதான். உண்மையில் நான் அனுராதாதான்.''

''இல்லை, நான் ரொம்ப நாளா மறந்து போயிருந்தேன். நினைப்பூட்ட மனுஷ உருவில் வந்திருக்கிறே - எங்க குல தெய்வம் காந்திமதி நீ... எனக்குத் தெரியும்...'' அவளால் பேச முடியவில்லை. பொலபொலவென்று கண்களில் நீர் கொட்டியது.

''அக்கா என்ன இது...'' கூப்பின அவளது கரத்தை பிடித்துத் தாழ்த்திவிட்டு கண்களில் வழிந்த கண்ணீரை மெல்லத் துண்டால் துடைத்தாள்.



# 26

படுக்கையினின்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள் வாணி. தன் எதிரே நின்ற அனுவை மீண்டும் நன்றாக உற்றுப் பார்த்தாள். அவளது கண்கள் மறுபடியும் கலங்கின.

''அக்கா! என்னத்துக்கு இப்படி மனசை அலட்டிக்கிறீங்க.'' அனு கடிந்து கொண்டு நெற்றியிலே புரண்ட அவளது கூந்தலை மெல்ல ஒதுக்கிவிட்டாள்.

பொங்கி எழுந்த துக்கத்தை அடக்கிக் கொள்ள முயன்றபடி சிறிது நேரம் வாளா இருந்தாள் வாணி.

பின்னர் தயங்கியபடி ''அனு, உன் கைகளை நான் தொடலாமா?'' என்று கேட்டாள்.

''பேஷாக' ஏன் அப்படி ஒரு கேள்வி அக்கா?''

''உன்னைத் தொட்டுப் பேசக்கூட அருகதை இல்லை போல ஒரு தாழ்வு உணர்விலே தவிக்கிறேன்.'' தழதழத்தது அவள் குரல். தன் முன் நீட்டிய அனுவின் கரங்களை ஆவலுடன் பற்றித் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

குபீரென்று பெருக்கெடுத்த கண்ணீர் சூடாக அனுவின் கரங்கள் மீது விழுந்தது.

''இப்படி அழுதால் உடம்புக்கு நல்லதில்லை அக்கா'' குழைவாகச் சொன்ன அனு, அவளது கண்ணீரைத் துடைக்க துண்டைக் கையில் எடுத்தாள்.

''தயவுசெய்து என்னை அழ அனுமதி - இன்னிக்கு நான் சிந்துகிற கண்ணீர் கடந்த காலத்துக் கறையைக் கழுவட்டும்... ப்ளீஸ் அனு... மனசிலே பளுவாக நிற்கும் வேதனைச் சுமையை நான் வேறு எப்படித்தான் இறக்கி வைப்பேன்? சொல்லு'' விம்மிய அவள் திடீரென்று வாய்விட்டுக் குமுறி அழத் தொடங்கினாள்.

அனு நெஞ்சம் கரைந்து போனாள். அருகில் நெருங்கி அவளது தோளைப்பற்றி மெல்லக் குலுக்கி, ''போதும் நிறுத்துங்கோ. இப்படி அழுதா மறுபடியும் காய்ச்சல் வந்துவிடும். டாக்டர் கோபிப்பார்'' அதட்டினாள். அவளிடமிருந்து துண்டை வாங்கித் தானே கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் வாணி.

''இப்போ கொஞ்சம் பளு இறங்கினாப்போல் மனம் லேசா இருக்கு. உன்னோட நிறைய பேசணும் போல் இருக்கு. இப்படி உட்காரேன்...'' வறட்சியாக முறுவலித்தாள்.

''பேசுங்க அக்கா கேட்கிறேன்'' நாற்காலி ஒன்றை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள் அனு.

''அழகு - படிப்பு - அன்பான கணவன் - வசதியான வாழ்க்கை இப்படி எல்லாம் ஒருங்கே அமைந்த வாழ்வு எனக்கிருந்தது. இருந்தும் யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுமாமே அதுபோல் நானே அத்தனையையும் அழிச்சுட்டேன். பூடகமாகப் பேசினால் உனக்குப் புரியாது... விளக்கமாகவே சொல்லி விடுகிறேன்.

''என் கல்லூரிப் படிப்பின் போது ஹாஸ்டலில் தங்கியிருந்த சமயம்தான் ஒரு தோழி மூலம் ரஞ்சித் அறிமுகமானான். அவன் அப்போது பி.ஏ. இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தான். சிரிக்கச் சிரிக்கப் பேசுவதில் கெட்டிக்காரன்... பார்க்கக் கவர்ச்சியான தோற்றம்... நான் மயங்கிப் போனேன். நெருங்கிப் பழகத் தொடங்கினோம். சினிமா - கடற்கரை - ஹோட்டல்கள் ஒன்றையும் விட்டு வைக்கவில்லை. இருவரும் பயமின்றி சுற்றினோம்.

''ரஞ்சித்திற்கு ஏராள நண்பர்கள். அவர்களில் வெளியூர் மாணவர்களான சிலர் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தனியே வசித்துக் கொண்டிருந்தனர். ஹாஸ்டல் வாழ்க்கையின் கட்டுப்பாடுகள் இன்றி மிகவும் சுதந்திரமானதொரு வாழ்வு. ஒரு சமயம் அவர்கள் நடத்திய ஒரு மாணவனின் பிறந்தநாள் பார்ட்டிக்கு எனக்கும் அழைப்பு கிடைத்தது. ரஞ்சித்துடன் போயிருந்தேன். முதல்முதலாக எனக்கு அங்கேதான் போதை மருந்தின் அறிமுகம் கிடைத்தது. வேடிக்கையாக சிறிதளவு மருந்தை ஊசியால் என் தோள்பட்டையில் ஏற்றினான் ரஞ்சித். அந்த அனுபவம் எனக்குப்



பிடித்திருந்தது. பின்னால் ஒரேயடியாகப் பிடித்துக் கொள்ளும் என்று அப்போது நான் உணரவில்லை. முதலில் நண்பன் உதவி செய்ய மருந்தை ஊசி மூலம் ஏற்றிக்கொண்டேன். பின்னர் நானே ஏற்றிக் கொள்ளப் பழகிவிட்டேன்.

''படிப்பை எப்படியோ முடித்துவிட்டு ஊர் போய்ச் சேர்ந்தேன். ஆனால் மருந்து பழக்கத்தை உதறிவிட முடியவில்லை. மருந்து வாங்கப் பணம் தேவைப்பட்டது. அம்மாவுக்குத் தெரியாது காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வேறு.

''ரஞ்சித்திற்கு கல்யாணம் என்பதில் நம்பிக்கை கிடையாது. வேலை தேடிக்கொண்டு அவன் பம்பாய்க்குப் போய்விட்டான். அவன் ஆரம்பித்துக் கொடுத்த பழக்கம் என்னை விட்டுப் போக மறுத்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது. நாளுக்கு நாள் போதை மருந்து அதிகப்படியாகத் தேவைப்பட்டது. ஒரு நாள் இல்லாவிடில் உயிர் வாழ முடியாது போன்று உடல் உபாதையில் தவித்தேன். நிலைமை பயங்கரமாகிக் கொண்டு வந்தது. அந்த சமயந்தான் குமாரின் சந்திப்பு ஏற்பட்டது. அவருக்கு என்னைப் பிடித்து விட்டது. எனக்கு அவரால் கிட்டக்கூடிய சுகமான வாழ்க்கை மிகவும் பிடித்துவிட்டிருந்தது.

''ஆனால் விரைவில் நான் ஒரு உண்மையை உணரத்தான் செய்தேன். மருந்து போதையின் பிடியில் அகப்பட்டுக் கொண்டுவிட்டிருந்த நான் மணவாழ்க்கைக்கும் - குடும்பப் பொறுப்பிற்கும் லாயக்கற்றவள் என்ற விஷயம் நாளடைவில் உதயமாகியது. கணவனுக்கும் - வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியாது மருந்தை எற்றிக்கொள்ள முயன்றபோது நான் பட்ட அவஸ்தை?

''மருந்தின் மயக்க நிலையில் அடிக்கடி உறங்க விரும்பிய என்னால் வீட்டை நிர்வகிக்கவும் - நோயாளியாகவிருந்த அன்னம்மா பாட்டியை கவனிக்கவும் முடியவேயில்லை. என் கணவருக்கும் எனக்கும் இடையே சிறு சண்டைகள் - தாத்தாவின் மனத்தாங்கல் - என் தாயின் அனாவசியமான புத்திமதிகள் - அப்பப்பா எனக்கு மணவாழ்க்கை விரைவில் கசந்து விட்டது. அந்தச் சமயந்தான் எதிர்பாராவிதமாக ரஞ்சித்தை மீண்டும் நான் சந்தித்தேன். அவனு

உபதேசத்தின் படியே கொஞ்சம் பணம் நகைகள் இவைகளுடன் வீட்டைவிட்டுத் துணிவுடன் கிளம்பிவிட்டேன்.

''நான் ஒரு திட்டம் போட்டிருந்தேன். விதி வேறு ஒரு திட்டம் போட்டுவிடவே, தாத்தா, என் கணவர், ஊரார் எல்லோர் முன்னிலையிலும் நான் இறந்தவளாகி விட்டேன்.

''அதற்குப் பின் நடந்தவை பற்றி ஓரளவு நீ தெரிந்து கொண்டிருப்பாய். தாத்தா உன்னிடம் கட்டாயம் கூறியிருப்பார். என் கைப்பணம் கரைந்ததும் நண்பன் ரஞ்சித் என்னை விட்டு ஓடிவிட்டான். போதை மருந்து உடல் வலுவையும் உற்சாகத்தையும் மெல்ல உறிஞ்சத்தொடங்கியது. நாளடைவில் வலிமை குறைந்து ஆரோக்கியம் கெட்டு நடைப் பிணமாகினேன்.

''ஆரம்பத்தில் அழகு இருக்கிறது விலைபேச என்று கர்வமாகத் தானிருந்தேன். ஆரோக்கியம் அழியத் தொடங்கியதும் அந்த அழகும் குலைய ஆரம்பித்தது. அதற்குப் பின்னர் என்னை அண்டுவார் யாரும் இருக்கவில்லை. எப்படி இருக்கிறாய்? என்ன வேணும்?'' என்று கேட்க ஆள் இல்லாமல் தனிமையில் தவித்தேன்.

''முடிவில் எனக்கே என் வாழ்க்கையின் மீது வெறுப்பு. அந்தப் ஃப்ளாட்டில் தொடர்ந்து தங்க பணவசதி இருக்கவில்லை. கையிலிருந்த கொஞ்ச நகைகளை ஆபத்துக்கு என்று பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டு இருந்தேன். தாத்தாவிடம் தொடர்ந்து பணம் ஏற்கவும் விருப்பமில்லை. பண உதவி பெற்று தொடர்ந்து இந்த நரகவாழ்க்கையை நீடிக்க வேண்டுமா என்று மனக் கசப்பு. மானேஜருக்கு என் முகவரியை அறிவிக்காமலே ஒவ்வொரு இடமாக மாறி முடிவில் என் நிலைக்கு சாத்யப் பட்ட அந்தக் கட்டிடத்தில் வந்து குடியேறினேன். வந்த சில நாட்களில் தாளமுடியாத காய்ச்சல் -இருமல் - வாந்தி...''

''அக்கா நீங்க கடைசியா எடுத்த முடிவு தவறு. நான் அந்தக் கிழவியை கடையில் சந்தித்து, விற்கத் தந்த அந்த நகையை அடையாளம் கண்டு தேடிக்கொண்டு வந்திருக்காவிடில் என்ன நேர்ந்திருக்கும்?''

''இரண்டு நாளில் இருமி - ரத்த வாந்தி எடுத்து அனாதையாகச் செத்து விட்டிருப்பேன். ஏற்கனவே செத்துப் போனவள் இப்போது



உண்மையாகவே செத்துப் போனால் யாருக்கு நஷ்டம்!''

''அப்படிச் சொல்லக் கூடாது. அக்கா உங்கள் உடம்பு பூரண குணமடைய வேண்டும். போதை மருந்து பழக்கத்திற்கு தக்க சிகிச்சை கொடுத்து உங்களுக்கு மறுவாழ்வு தரவேண்டும் என்பது என் ஆசை.''

''நல்ல பெண் நீ அனு. எனக்கு மறு வாழ்வு? கேட்கக் கூட வேடிக்கையாக இருக்கிறது'' சிரித்தாள் வாணி.

''உண்மையாகச் சொல்லுகிறேன் அக்கா. இந்த ரகசியம் ஆரம்பத்திலேயே தெரிந்து விட்டிருந்தால் நான் இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன். நாங்கள் ஏழைகள். கிராமத்திலே வாழ்கிறவங்க. ஆனால் அண்ணனுக்கும் எனக்கும் சில கொள்கைகள் உண்டு. மத்தவங்க வாழ்க்கையை கெடுத்து நாம் வாழ வேணும் என்கிற மட்டமான எண்ணம் ஒரு நாளும் எங்கள் மனசிலே ஏற்படவே ஏற்படாது.''

''அப்படியா! உனக்கு ரொம்ப நல்ல மனம், கொஞ்சம் கூட என் மேலே பொறாமைப் படாமல் நிதானமா பேசுகிறியே, கேட்க வியப்பா இருக்கு! நீ உண்மையில் ஒரு அதிசயமான பெண். குமார் உன்னை இரண்டாந்தாரமாக மணந்து கொண்டு விட்டார்னு தெரிஞ்சபோது நான் எத்தனை ஆத்திரப் பட்டேன். பொறாமைப் பட்டேன் தெரியுமா? உன்னை பயமுறுத்தி உன் வாழ்க்கையையும் மனநிம்மதியையும் சின்னா பின்னப் படுத்த முயற்சித்தேன்.''

''உங்கள் முயற்சி என் கண்களைத் திறந்து விட்டதக்கா. அதற்காக உங்களுக்கு நான் நன்றி பாராட்டணும்.''

''என்ன சொல்றே?''

''நீங்க உயிருடன் இருக்கும் விஷயம் தெரிஞ்சபோதுதான் எனக்கு என் நிலையைப் புரிந்து கொள்ள முடிஞ்சது அக்கா! சட்டப்படி இன்னமும் நீங்கள்தான் அவர் மனைவி. நான்! சொல்லிக் கொள்ளக் கூட வெட்கமாக இருக்கிறது. சட்டத்தின் கண்கள் முன்னால் நான் அவரது காதலி. அவ்வளவுதான்.''

''தாத்தாவுக்கு இதெல்லாம் தெரியுமே, தெரிந்தும் சும்மாவா இருந்தார்?''

''உங்களிடம் பேசி தனது பேரனுக்கு இந்த மண வாழ்க்கையிலிருந்து விடுதலை வாங்கிவிடுவதாகத் தீர்மானிச்சிருந்தார். அதைக்கேட்டு ஓரளவு மனம் அமைதியடைஞ்சு அந்த வீட்டிலிருந்தேன். ஆனால் உங்களைப் பார்த்ததும் இந்த நிலையில் இப்போ மனசு மாறி விட்டது.''

''புரியலையே?''

''உங்களுக்கு தக்க வைத்யம் செய்து உங்களை இந்த மருந்துக் கொடுமையினின்றும் காப்பாத்த வேண்டியது நம்ப குடும்பத்தினரின் பொறுப்பு. அதற்குப் பிறகு நீங்களும் குமாரும் சேர்ந்து வாழவேண்டும். உங்களுக்கு மறுவாழ்வு கொடுத்து வாழவைக்க வேண்டியதும் குடும்பத்தினரது கடமையாகும். உடம்பு குணமான பின்பு விவாகரத்து செய்து உங்களை ஒதுக்கிவிட தாத்தா முயற்சிப்பது இனி தவறாகும். இந்தச் சின்னஞ்சிறு வயதில் தனியாக இனியும் உங்களைத் தவிக்க விடுவது நியாயமில்லை...'' படபடவென்று உணர்ச்சி வசப்பட்டு பேசினாள் அனு.

''அப்போ உன் நிலை?''

''ஆரம்பத்திலிருந்து நான் என் நிலையைப் புரிந்து கொண்டு அதுக்குத் தக்கபடி நடந்து கொண்டு வருகிறேன் அக்கா. தாத்தா உங்களைக் காண இன்னிக்கு சாயங்காலம் வரப்போகிறார். நாளை காலை குமார் சென்னையிலிருந்து உங்களைப் பார்க்க விமான மூலம் வருகிறார்.''

திடுக்கிட்டுப் போனாள் வாணி. ''உண்மையாகவா? குமார் வருகிறாரா! என்னைப் பார்த்துப் பேசப்போகிறாரா?'' முகம் வெளுத்து பதட்டத்துடன் கேட்டாள்.

''ஆமாம் கவலைப்படாதீங்க அக்கா. என்வரைக்கும் நான் இனி என்ன செய்வது என்பதைச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டிருக்கிறேன். வரட்டுமா...'' புன்னகைத்தபடி பிளாஸ்டிக் கூடையைத் தூக்கிக் கொண்டு வெளியே மெல்ல நடந்தாள்.



# 27

அன்று பிற்பகல் தாதர் எக்ஸ்பிரஸில் அனுவும் - சசியும் சென்னைக்குப் புறப்பட்டுவிட்டிருந்தனர்.

அனு அவர்களுடன் ஒன்றாக வசித்தது சில மாதங்கள்தான். ஆனாலும் அந்த எட்டு மாத காலம் எட்டு யுகங்கள் போன்றதொரு பிரமிப்பையும் - பிடிப்பையும் கொடுத்திருந்தது. நாளுக்கு நாள் அனுமேல் அவர் மனதில்தான் எத்தனை அன்பு - பாசம் - மதிப்பு -பெருமை! அவளிடம் அப்படியானதொரு பிடிவாதமான மன மாற்றத்தை அவர் எதிர்பார்க்கவேயில்லை. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கல்லாகச் சமைந்து போனவர் போல் நாற்காலியுடன் வெகுநேரம் வராந்தாவிலேயே சிவபாதம் உட்கார்ந்திருந்தார்.

அன்று காலை மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்த அனு பரபரப்புடன் காணப்பட்டாள். பகல் உணவைத் தட்டில் எடுத்துக் கொண்டு உள்ளே வந்தவளின் வேதனை படிந்த முகத்தைக் கண்டு கிழவர் திடுக்கிட்டுப் போனார்.

''என்னம்மா நடந்தது? எப்படியோ இருக்கிறியே?'' பரிவுடன் விசாரித்தார்.

''தாத்தா! என் கையால உங்களுக்கு பரிமாறுவது இதுதான் கடைசி. அதை நினைக்கும்போது எனக்கு ரொம்ப துக்கமா இருக்குது...''

திகைப்புடன் அவளை உற்றுப் பார்த்தார்.

''என்னம்மா சொல்றே...''

''உண்மையைச் சொல்றேன் தாத்தா; நீங்க என்னை மன்னிக்கணும். உங்க உத்திரவைக் கேட்காமலேயே இன்னிக்கு பகல் ரயில் வண்டிக்கு எனக்கும் சசிக்கும் டிக்கெட்டுகள் வாங்க மானேஜரிடம் ஏற்பாடு பண்ணியிருந்தேன். டிக்கெட்டுகள் வாங்கியாச்சு. இன்னும் கொஞ்ச நேரத்தில் நாங்கள்

கிளம்பியாகணும். சென்னைக்குப் போனதும் வீட்டில் உள்ள என் சாமான்களைச் சேகரிச்சு எடுத்துக் கொண்டு உடனடியாகத் திருச்சிக்குப் போறதாகத் தீர்மானம்.''

உணவுத் தட்டை அப்பால் நகர்த்திவிட்டு அவளைக் கூர்ந்து பார்த்தார். அவரது நெஞ்சம் நெகிழ்ந்து போயிற்று. முகம் சிவக்க -கண்களில் நீர் தளும்ப - உதடுகள் துடிக்க - உணர்வுகளின் கொந்தளிப்பில் ஆடியவளாக அனு தன்னைச் சமாளிக்க முயன்றபடி நின்று கொண்டிருந்தாள்.

''இப்ப என்ன நடந்துடுச்சு - இப்படி ஒரு தீர்மானம்?'' சற்று அதட்டலாகவே வினவினார்.

''நாளைக் காலை உங்கள் பேரன் இங்கே வரப்போகிறார். அதற்கு முன்னர் நான் இங்கேயிருந்து கிளம்பிவிடணும். அவரைச் சந்திக்காமலேயே என் பிறந்த வீட்டிற்குப் போய்விடணும்னு என் முடிவு தாத்தா...'' அவள் குரல் துயரத்திலே தடைப்பட்டது. உதட்டைக் கடித்துக் கொண்டு பொங்கி வந்து அழுகையைக் கட்டுப்படுத்த முயன்றபடி அருகிலிருந்த மேஜையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

கிழவர் அவளை ஊடுருவது போல் பார்வையால் வெட்டினார்.

''இன்னமும் புரியவில்லை. விளக்கமாகச் சொல்லக் கூடாதா?'' கடிந்து கொண்டார்.

''உங்கள் பேரனை இது சமயம் என்னால் பார்க்க முடியாது போன்று ஒரு பயங்கர உணர்வில் நான் தவிக்கிறேன் தாத்தா. என்னால் அந்தத் துன்பத்தைத் தாங்க முடியாது. வேதனையிலே என் நெஞ்சே வெடிச்சிடும் போல் பயமா இருக்கு. போலியாக இந்த வாழ்க்கையைத் தொடர்ந்து என்னால் மேற்கொள்ள முடியாது தாத்தா. என் உணர்வுகள் உடைந்து விடும் நிலைக்கு வந்து விட்டதால்தான் இந்த முடிவெடுத்தேன். என் பிறந்த வீட்டுக்குத் திரும்பிப் போய்விட உத்தேசித்து விட்டேன். என் அண்ணனுக்கு என் செய்கை ரொம்ப அதிர்ச்சியைக் கொடுக்கும். உண்மையைப் பக்குவமாக விளக்கினால் அவர் புரிந்து கொள்வார்.''

''உன் வாழ்க்கையைச் சீராக்க நான் எத்தனையோ முயற்சிகள் செய்து கொண்டிருக்கும் போது இப்படி அவசரமாக நீ ஒரு தப்பான



முடிவுக்கு வரலாமா? நியாயமா அம்மா?'' கனிவாகக் கேட்டார் கிழவர்.

''ஆரம்பத்தில் வாணி அக்காவைப் பாராத வரையில் எனக்கு உங்கள் பேரன் மனைவியாக வாழ வேண்டும் என்று கொள்ளை ஆசை இருந்தது உண்மை. அவங்களை நேரே பார்த்த பிறகு என் விருப்பம் தவறானதுன்னு தோணுகிறது. இப்போ மனைவிங்கிற வாழ்வு என்னை விட அவங்களுக்குத்தான் ரொம்பத் தேவைப்படுகிறது. அதைப் புரிஞ்சு கொண்டு நகர்ந்துட்டேன்.''

''நீ ரொம்ப குழப்பறே அம்மா.''

''இல்லை தாத்தா. நிர யோசித்துதான் இந்த முடிவு எடுத்திருக்கிறேன்.'' தயக்கத்துடன் அவர் அருகில் வந்தாள் அனு. ''தாத்தா! திடீர்னு இப்படி வந்த இடத்தில் உங்களை விட்டுப் போகிறேனேன்னு மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. மன்னிச்சுக்கோங்க. எனக்கு இதைத் தவிர வேறு வழியே தோணலை. இந்தச் சில மாசங்கள் உங்களுக்குப் பணிவிடை செய்ய ஒரு வாய்ப்புக் கிடைச்சதைப்பத்தி பெருமைப்படுகிறேன். என்னிடம் அன்புகாட்டி ஆதரிச்சதற்கு மிக்க நன்றி. கும்பிடறேன் தாத்தா...'' சட்டென்று குனிந்து அவரது பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அதற்கு மேல் பேச முடியாது துக்கம் நெஞ்சை அடைக்க கண்கள் கலங்க அவள் விர் என்று உள்ளே சென்று விட்டாள்.

அன்று மாலை தாம் நேரில் சென்று வாணியைக் காண நினைத்த சிவபாதம், பேரன் வருகையை எதிர் நோக்கி அதை ஒத்திப் போட்டு விட்டார். அன்று பகல் அவர் சாப்பிடவேயில்லை. வழக்கமாக எடுத்துக் கொள்ளும் ஓய்வின் மீதும் நாட்டம் இருக்கவில்லை. உணர்வுகள் குலைந்து மனம் இடிந்து துயர வசப்பட்டவராக தொலைபேசியில் சென்னையிலிருந்த தமது வழக்கறிஞரிடம் வெகுநேரம் பலவும் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுதும் அவருக்கு அமைதி ஏற்படவில்லை.

திடீரென்று டாக்ஸியில் வந்து இறங்கிய சசியையும் அனுவையும் கண்டு சோபனா திகைத்துத்தான் போய் விட்டாள்.

''அண்ணன் அங்கே பம்பாய்க்குப் போயிருக்காரே. நீங்க இங்கே

இப்படி வந்து நிற்பதன் அர்த்தம்?'' தாங்கொணா வியப்புடன் எடுத்த எடுப்பிலேயே கேட்டு விட்டாள்.

''சசி உனக்கு எல்லாம் விவரமாகச் சொல்வான். என்னை ஒன்றும் கேட்காதே...'' என்று கூறிவிட்டு அனு வேகமாக குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

ரயில் வண்டி பிரயாணக் களைப்புத் தீர குளித்து விட்டு வேறு உடுத்திக் கொண்டு படுக்கை மீது வந்து உட்கார்ந்தபோது அவள் பார்வை அந்தப் படத்தின் மீது விழுந்தது.

சில ஆண்டுகளுக்குமுன் வெளிநாட்டுப் பயணம் செய்யுமுன் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்க எடுத்துக் கொண்ட படம் அது. ஜெய்குமார் புன்முறுவலுடன் வெள்ளிச் சட்டமிட்ட பிரேமுக்குள்ளிருந்தபடி மேஜை மீதிருந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அனுவால் கட்டுக்கொள்ள முடியவில்லை. பொங்கி எழுந்த அழுகையை அடக்க முடியாது தலையணை மீது முகத்தைப் பதித்துக் கொண்டு இதயமே வெடித்துவிடும் போல குமுறி அழுதாள்.

திருமணமானதிலிருந்து அவளது வாழ்க்கையில் எத்தனை இடர்கள். அவளது அருகாமையை விரும்பாது ஒதுங்கிய கணவன் மெல்ல மெல்ல மனம்மாறி அன்பைப் பொழியும் தருவாயில் - தனக்கு ஒரு இடம் விரைவில் ஏற்படப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் அவள் மகிழ்ச்சியும் அமைதியுமாக வாழ நினைத்த சமயம் இப்படி ஒரு பேரிடியா? குமாரைப் பிரிந்து சென்று தனியே வாழ வேண்டும் என்றதொரு துர்ப்பாக்கியமா? அழுதாள்; அவள் அழுதாள்; ஆறுதல் காண முடியாது வெகுநேரம் அழுது கொண்டே இருந்தாள்.

மென்மையாகத் தன் தோள்பட்டையை யாரோ தொடுவதை உணர்ந்து எழுந்து உட்கார்ந்தாள்.

''அண்ணி, என்ன இதெல்லாம்! விஷயத்தைக் கேள்வி பட்டேன். என்னால் நம்பவே முடியலை. ஆனாலும் நாங்கள் உங்களது முடிவை ஏற்கப் போவதில்லை; இந்த வீட்டில் உங்களைத் தவிர வேறு யாரும் அண்ணியாக எங்களுக்கு வரப் போவதில்லை. நிச்சயம்... உங்களை நாங்கள் போகவிடமாட்டோம்...'' அன்புடன் கடிந்து கொண்ட சோபனா அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு



விம்மினாள்.

அனு அப்பொழுது அவளுடன் எதுவும் தர்க்கிக்க விரும்பவில்லை. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அமைதியடைந்தவள்போல் காணப்பட்டாள். சிறிது பொழுதில் எழுந்து சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு கூந்தலைச் சீர்படுத்திக் கொண்டாள். பின்னர் வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

அன்று இரவு அவள் உறங்கவே இல்லை. தன்னுடையது என்று கருதிய பொருள்களைத் தன் பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டாள். அவர்களுடையது என்று மனதிற்பட்டவைகளை இரும்பு பீரோவிற்குள் பத்திரமாக வைத்துப் பூட்டினாள். பின்னர் மேஜையருகே உட்கார்ந்து ஜெய்குமாருக்கு ஒரு கடிதம் எழுதி உறையிலிட்டு ஒட்டித் தயாராக வைத்தாள்.

மறுநாட் காலை. விரைவில் குளித்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டு கடைசி முறையாக வாயில் பிள்ளையாரைத் தன் கையாலேயே நீராட்டி துடைத்து - பொட்டிட்டு - பூவைத்து பூஜித்தாள். பூஜையறையிலிருந்த பெரிய குத்து விளக்கை ஏற்றிய போது மீண்டும் அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. தன் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த விளக்கையும் ஏற்றினாள். அதைத் திரும்ப தன்னுடன் எடுத்துச் செல்ல அவளுக்கு மனம் இருக்கவில்லை. ''என் நினைவா இந்த விளக்கு இங்கே எரிஞ்ச கொண்டே இருக்கட்டும். இனிமேலாவது குமாருடைய வாழ்க்கையில் நிறைவு இருக்கட்டும்...'' பிரார்த்தித்தபடி வெளியே வந்தாள்.

தங்கவேலுவுக்கு ஒரே தவிப்பு. என்ன, ஏது என்று கேட்கத் துணிவு கிடையாது. ஆனால் ஏதோ தவறு நடந்துவிட்டிருக்கிறது என்றவரை ஒரு குழப்பம். அழுது ஊதி விட்டிருந்த எஜமானியின் முகத்தைப் பார்க்கவும் அஞ்சி காப்பி டம்ளரை மேஜை மீது வைத்துவிட்டு மெல்ல நகர்ந்தான். ஒரு விழுங்காகக் காப்பியைப் பருகி விட்டு அவள் வாயிலுக்கு விரைந்து வேலையாளைக் கூப்பிட்டு டாக்ஸி ஒன்றைக் கொண்டு வரும்படி உத்திரவிட்டாள். அது சமயம்

மாடியிலிருந்து வேகமாக இறங்கி வந்தான் சசி.

''டாக்ஸி எதுக்கு அண்ணி. நீங்க ஊருக்குப் போகிறதாக மனசை வச்சுட்டீங்க. தடுத்து நிறுத்த நான் யார். இத்தனை நாளும் இந்த வீட்டிலே ராணிபோல - தலைவியாக இருந்தீங்க. பிறந்த வீட்டுக்கு உங்களை தன்னந்தனியே ஒரு டாக்ஸியில் ஏற்றி பிறகு பஸ்ஸில் அனுப்பி வைக்க அவ்வளவு கல்நெஞ்சக்காரர்களா நாங்கள்? உங்க முடிவு அசைக்க முடியாதுன்னு தெரியும். அதனாலே நம்ப பென்சை நான் தயார் பண்ணி வச்சிருக்கேன். பொன்னையா ஓட்டிக்கொண்டு வருவார். துணைக்கு நானும் வருகிறேன். எப்ப கிளம்பணும்னு சொல்லுங்கோ நான் தயார்'' என்றான் துயரத்துடன்.

அதற்குப் பின்னர் அவள் தாமதிக்கவில்லை. சோபனாவிடம் வீட்டு சாவிக்கொத்தையும், கணவனுக்கு எழுதி வைத்திருந்த கடிதத்தையும் கொடுத்தாள். ''கடித்ததை உடனடியாக அவருக்கு பம்பாய்க்கு தபாலில் அனுப்பிவிடு. சாவிக்கொத்தை நீ வச்சிருந்து பின்னாடி சேர்க்க வேண்டியவங்ககிட்ட சேர்த்திடு. வரேன் நான்...'' விடை பெற்றுக் கொண்டு வேகமாக நடந்து காரில் ஏறிக் கொண்டாள்.

வண்டி பங்களாவிலிருந்து புறப்பட்டபோது வாயிலில் நின்று விக்கி விக்கி அழுத சோபனாவையோ - வியப்பில் மரமாக நின்ற தங்கவேலுவையோ அவள் திரும்பிப் பார்க்கவேயில்லை. ஒரே தீர்மானமாக அந்த வீட்டில் வாழ்க்கையை முடித்துக் கொண்டவளாகப் புறப்பட்டிருந்தாள்.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. அவளுக்கு எதைப் பற்றியும் சிந்தனையிருக்கவில்லை. கடைசியாக அவள் சோபனாவிடம் கொடுத்துவிட்டு வந்த அந்தக் கடிதத்தில் தான் ஜெய்குமாருக்கு எழுதியவற்றை மட்டும் திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டே இருந்தாள்.

'அன்புள்ள குமார் அவர்களுக்கு,

இதைப் படிக்கு முன் தாங்களும் ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள் என நம்புகிறேன். வாணி அக்கா உயிருடனிருக்கும் உண்மையை உங்கள் வீட்டிற்கு நான் வந்த சில நாட்களிலேயே தெரிந்து கொண்டு விட்டிருந்தேன். அதற்குப் பின்னர் என்னால் அமைதியுடன் இருக்க



முடியவில்லை. தாத்தா உங்களிடம் எல்லாம் சொல்லியிருப்பார். வாணி அக்காவை விவாகரத்து செய்து விட்டு நமக்குப் புது வாழ்வு அளிக்க வேண்டுமென்று தாத்தா விரும்பினார். அதன் விளைவுதான் இந்த பம்பாய்ப் பயணம். ஆனால் விளைவு வேறுவிதமாகிவிட்டது. நோயுடனும், வறுமையுடனும் போராடிக் கொண்டிருந்த வாணி அக்காவை நேரில் பார்த்ததும் என் மனம் மாறிவிட்டது. அவர்களுக்குத்தான் இப்பொழுது வாழ்வு தேவை. திருந்திவிட விரும்பும் அவர்களுக்கு மீண்டும் நல்லதொரு மனைவியாக வாழ வாய்ப்பு அ[illegible] வேண்டியது அவசியம். அது உங்கள் கடமைகூட. எ[illegible]ம் அதுவே.

ஊனமுற்றவ[illegible]ருக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டும் என்று பேசுகிறோம்; முன் வருகிறோம்; உள்ளமும் உணர்வுகளும் ஊனமாகிவிட்டிருக்கும் வாணியைப் போன்றவர்களுக்கும் மறுவாழ்வு தேவைதானே! பெண்மையை மதிக்காது மிகவும் தவறான பாதையில் போனவள் - கணவனுக்குத் துரோகம் செய்தவள் என்று பல பழி சொற்களை எளிதில் பேசிவிடலாம். இதே தவறுகளை நீங்கள் செய்திருந்தால் வாணி அவைகளை மறந்து எந்த நிலையிலும் தங்களைத் திரும்ப ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுதானே எல்லோரும் எதிர்பார்ப்பார்கள்? நளாயினி மட்டும் நோயாளிக் கணவனைக் கூடையில் சுமந்து கொண்டு அலையவேண்டும் என்று ஒருதலை பட்சமான தீர்ப்பு ஏன்?

கணவனும் மனைவியும் சமமானவர் என்று நாம் எண்ணும்போது அவர்கள் புரியும் தவறுகளில் மட்டும் ஏன் வித்தியாசம் காணவேண்டும்? தவறை யார் செய்தால் என்ன? மன்னித்து மறுவாழ்வு கொடுக்க வேண்டிய கடமை இருவருக்கும் உரித்தானது. சரிதானே. தீர யோசித்தேன். உண்மை தெரிந்த நாளிலிருந்து போலியாகத் தங்கள் மனைவி என்று ஒதுங்கி வாழ்ந்து அலுத்து விட்டேன். இப்பொழுது நிரந்தரமாக ஒதுங்கி விடுவதென்று போகிறேன். தங்களுக்கும் அக்காவுக்கும் அமைதியான வாழ்க்கையை ஆண்டவன் அருளுவாராக. என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். சமாளித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உண்டு.

அன்புள்ள அனு

# 28

அன்று காலை விமான நிலையத்திலின்று மலபார் ஹில் ஃப்ளாட்டிற்கு வந்து இறங்கிய ஜெய்குமாருக்கு ஒரேயடியாக இரண்டு பெரும் அதிர்ச்சிகள்.

அவனை வரவேற்க அனு அங்கே காத்திருக்கவில்லை என்ற பெருத்த ஏமாற்றம்.

பேரனை எதிர் கொண்டழைப்பவர் போல் வராந்தாவிலேயே சக்கர நாற்காலியுடன் இருந்த தாத்தா தமது அறைக்குள் அவனை அழைத்துச் சென்று காப்பி பலகார உபச்சாரத்திற்குப் பின்னர் சொன்ன அந்த பயங்கர செய்தி அவனை நிலை குலைய செய்துவிட்டது. உணர்வுகள் எல்லாம் உறைந்து முகம் இறுகி கல்லாய்ச் சமைந்து விட்டவன் போல் பேசத் தோன்றாது அப்படியே ஆசனத்தில் உட்கார்ந்திருந்தான்.

''உண்மையாகவா தாத்தா?'' குரல் மெல்லியதாக உதடுகளில் பட்டும் படாததுபோல் வெளிப்பட்ட போது கூடவே வேதனையா வெட்கமா என விளங்காத ஒரு பயங்கர உணர்வு கல்லாக, கனமாக நெஞ்சை அடைப்பதை உணர்ந்தான்.

'அவளது நினைவை எண்ணி உருகிப் பல ஆண்டுகள் தன்னைத்தானே அழித்துக் கொண்டானே? அதற்கு இது தானா பிரதியாகக் கிடைத்தது. அவள் சிந்தையை அள்ளிய சிரிப்புக்குப் பின்னால் துரோக நெருப்பை அல்லவா இறைத்துவிட்டுப் போயிருக்கிறாள் பாதகி! குமுறி எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்க தாடைத் தசைகளை இறுக்கிக் கொண்டான். ஆனாலும் ஏமாற்றப்பட்டுவிட்ட துயரம் இதயத்தைக் குலுக்கவே வாய்விட்டு அழவேண்டும் போன்ற ஆவேசம் கண் இமைகளைச் சூடாக நனைத்தக் கண்ணீரை நெஞ்சுக்குள்ளே விழுங்கிக் கொண்டு தாத்தாவை மெல்ல நிமிர்ந்து பார்த்தான்.



அவன் படும் வேதனையின் ஆழத்தை பூரணமாக அவரால் உணர முடிந்தது. நெஞ்சம் நெகிழ்ந்து போனார்.

''தாத்தா! என்ன சொல்றதுன்னே புரியலை. உயிருக்கு மேலா நினைச்ச வாணி என்னை எத்தனை அவமானப்படுத்தியிருக்கிறாள்? எத்தனையோ அசட்டையா இருந்தும் என்னோடு மனைவியா வாழணும்னு அனு நம் குடும்பத்தினருடன் எத்தனை பாடுபட்டாள்? என் தவறை உணர்ந்து திருத்திக் கொண்டு நான் அவளோடு ஒன்றுபட்டு வாழ முயற்சிக்கும் நல்ல ஒரு சமயத்தில் இப்படி ஒரு பேரிடியா? அனு இல்லாமல் என்னால் வாழ முடியாது போல வாழ்க்கை ஒரே சூன்யமாயிருக்கே தாத்தா! நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன் - என் வாழ்வில் இப்படிப்பட்ட விபரீதங்களை...'' பேச முடியாது திணறினான். நீர்த் துளித்த கண்கள் பளபளத்தன.

இரக்கவசப்பட்டுப் போன கிழவர் வண்டியைத் தள்ளிக் கொண்டு அருகில் வந்தார். பேரனை அன்போடு அணைத்துக் கொண்டார். ''பெரிய நிர்வாகத்தின் பொறுப்பை சுமக்கிறவன் - நீ மனம் தளரலாமா? வரதெல்லாம் வரட்டும்னு நிமிர்ந்து நின்னு சமாளிக்க வேண்டாமா? என்னையும் உன்னையும்விட வயதில் சிறியவள் அனு. இந்த கசப்பான உண்மையை சந்திக்க நேரிட்ட போது அவள் இப்படி இடிந்து போகலை. துணிவோடு ஏற்றுக் கொண்டாள்'' என்றார் மெல்லிய குரலில்.

''நான் வரும்வரைகூட காத்திராமல் அனு ஊருக்குக் கிளம்பி விட்டதையும் என்னால் தாங்கிக் கொள்ள முடியலையே!'' அரற்றினான் குமார்.

''அவள் நிலையில் யாரிருந்தாலும் அப்படித்தான் நடந்து கொள்வாங்க. இனி அவளுக்கு நம்மிடம் என்ன உரிமை இருக்கு சொல்லு! சட்டப்படி என்ன பிடிப்பு இருக்கு?''

''இதெல்லாம் ஆரம்பத்திலிருந்து தெரிந்தும் நீங்க என் வாழ்க்கையோடு ரொம்ப விளையாடிட்டீங்க'' கோபமும் துயரமுமாகக் கேட்டான்.

''நம் குடும்பத்தின் நன்மைக்காகச் செய்தேன். உன் வருங்காலம் வளமாக இருக்கணும்னு ஆசை...''

''அனு பாவம். நமக்கு என்ன கெடுதல் செய்தாள். அவள் வாழ்க்கையும் நாசமாகிவிட்டிருக்கே'' பச்சாதாபத்தில் துடித்தான் அவன்.

''உயர்ந்த குணம் அந்தப் பெண்ணுக்கு. தவறு செய்தவன் நான்தான்னு ஒப்புக்கொண்டபோது மனம் இளகி மன்னித்து விட்டாள். ஆனால் ஒன்று மட்டும் கேட்டுக் கொண்டுதான் பிறந்த வீட்டுக்குப் போய்விட்டிருக்கிறாள்.''

குமார் திடுக்கிட்டுப் போனான்! ''பிறந்த வீட்டிற்கா?''

''ஆமாம்; நிரந்தரமாக நம்மைப் பிரிந்து அவள் தன் ஊருக்கே போய் விட்டாள். அவளுக்கு இழைத்த தீங்குக்கு ஈடு செய்ய விரும்பினால் அவள் கேட்டுக் கொண்டதை நாம் நிறைவேற்றி வைக்கக் கடமைப் பட்டவர்கள்.''

''அவள் விருப்பம் என்ன தாத்தா?'' குமாரின் குரல் தடைப்பட்டது.

''வாணியின் நோயைக் குணப் படுத்தி அவளுடன் நீ மறுபடியும் ஒன்றுபட்டு வாழ வேண்டும்.''

''என்ன?'' திகைத்தான் குமார். ''கேட்கக் கூட மிகவும் அருவருப்பான யோசனை. அனுவுக்கு ஏன் இந்த விசித்திர புத்தி!'' காரமாகக் கேட்டான்.

''பெண்கள் மிகவும் விசித்திரமான போக்குடையவர்கள். அவர்களை முழுவதும் புரிஞ்சி கொள்வது என்பது எந்த ஆணுக்கும் சாத்யப் படாத காரியம். உனக்கோ அனுபவம் போதாது - வயதும் போதாது; அனு சொன்னதை செய்வதைத் தவிர வேறு வழியேயில்லை. அப்பொழுதுதான் அந்தப் பெண் மனச் சமாதானமடைவாள்.! என்னோடு வீணா தர்க்கிக்காதே - நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு போக இருக்கிறேன் -நீயும் புறப்படு...'' உத்தரவிட்டார் தாத்தா.

அறைக்கு வெளியே பேச்சுக் குரலைக் கேட்ட வாணி சட்டென்று எழுந்து படுக்கை மீது சாய்ந்த வாக்கில் உட்கார்ந்து கொண்டாள். அவர்கள் எல்லாம் அவளைக் காண வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் திகிலுடன் அவள் காலையிலிருந்து காத்துக் கொண்டிருந்தாள்.



கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்த சக்கர நாற்காலியைக் கண்டதும் அவள் நெஞ்சு படபடவென்றடித்துக் கொண்டது. பின்னால் வந்த குமாரை அவளால் நிமிர்ந்து பார்க்க இயலவில்லை.

கட்டில் அருகே வந்து அமர்ந்து கொண்ட அவர்கள் இருவரும் பேசவில்லை. அவளுக்கும் பேச துணிவு இருக்கவில்லை. குனிந்தபடியே படுக்கை விரிப்பை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தாத்தாதான் முதலில் பேசினார்.

''இப்போ உடம்பு எப்படியம்மா இருக்கு?''

சாட்டையால் அடிப்பட்ட வேதனை அவளுக்கு.

''தாத்தா உங்க அன்புக்கும் - கவனிப்புக்கும் நான் அருகதை இல்லாதவள்'' திணறிய அவள் கண்கள் கலங்கின.

''நடந்ததையெல்லாம் மறந்து விட்டுத்தானே இப்போ உன்னைப் பார்க்க நாங்க வந்திருக்கோம் - பழையதை நினைக்க நீ வருத்தப்படறது தப்பு - எங்களுக்கு ஞாபகப்படுத்தறதும் சரியில்லை'' - தாத்தா அதட்டினார்.

அழகெல்லாம் குலைந்து உடல் நலிந்து - வேதனையின் உருவமாக படுக்கை மீது கிடந்த அவளைக் கண்டதுமே ஜெய்குமாரின் வெறுப்பும் கோபமும் மெல்ல அடங்கின.

எல்லாம் இருந்தும் இப்படி ஒருத்தி சீரழிந்து போவாளா? தனக்குள்ளேயே எண்ணிக் கரைந்தான்.

ஆனாலும் அவனால் வெகுநேரம் பேசாமல் இருக்க முடியவில்லை. கேட்க வேண்டும் என்று துடித்த அந்தக் கேள்வியை நெஞ்சுக்குள்ளே அடக்கிக்கொள்ள இயலவில்லை.

''வாணி!'' மெல்ல அழைத்தான்.

திடுக்கிட்டு நிமிர்ந்து அவள் அவனைப் பார்த்தாள். மீண்டும் அவள் நெஞ்சு பக்பக் என்று அடித்துக் கொண்டது. பயத்தில் உதடுகள் காய்ந்து போயின. உடம்பெல்லாம் ஜில்லிட்டுப்போன ஒரு உணர்வு.

''உனக்கு மேன்மையான ஒரு வாழ்வு கொடுத்தேன் நான். அதற்குப் பிரதியா எனக்கு அவமானத்தைக் கொடுக்க [illegible]

மனசு வந்தது?'' - வியப்பும் வேதனையுமாகக் கேட்டான்.

கண்களில் பெருகிய கண்ணீரை வாணி சட்டென்று துடைத்துக் கொண்டாள்.

''முன்னமே சொன்னதுதான். மறுபடியும் சொல்லும்படி நிர்ப்பந்திக்கிறீங்க. உங்கள் பணத்தைத்தான் நான் நேசித்தேன் -அதனால் ஏற்பட்ட சரிவு இது...''

சம்மட்டி கொண்டு யாரோ சாடியது போன்ற உணர்வில் ஜெய்குமார் நெஞ்சம் பதைபதைத்துப் போனான். குப்பென்று உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. அந்த உண்மை கேட்க மிகவும் கசப்பாக இருக்கவே மேலே பேசத் தயங்கியபடி தாத்தாவைப் பார்த்தான்.

அந்தச் சமயம் நர்ஸ் நோயாளியைக் கவனிக்க உள்ளே வந்துவிட்டாள்.

அவள் அப்பால் போகும்வரை சில நிமிஷங்கள் அவர்கள் அறைக்கு வெளியே காத்திருக்க வேண்டியிருந்தது. அந்தச் சில நிமிஷங்களில் தாத்தா தம்மைச் சுதாரித்துக் கொண்டுவிட்டார்.

நர்ஸ் அறையைவிட்டு வெளியே சென்றதும் மீண்டும் அவர்கள் கட்டிலருகே வந்து அமர்ந்து கொண்டனர். ''உன்னை நன்றாக கவனித்து உடம்பைக் குணப்படுத்தி எங்களுடன் அழைத்துப் போவதாக எங்கள் தீர்மானம். நீ மறுக்கக்கூடாது. அதனால் பல சிக்கல்கள் ஏற்படும். உன்னை அழைத்துச் சென்றாலும்கூட சில சிக்கல்களை நான் நிவர்த்திக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதனால் இப்போ உண்மையைச் சொல் காரில் இறந்து போனாளே - அந்தப் பெண் யார்? விவரம் எனக்குத் தெரிஞ்சாகணும்... எப்படியம்மா ஆள்மாறாட்டம் ஏற்பட்டது?'' - கண்டிப்பு நிறைந்த குரலில் அதட்டிக் கேட்டார் தாத்தா.

கணவனை ஒரு தடவை மெல்ல கடைக் கண்ணால் பார்த்துவிட்டு கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு ஒரு கணம் வாளா இருந்தாள் வாணி. தோள்பட்டைகளை வெறுப்போடு குலுக்கினாள். ''அதுதான் விதி தாத்தா. அன்று அந்த விபத்தில் காரில் இறந்து போனவள் என் தோழி ஸ்டெல்லா...'' வறட்சியாக முறுவலித்தாள்.



சிவபாதம் கடுமையாக வெறித்தபடி தலையை ஆட்டினார்.

அவள் மேலே பேச வேண்டியிருந்தது.

''ஸ்டெல்லா என்னோடு ஆரம்பத்திலிருந்து படித்த பள்ளித்தோழி. கல்லூரியிலும் ஒண்ணாகப் படித்தோம், அனாதை ஆஸ்ரமத்திலிருந்து படிக்க வந்தவ - ரொம்பக் கெட்டிக்காரி -துணிச்சலான பேர்வழியும்கூட. எதற்கும் பயப்படவே மாட்டாள். வாழ்க்கையில் எதையும் அவள் தீவிரமாக எடுத்துக்கொண்டதேயில்லை. சிரிக்கச்சிரிக்கப் பேசத் தெரிந்தவள். பி.ஏ. முடிந்தவுடன் ஸ்டெல்லா வேலை தேடிக் கொண்டு சென்னையிலேயே இங்குமங்கும் தங்கிக் கொண்டிருந்தாள். ஒரு நாள் திடீர்னு அவள் எனக்கு போன் பண்ணினாள்.

''வாணி! இந்தத் தமிழ்நாட்டையே உதறிவிட்டுப் போகிற காலம் எனக்கு வந்துவிட்டது. பாம்பேயில் எனக்கு ஒரு நல்லவேலை கிடைச்சிருக்கு. இரண்டு நாளில் கிளம்பணும். என்னைப்பத்தி கவலைப்படறவங்க உன்னைத் தவிர இங்கே யார் இருக்கா சொல்... அதனால் தான் உன்கிட்டே கேட்க துணிஞ்சேன். உன் உதவி தேவை. பிரயாணத்துக்கும் பணம் வேண்டும். பாம்பே ரயிலில் ரிசர்வேஷன் கிடைக்கலை. அதனால் ஒரு டிராவல் ஏஜண்ட் வழியா முயற்சிக்கிறேன் - கட்டாயம் டிக்கெட் தந்துருவான் - ஆனால் அதை ஸ்டேஷனில் வந்து வாங்கிக் கொள்ளச் சொல்கிறான். கடைசி நிமிஷ கோட்டாவில் கிடைக்குமாம். நீ மறுக்காமல் பண உதவி செய்யணும். நான் சம்பளம் வாங்கினதும் திருப்பி அனுப்பிவிடுவேன்' என்றாள்.

''பார்க்கிறேன் என்று கொஞ்சம் அசட்டையாகவே போனை வைத்துவிட்டேன். அதற்குப் பின்னர் இரண்டு தினங்கள் கழித்து அந்த திருத்தணி கல்யாணத்திற்கு நான் மட்டும் போய் வர வேண்டும் என்று ஏற்பாடான போது திடீரென்று என் மனதில் அந்தத் திட்டம் உருவானது. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் கையில் கிடைத்ததுடன் வீட்டைவிட்டு என் நண்பனுடன் வெளியேறி விடுவது என்று நான் ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாட்டிற்கு திருத்தணி கல்யாணம் உதவியது.

''அவளுக்கு என் காதல் விவகாரம் தெரிந்த சங்கதிதான். கடைக்குப் போவதாகச் சொல்லிக் கிளம்பிச் சென்று அவளைச்

சந்தித்து மனம் விட்டுப் பேசினேன். அவள் ஒப்புக் கொண்டாள். காலை கல்யாணத்துக்குப் புறப்படும் காரில் அவள் எனக்காக திருத்தணிக்குப் போவது - பிறகு பஸ்ஸில் புறப்பட்டு அங்கிருந்து உடனேயே திரும்பிவிடுவது. இந்த இடைவெளி நேரத்தில் தாதர் எக்ஸ்பிரஸில் நானும் என் நண்பனும் பம்பாய்க்குப் புறப்பட்டுப் போய்விடுவது என்பது திட்டம். பிறகு பம்பாயில் சந்தித்து அவளது சாமான்களை அவளிடம் ஒப்படைக்க வேண்டி அவள் வேலைக்கு அமரவிருந்த ஸ்தாபனத்தின் முகவரியையும் வாங்கிக் கொண்டேன்.

''அன்று காலை காரை முதலில் அவள் தங்கியிருந்த லாட்ஜிற்கு ஓட்டச் செய்தேன். எனக்குப் பதிலாக சிறிது நேரம் கல்யாண மண்டபத்தில் அவள் தலைகாட்ட வேண்டுமென்பது என் யோசனை. நான் கட்டியிருந்த சேலையை அவளுக்கு உடுத்தக் கொடுத்துவிட்டு அவள் சேலையை நான் வாங்கி அணிந்து கொண்டேன். என் கைப்பையை அவள் எடுத்துக் கொண்டாள். ஆனால் நகைகள், என் பெட்டி அவள் பெட்டி சாமான்கள் எல்லாவற்றையும் நான் எடுத்துக் கொண்டேன்.

''இந்தம்மாவை திருத்தணி கல்யாண மண்டபத்தில் கொண்டு விடு. நான் பின்னால் வருகிறேன்'' என்று டிரைவருக்கு உத்திரவிட்டபோது அவன் ஒரேயடியாகக் குழம்பிப் போனான். எஜமானியான என்னிடம் ஏதும் கேட்க அச்சம். அரைமனதுடன் தனக்குள் ஏதோ முணுமுணுத்தபடி புறப்பட்டான். அவர்கள் அந்தப் பயணத்திலிருந்து திரும்பவேயில்லை என்பது உங்களுக்குத் தெரிந்த சங்கதி. பம்பாய் போய்ச் சேர்ந்த பின்னர் தான் தமிழ்ப் பத்திரிக்கை ஒன்றை வாங்கி படிக்கத் திறந்தபோதுதான் அந்த விபத்தைப்பற்றி விவரம் தெரிந்தது. அதிர்ந்து போய்விட்டேன்.

''அவளது சாமான்கள் எல்லாம் என்னிடமிருந்தன. பம்பாயில் அவள் கொடுத்து விட்டுப் போன முகவரியில் கொண்டு வந்து கொடுப்பதாக ஏற்பாடு. அவள்தான் இறந்து விட்டாளே. அனாதையான அவளைத் தேடி வர யார் இருக்கிறார்கள் என்ற துணிவில் அவள் சாமான்களை பிச்சைக்காரர்களுக்கு வினியோகம் செய்து விட்டேன். பெட்டியிலிருந்த கடிதங்களை நெருப்பில் போட்டு பொசுக்கிவிட்டேன். இந்த ஆள் மாறாட்டச் சாவு என் வரைக்கும் மிகவும் உதவியாக இருந்தது. என்னை நீங்கள் தேடுவீர்கள்



என்ற பயம் இன்றி நானும் என் நண்பனும் இஷ்டப்படி வாழ்க்கை வாழ வசதியாக இருந்தது...'' சொல்லி முடித்து விட்டு அவள் திடீரென்று மௌனமானாள்.

''ஸ்டெல்லா இறந்தது உன் வரைக்கும் நலனாக அமைந்தது. ஆனால் இனித்தான் எங்களுக்குப் பலவித பிரச்சனைகள். உன் உடல் தேறி சுகமடைந்து மறுபடி நீ எங்களுடன் வாழ முற்பட்டால் இடையே கவனிக்க வேண்டிய காரியங்கள் ஏகப்பட்டது இருக்கும்மா...''

அவர் முடிக்கு முன் வாணி குறுக்கிட்டாள்.

''தெரியும் தாத்தா. இந்த கோணத்திலிருந்து நான் பலமுறை தீவிரமாகச் சிந்தித்திருக்கிறேன். போலீஸ் ரிக்கார்டுகளிலும் சட்டப்படியும் ஊரார் கண்களுக்கும் நான் இறந்தவளாகி விட்டிருக்கிறேன். இப்போது உயிர் கொடுத்து மீட்டு என்னை மறுபடியும் உங்களோடு சேர்த்துக் கொள்ள முதலில் நீங்கள் தக்க வக்கீலைக் கலந்து ஆலோசிக்கணும். இன்னும் என்னென்னவோ பிரச்சினைகள். தாத்தா உங்கள் வீட்டில் புகுந்த நாளிலிருந்து நான் உங்கள் எல்லோருக்கும் ஒரு பிரச்சினையாகத்தானே இருந்தேன். என்றாவது மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறேனா?'' கேட்டாள் வெறுப்புடன்.

சிவபாதம் பதிலளிக்காது அவளை ஊன்றிப் பார்த்தார்.

## 29

இரண்டு நாட்களாகப் பெய்த மழை ஓய்ந்து பளிச்சென்று வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. ஈரத்துணிகளைக் கொடியில் காயப்போட்டு விட்டு தோட்டத்திலிருந்த முருங்கை மரத்திடம் மரகதம் வந்தாள். கடையைத் திறக்கச் சொல்லி இளைய மகனிடம் சாவியைக் கொடுத்துவிட்டு மாணிக்கம் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தான்.

கோடி வீட்டுக் குப்புசாமி விடிந்ததும் விடியாததுமாக பல்குச்சியைக் கடித்து குதப்பிக் கொண்டு வாய்க் காலுக்குப் போகும் வழியில் வீட்டு வாயிலில் நின்ற மாணிக்கத்தைப் பார்த்துவிட்டான்.

பற்களைக் குச்சியால் குத்திக் கொண்டே மாணிக்கத்தின் மனதைச் சொல்லால் குத்திக் கிளறிவிட்டான் அந்த வம்புக்காரன்.

''ஆமாம் மாணிக்கம்! உன் தங்கச்சி இங்கே வந்து ரெண்டு மாசமாகப் போகுதே - இன்னும் மாப்பிள்ளை வெளியூரிலிருந்து வரலையா?''

மாணிக்கம் உடல் குறுகி உள்ளம் பதைத்துப் போனான்.

மாப்பிள்ளை ஜெய்குமார் வியாபார சம்பந்தமாக வெளிநாட்டுக்குப் போயிருப்பதால் அனு பிறந்த வீட்டிற்கு வந்திருக்கிறாள் என்று மரகதம் அவசரமாகக் கற்பனை செய்த ஒரு பொய்யை அவன் கேட்கிறவர்களுக்கெல்லாம் சொல்லி அலுத்துவிட்டிருந்தான். எத்தனை நாளைக்கு இந்தக் கதை செல்லுபடியாகும்? விரைவில் விஷயம் அம்பலத்துக்கு வரும்போது ஊரார் முன்னிலையில் முகத்தில் கரியைப் பூசிக் கொண்டு நிற்கப்போகிறான். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை என்ற அச்சம் அவனுக்கு.

''சீக்கிரம் வந்து விடுவதாக முந்தாநாள்தான் கடுதாசி வந்தது'' மென்று விழுங்கிவிட்டு உள்ளே நடையைக் கட்டினான்.

''பாவிக் கிழவன் - பணத்தைக் காட்டி - பங்களாவைக் காட்டி மோசம் செய்துவிட்டு கிணற்றில் போட்ட கல்லாக ஒன்றுமே தெரிவிக்காமல் இருக்கிறானே'' என்று சிவபாதத்தை எண்ணி வெகுண்டபோது உடலும் உள்ளமும் திகுதிகுவென்று எரிந்தன. அவசரமாக பல் துலக்கிய கையோடு கிணற்றடியில் ஸ்நானம் செய்யத் தொடங்கினான். எத்தனை வாளித் தண்ணீரை இறைத்துத் தலையில் கொட்டிக் கொண்ட போதிலும் அடங்காது போன்று ஆத்திரத்தில் அவன் உடலே நெருப்பாகக் கனன்றது.

மாடியறையிலிருந்து ஜன்னல் வழியே அனு தோட்டத்தை எட்டிப் பார்த்தாள்.

''அண்ணி! அப்படியே வரும்போது செடியிலிருந்து ரெண்டு



பிஞ்சு கத்தரிக்காயைப் பறிச்சுக் கொண்டு வாங்க. சின்னவனுக்கு இட்லிக்கு சாம்பார்தான் வேண்டுமாம்'' மெல்லியதாகச் சிரித்தாள்.

'அந்தச் சிரிப்பில் முன்போல் உயிர் இல்லையே' - எண்ணியபடி மெல்ல அந்தப் பக்கம் திரும்பினான் மாணிக்கம்.

இதயத்தை யாரோ கசக்கிப் பிழிந்துவிட்ட மாதிரியானதொரு வேதனை. கண் இமைகளைச் சுட்ட கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஈர வேட்டியைத் துவைத்துப் பிழியத் தொடங்கினான்.

'எப்படியிருந்த அனு! இரண்டே மாதத்தில் பிடுங்கிப் போட்ட பச்சைக் கொடிபோல துவண்டு - வாடி இளைச்சுத் துரும்பாகி விட்டாளே!' - தனக்குள்ளே எண்ணியபடி திரும்பிய அவன் பார்வை மாட்டுக் கொட்டகை முகப்பிலே சொருகியிருந்த கருக்கருவாள் மீது பதிந்தது. கோபத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டான். சட்டென்று அதைக் கையில் எடுத்து அதனாலேயே அனுவின் புக்ககத்து மனிதர்களை, அதுவும் அந்த பிடி மீசைக் கிழவனை வாங்கு வாங்கு என்று வெட்டி சிதைக்க வேண்டும் போன்ற ஒரு ஆத்திரம் ஆவேசம் அவனுக்கு!

எதுவும் செய்ய முடியாதபடி என்ன என்று ஒரு வார்த்தை காரமாகக் கூடக் கேட்க முடியாதபடி அவனை மரகதம் கட்டிப் போட்டு விட்டிருந்தாளே!

''நாளைக்கு நல்லபடியாக முடியக்கூடியதையும் நாம் கெடுத்தோம் என்கிற பெயர் வேண்டாம். முள்ளுலே போட்ட சேலையை மெள்ளத்தான் எடுக்க முடியும். கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு சும்மா இருங்க'' என்று அனு வீட்டிற்குள் நுழைந்த அன்றே அவள் எச்சரித்து விட்டிருந்தாள்.

''அண்ணா, நீங்க கோபப்படுவதிலே அர்த்தமேயில்லை. அவங்க என்னைப் போக சொல்லலை. நானேதான் விலகிக் கொண்டு வந்து விட்டேன். உங்களுக்கு நான் பாரமாகத் திரும்பி வந்துட்டேன்னு நினைச்சிங்கன்னா...'' அவள் தினறியபோது அண்ணன் மாணிக்கம் துண்டை வாயில் அடைத்துக் கொண்டு குமுறி அழுதான். அக்கம் பக்கத்தவர்களுக்குத் தெரிந்துவிடப் போகிறது என்ற பயத்தில் வாய்விட்டு அழுது ஆறுதல் பெற முடியாது வேதனையில் தினமும் விண்டு விரிந்து கொண்டிருந்தான்.

குழந்தைப் பருவத்தில் ஒரு சின்ன முள் காலில் குத்தி விட்டால்கூட அனு துடித்துப் போய்விடுவாள். அண்ணா அண்ணா என்று அவன் தோளில் சாய்ந்து கொண்டு அழுது ஆறுதல்பெற முயற்சிப்பாள் குழந்தை. இப்போது! நெஞ்சிலே ஈட்டியாகப் பாய்ந்துவிட்ட அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு பொடிப் பொடியாக இடிந்து போகாது துணிவோடு இருக்க அவளால் எப்படி முடிந்தது? தங்கையை பற்றி அவனுக்கு உள்ளூர மெத்த வியப்பு!

மரகதம் கையை நீட்டி எட்டிக் குதித்து முருங்கை மரத்தின் முன் கிளை ஒன்றை இழுத்து வளைத்தாள். அடுத்த கணம் படக்கென்று அது ஒடிந்து கீழே விழுந்தது.

''இதுக்குத்தான் சொல்லுவாங்க முருங்கை மரத்தை நம்பி ஏற கூடாதுன்னு - பார்த்தீங்களா? புளியங்கொம்பை பிடிச்சு வளைச்சிருந்தா இப்படி சுலபமா ஒடியுமா?''

ஈரவேட்டியை இடையே சுற்றிக் கொண்டு உள்ளே போக ஆயுத்தமான மாணிக்கத்துக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

''ஆமாம், புடிச்சாலும் புளியங்கொம்பைப் பிடிச்சோம்னு சிவபாதம் வீட்டு சம்பந்தத்தைப் பத்தி பெருமையாக நினைச்சுக் கொண்டிருந்தோம், அது வெறும் முருங்கைக் கொம்புன்னு இப்பத்தானே புரியுது'' - சீறினான்.

'அனு காதில் படப் போகிறது... உஸ்...' என்று சைகை செய்தாள் மரகதம். அவசரமாகக் கொஞ்சம் முருங்கைக் கீரையை கிள்ளிக் கையுடன் கொண்டு வந்த சிறு கூடைக்குள் போட்டு எடுத்துக் கொண்டு உள்ளே விரைந்தாள்.

அது சமயம் தெருப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வேகமாக வந்து வாயிலில் நின்ற பென்ஸ் காரைக் கண்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. கையில் பிடித்திருந்த கூடையை ஒரு பக்கம் வைத்துவிட்டு நெஞ்சு படபடக்க - மூச்சு தடுமாற அவள் தோட்டத்திற்கு ஓடினாள்.

''இந்தாங்க, சட்டுன்னு உள்ளேவந்து கொடியிலே கிடக்கிற வேட்டியைக் கட்டிட்டு வாசலுக்குப் போங்க மாப்பிள்ளை வந்திருக்கிறார் போலிருக்கு...'' பரபரத்தாள்.



''எந்த மூஞ்சியை வச்சுக்கொண்டு இங்கே அவன் வரானாம்? எதுக்கு வரானாம்'' உறுமினான் மாணிக்கம்.

''கொஞ்சம் தயவு செய்து நிதானமாக இருங்கோ. தங்கச்சிக்காக ஆத்திரத்தை அடக்கிட்டுப் பேசுங்கோ... அவங்களே வந்திருக்காங்க. என்னத்துக்கு எதுக்குன்னு விசாரிப்போமே... உங்களை கையெடுத்துக் கும்பிடறேன் கத்திப் பேசிடாதீங்க...'' உணர்ச்சி வசத்தில் பதறி மரகதம் கெஞ்சினாள்.

''ஜீவனாம்சம், பணம் ஏதாவது கொடுக்க வந்தோம்னு பேசினாக்க அவன் முகரை எகிறிடும். இவன் பணத்துக்காகவா என் தங்கச்சியை நான் பலி கொடுத்தேன். என் உடம்பெல்லாம் துடிக்குது. வாயை அடக்கிற நீ, இருக்கட்டும் சொல்றேன்...'' படபடவென்று பேசிய மாணிக்கம் ஈரத் துண்டை முதுகில் முறுக்கி பிழிந்து எடுத்துக் கொண்டு உள்ளே விரைந்தான். கொடியில் கிடந்த காய்ந்த வேட்டியைச் சுற்றிக் கொண்டு பனியனைத் தரித்துக் கொண்டான். கூடத்து அலமாரியிலிருந்த சம்படத்திலிருந்து பழனி விபூதியை அள்ளி நெற்றியில் பூசிக் கொண்டான். துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு ஆவேசத்தில் படபடத்த நெஞ்சோடு பதட்டமாக வாயில் பக்கம் வந்தான்.

தயங்கியபடி வாயில் படியருகே நின்ற ஜெய்குமார் அவனைக் கண்டு முகம் சிவந்து போனான்.

''அனுவிடம் பேசணும்... வரலாமா?...'' வார்த்தைகளுக்குத் தடுமாறினான்.

மாடிப் பக்கம் காட்டி விட்டு முகத்தில் படிந்த வியர்வையைத் துண்டால் அழுத்தித் துடைத்துக் கொண்டான் மாணிக்கம்.

'வாயை அடக்கிக் கொண்டு சும்மா இருங்கோ' என்று சமையலறையிலிருந்தபடியே கண்களால் அடக்கிக் கொண்டிருந்தாள் மரகதம்.

தன்னை மீறிய வார்த்தைகளை விழுங்கிக் கொண்டு வேதனையுடன் கூட்டிலடைக்கப்பட்ட புலியாகக் கூடத்திற்குள் அவன் குறுக்கு நெடுக்குமாக உலாவினான்.

மாடியில் கடைக்குட்டிப் பையன் விசிறிப் போட்ட

புத்தகங்களைப் பொறுக்கி அடுக்கி ஒழுங்கு செய்து கொண்டிருந்த அனுவின் காதுகளில் அந்த மெல்லிய காலடி ஓசை, சில காலமாகவே பழக்கப்பட்டிருந்த அந்த சப்தம், விழவே அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

வாயிற் படியருகே வந்து நின்ற ஜெய்குமாரைக் கண்டதும் உணர்ச்சி வசத்தில் உடல் பதற உள்ளம் சிலிர்க்க, கண்கள் பனிக்க அவள் நிலைகுலைந்து போய் விட்டாள்.

''எங்களையெல்லாம் விட்டுப் பிரிஞ்சிருக்க உனக்கு எப்படி அனு மனசு வந்தது. என்னால் முடியலையே?'' கேட்டபடி அருகில் வந்தான் அவன்.

பேச முடியாது உணர்ச்சிக் கொந்தளிப்பில் தடுமாறிப் போன அனு கீழே விழுந்து விடாதிருக்க சன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு, தாங்க முடியாது விம்மி அழுதாள்.

மனம் நெகிழ்ந்து போன குமார் ஒரே எட்டில் அவளை அணுகி ஆதரவுடன் முகத்தை நிமிர்த்தி கன்னங்கள் மீது வழிந்த கண்ணீரைத் துடைத்தான்.

''அனு இனிமேலே நாம் பிரிஞ்சிருக்க வேண்டிய நிர்ப்பந்தமேயில்லை. வாணி அந்த உரிமையை நமக்கு வழங்கி விட்டு போய் விட்டாள். ஆமாம்... அவள் இறந்து இரண்டு வாரமாகிறது.''

திடுக்கிட்டு விலகி நின்ற அனு வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

''ஆமாம், வாணி குற்றங்கள் பல செய்து விட்டவள் தான். ஆனால் அவைகளுக்காக முடிவில் அவள் வருந்திய போது உன் அன்புக் கட்டளைக்குப் பணிந்து அவளை மன்னிச்சுட்டேன். முடிவுரை அதே மருத்துவ மனையில் வைத்துக் கவனித்துப் பார்த்தோம். இனி பிழைக்க மாட்டாள். உடல் நிலை ரொம்பவும் கெட்டு விட்டிருக்கிறது என்று டாக்டர் கையை விரித்தபோது நான் மட்டும் இறுதிவரை பம்பாயிலே தங்கி என் கடமைகளைச் செய்து விட்டேன். இறக்குமுன் அவள் உன்னை மனம் நிறைந்து வாழ்த்தி விட்டுதான் போனாள். அத்தோடு அன்னம்மா பாட்டியின் அந்த நவரத்தின நகை செட்டையும் உனக்குத் தன் பரிசாகக் கொடுத்துப் போயிருக்கிறாள்.''



''பாவம் வாணி அக்கா...'' விம்மினாள் அனு.

''நீ சொன்னபடி நான் என் கடமைகளை நிறைவேற்றி விட்டேன். இப்போது நான் சொன்னபடி நீ உன் கடமைகளை நிறைவேற்றுவாயா? என் மனைவியாக எங்கள் வீட்டில் மறுபடியும் வந்து எங்களோடு வாழ வேண்டும். வருவியா அனு. அதைக் கேட்டு உன்னை அழைத்துப் போக நாங்க எல்லோரும் வந்திருக்கிறோம். சட்டபடி உனக்கு மனைவி என்கிற இடம் அளிக்க தாத்தா நமக்கு பதிவுத் திருமணத்துக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்'' கூறியபடியே மிக அருகில் வந்தான்.

'சம்பிரதாயப்படி நான் உங்கள் மனைவி, அந்த நினைப்பை என் நெஞ்சுக்குள்ளே கால முழுவதும் வச்சுக்கத் தீர்மானிச்சிருந்தேன். மனளவில் உங்களைப் பார்க்காம இந்த இரண்டு மாசமும்...'' கூறமுடியாது விம்மி அழுத அவளை ஆசையுடன் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான் குமார்.

''அனு, இனி நீ அழக்கூடாது. நமது வாழ்விலே கண்ணீர் என்பதுக்கே இடம் இருக்காது. என்னை நம்பு'' ஆறுதல் பல சொன்னான்.

கீழே... சக்கரவண்டியைத் தாங்கித் தள்ளிக் கொண்டு சசியும் டிரைவர் பொன்னையாவும் உள்ளே நுழைந்ததைக் கண்ட மாணிக்கத்துக்கு என்ன செய்வதென்றே தெரியாத குழப்பம். பின்னால் வெற்றிலைப் பாக்கு பழம் தட்டுடன் புன்னகை தவழ வந்த சோபனாவைக் கண்டதும் அவன், ''மரகதம் வந்து... அவங்க வீட்டிலிருந்து எல்லோரும் வந்திருக்காங்க பாரு...'' குமுறினான்.

தாத்தா சிவபாதம் தமக்குள்ளே புன்னகைத்தார். மீசையை ஒரு முறை ஆசையுடன் தடவிக் கொண்டார்.

''சம்பந்தி, முன்பின் தெரிவிக்காம திடுதிடுப்புனு நாங்க எல்லோரும் . வந்துட்டோம். அனுவை அழைச்சிட்டுப் போக வந்திருக்கோம். நடந்ததையெல்லாம் மறந்து குழந்தையை அனுப்பி வைக்கணும். மன்னிப்புக் கேட்க நானே நேரில் வந்துட்டேன்'' என்றார் புன்முறுவலுடன்.

ஜில்லென்று ஐஸ் கட்டிகளைத் தலையில் வைத்துவிட்ட குளிர்ச்சி. ஒரே கணத்தில் அவன் உள்ளத்து கொதிப்பு புஸ்வாணமாக

அடங்கிவிட்டது.

''என்னங்க நீங்க பெரியவங்க. இந்த பேச்செல்லாம் எதுக்குங்க.. அனு உங்க வீட்டுப் பெண். அழைச்சிட்டுப் போக உத்தரவு எதுக்குங்க...'' குழைந்தான். ஆனந்தம் பிடிபடாது வார்த்தைகள் நெஞ்சையடைக்க மனைவி பக்கம் திரும்பி '' மரகதம் விரைவா விருந்து சமைச்சுடு. இவங்கள்ளாம் இருந்து சாப்பிட்டுத்தான் போகணும். உடனே போக முடியாது'' ஆர்ப்பரித்தான்.

மேழ இறங்கி வந்த அனு, ''தாத்தா'' என்று கூவிக் கொண்டு அவர் அருகே ஓடிவந்தாள்.

''நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டுப் போக வந்திருக்கேன் அம்மா.'' பரிவோடு அவர் சொன்னதும் நெஞ்சுருகிப் போனாள். சட்டென்று அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டாள்.

''எனக்கு மனைவி என்கிற இடம் கொடுத்து கௌரவிக்க பாடுபட்டதுக்கு உங்களுக்கு ரொம்ப நன்றி தாத்தா'' தழதழத்தது அவள் குரல்.

''அந்த ஒரு இடம் மட்டுமில்லை அனு உனக்கு எங்க எல்லோர் மனசிலும் நிரந்தரமா ஒரு இடம் கொடுத்துட்டோம் அம்மா. நீ இல்லாத அந்த வீடு எங்களுக்கு வீடாகவே தோணலை அம்மா'' பேசிக் கொண்டே தாத்தா மெல்ல நாற்காலியினின்று எழுந்து நின்றார்.

''தாத்தா'' - ஆச்சரியத்துடன் அனைவரும் கூவி விட்டனர்.

''ஆமாம். அனுவுக்கு இப்படி ஒரு ஆச்சரியம் கொடுக்க நான் கொஞ்ச நாளாகக் காத்திருந்தேன். அனு, நீ வலது காலை எடுத்துவச்சு உள்ளே வந்த வேளை நல்லவேளை, ஆபரேஷன் எதுவும் இல்லாம எனக்கு கொஞ்சநாளா நடக்கக் கால் வந்துடுச்சு.'' எழுந்து நின்று ரெண்டடி வைக்க முடிகிறது. போகப் போக சுமாரா நடக்க வந்து விடும்னு டாக்டர் தெம்பு கொடுத்து விட்டார். நீ மறுபடி எங்களோட வீட்டுக்கு வந்துட்டா நான் நடக்கமாட்டேன் அம்மா; மகிழ்ச்சியிலே பறப்பேன்...'' அன்புடன் அவளை உற்றுப் பார்த்தார்.

''தாத்தா, இந்த சந்தோஷத்தைக் கொண்டாட இன்னிக்கு இங்கே நானே என்கையால உங்க எல்லோருக்கும் சமைக்கப் போகிறேன். பால் பாயாசத்தை நானே கொண்டு வந்து உங்களுக்குப் பரிமாறப் போகிறேன். சரிதானே தாத்தா'' புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு முகம் சிவந்து - நெஞ்சு இன்பத்திலே துடிக்க உற்சாகத்துடன் சமையலறைக்குள் ஓடினாள் அனு.

''ஓ.கே.'' என்று கூடத்திலே ஒரு பெரும் கோஷம் எழும்பியது. 0


## "லக்ஷ்மி"யின்

## பூங்கொடி வெளியீடுகளில் சில. . .

| | |
|---|---|
| • ஊன்றுகோல் | 75.00 |
| • என் வீடு | 55.00 |
| • என் மனைவி | 85.00 |
| • ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 125.00 |
| • ஒரு சிவப்பு பச்சையாகிறது | 110.00 |
| • கடைசி வரை | 55.00 |
| • கங்கையும் வந்தாள் | 115.00 |
| • கதவு திறந்தால் | 115.00 |
| • கதாசிரியையின் கதை (முதல் பாகம்) | 60.00 |
| • கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்) | 70.00 |
| • கழுத்தில் விழுந்த மாலை | 70.00 |
| • கணவன் அமைவதெல்லாம் | 85.00 |
| • காளியின் கண்கள் | 75.00 |
| • கூறாமல் சன்னியாசம் | 60.00 |
| • கைமாறியபோது | 85.00 |

- கோடை மேகங்கள்........................................................ 90.00
- திரும்பிப் பார்த்தால்........................................................ 55.00
- துணை ........................................................ 60.00
- தோட்டத்து வீடு ........................................................ 50.00
- நல்லதோர் வீணை ........................................................ 90.00
- நாயக்கர் மக்கள்........................................................ 150.00
- நிற்க நேரமில்லை ........................................................ 80.00
- நியாயங்கள் மாறும்போது ........................................................ 110.00
- நிகழ்ந்த கதைகள்........................................................ 95.00
- நீலப்புடவை........................................................ 60.00
- நீதிக்குக் கைகள் நீளம்........................................................ 80.00
- பண்ணையார் மகள்........................................................ 115.00
- பவானி........................................................ 50.00
- புனிதா ஒரு புதிர்........................................................ 55.00
- புதைமணல்........................................................ 60.00



பூங்கொடி பதிப்பகம்